32 பக்கங்கள் 40/-
வரு.74 இல. 09 ★
www.vaaramanjari.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

தினகரன்
# வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
தினகரன் வாரமஞ்சரி
2022 பெப்ரவரி 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை February 27 Sunday, 2022






06 நாளை கூடுகிறது மனித உரிமைகள் பேரவை



18 புதிய அவதாரம் எடுக்கும் பூமிகா



24 மகளிர் உலகக் கிண்ணம் 2022: அட்டவணை வெளியீடு




இலவச இணைப்பு

## இலங்கையின் மோசமான நிலைமை கட்டுப்பாட்டுக்குள்

### தடுப்பூசி திட்டம் குறித்து ஜனாதிபதி



கொவிட்19 தொடர்பில் நாட்டில் ஏற்பட்டுள்ள அழிவுகரமான நிலைமை தடுப்பூசி திட்டத்தின் மூலம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். நியூயோர்க்கிலுள்ள ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையில் நேற்று முன்தினம் காணொளித் தொழில்நுட்பம் ஊடாக தடுப்பூசிச் செயற்பாடு களை

04

## ச.தொ.சவில் நியாயமான விலைகளில் பொருட்கள்

### சகல பொருட்களும் கிடைக்கும்

நுகர்வோர் நியாயமான விலையில் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரேயொரு விற்பனை நிலையமாக ச.தொ.ச வலையமைப்பு மாற்றப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். ச.தொ.ச ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட

04

## 'ரஞ்சனுக்காக சர்வதேசம் செல்லவும் நாம் தயார்'


### சிறைக்குச் சென்று பார்வையிட்டார் சஜித்



ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக தற்போதைய சூழ்நிலையில் சர்வதேச சமூகத்தின் உதவியை நாட வேண்டியுள்ளதாகவும், இதற்கு ஹரின் பெர்னாண்டோ தலைமையிலான ஐக்கிய

04

## நாளை திங்கள் முதல் மீண்டும் மின் துண்டிப்பு



தற்போதைய சூழ்நிலையில் நாளை திங்கட்கிழமை முதல் மீண்டும் மின்சார துண்டிப்பை அமுல்படுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு தெரிவித்துள்ளது. எவ்வாறாயினும், நாளை இரவு வேளைகளில் மின்சார துண்டிப்பு அமுலாக்கப்படமாட்டாதென ஆணைக்குழுவின்

04

### ஐ.நா.மனித உரிமைகள் பேரவை தொடர் நாளை ஆரம்பம்

# அனைத்து சவால்களையும் வென்றெடுக்க இலங்கை தயார்

### அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்

லோரன்ஸ் செல்வநாயகம்



தலைமையிலான குழு வெள்ளியன்று பயணமாகினர்

இலங்கை தொடர்பான அறிக்கைக்கு அன்றைய தினமே பதில்

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடர் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதுடன் இலங்கை தொடர்பான விவாதம் எதிர்வரும் மார்ச் 03ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மனித உரிமை ஆணையாளரின் இலங்கை தொடர்பான அறிக்கை எதிர்வரும்

04

### மஹா சிவராத்திரி புண்ணியகாலத்தில்

## ஆன்மீக செயற்பாடுகளுக்கு சிவாலயங்களுக்கு நிதியுதவி

### பிரதமர் பணிப்புரைக்கமைய ஏற்பாடு



மஹா சிவராத்திரி விரத புண்ணிய காலத்தில் ஆன்மீக செயற்பாடுகளுக்கு ஊக்கம் நல்கும் வகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கமைய சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளது.

04



## வத்திக்கானில் இன்று சிறப்பு திருப்பலி பூஜை



வத்திக்கானிலுள்ள கத்தோலிக்க திருச்சபையின் இலங்கைக்கான பேராயர் கருதினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை இன்று வத்திகான் புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் சிறப்பு திருப்பலி பூஜையை நடத்துவார். உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் உண்மையை

04



அத்தியாவசிய உணவு பொருட்களுடன் 2,500 கொள்கலன்கள் தேக்கம் 04

### லண்டனில் கைதான நபர் குறித்து

## EPDP மீது தேவையற்ற விஷமத்தன அவதூறு

### கண்டித்து அறிக்கை வெளியிட்டு வைப்பு

யாழ்.விசேட நிருபர்



தமிழ் மக்களுக்கு நாம் காட்டிய அரசியல் கொள்கைகளே இன்று நிதர்சனமாகியுள்ள இச் சந்தர்ப்பத்தில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீது தொடர்ச்சியாக சுமத்தப்பட்டு வரும் அவதூறுகளையும், உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களையும் நாம் கண்டிக்கின்றோமென ஈ.பி.டி.பி.

04

## இலங்கையில் 4,000 உக்ரைன் பிரஜைகள்



இலங்கையில் சுமார் 4,000 உக்ரைன் சுற்றுலாப் பயணிகள் தங்கியுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த சுற்றுலா பயணிகள் 30 நாட்களுக்கான விசாவை

04

## தங்கத்தின் விலை நாளாந்தம் அதிகரிப்பு



உலக சந்தையில் தங்கத்தின் விலையுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் தங்கத்தின் விலை வேகமாக அதிகரித்து வருவதாக அகில இலங்கை ஆபரண வர்த்தக சங்கம் தெரிவித்துள்ளது. தங்கத்தின் விலை உயர்வால் வழக்கத்தை விட தங்கம் தொடர்பான வர்த்தகம் பாரிய வீழ்ச்சியடைந்துள்ளதாக சங்கத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

04

### பெற்றோல் 20, டீசல் 15 ரூபாவால்

## எரிபொருட்களின் விலை அதிகரிப்பு

லங்கா ஐ.ஓ.சி நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் தனது எரிபொருட்களின் விலைகளை அதிகரித்துள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் பெற்றோலின் விலை 20 ரூபாவினால் ஒரு லீற்றர் டீசலின் விலை 15 ரூபாவால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளது.

லங்கா ஐ.ஓ.சி நிறுவனமும் கடந்த

04

## எங்கள் கருத்து...

### முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டிய மூன்று சிக்கல்கள்!

இலங்கையில் மாறி மாறி ஆட்சிக்கு வருகின்ற அரசாங்கங்கள் ஒவ்வொன்றிடமும் தமிழ் பேசும் தரப்பினர் எதிர்பார்க்கின்ற பல்வேறு கோரிக்கைகளுக்கும் இதுகாலவரை தீர்வு கிடைக்கவில்லை. இதற்கான பிரதான காரணம் இரு தரப்பிலிருந்தும் எழுகின்ற அரசியல் பிடிவாதங்கள் மற்றும் விட்டுக்கொடுக்காத தன்மைகள் ஆகும். அதன் காரணமாக எதிர்பார்ப்புகள் இன்னமும் முழுமையாக நிறைவேற்றப்படாமல் இருப்பது பெரும் கவலை தரும் விடயமாகும்.

குறிப்பாக முப்பது வருட காலத்திற்கு மேற்பட்ட யுத்தம் முடிவடைந்து 15 வருடங்களைக் கடக்கின்ற இன்றைய நிலையிலும், தமிழ் மக்களது பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படவில்லை என்பது ஒரு மனக்குறை என்றே கூற வேண்டும். அதிலும் வடக்கு, கிழக்கில் காணிப் பிரச்சினை, தமிழ் அரசியல் கைதிகள் பிரச்சினை, அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்கள் பிரச்சினை போன்ற முக்கியமான மூன்று விடயங்களுக்கு விரைவாக தீர்வு காணப்பட வேண்டியது அவசியமாகும்.

இந்த மூன்று பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசாங்கம் முன்வந்தால் அதற்கு தமிழ் அரசியல் தலைமைகள் முட்டுக்கட்டை போடுவதும், தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு நிலைப்பாட்டிற்கு வந்தால் அரசாங்கம்

04

## 'ரஷ்யப் படைகள் முகாமுக்கு திரும்ப வேண்டும்'

### ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் கோரிக்கை



உக்ரைன் மீதான தாக்குதலை நிறுத்திவிட்டு ரஷ்யப் படைகள் முகாமுக்குத் திரும்ப வேண்டுமென்று ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கூறியுள்ளார்.

நேட்டோ இராணுவ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு ரஷ்யா எதிர்ப்பு தெரிவித்ததையடுத்து, இரு நாடுகளுக்குமிடையே போர்ச்சூழல் நிலவி வந்தது. அதனைத் தொடர்ந்து உக்ரைன் மீது தாக்குதல் நடத்த ரஷ்ய அதிபர் புடின் வியாழக்கிழமை

04

### உக்ரைனில் 03 ஆவது நாளாகவும் கடும் போர்

## ரஷ்யப் படை 3,500 பேர் பலி; 14 ஜெட் விமானங்களும் அழிப்பு

### உக்ரைன் அரசு அறிவிப்பு



- தலைநகரை சுற்றி வளைக்கிறது ரஷ்ய படை
- பேச்சுவார்த்தைக்கு குழுவை அனுப்பு தயார் என்கிறார் புடின்
- ஜோ பைடனும் எச்சரிப்பு

உக்ரைனில் நேற்று 03வது நாளாக ரஷ்யப் படையினரின் தாக்குதல் தொடர்ந்தது. பலத்த சப்தத்துடன் குண்டுகள் வெடித்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. உக்ரைனுக்குள் ஊடுருவிய 14 ரஷ்ய ஜெட் விமானங்களை

04

### விக்கல் வீராச்சாமி



அரசாங்கத்த வசை பாடுவதில போட்டி வச்சா நம்ம எதிரணியில இருக்கிற தமிழ் பேசுற எம்பிமார் எல்லாருமே முதலிடம் பெறுவினம்....

அவங்க அரசாங்கம் நன்மை செய்யுறதையே எதிர்த்து வசை பாடுறவங்க, போட்டி என வந்தால் சும்மா விட்டு வைப்பாங்களே...!!!

TRIPLE BLASTER இப்போது புதுப்பொழிவுடன்!
Dialog முற்கொடுப்பனவு வாடிக்கையாளர்களுக்கு
எந்தவொரு வலையமைப்பிற்கும்* 1,000 நிமிடங்கள் 1,000 SMS
Anytime Data 1.5GB
மாதத்திற்கு ரூ.498/- (மேலதிக வரிகள் இல்லை)
செயற்படுத்தல் ரூ. 498/- இனை ரீலோட் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம்
*உள்நாட்டு அழைப்புகளுக்கு மட்டுமே | நிபந்தனைகளுக்கு உட்பட்டது TRC/D/PRO/21/09
Dialog எதிர்காலம் இன்றே.

# உக்ரைன் போரும்

## உலக அரசியலில் ஏற்படவுள்ள மாற்றங்களும்!

மேற்கு மீண்டும் ஒரு போருக்கான வாய்ப்பினை ஈரோசியப் பரப்பில் ஏற்படுத்தியுள்ளது. நேட்டோவில் இணைவதற்கான உக்ரையினின் நகர்வே இப்போருக்கான அடிப்படையாக உள்ளது. ஆனாலும் ரஷ்யா அமெரிக்கப் போட்டியுடன் நேட்டோ சார்ந்த முரண்பாடும் இதன் பின்னாலுள்ள காரணங்களாக அமைந்துள்ளன. இத்தகைய போர் பிராந்திய அரசியல் நிலைமைகளை முதன்மைப்படுத்தினாலும் நீண்டகாலத்தில் பாரிய மாற்றங்களை நோக்கிய நகர்வுகள் தவிர்க்க முடியாததாக அமையவுள்ளன. அத்தகைய மாற்றங்கள் ஏற்கனவே நிலவியுள்ள உலக ஒழுங்கை மாற்றத்துக்கு உள்ளாக்கும் என்ற விமர்சனங்கள் எழுந்துள்ளது. இக்கட்டுரை





யும் உக்ரைன் மீதான ரஷ்சிவின் போர் கையாளப்படும் உத்தியையும் அது உலக அரசியலில் ஏற்படுத்தக்கூடிய மாற்றங்களை தேடுவதாகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

21.01.2022அன்று டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய இரு பிரதேசங்களையும் சுயாட்சி பிரதேசங்களாக பிரகடனப்படுத்தியதோடு, 24.02.2022அன்று உக்ரைனுக்கு எதிரான போரை ரஷ்யா பிரகடனப்படுத்திக் கொண்டது. இத்தகைய பிரகடனத்தின் நகர்வுகள் ஆரம்பத்தில் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய சுதந்திர குடியரசின் எல்லைகளை மையப்படுத்தி நகர்ந்த போதும் கிழக்கு உக்ரைனூடாக தாக்குதலின் நகர்வு தீவிரமடைய ஆரம்பித்தது. ரஷ்யாவின் இராணுவ பலத்தோடு ஒப்பிடுகையில் மிகப்பின்தங்கிய நிலையிலிருந்த உக்ரைன் அமெரிக்க தலைமையிலான நேட்டோ நாடுகளால் இராணுவ ஆயுத தளபாட ரீதியில் பலப்படுத்தப்படுகின்றது. ரஷ்யாவின் போர் நகர்வுகள் டொனெட்ஸ்க் மற்றும் லுஹான்ஸ்க் ஆகிய இரு குடியரசுகளின் பிரதேசங்களை நோக்கியதாக அமைந்த போதும் அதன் தாக்குதல்கள் ஏவுகணைகளையும், விமானங்களையும் முதன்மைப்படுத்தியதாக மாறி உள்ளது. உக்ரைனின் தலைநகரமான கியூவை நோக்கியும் ரஷ்யாவின் விமானம் மற்றும் ஏவுகணை தாக்குதல் நிகழ்ந்து வருகிறது. சுதந்திர குடியரசின் எல்லைகளை மையப்படுத்தி இருக்கும் தரைப்படையின் நகர்வு படிப்படியாக உக்ரைனின் இதர பிரதேசங்களை நோக்கி விஷ்தரிக்கப்படுவதாகவும், கிரிமியாக்கூடாக அத்தகைய நகர்வை முதன்மைப்படுத்துவதாகவும் அவதானிக்க முடிகிறது. மேற்கு ஊடகங்களும் ஆய்வாளர்களும், அமெரிக்க புலனாய்வாளர்களும் ரஷ்யாவின் படையெடுப்பு உக்ரைனை முழுமையாக கைப்பற்றும் ஏதுநிலை ஏற்படும் என்பதை தவிர்க்கவே முயலுகிறது. அதுமட்டுமன்றி உக்ரைனின் மிகப்பிரதானமான இராணுவ வலிமையென்று கருதப்பட்ட சொர்னோபில் அணுநிலையத்தை ரஷ்யா கைப்பற்றியதோடு அப்பிரதேசம் உக்ரைன் தலைநகரிலிருந்து 143.1கி.மீ தூரத்தில் அமைந்திருப்பதும் ரஷ்யா உக்ரைனை முழுமையாக கைப்பற்றுகின்ற நோக்கத்தோடு நகர்வதாகவே தெரிகிறது. ஆனால் 2008ஆம் ஆண்டு ஜோர்ஜியா மீதான ரஷ்சிய தாக்குதலும் 2014ஆம் ஆண்டு உக்ரைன் மீதான தாக்குதலும் அத்தகைய கருத்தை மறுபரிசீலனைக்கு உட்படுத்த வேண்டிய நிலைக்கு தள்ளியுள்ளது. ஜோர்ஜியாவின் முழுப்பகுதியிலும் தாக்குதலை நிகழ்த்திவிட்டு தெற்கு ஒசட்டியாவையும், அப்காசியாவையும் கைப்பற்றி குடியரசுகளாக பிரகடனப்படுத்தி பின்னர் தனது செல்வாக்கு மண்டலமாக பராமரித்து வருகிறது. அதேபோன்று 2014ஆம் ஆண்டு போரிலும் கிரிமியாவை கைப்பற்றும் போது இதே மாதிரியான இராணுவ உத்திகளை புடின் பின்பற்றியிருந்தார். ஆனாலும் நேட்டோவின் விஸ்தரிப்பு என்பது உக்ரைன் ஜனாதிபதி ஷெலஸ்கியால் அவரது பாதுகாப்பு அமைச்சால் அவரது வெளிவிவகார அமைச்சால் மீள மீள உச்சரிக்கப்படும் வார்த்தையாக உள்ளது. எற்கனவே உக்ரைனின் எல்லை நாடுகளான போலந்து நேட்டோவில் அங்கம் பெற்றிருப்பதும் நேட்டோ படைகள் போலந்து நோக்கி நகர்ந்திருப்பதுவும் ரஷ்யாவிற்கு இருவகையான எச்சரிக்கையை கொடுத்துள்ளது. உக்ரைனை முழுமையாக கைப்பற்றி ரஷ்யாவிற்கு ஆதரவானவரை ஆட்சியலமர்த்தி ரஷ்யாவின் செல்வாக்கு பிராந்தியமாக மாற்றுவது. இரண்டாவது உக்ரைனை முழுமையாக கைப்பற்றி ரஷ்யாவுடன் இணைத்துக் கொள்வது. இத்தகைய தெரிவில் ஏதாவது ஒன்றை மேற்கொள்ள தவறும் பட்சத்தில் நேட்டோவின் விஷ்தரிப்பு தவிர்க்க முடியாது உக்ரைனை நோக்கி நகரும். இத்தகைய நோக்கத்தை அடிப்படையாக கொண்டு உக்ரைன் மீதான ரஷ்ய போரை அவதானித்தால் உக்ரைன் முழுமையாக ஏதொவொரு வகையில் கைப்பற்ற வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ரஷ்யாக ஆளாகியுள்ளது.

இவ்வகைப்போர், பிராந்திய அரசியலை புவிசார் அரசியலை கடந்து உலகளாவிய அரசியலில் அதிக மாற்றங்களை ஏற்படுத்த விளைகிறது. அவற்றை விரிவாக நோக்குதல் அவசியமாகும்.

முதலாவது, அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அணி உக்ரைனுக்கு ஆதரவாக இதுவரையில் பதில் இராணுவ நடவடிக்கைக்கு முன்வரவில்லை என்பதுவும் அதற்கான வாய்ப்பு மிக மிக குறைவானது என்றும் அமெரிக்க ஜனாதிபதி பைடனின் வார்த்தையிலிருந்து தெரிய வருகிறது. ஜோ பைடன் அமெரிக்க இராணுவம் உக்ரைன் போரில் ஈடுபடாதென்ற செய்தியை வெளிப்படையாக தெரிவித்துள்ளார். எனவே நேட்டோவுக்கு தலைமை தாங்கும் அமெரிக்கா எடுத்திருக்கும் முடிவானது ஏனைய நேட்டோ நாடுகளை உக்ரைன் போரிலிருந்து விலகி இருக்கவே அதிகம் விரும்புபவையாக காணப்படுகின்றன. அதேபோன்று ரஷ்யாவும் உக்ரைனை கடந்து தனது போரை நடாத்தாது என்றும் அதன் அணுகுமுறைகளை அவதானிக்கின்ற போது தெளிவாக தெரிகிறது. எனவே போரை மறைமுகமாக ஏற்றுக்கொள்ளும் நேட்டோ நாடுகள் உக்ரைன் ஆட்சியாளர்கள் குறிப்பிடுவது போல் ரஷ்யாவிற்கு எதிரான உரையாடல்களையும் பேச்சுக்களையும் முதன்மைப்படுத்திய நேட்டோ நாடுகள் இறுதியில் உக்ரைனை கைவிட்டு சென்றமை அதிகார சமநிலை ரீதியில் நேட்டோவின் பலவீனத்தை வெளிப்படுத்துகின்றன. கடந்த பல ஆண்டுகளாக உக்ரைனுக்கும் நேட்டோவுக்குமான உரையாடல்களை நிராகரித்து வந்த புடின் நேட்டோவின் அணுகுமுறையை உரையாடல் மூலம் தீர்த்துக்கொள்ள உக்ரைனுக்கும் நேட்டோவுக்கும் வழங்கியது. அத்தகைய அணுகுமுறையின் இறுதி தெரிவான போர் தவிர்க்க முடியாதது என்பதும் புடினது உரைகளும் இராஜதந்திர அணுகுமுறைகளும் வெளிப்படுத்துகிறது.




இரண்டாவது, உக்ரைன் மீதான போர் ரஷ்யாவுக்கு ஒரு முழமையான வெற்றியை கொடுக்குமாயின் யுரேசியாவிலும் ஐரோப்பாவிற்குள்ளும் மற்றும் பிராந்தியங்களிலும் வலுவான அரசாக அடையாளப்படுத்துகிறது. உலகளாவிய இராணுவ பலத்தன்மையில் ரஷ்யா மேற்கு நாடுகளை கடந்து வலுவுள்ள நாடாக முன்னகர்வதோடு பழைய சோவியத் யூனியனுடைய கனவை நோக்கிய நகர்வை இலகுவில் சாத்தியப்படுத்தக்கூடியதாக அமையும். ஏற்கனவே யுரேசியாவிலிருந்து மத்திய ஆசியா ஊடாக மேற்காசியா வரையில் பலப்படுத்தி உள்ள ரஷ்யாவின் இராணுவ உத்திகள் மேலும் உறுதிப்படுத்தப்படும்.

மூன்றாவது, உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் உலக அரசியல் சமநிலையில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான களமாக அமைந்துள்ளது. அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் தலைமையிலான நேட்டோ மறுசீரமைக்கப்பட வேண்டிய நிலையில் அதன் விஷ்தரிப்புக்கு எதிரான நடைமுறையை அதிகரிப்பதற்கான வாய்ப்பு காணப்படுகின்றது. அமெரிக்கா ஒரு இராணுவ ரீதியிலான நடவடிக்கையை உலகத்தில் மேற்கொள்ள முடியாது என்ற நிலையை உருவாக்கியுள்ளது. அத்தகைய உருவாக்கம் ஆப்கானிஸ்தான் வெளியேற்றத்திலிருந்து உணரப்பட்ட போதும் அதற்கான நடைமுறை யதார்த்தம் உக்ரைனூடாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இது வடகொரியா, ஈரான், சிரியா போன்ற நாடுகளுக்கு மட்டுமன்றி சீன, ரஷ்ய ஆதரவு கொண்ட அணிகளை பலப்படுத்தக்கூடியது.

நான்காவது, ரஷ்ய, உக்ரைன் மோதல் ரஷ்ய, சீன உறவின் ஓர் அங்கமாகவே காணப்படுகிறது. ரஷ்ய ஜனாதிபதி புடினுடைய சீன விஜயம் ஐரோப்பாவுடனான பொருளாதார உறவு பாதிப்படையும் என்ற எடுகோளுடனேயே சீனாவுடனான அணுகுமுறையை ரஷ்யா மேற்கொண்டுள்ளது. உக்ரைனுடனான போரை ஐரோப்பாவும் அமெரிக்காவும் ரஷ்யா மீதும் புடின் மீதான பொருளாதார தடை மூலம் முடிவுக்கு கொண்டு வரலாமென முயலுகிறது. அத்தகைய முயற்சிக்கு முன்கூட்டியே பொருளாதார தடையை எதிர்பார்த்ததும் அதிலிருந்து விடுபடுவதற்கான உத்தியாக புடின் சீனாவை அணுகியதும் அவதானிக்கக்கூடிய விடயமாக உள்ளது. குறிப்பாக எரிவாயு தொடர்பாக ஐரோப்பிய நாடுகள் எதிர்கொள்ளும் நெருக்கடியை விட ரஷ்யா எதிர்கொள்ள உள்ள பொருளாதார நெருக்கடி மட்டுப்படுத்தப்பட்டவை என்பதையே அண்மைய நாட்கள் வெளிப்படுத்துகின்றன. ஐரோப்பாவுக்குள் எரிவாயுவும் பெற்றோலியமும் பெரும் நெருக்கடியை எதிர்கொள்வதற்கானவாய்ப்புஅதிகமாககாணப்படுகிறது.

ரஷ்யா, உக்ரைன் போர் சீனா, தைவான் தாக்குதல்களை இலகுபடுத்தியுள்ளது. அதிலும் குறிப்பாக அமெரிக்காவின் பின்வாங்கல் சீனாவின் இராணுவரீதியிலான நகர்வை உறுதிப்படுத்துவதற்கான வாய்ப்பை அதிகரித்துள்ளது. சீனா, தைவான் மீது போரை மேற்கொள்ளும் போது ரஷ்யா ஆதரவளிக்குமென்பது மாறான கருத்துக்கான வாய்ப்பு குறைவாகவே உள்ளது.

எனவே, ரஷ்யாவின் உக்ரைன் மீதான போர் இராணுவ பலக் கோட்பாட்டிலும் அதிகார சமநிலையிலும் ரஷ்யாவை முதன்மைப்படுத்தி உள்ளது. அதுமட்டுமன்றி உலக அரசியலில் பிராந்தியத்தை கடந்து ரஷ்சியாவின் எழுச்சி ரஷ்ய, சீன அணியை அதன் ஆதரவு நாடுகளை பலமான நிலைக்குள் நகர்த்தக்கூடியதாக அமைந்துள்ளது. இந்தியாவின் நடுநிலைமை போக்கு கீழைத்தேச நாடுகளின் வலுவை மேலும் வலுப்படுத்தக்கூடியதாக அமைய வாய்ப்புள்ளது.



பேராசிரியர்
கே.ரீ. கணேசலிங்கம்...

# உக்ரைன் ஆக்கிரமிப்பு உலக பொலிஸுக்கு எச்சரிக்கை?

ஆக்குவது கடினம் அழிப்பது இயல்பு என்பார்கள் அப்போது. இவையிரண்டுமே இலகுதான் இப்போது எனுமளவில்தான் நிலைமைகள் உள்ளன. விஞ்ஞான வளர்ச்சி, தொழில்நுட்பத்தின் உயர்ச்சி மற்றும் மனித அறிவின் எழுச்சிகளால்தான் இந்நிலைமைகள் தோற்றம் பெறுகின்றன. மனித அறிவியல் ஏற்படுத்தியிருக்கும் தாக்கம், ஆக்குவதற்கு மட்டுமாக இருந்தால் சிறப்பாக இருந்திருக்கும். அழிக்கவும் இது வழி ஏற்படுத்தியிருக்கிறதே! இன்று அனுபவிக்கும் அத்தனை வசதிகளும் அறிவியல் புரட்சியால் வந்த விளைவுகள்தான். இவற்றில் சிலவற்றை இந்த வளர்ச்சிகள் காலடிக்கும் கொண்டுவந்திருக்கிறதே, இதைவிடச் சிறப்பு எது இருக்கிறது அறிவியலில்?

குடிக்கும் நீரைத்தேடி குளத்துக்குச் சென்ற காலம், குளிக்கும் நீரைத்தேடி மலைச்சாரலை நோக்கி நடந்த நேரம், விறகுதேடி விரிவெயிலில் வனம் நோக்கி விரைந்த நேரங்கள், காற்றுத்தேடியும் களைப்பு போக்கவும் ஓய்வறை, ஒதுங்குமிடம் தேடிப்போன பொழுதுகள் எல்லாம் இப்போது மலையேறிவிட்டன. இப்போது காலடியில் குடிநீர், குளிர்சாதனப்பெட்டிக்குள் குளுமையான நீர், சமயலறையில் எரிவாயு, தூங்கும் அறையில் ஏ.சியின் குளிர்காற்று, உலகையே உள்ளங்கையில் தொடர்புகொள்ள தொலைபேசி, உடனே வெளிநாடு செல்ல விமானங்கள், இன்னும் இணையங்கள் இப்படி ஏகப்பட்ட சொகுசுகளுக்கு சொந்தக்காரனாகிவிட்டான் இன்றைய மனிதன். ஆனாலும், இந்த அறிவின் வளர்ச்சியால் அழிவுக்கும் ஆளாக நேர்ந்திருப்பதுதான் நவீன உலகுக்கு ஏற்பட்டுள்ள கவலை.



ஆதிக்கப்போக்கும் அரக்க குணங்களும் இல்லாதிருந்தால் இந்த அறிவுகளை ஆக்கத்திற்கு மட்டும் பாவிக்கலாம். என்ன செய்வது? அரசாட்சியும் இருத்தலில் நிலைப்படுதலும் மனிதனை விட்டபாடில்லையே! உலகின் இரண்டு போர்கள் ஏற்படுத்திய மனித அவலங்களையடுத்து இனி, இப்படியொரு போரும் அழிவும் மானிடனுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காக எத்தனை அமைப்புகள் உருவாக்கப்பட்டன. இருந்தாலும், ஆதிக்கப்போக்கும் அரசாட்சியும் இந்த அமைப்புக்களை ஒதுக்கிவிட்டு அடுத்த போருக்குத் தயாராகிவிட்டது.

அமெரிக்காவின் அத்தனை வளர்ச்சிக்கும் நிகரான நாடு ரஷ்யா. ஐரோப்பாவின் தலையில் தொடங்கி, ஆசியாவின் காலடி வரைக்கும் பரந்து விரிந்துள்ள தேசமிது. 1990 இல் உடைந்து சிதறுவதற்கு முன்னர், அமெரிக்காவுக்கு நிகரான சக்தியாகத்தான் இது பார்க்கப்பட்டது. ஆனாலும் உடைத்துச் சிதறவைத்த அமெரிக்காவை இந்த ரஷ்யா நிம்மதியாகத் தூங்கவிட்டதுமில்லை. எல்லை விஸ்தரிப்புக்காக இந்நாடு ஆரம்பித்துள்ள உக்ரைன் படையெடுப்பு இருக்கிறதே, உண்மையில் அனைத்தும் அமெரிக்காவுக்கான அடிகள்தான்.

உக்ரைனின் எல்லையில் நேட்டோவைப் பலப்படுத்தி, ரஷ்யாவின் இன்னுமொரு துண்டை உடைக்கும் அமெரிக்காவின் திட்டத்தை ரஷ்யா அறியாமலா இருந்திருக்கும்? நேட்டோ அமைப்பிலுள்ள ரஷ்ய சார்பு நாடுகளை ஓரங்கட்டும் முயற்சிகள் எப்போது ஆரம்பமானதோ, அன்றிலிருந்து ரஷ்யாவும் உக்ரைனை ஆக்கிரமித்து பதிலடிக்குத் தயாராகியிருக்கிறது. ஏனெனில், அங்கு நுழைந்துள்ள ரஷ்யப்படைகளின் இலக்குகளில் இவை தெளிவாவதாக இராணுவ ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். உக்ரைன் பாதுகாப்பு அமைச்சின் இணையங்கள் சைபர் தாக்குதலுக்கு இலக்காகியமை, அணுநிலையங்கள் அமைந்துள்ள சென்பைல் நகரத்தை சுற்றிவளைத்த மை, ராடர் நிலையங்களில் கண்வைத்தமை, ஐரோப்பாவுடன் நேரடியாகத் தொடர்புறும் கிழக்கு நகரங்களின் மீது சரமாரித்தாக்குதல் நடத்தப்படுதல் எல்லாம் நீண்டகாலத் திட்டங்கள்தான். தன்னைவிடவும் எவ்வளவோ சிறிய பலமுள்ள உக்ரைனை, இவ்வளவு மூர்க்கமாகத் தாக்குவதுதான் இதற்கு சான்றுகளாகின்றன.







இத்தாக்குதலில் ஈடுபட்டுள்ள இருதரப்புக்களும், நாட்டுக்காகவா போரிடுகின்றனர்? இந்த அறிவியலுக்குள் உட்பட்ட சாதனங்களை தூக்கியும், நகர்த்தியும், தோளிலும் சுமந்தும் தாக்குதல் நடத்தும் படையினரும், தங்களது சம்பளத்துக்காகவே இப்பணியைச் செய்கின்றனர். ஆட்சியிலிருப்போர் குளிர் அறைகளுக்குள் கோர்ட்டும், சூட்டும் அணிந்து உத்தரவிடுகின்றனர். சம்பளத்துக்காக இயங்கும் இராணுவத்தினர் (மனிதர்கள்) தீக்கொளுந்திலும், இரத்தக்காயத்திலும், கட்டிட இடுபாடுகளுக்குள்ளும் சிக்கி உயிரும் துறக்கின்றனர், ஊனமுமடைகின்றனர். இதற்கும் மேலாக, எதிலும் சம்மந்தமுறாத உயிர்களும் காவுகொள்ளப்படுவதுதான் கவலை. தாயைப் பிள்ளை தேடுவதா? கணவனை மனைவி தேடுவதா? குற்றியிருடன் இடிபாடுகளிலிருந்து கரையேறத் துடிக்கும் உறவைக் கரையேற்றுவதா? அறிவு ஏற்படுத்திய அவலமே இது.

வானத்தில் பறக்கும் பறவைக்கூட்டங்கள் போன்று, கிபீர் விமானங்கள் கூட்டாக பறந்து வருவது குலைநடுங்க வைக்கிறது. பெரும் மலைகள் இடிந்து விழுவதைப் போல், வானளவு உயர்ந்த கட்டிடங்கள் தீச்சுவாலைகளுடன் நொறுங்கி விழுகின்றன. விமானங்களின் தாக்குதல்களால் மேகங்களே தகர்ந்து நொறுங்குவது போன்று சத்தங்கள் கேட்கின்றன. இதுதான் உக்ரைனில் இன்று நடக்கும் யுத்தம். சுற்றுலாவுக்குப் பேர்போன நாடு உக்ரைன். கொரோனோவில் மூடி, மீளத்திறந்த நமது நாட்டுக்கு முதல் வந்ததும் உக்ரைன் பயணிகள்தான். அந்தவகையில் மட்டுமல்ல, எந்த வகையிலும் இந்த அழிவுகள் மற்றும் அவலங்களை ஏற்க முடியாது. கணப்பொழுதில் இப்படி பேரழிவைத்தரும் மனித அறிவு தேவைதானா? என்பதுதான் இன்று எழுந்துள்ள கேள்வி? எரிவாயு, எண்ணெய் வளம் இன்னும் இயற்கை வளமுள்ள ரஷ்யா இப்படியொரு ஆக்கிரமிப்பை ஏன் ஆரம்பித்தது?

சுஜப் எம்.காசிம்...

வேலைவாய்ப்பு
அனைத்து துறைகளுக்கும் பணியாளர்கள் தேவை
(பயிற்சி பெற்ற அல்லது பயிற்சியற்றவர்கள்)
WASH / UNDERWASH
Rs. 25,000 - Rs. 45,000
VEHICLE DETAILER
Rs. 40,000 - Rs. 60,000
உணவு மற்றும் தங்குமிடவசதி இலவசம்!!!
CAREPOINT
மேலதிக கொடுப்பனவு, அதிகூடிய சம்பளம்
சதீஸ் : 0759 400 632
சமந்த : 0777 555 069

# தேர்தலை சந்திப்பதற்கு அரசு எப்போதும் தயார்!

## அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரனவுடன் சந்திப்பு



**அரசாங்கம் தேர்தலைச் சந்திப்பதற்கு எப்பொழுதும் தயாராக உள்ளது என்று அமைச்சரவையின் இணைப் பேச்சாளரும், பெருந்தோட்டத்துறை அமைச்சருமான வைத்திய கலாநிதி ரமேஷ் பத்திரன தெரிவித்தார். எமக்கு வழங்கிய விசேட பேட்டியின் போது அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.**

**கே: ஊடகவியலாளர் சமுதித சமரவிக்ரமவின் வீட்டின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் கூறுகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில் : எதிர்க்கட்சிகள் கூறும் அனைத்து குற்றச்சாட்டுகளையும் நாங்கள் மறுக்கிறோம். ஊடகவியலாளர்கள் மீதான இத்தகைய கொடூரமான தாக்குதலை வன்மையாகக் கண்டிக்கிறோம். யார் செய்தாலும் அதனால் அரசுக்கே அவப்பெயர் ஏற்படுகிறது. ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெருமவும் இந்த தாக்குதலை வன்மையாக கண்டித்துள்ளார்.

இந்த தாக்குதலை அரசு என்ற வகையில் கண்டிப்பதுடன், நாட்டில் பத்திரிகை சுதந்திரத்தை நிலைநாட்டிய அரசாங்கம் எமது அரசாங்கமே. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தின் கீழ் பேச்சு சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. தாக்குதலுக்கு காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்த பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படும்.

**கே: பெப்ரவரி 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வில் இலங்கை தொடர்பான எழுத்துமூல அறிக்கையொன்று ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டிடம் சமர்ப்பிக்கப்படும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ .எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார். இது தொடர்பில்,**

பதில்: சில ஆர்வமுள்ள தரப்பினர் குறிப்பாகப் புலம்பெயர் சமூகத்தின் சில அடிப்படைவாதத் தரப்பினர் இலங்கைக்கு எதிராக குரல் எழுப்பியுள்ளன. இவர்கள் இதனைத் தொடர்ச்சியாகப் பல வருடங்களாகச் செய்து வருகின்றனர். அவர்களின் செயற்பாடுகள் 2009 ஆம் ஆண்டிற்கு பின்னோக்கி செல்லும் நிலைமையை எட்டியுள்ளன. பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

இப்பிரச்சினைகளை நாங்கள் காலங்காலமாக பேசி வருகிறோம். வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளுக்கு தேவையான ஆவணங்களை வழங்குவார். இந்த நாட்டில் சிங்களவர், தமிழ், முஸ்லிம் என அனைவரும் நல்லிணக்கத்துடன் வாழ்கின்றனர் என்பது நாம் அனைவரும் அறிந்த விடயம். குறிப்பாக தலைநகர், கொழும்பு நகரம் போன்ற இடங்களில் கிட்டத்தட்ட 50 வீதமான மக்கள் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்கள். அதுவே சிறந்த உதாரணம். அனைத்து மதங்களையும், தேசியங்களையும் மதித்து, அவர்களுக்கு உரிய முக்கியத்துவமும், அவர்கள் விரும்பியவாறு சுதந்திரமாக வாழும் சுதந்திரம் அனைவருக்கும் உள்ளது.

**கே : புதிய அரசியலமைப்பைத் தயாரிக்கும் விடயத்தில் முன்னேற்றம் எவ்வாறு உள்ளது?**

பதில்: நீதியமைச்சர் அலி சப்ரி, இது தொடர்பில் விசேட கவனம் செலுத்தியுள்ளார். புதிய அரசியலமைப்பை உருவாக்குவதற்கான குழுவுக்கு ஜனாதிபதி சட்டத்தரணி ரொமேஷ் டி சில்வா தலைமை வகிக்கிறார். அரசியலமைப்பு வரைவு விரைவில் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

**கே: உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் 2022 ஆம் ஆண்டு இறுதிக்குள் நடத்த வேண்டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு விரும்புகிறது. ஆரசியல் கட்சிகளின் செயலாளர்களும் ஆணைக்குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தனர். இவ்வாறான நிலையில் தேர்தலை எதிர்கொள்ள அரசாங்கம் தயாராக உள்ளதா?**

பதில்: தேர்தலை சந்திக்க நாங்கள் எப்போதும் தயாராகவே உள்ளோம். கடந்த இரண்டு ஆண்டுகளும் தொற்றுநோய் சூழலை இல்லாமல் செய்வது குறித்தே அனைத்து நாடுகளும் கவனம் செலுத்தியிருந்தன. கொவிட் 19 தொற்றுநோயை நம்மால் கட்டுப்படுத்த முடிந்தது. இப்போதும் ஓமிக்ரோன் பரவி வருகிறது. எனவே மக்கள் நிலைமை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். நோய் பரவலை அதிகரிக்கச் செய்யும் எதையும் நாங்கள் நடத்த விரும்பவில்லை. மறுபுறம், நாங்கள் தொடர்ந்து தேர்தலை ஒத்திவைக்கவும் விரும்பவில்லை. முன்னாள் நல்லாட்சி அரசாங்கமே மாகாண சபைத் தேர்தலை நடத்தாது காலத்தை இழுத்தடித்து வந்தது. அரசியலமைப்பில் திருத்தம் செய்யப்பட வேண்டியிருப்பதால், எங்களால் மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியவில்லை.

எவ்வாறாயினும், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைக்க நாங்கள் விரும்பவில்லை. தேர்தலை விரைவில் நடத்த முயற்சித்து வருகிறோம். எப்படியும், உள்ளாட்சி அமைப்புகளின் பதவிக்காலம் மார்ச், 2023ல் முடிவடையும். அதற்கு முன் தேர்தலை நடத்தி புதிய உள்ளாட்சி மன்றங்களைத் தேர்ந்தெடுக்க முயற்சிக்கிறோம்.

**கே: பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்துச் செய்யுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விடுத்த கோரிக்கைகளை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: இந்த நாட்டில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் ஆதரவாக சில விதிமுறைகளை நாங்கள் கொண்டு வந்துள்ளோம். இதுபோன்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கும் போது கடுமையான விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளைக் கடைப்பிடிக்க விரும்பவில்லை என்பதை உலகுக்குக் காண்பிக்கும் நடவடிக்கையாகவே இதனை நாம் பார்க்கின்றோம். மறுபுறம் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாடு என்பதை நாம் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். இதுபோன்ற நடவடிக்கைகள் எதிர்காலத்தில் நாட்டில் இடம்பெறாமல் இருப்பதை உறுதிசெய்ய போதுமான மற்றும் வலுவான ஏற்பாடுகள் தேவை. சில தீவிரவாத தரப்புக்களாலேயே பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக ஒழிக்க முடியாதுள்ளது. இருப்பினும், இது நாட்டில் உள்ள மக்களின் நல்லிணக்கத்திற்கு மிகவும் சாதகமாக உள்ளது.





**கே: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவை ஏற்படுத்த சில ஊடகங்கள் முயற்சிக்கின்றன. பல்வேறு அரசியல்வாதிகளின் மாறுபட்ட கருத்துகளை அதற்குள் ஏற்பட்ட பிளவாகச் சித்தரிக்க வேண்டாம் என வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் டலஸ் அழகப்பெரும ஊடகங்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். இதுபற்றி விரிவாகக் கூற முடியுமா?**

பதில்: ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவு இல்லை. கூட்டணியில் உள்ள கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துகள் உள்ளன. இது சாதாரண நிலைமையாகும். நாங்கள் கூட்டணி அரசாங்கமாகும் என்பதுடன், பாராளுமன்றத்தில் 125 ஆசனங்கள் உள்ளன என்பதை மறந்துவிடக் கூடாது. வேறு சில அரசியல் கட்சிகளின் ஆதரவுடன் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுள்ளோம். ஜனாதிபதியின் பதவிக் காலம் முழுவதும் அவர்களின் ஆதரவு இன்றியமையாதது. இருப்பினும், அவர்கள் வெவ்வேறு விஷயங்களில் வெவ்வேறு கருத்துகளைக் கொண்டுள்ளனர். அவற்றைத் தெளிவாக வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதற்கு நாம் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

இதுபோன்ற பிரச்சினைகளை நாங்கள் எதிர்க்கிறோம் மற்றும் அவற்றுக்கு தீர்வுகளை வழங்குகிறோம். மறுபுறம், நாம் அனைவரும் ஒரே அரசாங்கத்தின் ஒரு பகுதியாக செயற்படுவதையும் உறுதிப்படுத்துகின்றோம்.

நாங்கள் ஒரு குறிப்பிட்ட நடத்தைவிதிகளை கடைப்பிடிக்கிறோம். அரசாங்கத்தின் அனைத்து பங்குதாரர்களும் நடத்தை நெறிமுறைகளை முழுமையாகக் கடைப்பிடிப்பார்கள் மற்றும் அமைச்சரவை இரகசியங்களைப் பாதுகாப்பார்கள் என்று நான் நம்புகின்றேன். மேலும் அவர்களின் கருத்துகள் மற்றும் விமர்சனங்கள் அரசாங்கத்தின் பாராளுமன்றக் குழுவிலும், அமைச்சரவையிலும் விவாதிக்கப்படுகின்றன.

**கே: அந்நிய செலாவணி நெருக்கடி குறுகிய காலத்துக்கு நீடிக்கும் என்றும், பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்பை அரசாங்கம் குறைக்கும் என்றும் நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். அடுத்த ஆறு மாதங்களில் அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிக்க அரசாங்கம் நம்புகிறது என்றும் நீங்கள் கூறியுள்ளீர்கள். இதுபற்றி உங்கள் கருத்து யாது?**

பதில்: பிற நாடுகள் மற்றும் சர்வதேச நிறுவனங்களிடமிருந்து நாங்கள் உதவி பெறுகிறோம். உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி என்பன எமக்கு ஆதரவளிப்பதாக உறுதியளித்துள்ளன.

அந்நிய செலாவணிப் பிரச்சினைகளை தீர்க்க இந்தியாவும் சீனாவும் முன்வந்துள்ளன. அத்தியாவசிய பொருட்கள், எரிபொருள் மற்றும் மருந்துகளைக் கொள்வனவு செய்வதற்கு அவர்கள் உதவுகின்றனர். எதிர்க்கட்சிகள் விமர்சனங்களை முன்வைத்தாலும் நமது வெளிநாட்டுக் கையிருப்பு கடந்த மாதம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

## பொய்யான குற்றச்சாட்டுகளை முன்வைத்து அரசாங்கத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்த முயற்சி!

## "பொதுஜன பெரமுனவுக்குள் பிளவுகள் கிடையாது. கூட்டணி கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துகள் நிலவுவது சாதாரணம்

---





# பலவீனங்களை சீர்செய்து, மறுமலர்ச்சி அடைவதற்கான திட்டங்கள் தேவை

சந்தையில் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுவதால் பாவனையாளர்கள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளார்கள். அத்தியாவசிய இறக்குமதிப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதன் பலனாக விலை அதிகரிப்பு மோசமான விடயமாகும். வெளிநாடுகளில் தங்கியிருக்காமல் எம்மால் முடிந்தவற்றை எமது நாட்டிலேயே உற்பத்தி செய்யும் எண்ணம் உண்டு. தேசிய உற்பத்திகளை அதிகரிப்பது பற்றிய விவாதம் இல்லை. தங்கள் நாட்டின் உற்பத்திப் பொருளை விலைக்கு வாங்குவதென்றால் அனைவருக்கும் விருப்பமே. சந்தைக்குச் சென்ற பின்னர் நாம் அனைவருமே பாவனையாளர்கள். விற்பனைக்கு உள்ள பொருட்களின் தரம், விலையை கருத்தில் கொள்ளும் போது பிரச்சினைகள் உள்ளன என்பது கவனிக்கப்பட வேண்டிய பக்கமாகும்.

இறக்குமதியைக் குறைத்து ஏற்றுமதியை அதிகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபடும் பின்னணி மிகவும் தெளிவானது. அந்நிய செலாவணி தட்டுப்பாடு உள்ளது. அதன் பலனாக எரிபொருள், மருந்துகள் போன்றவற்றைக் கூட இறக்குமதி செய்வதில் தடை ஏற்பட்டுள்ளது. ஏற்றுமதியை அதிகரித்து அதன் மூலம் அந்நிய செலாவணியை பெற்றுக் கொள்ளும் முயற்சி பற்றி கலந்துரையாடப்படுகின்றது. ஏற்றுமதியை அதிகரிப்பது முக்கியமாகும். உலக வர்த்தக சந்தைக்கு வழங்கக் கூடியவற்றை உற்பத்தி செய்ய விரைவாக நடவடிக்கை எடுப்பது நல்லது.

ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டிய ஒரு விடயம் பற்றி இங்கு குறிப்பிடப்பட வேண்டியது அவசியமாகும். இறக்குமதிக்கும் மற்றும் ஏற்றுமதிக்கும் இடையே தொடர்பு உண்டு. இறக்குமதியின்றி ஏற்றுமதியை அதிகரிப்பது நடைமுறைச் சாத்தியமல்ல. கொடுக்கல்வாங்கல் பழக்கவழக்கங்கள் இலகுவான பாவனையாகும். அது அன்றாட வாழ்க்கை மூலம் எமக்கு கற்றுத் தரும் முக்கிய பாடமாகும். கொடுக்கல் வாங்கல் நாடுகளுக்கிடையேயான வர்த்தகத்துடன் இணைந்தது. நாடொன்றில் இருந்து ஏதேனும் விலைக்கு வாங்கினால் அவர்கள் எம்மிடம் இருந்தும் எதையாவது விலைக்கு வாங்க தயார்.

உலகில் எந்தவொரு நாடும் வர்த்தக இடைவெளியை அதிகரித்துக் கொள்ளத் தயாரில்லை. ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக்கிடையே சமநிலையற்ற தன்மை வெளிநாட்டு வர்த்தகம் அல்ல. கப்பல்கள் துறைமுகத்துக்கு இந்நாட்டில் உள்ளவற்றை விலைக்கு வாங்குவதற்கு மாத்திரம் வருவதில்லை. அவர்களின் கப்பல் இலங்கை 'ஓடர்' செய்த பொருட்களை கொண்டு வருகின்றன. அந்நிய செலாவணி குறைந்துள்ள சந்தர்ப்பத்தில் இறக்குமதிக் கட்டுப்பாடு பின்பற்றக் கூடிய ஒரே முறையாகும். ஆனாலும் கட்டுப்பாடு காணப்பட்ட கடந்த வருட முடிவில் வர்த்தக இடைவெளி குறிப்பிடத்தக்க அளவு குறைவைக் காட்டவில்லை. வர்த்தக சந்தையில் ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையை கவனத்தில் கொள்ளும் போது இறக்குமதி எல்லைக்காக செலுத்தப்பட்ட நட்டஈடு கொஞ்ச நஞ்சமல்ல.

இறக்குமதியை கட்டுப்படுத்திய வேளையில் உருவான ஏனைய சிக்கல்களைப் பற்றி ஞாபகப்படுத்த வேண்டும். இறக்குமதியின் போது அறவிடப்படும் வரி வருமானம் இல்லாமல் போனது அரச வருமானத்தில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. வருமானம் குறையும் போது வரவு செலவை கட்டுப்படுத்துவது சிரமமமாகும்.

கடந்த காலப்பகுதியில் சந்தையை வழிநடத்தும் மூடிய மற்றும் திறந்த முறைகள் பற்றி மக்கள் அறிய மாட்டார்கள். கோஷ அரசியலால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கையர்கள் 'சீனி இல்லாமல் தேநீர் அருந்தும் யுகத்திற்கு, மிளகாய் இல்லாமல் சொதியை சாப்பிடுவோம்' என்று கூறுமளவிற்கு தயாரில்லை. மக்களின் உணர்வுகளை குறிப்பிட்ட ஒரு எல்லை வரையுமே கட்டுப்படுத்த முடியும் என்பதோடு, அந்த எல்லையை அறிந்து கொள்ளல் ஆட்சியாளர்களின் பொறுப்பாகும். உலகில் காணப்படும் நிலைமை மற்றும் சர்வதேச தன்மை பற்றி நல்ல புரிந்துணர்வு இன்று சமூகத்திற்கு உள்ளது. தகவல் தொழில்நுட்ப யுகத்தில் உலகில் ஏற்படும் மாற்றங்கள் பற்றி அறியாதவர்கள் இல்லை. அன்றாட தேவைகளை கட்டுப்படுத்த எடுக்கும் முடிவுடன் ஏற்படக் கூடிய ஆபத்தும் உள்ளது.

வருமானம் வீழ்ச்சியடைந்து அந்நிய கையிருப்பு குறைந்துள்ளதை ஏற்றுக் கொள்ள வேண்டும். கடன்சுமை பிரச்சினையாகும். மறுசீரமைப்பு தேவையான காலமாகும். சிரமங்கள் ஏற்படலாம். விடயங்களை தெளிவுபடுத்தி இந்த பலவீனங்களை சீர்செய்து மீண்டும் மறுமலர்ச்சி அடைய திட்டங்கள் தேவை. மக்கள் முன்னால் சென்று அவர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தியாகங்களை கேட்க வேண்டியதோடு அனைத்து சமூகமும் இணைந்து செய்யும் முயற்சியை தவிர வேறு தீர்வில்லை. ஒரு சிலருக்கு மாத்திரம் அழுத்தத்தை அளிக்கும், ஏனைய தரப்பாருக்கு சுமை தெரியாத முறைகள் மூலம் சந்தையை கட்டுப்படுத்துவது நியாயமல்ல.

தமிழில்: **வீ.ஆர்.வயலட்** ...

## அத்தியாவசிய உணவு பொருட்களுடன் 2,500 கொள்கலன்கள் தேக்கம்

அத்தியாவசிய உணவுப் பொருட்களடங்கிய சுமார் 2,500 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக அத்தியாவசிய பொருட்கள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

டொலர் தட்டுப்பாடு காரணமாக அரிசி, பருப்பு, சீனி, மிளகாய் உள்ளிட்ட உணவுப் பொருட்களடங்கிய கொள்கலன்கள் துறைமுகத்தில் தேங்கியுள்ளதாக சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## காதர் மஸ்தான் எம்.பியின் வேண்டுகோளையடுத்து வன்னி, முல்லைத்தீவில் காணி நடமாடும் சேவை

வன்னி மாவட்டத்தில் தொடராக நிலவி வரும் பல்வேறுபட்ட காணிப் பிரச்சினைகளை உரிய கரிசனை கொண்டு தீர்த்து வைக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளையடுத்து மன்னார் வவுனியா மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கான காணி நடமாடும் சேவை இன்று வவுனியாவில் நடைபெறுகிறது. இதற்கான பணிப்புரையை ஜனாதிபதி, காணி அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேனவுக்கு விடுத்துள்ளார்.இந் நடமாடும் சேவையின் மூலம் வன்னி மாவட்ட மக்களின் நீண்ட காலமாக நிலவி வந்த பல்வேறு வகையான காணிப் பிரச்சினைகளுக்கு தீர்வு எட்டப்படுவதுடன் மக்களின் காணிப் பிரச்சினைகளுக்கான தீர்க்கமான தீர்மானங்களும் வழங்கப்படவுள்ளது.

குறித்த நடமாடும் சேவைக்கு சம்பந்தப்பட்ட அனைத்து திணைக்கள அதிகாரிகளும் பங்குபற்ற உள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வத்திக்கானில் இன்று...

வெளிக் கொண்டு வருவதற்காக ஆன்மீக ரீதியிலான தலையீட்டை பெற்றுக்கொள்வது இந்த திருப்பலி பூஜையின் நோக்கமென தெரியவருகிறது. இந்த சிறப்பு திருப்பலி பூஜையில் கலந்துக்கொள்ளும் ஐரோப்பாவில் வாழும் இலங்கையருக்கு இதன் ஒருங்கிணைப்பாளர்களான இத்தாலியில் வசிக்கும் இலங்கை பிரஜைகள் நடவடிக்கை எடுத்துள்ளனர். இன்று காலை 10 மணிக்கு வத்திக்கான் புனித பீட்டர்ஸ் சதுக்கத்தில் கூடுமாறும், மதியம் 12 மணியளவில் புனித பாப்பரசர், திருப்பலி பூஜையில் கலந்துக்கெள்வாரெனவும் கூறியுள்ள ஒருங்கிணைப்பாளர்கள், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்கு நீதியை பெற்று தரும்படி பாப்பரசரிடம் கோரிக்கை விடுக்க வேண்டுமெனவும் கூறியுள்ளனர்.

## இலங்கையில் 4,000...

பெற்றே நாட்டுக்கு வருகைத் தந்துள்ளதாக அமைச்சு கூறுகின்றது. எனினும், உக்ரைனில் தற்போது ஏற்பட்டுள்ள யுத்த சூழ்நிலைக்கு மத்தியில் நாடு திரும்ப முடியாத உக்ரைன் பிரஜைகளுக்கு விசா கால எல்லையை அதிகரித்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

விசா காலம் முடிவடைந்த பின்னர் நாடு திரும்ப விரும்பும் உக்ரைன் பிரஜைகளை நாட்டுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சு குறிப்பிடுகின்றது.

இலங்கையிலிருந்து உக்ரைனுக்கு நேரடி விமான சேவை இல்லாமையினால், வேறு நாடுகளினூடாக பயணிக்கும் விமானங்களின் மூலம் சுற்றுலாப் பயணிகள் அனுப்பி வைக்கப்படுவார்களென சுற்றுலாத்துறை அமைச்சு மேலும் தெரிவிக்கின்றது.

## பெற்றோல் 20, டீசல்...

06ஆம் திகதி எரிபொருள் விலையை அதிகரித்ததுடன், இந்த மாதத்தில் இரண்டு தடவைகள் எரிபொருட்களின் விலையை அதிகரித்துள்ளது. அதன்படி, லங்கா ஐ.ஓ.சி நிறுவனத்தின் பெற்றோல் ஒரு லீட்டரின் விலை 203 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஒரு லீட்டர் டிசல் 139 ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

## நாளை திங்கள் முதல்...

தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

பகல்வேளையில் ஏ.பி மற்றும் சி வலயங்களில் 03 மணி நேரமும் ஏனைய வலயங்களில் 02 மணி 30 நிமிடங்களும் மின் துண்டிப்பு அமுலாக்கப்படுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை 38,400 மெற்றிக் தொன் பெற்றோல டங்கிய கப்பல் ஒன்று நேற்று நாட்டை வந்தடையவுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் மின்னுற்பத்தி நிலையங்களுக்கு தேவையான உலை எண்ணெய் தாங்கிய கப்பலை அடுத்த வாரம் நாட்டிற்கு வரவழைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

## 'ரஷ்யப் படைகள்...

உத்தரவிட்டார்.

இரு நாட்களாக நடைபெற்ற தாக்குதலில் 100க்கும் மேற்பட்ட உயிர்ப் பலிகள் நிகழ்ந்துள்ளன. ரஷ்ய தாக்குதலில் உக்ரைன் நிலைகுலைந்துள்ளது.

உக்ரைன் மீதான ரஷியாவின் தாக்குதலுக்கு ஐ.நா. அமைப்பு மற்றும் பல உலக நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

இந்நிலையில், உக்ரைன் மீதான தாக்குதலை விடுத்து ரஷியப் படைகள் முகாமுக்குத் திரும்ப வேண்டும் என்றும் அமைதிக்கான ஒரு வாய்ப்பை வழங்க வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் கூறியுள்ளார்.

## இலங்கையின் மோசமான...

துரிதப்படுத்துதல் தொடர்பான உயர்மட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தடுப்பூசிகள் கிடைப்பதில் உலகளாவிய ஏற்றத்தாழ்வு நிலவுகின்ற இவ்வேளையில், புதிய விகாரங்கள் தோன்றுவதற்கான அபாயகரமான சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, 'அனைவருக்கும் தடுப்பூசி போடுவதே சிறந்த வழி' என அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

உலகளாவிய ரீதியில் தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதில் காணப்படும் சமத்துவமின்மை மற்றும் ஆபத்துமிக்க புதிய திரிபுகள் ஏற்படுவதற்குள்ள நிகழ்தகவு போன்றவற்றைச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி , அனைத்து இடங்களிலுமுள்ள அனைவருக்கும் தடுப்பூசி ஏற்றுவதே, இந்தத் தொற்றுப் பரவலிலிருந்து மீள்வதற்குள்ள ஒரே வழியென்றும் அரச தலைவர்கள் முன்னிலையில் எடுத்துரைத்தார்.

இந்த விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் அப்துல்லா ஷாஹிட் (*Abdulla Shahid*) மற்றும் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டெரஸ் (*Antonio Guterres*) ஆகியோர், கொவிட்19 தடுப்பூசி ஏற்றலிலுள்ள முக்கியத்துவம் மற்றும் இது விடயத்தில் பல்வேறு நாடுகள் செயற்பட்ட விதம் தொடர்பில் குறிப்பிட்டனர்.

இந்த விவாதத்தின் முதல் சுற்றின் போது, தடுப்பூசி உற்பத்தி மற்றும் விநியோகத்தில் எதிர்கொள்ளப்படும் சவால்கள், தரம், குறைந்தளவு தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்த நாடுகளுக்கு அதிகளவில் விநியோகித்தல், விநியோக விகிதத்தை மேம்படுத்துதல் மற்றும் விநியோக முன்னறிவிப்பை உறுதி செய்தல் போன்ற விடயங்கள் குறித்து ஆராயப்பட்டன.

## ச.தொ.சவில் நியாயமான...

பல பொருட்கள் சந்தைக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

ச.தொ.ச நிறுவனம் போத்தல் குடிநீர், ஐஸ்கிரீம், தேநீர், சலவைத்தூள், சவர்க்காரம் போன்று பல பொருட்களை ச.தொ.ச நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

ச.தொ.ச விற்பனை நிலையங்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்த SLS சான்றளிக்கப்பட்ட தண்ணீர் போத்தலை 35 ரூபாவுக்கு விற்பனை செய்வதாகவும், அந்தப் போத்தலை திருப்பிக் கொடுத்தால், வாடிக்கையாளருக்கு 10 ரூபா திரும்ப வழங்கப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

சுற்றுச்சூழலுக்கு பிளாஸ்டிக் ஏற்படுத்தும் தாக்கத்தை குறைப்பதற்காக ச.தொ.ச நிறுவனத்தினால் போத்தல் குடிநீர் வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## எங்கள் கருத்து...

## முடிவுக்குக் கொண்டு வரப்பட வேண்டிய மூன்று சிக்கல்கள்!

கோரிக்கையைத் தட்டிக் கழிப்பதுமாக கடந்த 15 வருடங்களாக இழுபறியே தொடர்வதை நாம் காண்கின்றோம்.

எனவே இந்த மூன்று முக்கிய பிரச்சினைகளுக்கும் இருதரப்பும் கலந்துரையாடி ஒரு தீர்வினைக் காண்பது அவசியம். உண்மையில் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாமைக்கு அல்லது தீர்வுகளில் ஏற்படுகின்ற இழுபறி நிலைக்கு தமிழ் அரசியல் தலைமைகளையே முழுமையாக குறை கூற வேண்டியுள்ளது.

ஏனெனில் இதுவரை கிடைத்த பல்வேறு வாய்ப்புகளை தமிழ் அரசியல் தலைமைகள் நழுவ விட்ட சந்தர்ப்பங்களை நாங்கள் கடந்த காலத்தில் கண்டுள்ளோம். இதன் காரணமாக தமிழ் அரசியல் தலைமைகள் இந்தப் பிரச்சினைகள் தீர்க்கப்படுவதனை விரும்பவில்லையோ எனும் சந்தேகமும் ஏற்கனவே பல தரப்பினர் மத்தியிலும் உள்ளது.

குறிப்பாக முன்னைய ஐந்து வருட கால நல்லாட்சிக் காலத்தில் "அந்த அரசாங்கத்தை நாமே கொண்டு வந்தோம்" என்று வெளிப்படையாகவே கூறி வந்த தமிழ் அரசியல் தலைமைகள், அந்த ஐந்து வருட கால நல்லாட்சியில் தமிழ் மக்களது பிரச்சினைகளை தீர்ப்பதற்கு முன்வரவில்லை. அதுவே உண்மை. அந்த உண்மையை உரக்க கூறினாலும் அதனை ஏற்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.

ஐந்து வருட கால நல்லாட்சியின் போது அவர்களால் தீர்வு கண்டிருக்கக் கூடிய பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு கோரி இப்போது அவர்கள் ஆர்ப்பாட்டங்களையும், போராட்டங்களையும், கையெழுத்து பிரசாரங்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இன்று அவர்கள் கோரி நிற்கும் அதே பிரச்சினைகள் அன்றைய ஐந்து வருட கால நல்லாட்சியிலும் இருந்து வந்தவையே. அவற்றை நல்லாட்சிக் காலத்தில் அவர்கள் இலகுவாகத் தீர்த்து வைத்திருக்க முடியும்.

உண்மையில் நல்லாட்சி அரசாங்கத்தில் நிறைவேற்றப்படாத தமிழ் மக்கள் நலன் சார்ந்த பல விடயங்களை இன்றைய அரசாங்கம் செய்து வருகின்றது. நல்லாட்சிக் காலத்தில் தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தில் எவ்விதமான அக்கறையும் எடுக்காது இருந்த போதிலும், இந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன் இதுவரை அரசியல் கைதிகள் பலர் விடுவிக்கப்பட்டுள்ளனர். வடக்கு, கிழக்கில் யுத்த காலத்தில் படையினரின் பயன்பாட்டுக்காகப் பெறப்பட்ட மக்களது காணிகள் இன்றைய ஆட்சிக் காலத்தில் விடுவிக்கப்பட்டுள்ளன. அதேபோன்று இலங்கை கடற்பரப்பினுள் அத்துமீறி மீன்பிடிக்கும் இந்திய மீனவர்களது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்காக பல சுற்றுப் பேச்சுக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆனால் இவை எதனையும் கண்டுகொள்ளாத தமிழ் அரசியல் தலைமைகள் இந்த அரசாங்கத்தை வசைபாடுவதில் மட்டுமே குறியாக இருந்து வருகின்றன. இதற்கு காரணம் இல்லாமலில்லை. தமிழ் மக்களது இத்தகைய அடிப்படைப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டால், தமது அரசியல் எதிர்காலம் கேள்விக்குரியதாக மாறிவிடுமோ என்ற அச்சம் தமிழ்க் கட்சிகளிடம் உள்ளது.

தமது அரசியல் எதிர்காலத்திற்காக தமிழ் மக்களை அடகு வைத்தே அவர்கள் அரசியல் நடத்துகிறார்கள் என்பது தெட்டத்தெளிவாக புரிகின்றது. அத்துடன் இவர்கள் தமிழ் மக்களது உரிமைகளுக்காக பாடுபடுவதாக கூறிக் கொண்டு, தமிழ் மக்களது இயல்பு வாழ்க்கையை சீர்குலைக்கும் காரியத்திலேயே ஈடுபட்டு வருகிறார்கள்.

30 வருட கால யுத்தத்தில் ஆயுதங்கள் மூலமாக தீர்வு காணப்பட முடியாத தமிழ் மக்களது பிரச்சனைகளுக்கு, கடந்த 15 வருடங்களாக அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் நடத்தியும் இவர்களால் தீர்வு காண முடியவில்லை. அதற்குப் பிரதான காரணம் இவர்களிடையே விட்டுக்கொடுக்கும் தன்மையோ, பரஸ்பரம் கலந்துரையாடும் சுபாவமோ இல்லாமல் இருப்பதேயாகும்.

மார்ச் மாதத்தில் வருகின்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடருக்காக அந்தக் காலப் பகுதிகளில் மட்டும் இவர்கள் நடத்தும் நாடகங்கள் இப்போது சகலருக்கும் வெட்டவெளிச்சமாகியுள்ளது. இது தெரியாமல் மக்கள் தங்களுடன் நிற்பதாக அவர்கள் நினைப்பது பரிகாசத்துக்குரிய விடயம்.

எனவே தமிழ்த் தலைமைகள் இந்த கபட நாடகங்களை நிறுத்தி விட்டு வெளிநாடுகளில் தீர்வைத் தேடாது, அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தி உள்நாட்டுப் பொறிமுறைகளின் ஊடாக தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கு முயற்சிக்க வேண்டும். அதன் மூலமே எதிர்காலத்தில் தமிழ் சிங்கள மக்கள் ஒற்றுமையுடன் வாழக் கூடிய நிலைமை உருவாகும் என்பதே எமது கருத்தாகும்.

## ஆன்மீக செயற்பாடுகளுக்கு...

சிவராத்திரி விரத புண்ணியகால நன்னாளை முன்னிட்டு சிவராத்திரி தினமான எதிர்வரும் (01.03) அன்று ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரத் தலங்கள் உட்பட, நாடளாவிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரைக்கு அமைவாக, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இந்நிதியுதவி வழங்கும் செயற்றிட்டம் தெரிவு செய்யப்பட்ட ஆலயங்களின் மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

இளம் இந்துச் சிறார்களின் ஆன்மீக உணர்வுகளை மேன்மையுறச் செய்து, கலை நிகழ்வுகள் மூலமாக ஆக்கத்திறன் ஆளுமைகளுக்கு களம் அமைத்துக் கொடுப்பதோடு, மேன்மேலும் அவர்களுக்கு ஊக்கம் நல்கும் விதத்தில் பரிசில்கள் வழங்கிப் பாராட்டுதல் என்ற முக்கிய நோக்கத்தினை உடையதாகவே, மகாசிவராத்திரி விரத புண்ணிய நன்னாளை முன்னிட்டு, இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் நாடு முழுவதும் சிவாலயங்களுக்கு நிதியுதவி வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## EPDP மீது தேவையற்ற...

தெரிவித்துள்ளது.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீதான விசமத்தனமான அவதூறுகள் கண்டனத்துக்குரியதாகுமெனக் கட்சியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

அண்மையில் இலண்டனில் போர்க்குற்றங்களோடு தொடர்புபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட கைதுகள் தொடர்பான செய்திகளை வெளியிட்ட சில ஊடகங்கள், இச் சம்பவத்தை ஈ.பி.டி.பியின் மக்கள் நலச் செயற்பாடுகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் செய்திகளை வெளியிட்டு மீண்டும் எம்மீது சேறுபூசும் கைங்கரியத்தை அரங்கேற்றி இருக்கின்றன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பணி, இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு எமது மக்கள் பெறவேண்டியதை நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையூடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் பாதையிலும் சாதித்துப் பெற்றுக் கொள்வதேயாகும் என்பதை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வலியுறுத்தி வருவது மட்டுமல்லாது நிருபித்தும் காட்டி வருகின்றோம்.

அதற்கான எமது ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பையும் பொறுத்துக் கொள்ளாத பயங்கரவாதிகளும், அவர்களின் படுகொலைகளை நியாயப்படுத்தியும், அவர்களுக்கு துதிபாடியும் பிழைப்பு நடத்தியும் வந்தவர்களால் எமது கட்சியின் பல உறுப்பினர்கள் பலிகொள்ளப்பட்டனர். பலர் புலத்தில் வாழமுடியாத கொலை அச்சுறுத்தல் காரணமாக புலம்பெயர்ந்து போனதும் கடந்தகால கசப்பான வரலாறாகும்.

இந்தநிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் ஒரு போதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. கொலைகளுக் கூடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியுமென்ற நம்பிக்கை கொண்டவர்களுமில்லையென்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்நிலையில், எம்மீது பல அவதூறுகளை சுமத்தியும் வந்துள்ள தரப்பினர், தற்போதும் எங்கெங்கோ நடந்தேறும் சம்பவங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியை தொடர்புபடுத்தி விசமத்தனமான உள்நோக்கத்துடன் செய்தி பரப்புவது, அவர்களின் அரசியல் ரீதியான உள்நோக்கம் கொண்ட செயலாகும்.

## தங்கத்தின் விலை நாளாந்தம்...

நாளாந்தம் தங்கத்தின் விலை நான்கு மடங்கு அதிகரிக்கிறது. அதற்கமைய, நாளொன்றுக்கு 5,000 ரூபாய் அதிகரிப்பு ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தங்கத்தின் விலை அதிகரிப்பு காரணமாக வெளிநாடுகளிலிருந்து வரும் இலங்கையர் டொலர்களுக்கு பதிலாக தங்கத்தை கொண்டுவரும் பழக்கத்தை கொண்டுள்ளனர்.

தங்கத்தின் விலை தொடர்ந்தும் உயரும் நிலை காணப்படுவதாகவும், நுகர்வோர் இந்த விலை உயர்வை தாங்கிக் கொள்ள முடியாதெனவும் நகை வியாபாரிகள் மேலும் தெரிவித்தனர்.

## 'ரஞ்சனுக்காக சர்வதேசம் செல்லவும்...

மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குழு தலையீடு செய்யுமெனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை (25) பார்வையிட சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் சார் மனிதாபிமானியான ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்ட வன்னம் இருக்கிறோம். குறிப்பாக, அவர் தற்போது சிறைப்படுத்தப்பட்டிருப்பது நமக்கும் நாட்டுக்கும் இழப்பாகவே பார்க்கிறேன். தற்போதைய சூழ்நிலையில் ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டிருந்தால் இந்நாட்டில் துன்பப்படும் மக்களுக்கு உதவுவதில் அவர் முக்கியப் பங்காற்றியிருப்பார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பூரண சுதந்திரம் வழங்குமாறு ஜனாதிபதியிடம் நான் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளேன். நேற்று முன்தினமும் நேற்றும் அந்த கோரிக்கையை முன்வைத்தோம்.ஆனால் அவருக்கு இன்னும் அந்த விடுதலை வழங்கப்படவில்லை.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பூரண சுதந்திரம் வழங்குமாறு மனிதாபிமானத்தின்,கருனையின் பெயரால் மீண்டும் கேட்டுக்கொள்கின்றோம்.

## ரஷ்யப் படை 3,500 பேர் பலி;...

சுட்டு வீழ்த்தி உள்ளோம். இது வரை 3, 500 வீரர்களை கொன்று விட்டோமென உக்ரைன் அரசு தெரிவித்துள்ளது. மேலும் தங்களின் ஆயுதங்களை கீழே போட மாட்டோமெனஉக்ரைன்அதிபர்செலன்ஸ்கிகூறியுள்ளார்.

இதேவேளை உக்ரைன் தலைநகர் கிவியை கைப்பற்றியுள்ளதாக ரஷ்யா அறிவித்துள்ளபோதும் உக்ரைன் ஜனாதிபதி அதனை மறுத்துள்ளதுடன் தானும் அமைச்சர்களும் கிவி நகரிலேயே இருப்பதாக காணொளி மூலம் தெரிவித்துள்ளார்.

உக்ரைனின் இராணுவ தளங்கள் நகரங்களை வான்வழி தாக்குதல் வாயிலாக அழித்து வரும் ரஷ்ய படையினர் தலைநகர் கீவ்வை சுற்றியுள்ள புறநகர் பகுதிகளை ஆக்கிரமிக்க துவங்கியுள்ளனர். இந்நிலையில் ''உக்ரைனுடன் பேச்சு நடத்த குழுவை அனுப்ப தயார்'' என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஐரோப்பிய நாடான உக்ரைன் மீது படையெடுத்துள்ள ரஷ்யா இரண்டாவது நாளாக தாக்குதல்களை தொடர்ந்தது. தலைநகர் கீவ்வில் அதிகாலை முதலே குண்டுகள் வெடிக்கும் சத்தம் கேட்க துவங்கியதாக உக்ரைன் மக்கள் அச்சத்துடன் தெரிவித்தனர்.'பொது மக்கள் வெளியே வர வேண்டாம்' என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தலைநகர் முழுதும் உக்ரைன் இராணுவ வீரர்கள் ஆயுதங்களுடன் தயார் நிலையில் நிறுத்தப்பட்டு உள்ளனர். கீவ் நகரை சுற்றி ரஷ்ய உளவாளிகளும் நாச வேலைகளில் ஈடுபடுவோரும் அதிக எண்ணிக்கையில் தென்படுவதாக உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

'நகரங்களை அழிப்பது எங்கள் நோக்கமல்ல' என ரஷ்யா தெரிவித்தாலும் மக்கள் வசிக்கும் பகுதிகளில் நேற்றுமுன்தினம் ரஷ்ய படைகள் தாக்குதல் நடத்தியதை பார்த்ததாக பத்திரிகையாளர்கள் தெரிவித்தனர்.

தலைநகர் கீவ்வை கைப்பற்ற முயற்சி செய்த ரஷ்ய படையினருடன் இவான்கிவ் என்ற இடத்தில் உக்ரைன் இராணுவத்தினர் கடும் சண்டையில் ஈடுபட்டனர். இந்த இடம் கீவ் நகரில் இருந்து 60 கி.மீ. தொலைவிலுள்ளது. ஆனாலும் ரஷ்ய படைகள் கீவ் நகரை நெருங்கிவிட்டதாக சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இதற்கிடையே கிழக்கு ஐரோப்பிய எல்லையில் 'நேட்டோ' எனப்படும் வட அமெரிக்க ஐரோப்பிய நாடுகளின் படை தயார் நிலையில் உள்ளதாகவும் அதற்கு வலுசேர்க்க கூடுதலான அமெரிக்க படையினர் ஜெர்மனியில் குவிக்கப்பட்டு இருப்பதாகவும் அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் உலக நாடுகளின் மௌனம் உக்ரைன் ஜனாதிபதி வோலேடிமிர் ஜெலன்ஸ்கியை கவலையில் ஆழ்த்தியுள்ளது.

'ரஷ்யாவுடன் பேச்சு நடத்த தயார்' என உக்ரைன் அதிபர் செலன்ஸ்கி ஏற்கனவே தெரிவித்து இருந்த நிலையில் அதற்கு ரஷ்ய அதிபரின் கிரெம்ளின் மாளிகையில் இருந்து பதில் வந்துள்ளது.இது குறித்து ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினின் செய்தி தொடர்பாளர் டிமிட்ரி பெஸ்கோவ் கூறுகையில் ''பெலாரஸ் தலைநகரான மின்ஸ்கில் உக்ரைனுடன் பேச்சு நடத்த உயர்நிலைக் குழுவை அனுப்ப அதிபர் புடின் தயாராக உள்ளார்'' என தெரிவித்தார்.

## அனைத்து சவால்களையும்...

03ஆம் திகதி வியாழக்கிழமை சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கான பதிலையும் அன்றைய தினமே முன்வைப்பதற்கு தீர்மானித்துள்ளதாக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இம்முறை ஜெனிவா ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் கலந்து கொள்வதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமையிலான தூதுக் குழு நேற்று முன்தினம் பயணமாகியுள்ளதுடன் பயணமாவதற்கு முன்பே அமைச்சர் ஜீ.எல்

பீரிஸ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதேவேளை,இம்முறை கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான உண்மை நிலையை தெளிவுபடுத்தவும் இலங்கைக்கு ஏற்படக் கூடிய பாதகமான நிலைமைகள் தொடர்பில் அரசாங்கத்துக்கு கிடைத்துள்ள தகவல்களுக்கிணங்க அவற்றை எதிர்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அமர்வில் கலந்துகொள்ளும் இலங்கை இராஜதந்திரிகளுக்கு வழங்கியுள்ளதாகவும் வெளிவிவகார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன. நாளை ஆரம்பமாகவுள்ள 49 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி வரை தொடரவுள்ளது.

மனித உரிமையை பாதுகாப்பது தொடர்பில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். அதேவேளை இலங்கை, ஐக்கிய நாடுகள் சபையின் கொள்கைகளுக்கு இணங்கவே செயற்பட்டுவரும் அதேவேளை அதற்கு கடமைப் பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் மனித உரிமை துறையில் செயற்படும் பெருமளவிலான சர்வதேச நிறுவனங்கள் இரட்டை வேடத்துடன் செயற்படுவதாக தெரிவித்துள்ள அவர்,

அத்தகைய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகள் இலங்கை போன்ற சிறிய நாடுகளுக்கு ஒருவிதமாகவும் வல்லமை படைத்த நாடுகள் தொடர்பில் வேறொரு விதமாகவும் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

பாரிய மனித உரிமை மீறலை மேற்கொள்ளும் நாடுகள் தொடர்பில் அந்த நிறுவனங்கள் எந்த கவனத்தையும் செலுத்துவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சில தரப்பினர் இலங்கைக்கான ஜிஎஸ்பி பிளஸ் சலுகையை நிறுத்துமாறு யோசனை முன்வைத்துள்ள நிலையில் ஜிஎஸ்பி பிளஸ் தடை செய்யப்பட்டால் நாட்டின் பல்வேறு துறைகள் பாதிப்பை எதிர்நோக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும் இம்முறை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் புதிய யோசனைகள் நிறைவேற்றல் மற்றும் வாக்களிப்பும் இடம் பெறாதென்றும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை நாட்டின் கடந்த கால அரசாங்கங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கான பொறிமுறையை முன்னெடுக்க தவறியுள்ளதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசாங்கம், ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் தீர்மானத்திலிருந்து வெளியேறி இரண்டு வருடங்கள் கடந்துள்ள போதிலும் இதுவரை நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக் கூறலை உறுதி செய்து அவற்றை வலுப்படுத்தும் வகையில் எத்தகைய செயற் திட்டத்தையும் முன்வைக்கவில்லையென்றும் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் மனித உரிமைகள் மற்றும் பொறுப்புக்கூறல் நிலைமைகள் தொடர்பான ஐ.நா. மனித உரிமை பேரவை உயர்ஸ்தானிகர் மிச்செல் பச்லெட்டின் 17 பக்க அறிக்கை ஐக்கிய நாடுகள் மனித உரிமை உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளது. புதிய அரசியலமைப்பு திருத்தம் தொடர்பான நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதையடுத்து முக்கிய விடயங்களில் சுதந்திரத்தை உறுதி செய்வதற்கு அது முக்கியமானதாக அமையுமென்று குறிப்பிட்டுள்ள உயர்ஸ்தானிகர் புதிய அரசியலமைப்பில் அதிகார பரவலாக்கம் மற்றும் மனித உரிமை தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தியுள்ளார்.

## சர்ச்சைக்குரிய பிபிலை சீனி தொழிற்சாலை விவகாரம்:

# விமர்சனங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில் வெளிவரும் கசப்பான உண்மைகள்




சுமன ரத்ன தேரர்


சோரத தேரர்


கே.எம்.நிஹால்


ஜஸ்டின் புஞ்சி ஹேவா


பண்டார


நிமால் தசநாயக்க

பிபிலை ரிதிமாலியத்த பிரதேசத்தில் சீனித் தொழிற்சாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக மகாவலி அதிகாரசபை காணி வழங்கியுள்ளது.

சிங்கப்பூர் நிறுவனமொன்று சீனித் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை முன்னெடுத்து வரும் நிலையில் மகாவலி அதிகார சபையானது 149. 3 ஹெக்டயார் காணியில் அதனை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

இந்நிலையில் கடந்த பல வருடங்களாக அக்காணியில் சட்டபூர்வமான எத்தகைய அனுமதியோ அல்லது காணி உறுதிப்பத்திரமோ இல்லாத நிலையில் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த மக்கள்

அந்த காணியை சீனி உற்பத்தி தொழிற்சாலைக்கு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

பரம்பரை பரம்பரையாக தாம் அந்தக் காணியில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் தற்போது அந்தக் காணி தம்மிடமிருந்து பலாத்காரமாக பறிக்கப்பட்டு சீனித் தொழிற்சாலை நிர்மாணிப்பதற்காக சிங்கப்பூர் நிறுவனத்திற்கு வழங்கப்பட உள்ளதாகவும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதற்கு ஒருபோதும் நாம் இடமளிக்கப் போவதில்லை என அந்த மக்களும் அந்த பிரதேசத்தின் சில பௌத்த தேரர்களும் தெரிவிப்பதுடன் எதிர்ப்பு நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

சம்பந்தப்பட்ட அந்த காணியோடு 65,000 ஏக்கர் காணிகள் சீனி உற்பத்தி தொழிற்சாலை மற்றும் கரும்பு உற்பத்தி நடவடிக்கைகளுக்காக மேற்படி சிங்கப்பூர் நிறுவனத்திற்கு வழங்கப்படுவதாகவும் அதனால் பெருமளவு விவசாயிகள் பாதிக்கப்படுவதாகவும் அதற்கு எந்த வகையிலும் இடமளிக்க முடியாது எனவும் அந்த தேரர்கள் தெரிவிக்கின்றனர். அந்த தேரர்களில் சிலர் ஆசிரியர்களாகவும் பிரதேச சபை உறுப்பினர்களாகவும் உள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தாம்பயிர்ச்செய்கை மேற்கொண்டிருந்த காணிகள் அறுவடைக்கு முன்னரே இடைநடுவில் டோஸர்களைப் பயன்படுத்தி அழிக்கப்பட்டுள்ளதாகவும்.

அது மனிதாபிமானமற்ற செயல் என்றும் அந்த மக்கள் தெரிவிக்கின்றனர்.

அதேவேளை குறித்த பகுதியின் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சி பிரதேச சபை உறுப்பினர்கள் சிலரும் சில பொதுமக்களும், பௌத்த தேரர்களும் அதற்கு நேர்மாறான மாற்றுக் கருத்துக்களை தெரிவிக்கின்றனர்.

மிகவும் பின்தங்கிய பிரதேசமான ரிதிமாலியத்த பிரதேசத்தில் சீனி உற்பத்தித் தொழிற்சாலை உருவாகுமானால் அந்தப் பகுதி அபிவிருத்தியடைவதுடன் அப்பகுதி மக்கள் தமது வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றிக் கொள்வதற்கும் அந்தத் திட்டம் வழிவகுக்கும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர். இத்தகைய வாய்ப்பு தவற விடப்பட்டால் அந்த பிரதேசம் இனி ஒருபோதும் அபிவிருத்தியடையாது மக்களின் வாழ்க்கைத் தரத்திலும் எந்தவித மாற்றமும் ஏற்படாது என்ற கருத்துக்களை அவர்கள் முன்வைத்தனர். அப்பகுதியில் உள்ள பெரும்பாலான இளைஞர் யுவதிகள் அங்கிருந்து வெளியேறி கொழும்பிலோ அல்லது வேறு எங்கோ தொழில்களை செய்து வருவதாகவும் சொந்த ஊரில் இத்தகைய தொழிற்சாலைகள் அல்லது தொழில் முயற்சிகள் இல்லாமையே அதற்கு காரணம் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.



அவ்வாறான கருத்துக்களை முன்வைத்தவர்களுள் ஆளும் கட்சி மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர்களும் உள்ளடங்குகின்றனர்.

இத்தகைய பின்னணியில் மக்கள் விடுதலை முன்னணியின் முக்கியஸ்தரான ஒருவர் அப் பிரதேச மக்களை குழப்பி அந்தப் பிரதேச மக்களுக்கும் அந்த பிரதேசத்திற்கும் கிடைக்கும் முன்னேற்றத்திற்கான வாய்ப்பை தடுப்பதாகவும் அவரே அந்த மக்களை எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்திற்கு தூண்டி விடுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

நேரடி ரிப்போர்ட் :
**லோரன்ஸ் செல்வநாயகம்**
படங்கள்: **கெலும் லியனகே**

இந்த சூழ்நிலையில் மேற்படி விவகாரம் அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள நிலையில் பாராளுமன்றத்திலும் வெளியிலும் அது தொடர்பான ஆதரவு மற்றும் எதிர்ப்பு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

மகாவலி அதிகாரசபைக்கு சொந்தமான மேற்படி காணியில் எந்த ஆதாரமும் இல்லாமல் அத்துமீறிய விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் மக்களை அங்கிருந்து வெளியேற்றி அவர்களுக்கு மாற்று இடங்களை வழங்குவதற்கும் பொருத்தமானவர்களுக்கு நட்ட ஈடுகளை வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என விடயத்திற்கு பொறுப்பான அமைச்சர் சமல் ராஜபக்ச பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

ஜே.வி.பி எம்பி அனுரகுமார திசாநாயக்க மேற்படி விவகாரம் தொடர்பில் சபையில் முன்வைத்த கேள்விகளுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அந்தப் பிரதேசத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ள மேற்படி விவகாரம் தொடர்பில் உண்மை நிலையை கண்டறிவதற்காக கொழும்பிலிருந்து ஊடகவியலாளர்கள் குழு ஒன்று அண்மையில் பிபிலை ரிதிமாலியத்த பகுதிக்கு சென்று சம்பந்தப்பட்ட இரு தரப்பினரதும் கருத்துக்களை பெற்றுக்கொண்டது.

மேற்படி விவசாயிகளின் விவசாயக் காணி பிரதேசம் மட்டுமல்லாமல் அம்பாறை, மொனராகலை மாவட்டங்களில் கரும்பு உற்பத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் பகுதிகளுக்கும் ஊடகவியலாளர்கள் அழைத்துச் செல்லப்பட்டனர். அப்பகுதிகளில் மக்கள் கரும்பு பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்களிடம் மேற்படி தொழிற்சாலை பேரம்பேசி கரும்புகளை கொள்வனவு செய்யும் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் 5 , 6 ஏக்கர்களிலும் சிலர் பத்து பதினைந்து ஏக்கர்களிலும் கரும்பு பயிர்ச்செய்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். அவர்கள் தமது சொந்த தொழிலாகவே அதனை முன்னெடுத்து வருகின்றனர்.

அதே வேளை, மேற்படி காணி வழங்களில் முக்கிய நிறுவனமான மகாவலி அதிகார சபை அது தொடர்பில் என்ன தெரிவிக்கின்றது. என்பதை தெளிவுபடுத்திக் கொள்ளும் வகையில் மகாவலி அதிகார சபையின் ரிதிமாலியத்த தொகுதிக்கான முகாமையாளர் கே. எச். நிஹாலை சந்தித்து கலந்துரையாடியபோது அவர் சில முக்கியமான தகவல்களை வழங்கினார்.இலங்கை சீனி நிறுவனத்திற்கு மகாவலி அதிகார சபையினால் சீனித் தொழிற்சாலை நிர்மாணிப்பு திட்டத்திற்காக 149.2 ஹெக்டயார் காணி வழங்கப்பட்டுள்ளது. இது பிபிலை, ரிதிமாலியத்த, மகியங்கனை, மெதகம பிரதேச செயலாளர் பிரிவுகளை உள்ளடக்கிய காணியாகும். மட்டுப்படுத்தப்பட்ட பிபிலை சீனித் தொழிற்சாலை நிறுவனத்திற்கு இதனை வழங்குவதற்கு நீதிமன்றத்தின் மூலம் அனுமதி பெறப்பட்டுள்ளது.எனினும் இதற்கான கரும்பு பயிர்ச் செய்கை பிபிலை, மெதிவலை உள்ளிட்ட சில பகுதிகளில் மேற்கொள்ளப்படுகின்றன.

மேற்படி நிலப்பரப்பில் இந்த ஒரு தொல் பொருள் இடங்களும் அடையாளம் காணப்படவில்லை.இந்த திட்டமானது 152 . 25 மில்லியன் அமெரிக்க டொலர் நேரடி முதலீடாக ஆரம்பிக்கப்படுகிறது.இதன் மூலம் அந்த பிரதேசத்தில் உள்ள இளைஞர், யுவதிகளுக்கு ஆயிரம் வேலைவாய்ப்புகள் நேரடியாகவும் மேலும் ஒரு லட்சம் வேலை வாய்ப்புகள் அதனோடு இணைந்ததாகவும் கிடைக்கவுள்ளன.

இந்த தொழிற்சாலை செயற்படும் போது நாட்டின் சீனி தேவையில் 14 வீதமான தேவையை அதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் மீள்புத்தாக்க மின் உற்பத்தி மூலம் 27 மெகாவாட் மின்சாரத்தையும் பெற்றுக்கொள்ள முடியும்.


சோமவதி


நிசங்க

அத்துடன் 36ஆயிரம் மெட்ரிக் தொன் விலங்கு உணவு 12 ஆயிரம் மெட்ரிக் தொன் சேதனப் பசளையையும் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. பிபிலை சீனி நிறுவனத்தின் 89 வீத பங்கு கேசல் வென்ஜர்ஸ் நிறுவனத்திற்கும் 10 வீத பங்கு தேசிய பிரதிநிதியான ஐ.எம்.எஸ். நிறுவனத்திற்கும் ஒரு வீத பங்கு மகாவலி அதிகார சபைக்கும் பெற்றுக்கொள்ளப்பட உள்ளதுடன் அந்த வகையில் இதனை அரச மற்றும் தனியார் இணைந்த திட்டமாக முன்னெடுப்பதே நோக்கமாகும்.

இந்த திட்டத்திற்காக 65,000 ஏக்கர் நிலப் பரப்பு வழங்கப்படுவதாக பல்வேறு தரப்பினராலும் விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.இந்த திட்டத்தை எதிர்க்கும் விவசாய சமூகத்தினர் தேரர்கள் மற்றும் ஜே.வி.பி உறுப்பினர்கள் அதனையே அழுத்தமாக தெரிவிக்கின்றனர். மக்களின் 65,000 ஏக்கர் விவசாய காணிகள் இந்த சீனி தொழிற்சாலைக்காக அபகரிக்கப்படுகின்றன என்பதே அவர்களின் குற்றச்சாட்டாகவும் உள்ளது. எவ்வாறெனினும் மகாவலி அதிகார சபை ஊடாக 65,000 ஏக்கர் காணி மேற்படி கரும்பு தொழிற்சாலைக்காக வழங்கப்படவில்லை. அதற்கான அனுமதியும் ஒருபோதும் மகாவலி அதிகார சபையினால் வழங்கப்படவில்லை. மகாவலி அதிகார சபையினால் மேற்படி திட்டத்திற்கு 149.2 ஹெக்டயர் (379 ஏக்கர்) காணியே வழங்கப்பட்டுள்ளது.

2010ஆம் ஆண்டு நிலஅளவைத் திணைக்களத்தினால் அதற்கான காணி அளக்கப்பட்டது. ரிதிமாலியத்தபிரதேச செயலாளர் பிரிவுக்கு சொந்தமான அந்த காணியை 2007ஆம் ஆண்டு மகாவலி அதிகார சபை பொறுப்பேற்றது.அதனையடுத்து அந்தக் காணியில் அத்துமீறி தொடர்ச்சியாக அப்பகுதி மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தனர். குறிப்பிட்ட காலத்திற்கு சோளம் உட்பட சேனைப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட போதும் நிரந்தரமான பயிர்ச் செய்கை தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவில்லை.

அப்பகுதியில் 50 பேர் இனங்காணப்பட்டு அவர்களில் நான்கு பேர் சுயவிருப்பின் பேரில் அங்கிருந்து வெளியேறினர். ஏனைய நாற்பத்தி ஆறு பேரையும் அங்கிருந்து வெளியேற்றுவதற்காக நாம் நீதிமன்ற நடவடிக்கையை மேற்கொள்ள நேர்ந்தது. 46 வழக்குகளும் மஹியங்கனை நீதிமன்றத்தில் மகாவலி அதிகார சபைக்கு சாதகமாகவே தீர்ப்பு வழங்கப்பட்டது.

**(10ஆம் பக்கம் பார்க்க)**

## பனை சார்ந்த தயாரிப்புகளை ஊக்குவிக்கும் சென்னை இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம்







*இலங்கையின் வடக்குப் பகுதியில், பனைமரம் "கற்பகதரு" பலதரப்பட்ட பயன்பாடுகளுக்காக குறிப்பிடப்படுகிறது. பனையின் கிட்டத்தட்ட ஒவ்வொரு பகுதியும், மேலிருந்து கீழாக (வேர்) பொருளாதார மதிப்பைக் கொண்டுள்ளது (கிட்டத்தட்ட 800) உள்ளூர் மக்களின் வாழ்க்கைக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும், உணவு மற்றும் ஊட்டச்சத்துக்கு மட்டுமல்லாமல் பல வழிகளில் பங்களிக்கிறது. வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்கும் பனை உற்பத்திகள் தொடர்பான ஆராய்ச்சிகளை பல்வகைப்படுத்தவும், மேம்படுத்தவும், இலங்கை அரசாங்கம் பனை அபிவிருத்திச் சபையை நிறுவியுள்ளது. ஐரோப்பிய மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பெறுமதி கூட்டப்பட்ட பனைமரப் பொருட்கள் வளரும் சந்தையைக் கொண்டிருப்பது கண்டறியப்பட்டுள்ளது. 18 பிப்ரவரி 2022 அன்று, சென்னையில் உள்ள இலங்கை துணை உயர் ஸ்தானிகராலயம், தென்னிந்தியாவில் உள்ள வணிக சமூகத்திற்கு பல்வகைப்பட்ட மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட தயாரிப்புகளை அறிமுகப்படுத்துவதற்காக தணை உயர்ஸ்தானிகராலய வளாகத்தில் ஒரு சிறிய தேநீர் விழாவை ஏற்பாடு செய்திருந்தது. பிரதி உயர்ஸ்தானிகரின் அழைப்பின் பேரில், பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிருசாந்த பதிராஜாவும் இந்நிகழ்வில் கலந்துகொண்டார். பங்கேற்பாளர்களுக்கு பல பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட பனை சார்ந்த தயாரிப்புகள் அறிமுகப்படுத்தப்பட்டன, அவர்கள் தென்னிந்தியாவில் சில சில்லறை விற்பனை நிலையங்களைத் திறப்பதற்கும், பனை சார்ந்த பொருட்களைத் விற்பதற்கும் தங்கள் ஆர்வத்தை வெளிப்படுத்தினர். பங்கேற்பாளர்களுக்கு வழங்கப்பட்ட சுவையான 'சிலோன் டீ' கோப்பையுடன் நிகழ்வு நிறைவுற்றது.*

## டாக்டர் சுபாஷினி பத்மநாதனின் இணைய விரிவுரை மற்றும் பக்தி நடனம்

2022 பெப்ரவரி 28 மாலை 6 மணிக்கு



சுவாமி விவேகானந்தா கலாசார மையம் (SVCC), இந்தியாவின் உயர் ஸ்தானிகராலயம், டாக்டர். சுபாஷினி பத்மநாதனின் இணைய விரிவுரை மற்றும் பக்தி நடனம் "சிவமயம்" என்ற தலைப்பின் கீழ் நடைபெறும். "இலங்கையில் சிவன் வழிபாடு" என்பதை குறிக்கும் வகையில் இந்த நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மகாசிவராத்திரி விழாவான 2022 பெப்ரவரி 28 திங்கட்கிழமை அன்று இந்நிகழ்வு இடம்பெறும். பார்வையாளர்கள் இந்த நிகழ்ச்சியை 2022 பெப்ரவரி 28 அன்று மாலை 6.00 மணிக்கு, SVCC, Colombo FACEBOOK பக்கத்தில் https://www.facebook.com/ICCRSriLanka இணைப்பில் இல் பார்க்கலாம்.

# நாளை கூடுகிறது மனித உரிமைகள் பேரவை



**ஜெனீவாவில் நாளை ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடரில் இலங்கை விவகாரமும் பேசப்படவுள்ளதால், அது குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் தொடர்ச்சியாக தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.**

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கை குறித்த தனது எழுத்துமூல அறிக்கையை சமர்ப்பிக்கவிருப்பதுடன், இது தொடர்பில் பதில் அளிப்பதற்காக வரைவு முன்னதாகவே இலங்கைக்கு வழங்கப்பட்டிருந்தது. இலங்கை அரசாங்கமும் தனது தரப்பு விளக்கத்தைப் பதிலாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு வழங்கியுள்ளது.

இந்த நிலையில், அரசாங்கம் சார்பில் இந்தக் கூட்டத்தொடரில் பங்கெடுப்பதற்காக வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மற்றும் நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட அரசாங்கக்



## வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், நீதி அமைச்சர் அலி சப்ரி உள்ளிட்ட அரசாங்க குழுவினர் ஜெனீவாவில்!

குழுவினர் ஜெனீவா சென்றுள்ளனர். இலங்கைக்கு எதிரான பிரேரணையைக் கொண்டு வந்த நாடுகள், 'சர்வதேசத்துக்கு வழங்கிய உறுதிமொழிகளை அரசாங்கம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தவில்லை' என்று தொடர்ந்தும் குற்றச்சாட்டுகளை முன்வைத்து வரும் நிலையில், இலங்கை அரசாங்கம் இக்குற்றச்சாட்டுகளை மறுத்து வருகிறது.

தமது தரப்பில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகளை சர்வதேசத்துக்குத் தெளிவாக எடுத்துக் கூறி நியாயமொன்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையை இலங்கை அரசு தொடர்ந்தும் வெளியிட்டு வருகிறது.

பெப்ரவரி 28ஆம் திகதியான நாளை முதல் ஏப்ரல் 01 ஆம் திகதி வரை நடைபெறவிருக்கும் 49 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து மார்ச் 03 ஆம் திகதி கலந்துரையாடல்கள் நடத்தப்படவுள்ளன. வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் இலங்கை சார்பில் உரையாற்றுவார். அதேவேளை இலங்கை அரசுக்கு எதிரான சில தரப்பினர் சர்வதேச நாடுகளைப் பயன்படுத்தி அழுத்தமொன்றைக் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இரத்துச் செய்வது, உயிர்த்த ஞாயிறு தாக்குதல் சம்பவத்துக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடிப்பது குறித்த விடயங்கில்

## இலங்கையை சர்வதேச அரங்கில் ஓரங்கட்டுவதற்காக, சொந்த நிகழ்ச்சி நிரலில் காய்களை நகர்த்தும் சதித்திட்டத்தில் சில நாடுகள்!

இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று குறித்த தரப்புக்கள் வலியுறுத்தி வருகின்றன.

மனித உரிமை, நல்லிணக்கம் உள்ளிட்ட விடயங்களைப் பலப்படுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பது போதுமானதாக இல்லையென்ற அடிப்படையிலேயே சர்வதேச அரங்கில் எமது நாட்டுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

இருந்தபோதும் மனித உரிமை மீறல்களுக்குத் தாம் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லையென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அண்மையில் நடைபெற்ற ஐ.நா பொதுச்சபைக் கூட்டத்திலும், அதன் பின்னர் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போதும் திட்டவட்டமாகக் கூறியிருந்தார். இருந்தபோதும் சில மேலைத்தேய நாடுகள் தமது சொந்த நிகழ்ச்சி நிரலுக்கு அமைய இலங்கையை சர்வதேச அரங்கில் ஓரங்கட்டும் வகையிலேயே காய்களை நகர்த்தி வருகின்றன.

மறுபக்கத்தில், ஜெனீவா கூட்டத்தொடரில் இலங்கைக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் வகையில் சதித்திட்டங்கள் தீட்டப்படுவதாக அரசாங்கம் குற்றம் சாட்டியுள்ளது. குறிப்பாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தைத் திருத்துவதற்கான சட்டமூலத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ள நிலையில், பயங்கரவாதத் தடைச்சட்டம் முழுமையாக நீக்கப்பட வேண்டும் எனக் கோரி நாடு முழுவதிலும் கையெழுத்துப் பெறும் செயற்பாடொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இது சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்பதற்கு குறிப்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுக்கும் செயற்பாடு என்று அரசாங்கம் விமர்சித்துள்ளது. அதேநேரம், வடக்கு, கிழக்கில் தமிழர்களின் பூர்வீகக் காணிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுவதாகக் கோரி வடக்கு, கிழக்கைச் சேர்ந்த தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் எதிர்ப்புப் போராட்டமொன்றை நடத்தியிருந்தனர்.

இது சர்வதேசத்துக்குத் தவறான செய்தியை வழங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட சதி நடவடிக்கை என்று ஜனாதிபதி ஊடகப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. காணி அபகரிப்பு தொடர்பில் ஜனாதிபதியைச் சந்திப்பதற்கு எவரும் முன் அனுமதி பெறாமல், ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இல்லாத சமயத்தில் திடீரென அவரைச் சந்திப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதன் பின்னரே ஆர்ப்பாட்டம் எனும் நாடகம் அரங்கேற்றப்பட்டிருப்பதாக அரசாங்கத் தரப்பில் சுட்டிக் காட்டப்படுகிறது.

> " **ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள் அனைத்துக்கும் அரசாங்கம் மறுப்பு; இலங்கையின் முன்னேற்ற நகர்வுகளை சர்வதேசத்துக்கு தெளிவாக எடுத்துக் கூறி நியாயத்தைப் பெற்றுக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் அரசாங்கம்!** "

ஜெனீவா கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருக்கும் நிலையில் சர்வதேசத்துக்கு இலங்கை குறித்து தவறான செய்தியை வழங்கும் வகையில் இவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன என்பதே விமர்சனமாக உள்ளது.

அதேநேரம், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் குறித்து இதுவரை எவருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படாதிருப்பதாக பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் உள்ளிட்ட கிறிஸ்தவ தரப்பினர் அதிருப்தியடைந்துள்ளனர். ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் முழுமையான அறிக்கைகள் இன்னமும் பகிரங்கப்படுத்தப்படவில்லையென தொடர் குற்றச்சாட்டுகளை முன்வைத்திருந்த நிலையில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையும் அதனுடன் தொடர்புபட்ட



சாட்சிகள் உள்ளடங்கலான 88 தொகுதிகளும் பாராளுமன்றத்திற்கு வழங்கப்பட்டன.

ஜனாதிபதியின் சட்ட விவகாரங்களுக்கான பணிப்பாளர் நாயகம் உயர்நீதிமன்ற சட்டத்தரணி ஹரிகுப்த ரோஹனதீர, இந்த அறிக்கைகளை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கையளித்திருந்தார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

பி.ஹர்ஷன்...

# சீனா, பாகிஸ்தான் அச்சுறுத்தினால் தகுந்த பதிலடிக்கு இந்தியா தயார்!



**சீனா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் படைகள் எல்லைப்புறத்தில் மேற்கொள்கின்ற ஊடுருவல்கள் மற்றும் அச்சுறுத்தல்களை முறியடிக்கும் விதத்தில் இந்தியா தனது இராணுவப்படையின் அடிப்படைத் தளங்களை வலிமைப்படுத்தும் தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அது மாத்திரமன்றி, எவ்வாறான மோதலையும் முறியடிக்கும் விதத்தில் இராணுவ வன்பொருளையும் தொழில்நுட்பத்தையும் நவீனமாயமாக்குவதிலும் இந்தியாவின் கவனம் அதிகரித்து வருகின்றது.**

கடற்படை ஆயுதங்கள், பீரங்கிவகை துப்பாக்கிகள், போக்குவரத்து ஹெலிகொப்டர்களுடன் தனது நாட்டின் எல்லைப் பகுதிகளில் கமராக்கள், ரேடார்கள், உணரிகள், நகரும் கண்டறிவிகள், செயற்கைக்கோள் உருவகம் மற்றும் ட்ரோன்கள் ஆகியவையும் இந்தியா நிறுத்தி வைத்துள்ளது என்று 'திப்ரிட்' செய்தி வலைத்தளம் தகவல் தெரிவித்துள்ளது.

"நீங்கள் எவ்வளவு தயாராக இருந்தாலும் சரி, அவை எப்போதும் போதுமானதாக இருக்காது. தொழில்நுட்பத்தை மேலும் பலப்படுத்த வேண்டும் என்பதில்தான் கவனம் செலுத்த வேண்டும். இது அச்சூழ்நிலையின் முழுவிபரத்தையும் அறிந்து கொள்ள உதவுவதுடன், எதிரி நாடுகளின் செயற்பாட்டை முன்னதாக தகவல் அறிவதற்கும் உதவும்" என்று இராணுவ உயரதிகாரியொருவர் கூறியதாக அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எதிரி நாடுகளின் அச்சுறுத்தலைச் சமாளிக்கும் வகையில், எல்லைக் கட்டுப்பாட்டுப் பகுதியில் கண்காணிப்பையும் உளவு பார்ப்பதையும் பலப்படுத்த புதிய வான் பரப்பு படைப் பகுதி இந்திய இராணுவத்தினால் சமீபத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

## இருநாட்டு எல்லைகளில் நவீன ஆயுதங்களுடன் பாதுகாப்பை பலப்படுத்தும் இந்தியப் படைகள்!

## எதிரிநாட்டு ஏவுகணைகளை 400 கி.மீ தூரத்திலேயே இலக்கு வைத்து தாக்கியழிக்கும் missile defence system எல்லையில்!





இந்தக் கட்டமைப்பில் அட்வான்ஸ்ட் லைட் ஹெலிகொப்டர்கள், ஹெலிகொப்டர்கள் (ஏ.எல்.எச்), ஹெலிகொப்டர்கள் மற்றும் ஆளில்லாத வான்வழி விமானங்கள், ஏ.எல்.எச்சின் ஆயுத வகையான 'ருத்ரா' ஆகிய உபகரணங்கள் உள்ளன.

அருணாச்சலப் பிரதேசத்தில் சீனாவுடன் ஏதேனும் மோதல் ஏற்படுகின்ற பட்சத்தில், இந்த படைப்பகுதி போர் செயல்பாடுகளில் உதவும் என்று ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன.

அருணாச்சலப் பிரதேசத்தில், மற்றைய நீண்ட தூரம் சென்று தாக்கக் கூடிய ஏவுகணைகளுடன் பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்ட நவீன ஜெட் போர் விமானங்களையும் இந்தியா நிறுத்தி வைத்துள்ளது. இப்பகுதியில், மற்றொரு முக்கிய இராணுவ செயல்பாடு இதுவாகும்.

5000 கி.மீ தூரம் செல்லக் கூடிய அக்னி5 ஏவுகணையை வெற்றிகரமாக இந்தியா சோதனை செய்திருப்பதையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்ட வேண்டியுள்ளது.

இந்திய ராணுவப் படை வியூகத்தில் இது மற்றொரு முக்கிய வெற்றியாகும். இது சீனாவின் அச்சுறுத்தலை முறியடிக்கும் திட்டம் என்று இந்திய ஊடகங்களில் பரவலாக கூறப்படுகிறது. அதாவது சீனாவோ அல்லது பாகிஸ்தானோ எதிர்காலத்தில் அச்சுறுத்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டால் அதற்கு இந்தியா தகுந்த பதிலடி கொடுக்கும் வகையிலேயே இந்தியா தனது எல்லையில் பாதுகாப்பை இவ்வாறு பலப்படுத்தி வருகின்றது.

இதற்கு முன்னர், இந்திய ஏவுகணை தொகுப்பில் 1500 கி.மீ வரை சென்று தாக்கக் கூடிய 'அக்னி ப்ரைம்' ஏவுகணைகள் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(22ஆம் பக்கம் பார்க்க)

வார இறுதி
# அரசியல் குறிப்பேடு

சம்யுக்தன்

**உள்ளூராட்சி மன்றங்களுக்கான பதவிக்காலத்தை மேலும் ஒரு வருடத்துக்கு அரசாங்கம் நீடித்திருக்கும் நிலையில், தேர்தலொன்றுக்குச் செல்வது குறித்த கருத்துப் பரிமாற்றங்கள் அரசியல் அரங்கத்தில் இடம்பெற்று வருகின்றன.**

# தேர்தலொன்றுக்கு செல்வதற்காக அரசுக்குள் கருத்துப் பரிமாற்றங்கள்!

## அநுராதபுரத்தில் நடைபெற்ற ஆளும் கட்சியின் பேரணியில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ வெளியிட்ட அறிவிப்பையடுத்து அரசியல் களத்தில் நகர்வுகள் ஆரம்பம்!



இவ்வருட இறுதிக்குள் அல்லது அடுத்த வருட ஆரம்பத்தில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடத்தப்படலாம் என அரசியல் அவதானிகள் எதிர்வுகூறியிருக்கும் நிலையில், இத்தேர்தல்கள் தொடர்பான சட்டரீதியான ஏற்பாடுகள் பற்றியும் ஆராயப்பட்டுள்ளது.

விகிதாசார மற்றும் தொகுதிவாரி முறையை உள்ளடக்கிய கலப்பு முறையின் கீழ் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்துவதற்கு, தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு கவனம் செலுத்தியுள்ளது.

பல உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் கடந்த ஜனவரி மாதத்துடன் முடிவடைந்தமையால், அவற்றின் பதவிக் காலத்தை 2023ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை நீடிப்பதற்கு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவல்கள் அமைச்சர் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டிருந்தார். இருந்த போதும், தேர்தலுக்கான ஆயத்தப்படுத்தல்களை ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன சில நாட்களுக்கு முன்னர் ஆரம்பித்திருந்தது.

அநுராதபுரத்தில் நடைபெற்ற ஆளும் கட்சியின் பேரணியில் விரைவில் தேர்தலொன்றுக்கு முகங்கொடுக்கத் தயாராகுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சிக்கு அறைகூவல் விடுத்திருந்தார்.

இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் தொடர்பில் பாராளுமன்ற விசேட குழுவும் ஆராய்ந்துள்ளது. சபை முதல்வரும் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தலைமையிலான தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாகப் பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்குமான பாராளுமன்ற விசேட குழு இது பற்றிக் கலந்துரையாடியிருந்தது.

> “உள்ளூராட்சி மன்றங்களுக்கு 60 வீத உறுப்பினர்களை தொகுதி வாரி முறையின் கீழும், 40 வீத உறுப்பினர்களை விகிதாசார முறையின் கீழும் தெரிவு செய்வது தொடர்பில் ஆராய்வு”

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தும் போது தொகுதிவாரி முறை மற்றும் விகிதாசார முறையை உள்ளடக்கிய கலப்பு முறைக்குச் செல்வது பற்றி இங்கு கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இதற்கமைய உள்ளூராட்சி மன்றங்களுக்கு 60 வீத உறுப்பினர்களை தொகுதி வாரி முறையின் கீழும், 40 வீத உறுப்பினர்களை விகிதாசார முறையின் கீழும் தெரிவு செய்வது தொடர்பில் இக்கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

இது மாத்திரமன்றி, உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிப்பது, அனைத்து அரசியல் கட்சிகளினதும் வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்கு அதிக இடத்தை வழங்குவது பற்றியும் இக்குழு கவனம் செலுத்தியுள்ளது.

தேர்தலில் வெற்றி பெறும் கட்சிக்கு போனஸ் ஆசனத்தைப் பெற்றுக் கொடுப்பது மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் தற்பொழுது காணப்படும் உறுப்பினர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது பற்றியும் இக்குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருந்தது. இந்த விடயங்கள் யாவும் இன்னமும் கலந்துரையாடல் மட்டத்தில் இருப்பதுடன், இறுதியான முடிவுகள் எதுவும் எட்டப்படவில்லை. தொடர்ந்தும் இக்குழு கலந்துரையாடல்களை நடத்தி வருகின்றது.

மறுபக்கத்தில், அரசியல் கட்சிகளும் படிப்படியாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்குத் தம்மைத் தயார்படுத்தத் தொடங்கியுள்ளன. இருந்த போதும் கொவிட்19 ஒமிக்ரோன் தொற்று அதிகரித்திருப்பதால் தேர்தல்கள் குறித்து உறுதியாகக் கூற முடியாதுள்ள போதும், தேர்தல்களை நடத்துவதற்கும் தாம் தயாராக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவும் தெரிவித்துள்ளது.

உள்ளூராட்சி மன்றங்களின் பதவிக் காலம் நீடிக்கப்பட்டிருப்பதால், எதிர்வரும் செப்டெம்பர் மாதத்தின் பின்னரே தேர்தலை நடத்துவதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும். இதன் அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்குத் தாம் தாயாராக இருப்பதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளையும் ஆணைக்குழு சில நாட்களுக்கு முன்னர் சந்தித்திருந்தது. இறுதியாக நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலானது, வட்டார முறையில் நடத்தப்பட்டிருந்தது. கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் கொண்டு வரப்பட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தல் திருத்தச் சட்டமூலத்துக்கு அமைய வட்டார முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அதிக மன்றங்களைக் கைப்பற்றியிருந்தது. இருந்த போதும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கை அதிகம் என்ற விமர்சனங்கள் பல மட்டங்களிலிருந்தும் முன்வைக்கப்பட்டன. இந்த நிலையிலேயே தேர்தல் மறுசீரமைப்புக் குறித்து ஆராய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பாராளுமன்ற விசேட குழு உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை நடத்தும் முறைமை குறித்தும் கலந்துரையாடி வருகிறது.






தேர்தலைச் சந்திப்பதற்கு எந்நேரத்திலும் தயார் என்று அரசாங்கம் கூறியிருக்கும் நிலையில், பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலுக்குத் தயாராவதில் தயக்கம் காட்டி வருகிறது என்றே கூற வேண்டும். குறிப்பாக ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் ஏற்பட்டுள்ள கருத்து முரண்பாடு மற்றும் தலைமைத்துவப் போட்டி காரணமாக பிரதான எதிர்க் கட்சிக்குள் ஒற்றுமையின்மை காணப்படுகிறது. இதனால் அவர்கள் எந்தவொரு தேர்தலையும் அண்மைய காலத்தில் எதிர்கொள்ளத் தயாராக இல்லையென அரசியல் அவதானிகள் பலரும் சுட்டிக் காட்டுகின்றனர்.



**ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளின் தலைவர்களுக்கிடையில் கருத்து முரண்பாடுகள், தலைமைத்துவப் போட்டிகள்; எதிர்க் கட்சிக்குள் ஒற்றுமையின்மை நிலவுவதால் தேர்தலை எதிர்கொள்வதில் தயக்கம்!**

அதேநேரம், டொலர் தட்டுப்பாட்டின் விளைவாகத் தோன்றியுள்ள எரிபொருள் தட்டுப்பாடு, மின்சாரத் தடை மற்றும் விலைவாசி அதிகரிப்புப் போன்ற பிரச்சினைகளின் மத்தியில் விரைவில் தேர்தலொன்றுக்குச் செல்வது குறித்து ஆளும் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் மாறுபட்ட நிலைப்பாடு காணப்படுவதாகவும், இதனால் தற்போதைக்குத் தேர்தலொன்றை நோக்கிச் செல்ல வேண்டாம் என அரசாங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் கூறியிருப்பதாகவும் தெரியவருகிறது.

இன்றைய கொவிட் நெருக்கடியின் விளைவான பொருளாதாரப் பாதிப்பு காரணமாக மக்கள் மத்தியில் அதிருப்தியிருப்பதால் தேர்தலொன்றுக்குச் செல்வது அரசாங்கத்துக்குப் பாதகமாக அமையலாம் என்ற நிலைப்பாடு காணப்படும் அதேநேரம், அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தேர்தலொன்றுக்குத் தன்னைத் தயார்ப்படுத்தி வருகின்றது. இதன் ஒரு அங்கமாக யாழ்ப்பாணத்தில் சுதந்திரக் கட்சியின் மாநாடொன்று சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்றது.

முன்னாள் ஜனாதிபதியும், சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் சு.கவின் முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர். சுதந்திரக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரும், பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இதில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டிருந்தனர்.

## தமிழ் தேசிய சிந்தனையில் இருந்த வடபகுதி மக்கள், படிப்படியாக மாற்றுச் சிந்தனையை நாடுகின்றனரா?



இதுவரை காலமும் தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகளுக்கு அப்பால் தேசிய கட்சிகளின் மீது மக்களின் பார்வை சென்றுள்ளமைக்கு சு.கவின் யாழ் மாநாடு உதாரணமாக அமைந்துள்ளதா என்ற கேள்விகளும் எழுப்பப்பட்டுள்ளன. தேர்தல்கள் வரும் போது மாத்திரம் மக்களின் குறை நிறைகளைத் தேடிச் செல்லும் தமிழ் அரசியல் கட்சிகளுக்கு மத்தியில் மாற்றமொன்றை மக்கள் இப்போது எதிர்பார்க்கின்றனர் என்பது இதன் மூலம் தெரிகின்றது.

தமிழ் தேசிய உணர்வுகளை தூண்டிவிட்டு, மக்களை எப்பொழுதும் ஒரு மாயையில் வைத்துக் கொண்டு செயற்படும் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு மத்தியில் தேசியக் கட்சிக்கு மக்களின் ஆதரவு கிடைத்துள்ளமையை கடந்த பாராளுமன்றத் தேர்தலில் காண முடிந்தது. யாழ் மாவட்டத்தில் சுதந்திரக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட அங்கஜன் இராமநாதன் அதிகூடிய வாக்குகளைப் பெற்றுத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். எதிர்வரும் காலத்தில் இந்த நிலைமை மேலும் விஸ்தரிக்கப்படுமாயின் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் மக்களால் நிராகரிக்கப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என்பதே தமிழ் மக்களின் கருத்தாக உள்ளது.

# நுவரெலியா மாவட்டத்துக்கு புதிதாக ஐந்து பிரதேச செயலகங்கள் அமைக்கப்படுமா?

‘ முன்பு ஐந்தாக இருந்த பிரதேச சபைகள் 12 ஆக அதிகரிக்கப்பட்டதன் மூலம் அரசியல் அதிகாரப் பகிர்வினை விரிவாக்கம் செய்வதற்கு வழிபிறந்தது. எனினும் பிரதேச சபை சட்ட மூலத்தில் திருத்தம், பிரதேச சபைகள் அதிகரிப்பு மட்டுமே அரசியல் அதிகாரப் பகிர்வையோ, நிர்வாக அதிகாரப் பகிர்வையோ முழுமையாக பெற உதவ முடியுமா என்னும் ஆதங்கம் எழாமல் இல்லை ’





பிரதேச சபைகளும் பிரதேச செயலகங்களும் ஒன்றுடன் ஒன்று தொடர்பு பட்டவை. பிரதேச சபைகள் அரசியல் அதிகார பகிர்வினை வழங்குகின்றன. பிரதேச செயலகங்கள் நிர்வாக அதிகாரப் பகிர்வினை வலியுறுத்தி நிற்கின்றன. எனினும் கடந்த காலங்களில் மலையக அரசாட்சி தளம் விரிவடைய வாய்ப்பில்லாமல் சட்டரீதியான தடைகள் மேலோங்கி இருந்தன. 2015ஆம் ஆண்டுக்குப் பின்னரான சட்டத்திருத்தங்களின் படி அந்த வாய்ப்புகள் எட்டப்பட்டன. ஆனால் பூரணத்துவமடையவில்லை.

பிரதேச சபைக்கூடான வரப்பிரசாதங்கள் கிடைக்கப்பெற்றாலும் கூட பிரதேச செயலகங்களின் அதிகரிப்பு என்பது இன்னும் கைகூடவில்லை.

அதிகாரப் பகிர்வின் வரலாற்று பதிவுகளை சிறிது அலசுவோம்.

1924களில் கிராம சமுதாய சட்டத்தின் கீழ் கிராம சபைகள் அமைக்கப்பட்டன. ஆனால் மலையக சமூகம் உள்வாங்கப்படவில்லை. இச்சட்டத்தில் திருத்தங்கள் பல பின்னாட்களில் ஏற்படுத்தப்பட்டாலும் பெருந்தோட்ட மக்களுக்கான வாய்ப்புகள் ஏதும் வழங்கப்படவில்லை என்கிறார்கள் வரலாற்று ஆய்வாளர்கள். வாக்களிக்கும் உரிமையில்லை. சேவைகளைப் பெற அனுமதியும் இல்லை. இதற்குக் காரணம் வலிமையான பெருந்தோட்டக் கட்டமைப்பு முறைமையே ஆகும். தோட்டப் புற மக்களின் அனைத்துச் தேவைகளும் அக்கட்டமைப்பைச் சார்ந்தே வாழ வேண்டியிருந்தது.

இதனால் தேசிய ரீதியிலான பொது வேலைத்திட்டங்கள் எதுவுமே தோட்டப் புறங்களை எட்டிப் பார்க்கவில்லை. ஒதுக்கப்பட்ட ஒரு சமூகமாக தேசிய கொள்கை வகுத்தல்களிலுருந்து ஓரங்கட்டப்பட்டிருந்த நிலைமையை மாற்றியமைக்கும் வாய்ப்பு அண்மைக்காலத்திலேயே வந்தது.இதில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். திலகராஜின் பங்களிப்பும் முயற்சியும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்தது.

அது தான் 1987இல் உருவாக்கம் பெற்ற பிதேச சபை சட்ட மூலத்தின் 19ஆவது மற்றும் 33ஆவது சரத்துக்களை திருதுவதற்கான முன்னகர்வு. 19ஆவது சரத்து தோட்டப்புறங்களைத் தவிர்த்து விட்டிருந்தது. 33ஆவது சரத்து தோட்டங்களின் பாதைகள் அமைப்பதற்கு தோட்ட உரிமையாளர்களின் கோரிக்கையின் பேரில் மட்டுமே பிரதேச சபையின் நிதியினைப் பயன்படுத்தும் அனுமதி வழங்கி வைத்தது.

இது ஓரளவுக்கு செயன் முறையாகிக் கொண்டிருந்தமையால் உட்கட்டமைப்பு வசதிக்கான பாதைகள், மின்சார வசதிகள், பள்ளிக்கூட கட்டுமானங்கள், சமூக நிலையங்கள் போன்றவைகள் தோட்ட நிர்வாகத்தின் இணக்கப்பாட்டுடன் மேற்கொள்ள முடிந்தது. அரச சேவைகள் என்றாலும் தோட்ட நிர்வாகம் அனுமதி கொடுத்தால் மட்டுமே ஆகும் என்ற வரையறை குறையாகவே இருந்து வந்தது. ஏனெனில் 2008ஆம் ஆண்டு கண்டி மாவட்டத்தின் உடபலாத்த பிரதேச சபைக்கு நேர்ந்த கதியை இதற்கு ஆதாரமாக வைக்கின்றார்கள் ஆய்வாளர்கள். இச்சபை தனது நிதியை தோட்ட நிர்வாகத்தின் அனுமதியின்றிப் பயன்படுத்தியதைக் காரணம் காட்டி மத்திய மாகாண ஆளுநரால் இச்சபை கலைக்கப்பட்டது. இச் சமயத்தில் இச் சபையின் ஆட்சியதிகாரம் தமிழ் பேசும் பிரதிநிதிகளைக் கொண்ட சுயேச்சைக் குழுவிடமே இருந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறான குறைபாடுகளை அடிப்படையாக் கொண்டே இச்சட்ட மூலத்தில் திருத்தங்கள் தேவை என்னும் அழுத்தம் அதிகரித்து வந்தது.

அதன் நிமித்தமே 2018 ஆம் ஆண்டு திருத்தம் இடம்பெற்றது. அதன்படி 19ஆவது சரத்தின் 14ஆவது உப பிரிவின் படி கிராமிய வேலைகளைத் திருத்துதல் அல்லது பாரமரித்தல் என்ற வாக்கியங்களோடு தோட்டக் குடியிருப்புகள் என்ற வாசகம் இணைக்கப்பட்டது.

அதே சரத்தின் 22ஆவது உப பிரிவின்படி தெரிவு செய்யப்பட்ட கிராமங்களின் ஒருங்கிணைத்த அபிவிருத்தி என்னும் சொற்றொடரோடு தோட்டக் குடியிருப்புகள் என்ற பதம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. இதன் மூலம் பிரதேச சபைக்கூடான அதிகாரப் பகிர்வினை அனுபவிக்கக் கூடிய வாய்ப்புகளை பெருந்தோட்ட சமூகமும் பெற முடிந்துள்ளது.

முன்பு தனியார் கம்பனிகள் வசமுள்ள பெருந்தோட்டங்களை மட்டும் உள்வாங்கியிருந்த நிலைமை மாற்றம் பெற்று தனியார், பிராந்திய பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் அரசு துறை பொறுப்பின் கீழ் வரும் தோட்டங்கள் அனைத்துமே இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தவிர முன்பெல்லாம் தோட்ட நிர்வாகம் கோரும் பட்சத்தில் அதன் அனுமதியுடன் பாதைகளைத் திருத்தலாம் என்னும் விதி இருந்தத. இப்போது தோட்ட நிர்வாகங்களின் கலந்தாலோசனையோடு இதனைச் செய்யும் அதிகாரம் பிரதேச சபைகளுக்குக் கிடைத்துள்ளது.

இச் சட்டத்திருத்ததின் மூலம் தோட்டக் கட்டமைப்பின் பிடிக்குள் சிக்கிக் கொண்டிருந்த பெருந்தோட்டப் பிரதேச பொது அபிவிருத்திப் பணிகள் இனி பிரதேச சபைகளுக்கூடாக மேற்கொள்ள முடியும். எதிர் காலத்ததில் பெருந்தோட்ட மக்களுக்கான குடியிருப்ப நிலைமைகள் மாற்றமடைந்து தனித்தனி வீடுகளைக் கொண்ட நவீன கிராமங்களாக மலர்ச்சி பெற இச்சட்டத் திருத்தம் உதவவே செய்யும். இதன் பின்னணியிலேயே நுவரெலியா மவட்டத்தில் பிரதேச சபைகளின் அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டது.

முன்பு ஐந்தாக இருந்த பிரதேச சபைகள் 12 ஆக அதிகரிக்கப்பட்டதன் மூலம் அரசியல் அதிகாரப் பகிர்வினை விரிவாக்கம் செய்வதற்கு வழிபிறந்தது.

எனினும் பிரதேச சபை சட்ட மூலத்தில் திருத்தம், பிரதேச சபைகள் அதிகரிப்பு மட்டுமே அரசியல் அதிகாரப் பகிர்வையோ, நிர்வாக அதிகாரப் பகிர்வையோ முழுமையாக பெற உதவ முடியுமா என்னும் ஆதங்கம் எழாமல் இல்லை. நுவரெலியா மாவட்டத்தின் பிரதேச செயலகங்களை அதிகரிக்க முன்னைய ஆட்சி அனுமதி வழங்கிருந்தது. இதன்படி தற்போது ஐந்தாக காணப்படும் பிரதேச செயலகங்கள் பத்தாக உயர்த்தப்படுமென எதிர்பார்க்கப்பட்டது.

தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரேரணை அப்போதைய உள்நாட்டு அலுவல்கள் மாகணசபைகள் உள்ளூராட்சி அமைச்சர் வஜிர அபே வர்தனவினால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்து. தற்போது செயற்பாட்டில் உள்ள அம்பகமுவ, நுவரெலியா, கொத்மலை, வலப்பனை, ஹங்குரங்கெத்த ஆகிய ஐந்து பிரதேச செயலகப் பிரிவுகளுக்கு மேலதிகமாக மேலும் ஐந்து பிரதேச செயலகங்கள் அமையப் பெறவுள்ளன என்ற செய்திகள் வந்தன.

இதன் மூலம் ஒரு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் இரண்டு இலட்சத்துக்கு அதிகமான சனத் தொகையினருக்கு சேவைகள் வழங்கக் கூடிய வகையில் மாற்றம் வருமென எதிர்பார்க்கப்பட்டது அதன் அடிப்படையில் நோர்வூட், தலவாக்கலை, திஸ்பன, ராகலை, மத்துரட்ட ஆகிய பகுதிகளில் புதிய பிரதேச செயலகங்கள் அமைக்கப்பட முன்னெடுப்புகள் எடுக்கப்பட்டன.

எனினும் அவை செயற்பாட்டுக்கு வரும் முன்னரே ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. மலையக மக்களின் நலன் கருதி வீடமைப்புத் திட்டத்தைப் போல இந்த நிர்வாக மாற்றமும் இடம் பெறும் என்று நம்பப்பட்டது. ஆனால் இதுவரை இதற்கான நகர்வுகள் எதுவுமே எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை.


இதேவேளை முன்னைய ஆட்சியில் நிறைவேற்றப்பட்ட சட்ட மூலத்தின்படி காலி மாவட்டத்தில் மட்டுமே பிரதேச சபைகளை அதிகரித்துள்ளது, தற்போதைய அரசாங்கம். இது மலையக சமூகத்துக்கு ஏமாற்றத்தையே தருகின்றது.

வழமைபோல எம். திலகராஜ் மட்டுமே பிரதேச செயலகங்கள் அதிகரிக்கப்பட வேண்டும் என்று குரலெழுப்பிக் கொண்டிருக்கிறார். இ.தொ.கா இதனைக் கண்டு கொண்டதாகவே தெரியவில்லை. வீடமைப்புத் திட்டம், மலையக பல்கலைக்கழகம் பற்றியெல்லாம் பேசும் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொன்டமான் இது பற்றியும் அரசாங்கத்தின் கவனத்துக்குக் கொண்டு வரலாமே! இதில் ஏதும் கௌரவப் பிரச்சினை இருப்பதாக தெரியவில்லை. சமூகத்தின் தேவையைக் கருதி ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுப்பதே நல்லது.

பன். பாலா...

# வெட்டப்பட்டது ஒரு ஆலமரம் மட்டுமல்ல குடும்பமொன்றின் ஆணிவேரே பிடுங்கப்பட்டுள்ளது

‘ இந்த வீதியை செப்பனிடும்போது இந்த கோவிலையும் இந்த மரத்தினையும் அகற்ற எத்தனித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அன்றைய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அதன் ஒரு கிளையைக்கூட வெட்ட அனுமதிக்கவில்லை. அதேபோல மேல் கொத்மலை அபிவிருத்தித் திட்டத்தின்போதும் கூட அக்கோவிலையோ அந்த ஆல மரத்தையோ அகற்ற முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அனுமதி வழங்கவில்லை ’





நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியில் தலவாக்கலை லோகி தோட்ட வழிப் பிள்ளையார் கோவிலருகிலுள்ள 200 வருட பழமை வாய்ந்த ஆல மரக் கிளைகளை வெட்டும்போது அதன் கிளையொன்று முறிந்து வீதியில் சென்ற மோட்டார் சைக்கிள் மீது விழுந்ததில் அதை செலுத்திய நபர் உயிரிழந்த சம்பவம் மலையகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

விபத்தில் தலவாக்கலை லோகி தோட்டத்தைச் சேர்ந்தவரும் தலவாக்கலை தமிழ் மகா வித்தியாலய பிரபல கணித ஆசிரியருமான வேலுசாமி மகேஸ்வரன் (வயது 39) என்பவரே இவ்வாறு உயிரிழந்திருக்கிறார். இவர் தலவாக்கலை நகரில் மிக பிரசித்தி பெற்ற ஒரு கணித ஆசிரியர். இவருக்கு 10 வயதில் ஒரு மகளும் 3 வயதில் மகனும் இருக்கின்றனர். இவரின் மனைவியும் ஒரு ஆசிரியை. தலவாக்கலை சமூகம் ஒரு சிறந்த கணித ஆசானை இழந்துள்ளது. எத்தனையோ மாணவர்களை கணித பாடத்தில் சித்தியடையச் செய்த பெருமை மகேஸ்வரனையே சாரும்.

இச்சம்பவம் 21ஆம் திகதியன்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது. இவர் நுவரெலியாவிலிருந்து தலவாக்கலை நகருக்கு சென்றுக்கொண்டிருந்தபோது தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோவிலுக்கு அருகில் வெட்டிக்கொண்டிருந்த ஆலமரத்தின் கிளையொன்று முறிந்து பிரதான வீதியின் நடுவில் விழுந்தபோது இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் காயமடைந்த இவரை முச்சக்கரவண்டியில் லிந்துலை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் அவர் உயிரிழந்தார். இவருடன் மோட்டார் சைக்கிளில் சென்ற இன்னொரு ஆசிரியர் சிறு காயங்களுடன் உயிர்தப்பினார். இச் சம்பவத்தின் போது வீதியில் சென்ற முச்சக்கர வண்டியொன்றும் பலத்த சேதத்துக்குள்ளானது.

**அமைச்சர் தன் வாக்குறுதியை காப்பாற்ற வேண்டும்!**



ஆசிரியர் மகேஸ்வரன்

200 வருடங்கள் பழைமையான ஆலமரத்தின் கிளைகளை வெட்டுவதற்கு வன திணைக்களம் அனுமதியை வழங்கியிருந்தபோதிலும் அதனை பாதுகாப்பற்ற முறையில் வெட்டியதன் காரணமாவே இந்த அனர்த்தம் நேர்ந்ததாக விசனம் தெரிவித்த பொதுமக்கள் நுவரெலியா ஹட்டன் பிரதான வீதியை மறித்து சாலை மறியலில் ஈடுபட்டனர்.

200 வருடம் பழைமை வாய்ந்த இந்த மரத்தை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியது யார்? என்பது முதல் கேள்வி. பிரதான வீதியில் நூற்றுக்கணக்கான வாகனங்கள் செல்லும்போது எச்சரிக்கை பலகைகள் வைக்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டிருக்க வேண்டும். இரு பக்கங்களிலும் வாகனத்தை நிறுத்தி சரியான முறையில் போக்குவரத்தை ஒழுங்கு படுத்தியிருக்க வேண்டும். இவற்றை செயற்படுத்தாமல் மரத்தை வெட்டியதால் இன்று அப்பாவி உயிர் காவு கொடுக்கப்பட்டிருக்கிறது. உள்ளிட்ட போன்ற பல்வேறு கோசங்களை எழுப்பியவாறு மக்கள் வீதியை மறித்து போராடடத்தில் ஈடுபட்டனர்.

சாலை மறியலின்போது அங்கு அமைதியின்மை ஏற்பட்டது. சுமார் நான்கு மணித்தியாலங்கள் வரை போராட்டம் தொடர்ந்தது. இந்நிலையில் மரத்தை வெட்டிய நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதாக தலவாக்கலை மற்றும் லிந்துலை பொலிஸார் வழங்கிய வாக்குறுதியையடுத்து போராட்டம் இரவு 9 மணியளவில் கைவிடப்பட்டது.

மறுநாள் சந்தேகத்தின் பேரில் இரண்டு பெண்கள் உட்பட ஐவரை லிந்துலை பொலிஸார் கைது செய்தனர். தலவாக்கலை லோகி மல்லியப்பு பிரதேசத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள், ஆலமரத்தை வெட்டிய நானுஓயா பகுதியைச் சேர்ந்த இருவர் மற்றும் மரம் வெட்டுவதற்கு ஒப்பந்தம் பெற்ற நுவரெலியா பகுதியைச் சேர்ந்த ஒருவரையும் பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் (22) ம் திகதி நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டபோது சந்தேக நபர்களை எதிர்வரும் 28ம் திகதி திங்கட்கிழமை வரை விளக்கமறியலில் வைக்குமாறு நுவரெலியா மாவட்ட நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளதாக லிந்துலை பொலிஸார் தெரிவித்தனர்.

21ம் திகதி லிந்துலை வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த உயிரிழந்த ஆசிரியர் வேலுசாமி மகேஸ்வரனின் சடலம் மறுநாள் காலை 22 ம் திகதி காலை நுவரெலியா பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு பிரதேச பரிசோதனையின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.

அன்றையதினம் வேலுசாமி மகேஸ்வரனின் பூதவுடல் அஞ்சலிக்காக அன்னாரின் வீட்டில் லோகி தோட்டத்தில் வைக்கப்பட்டு மறுநாள் 23 ம் திகதி புதன்கிழமை பிற்பகல் ஆயிரக்கணக்கான மக்களின் கண்ணீர் அஞ்சலிக்கு மத்தியில் அத்தோட்ட பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

இறுதி ஊர்வலத்தில் 100 ற்கு அதிகமான பொலிஸார் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(15ஆம் பக்கம் பார்க்க)

தலவாக்கலை பி. கேதீஸ்...



# எல்லை தாண்டும் தமிழக மீனவர் பிரச்சினை பொருத்தமான கூட்டுப்பொறிமுறையே தேவை



"கடலில் மீனைக் கூடப் பிடிக்க முடியாத அளவுக்கு நிலைமை வந்திட்டு" என்று சொல்லிக் கவலைப் படுகிறார் யாழ்ப்பாணம் – மாதகலைச் சேர்ந்த மீனவர். இது தனியே மாதகல் பகுதியிலுள்ள மீனவர்களின் பிரச்சினையோ அவர்களுக்கு நேர்ந்துள்ள கதியோ அல்லது அவர்களுடைய இக்கட்டான நிலையோ மட்டுமில்லை. இப்பொழுது வடமாகாணக் கடற்பிராந்தியம் முழுவதிலும் ஏற்பட்டுள்ள பிரச்சினை – நெருக்கடி நிலையாகும்.

அதாவது வடக்கு மீனவர்கள் சந்திக்கின்ற கூட்டுப் பிரச்சினையாகும்.

இதற்குக் காரணம், இந்திய மீனவர்களின் அத்துமீறல் – எல்லைமீறலுடன் இவர்கள் பயன்படுத்துகின்ற மடிவலை – இழுவைப் படகுத் தொழிலாகும். ஆகவே, இதைத் தனியே எல்லை மீறல் – அத்துமீறல் என்று மட்டும் நோக்க முடியாது. மடிவலையைப் பயன்படுத்தி, இழுவைப்படகுகளின் மூலம் மீன்பிடியைச் செய்யும்போது மீன் வளம் மட்டுமல்ல, கடலடியிலுள்ள கண்ட மேடு உட்பட அனைத்து வளங்களும் சூறையாடப்படுகின்றன.

இப்படித் தொடர்ச்சியாகச் செய்து வந்தால் குறித்த கடற்பிராந்தியம் வெறும் பாலையாகி – கட்டாந்தரையாகி விடும்.

பாலை என்பதும் கட்டாந்தரை என்பதும் நிலத்தில் மட்டும் உருவாகுவதில்லை. அது நீரிலும் உருவாகக் கூடியதே. அந்தந்தச் சூழலில் உள்ள இயல்புகளும் அடிப்படையாக உள்ளவையும் சிதைக்கப்படும்போது இந்த நிலை ஏற்படும்.

எனவேதான் முதலில் மடிவலைத் தொழிலை தடுக்க வேண்டும் என்று கூறப்படுகிறது. அத்துடன், எல்லை மீறலையும் கட்டுப்படுத்த வேண்டும் என்று இலங்கை – மீனவர்கள் கேட்கின்றனர்.

இங்கே ஒரு சுவாரசியமான – துயரமான உண்மை உள்ளது.

இந்த அத்துமீறலை அல்லது எல்லை மீறலைச்செய்வதும் மடிவலையைப் பயன்படுத்துவதும் இந்திய மீனவர்கள் என்ற தமிழக மீனவர்களே. அதாவது ஈழத்தமிழர்களின் தொப்புள் கொடி உறவுகள்.

(இந்த எல்லை மீறல் – அத்து மீறலையே கட்டுப்படுத்தாத தமிழக – இந்திய அரசுகள்தான் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாகச் செயற்படும். நீதி வழங்கும் என்று சிலர் எதிர்பார்க்கிறார்கள்).

அதைப்போல இலங்கை மீனவர்கள் என்பது தற்போது வடபகுதி மீனவர்கள். அதாவது தமிழர்கள். இவர்கள் தமது பாதிப்புத் தொடர்பாகக் கோரிக்கை விடுவது இலங்கை இந்திய (தமிழக) அரசுகளிடம்.

இதற்கான நடவடிக்கைகள் சரியாக மேற்கொள்ளப்படவில்லை என்றால், இந்தக் கோரிக்கையை எதிர்காலத்தில் இலங்கையின் பிற பிராந்திய மீனவர்களும் விடுக்கக் கூடிய நிலை ஏற்படும்.

இதனால்தான் "விஞ்ஞானத்துக்கு புறம்பான, சுற்றாடலுக்கு பெரும் சேதம் விளைவிக்கும் மடி வலை தடை செய்யப்பட வேண்டும்" என தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது. சமத்துவக் கட்சி, ஈழமக்கள் ஜனநாயக் கட்சி போன்றவற்றின் நிலைப்பாடும் இதுதான். ஆனால், இந்த எல்லை மீறலை, அத்துமீறலை, அடாத்தைப் பற்றித் தமிழ்ப்பரப்பில் ஏனைய கட்சிகளோ தலைவர்களோ எதுவும் பேசவில்லை. அவர்கள் பேசப்போவதுமில்லை. காரணம், இந்தியாவுடனும் தமிழக அரசோடும் அங்குள்ள தரப்புகளோடும் பகைத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதே. அதாவது இங்கே சொந்த மக்கள் பாதிக்கப்பட்டாலும் பரவாயில்லை. அங்கே தங்கள் நண்பர்கள் முகம் சுழித்து விடக் கூடாது என்று எச்சரிக்கையாக இருக்கிறார்கள். இதனால் இவ்வளவு காலமும் கள்ள மௌனம் காத்து விட்டு இப்பொழுது இந்தப் பிரச்சினையை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மீதும் ஈழமக்கள் ஜனநாயக்கட்சியின் மீதும் திசை திருப்பி விட முயற்சிக்கின்றனர்.

இதற்குக் காரணம், தற்போது கடற்றொழில் அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா இருப்பதே யாகும்.

இதன் மூலம் பாதிக்கப்படும் மீனவர்களுக்கு தாம் ஆதரவாகப் போராடுவதாகவும் இருக்கும். டக்ளஸ் தேவானந்தாவை அரசியல் ரீதியாக நெருக்கடிக்குள்ளாக்குவதாகவும் இருக்கும்.ஆகவே இந்தச் சந்தர்ப்பத்தில் டக்ளஸ் தேவானந்தாவின் மீதும் அவருடைய கட்சியின் மீதும் பழியைச் சுமத்தி அந்தத் தரப்புக்கு நெருக்கடியைக் கொடுப்பதே இவர்களின் நோக்கமாக உள்ளது.

அத்துடன் டக்ளஸ் தேவானந்தாவையும் தமிழக அரசையையும் தமிழக மக்களையும் முரண்பட வைப்பதாகவும் இருக்கும்.

ஏற்கனவே தமிழ் மக்களுக்கு மாறாகவும் அரசாங்கத்துக்கு ஆதரவாகவும் ஈ.பி.டி.பியும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் செயற்படுவதாக ஒரு மாயத்தோற்றத்தை தமிழக மக்களிடத்திலும் தமிழக அரசிடத்திலும் இந்தத் தரப்புகள் உருவாக்கி வைத்திருக்கின்றன. அதை மெய்ப்பிக்கும் விதமாக இந்தப் பழியையும் சுமத்தி விடலாம் என்று இவை முயற்சிக்கின்றன.

இதன்மூலம் மீனவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்ததாகவும் இருக்கும். அதேவேளை தமது அரசியல் எதிரிக்கு நெருக்கடியைக் கொடுப்பதாகவும் இருக்கும் என்ற இரட்டை உபாயத்தில் இவை செயற்படுகின்றன.

இது எவ்வளவு மோசமான – கேவலமான செயல்? இதற்குச் சில தமிழ் ஊடகங்கள் சார்பாக நடப்பது மிகத் தவறானது.

இதைத் தமிழ்ப் பரப்பில் செயற்படும் புத்திஜீவிகள், மத அமைப்புகள், அரசியல் மற்றும் களநிலவர ஆய்வாளர்கள், பத்தியாளர்கள் எவருமே கேள்விக்குட்படுத்தவுமில்லை. எதிர்க்கவுமில்லை.

இதை மட்டுமல்ல, தமிழக மீனவர்களினால் மேற்கொள்ளப்படும் சட்டத்துக்கும் மனச் சாட்சிக்கும் புறம்பான அத்துமீறலையும் மீன்பிடி முறைமையையும் கூட இவர்கள் கேள்வி கேட்கவில்லை. ஒரு போதும் இவர்கள் அதைக் கேட்கவும் மாட்டார்கள்.

அப்படிக் கேள்வி எழுப்பினால் அது தமிழகத்துடன் பகையைச் சம்பாதிப்பதாகி விடும் என்று சிலர் சப்பை நியாயம் கூறுகிறார்கள். சிலருக்கு இது இந்தியாவுடன் பகைப்பதாகி விடும் என்ற அச்சம். சிலர் எதுவுமே கூறாமல் கள்ள மௌனம் காக்கிறார்கள்.

சிலர் இது அரசாங்கங்கள் பேசித்தீர்க்க வேண்டிய விடயம் என்று சொல்லி நழுவி விடுகிறார்கள்.

ஆனால், இவர்கள்தான் தமிழ் மக்களின் உரிமை தொடர்பாக உரத்துக் கூவுகின்றவர்கள். இவர்களைப் பார்த்து நவீன நடிப்புச் சுதேசிகள் என்கிறார் நண்பர் ஒருவர்.

இவ்வளவுக்கும் வடக்கின் மீனவர்கள் போருக்குப் பிறகு இப்பொழுதுதான் ஓரளவுக் கடலில் இறங்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

போர்க்காலத்திலும் அதற்கு முன்னான அரசியல் நெருக்கடிக் காலத்திலும் அவர்களால் கடலில் இறங்கவோ மீன்பிடியில் ஈடுபடவோ முடியாதிருந்தது. கடல் வலயச் சட்டம் தொடக்கம் போர்த்தாக்கங்கள் வரையில் இதற்குக் காரணமாக இருந்தன.

ஏறக்குறைய முப்பது முப்பத்தைந்து ஆண்டுகள் அவர்கள் கடலோரக் கிராமங்களை விட்டே பெயர்ந்திருந்தனர்.

இப்படி முப்பது முப்பந்தைந்து ஆண்டுகளாக தங்களுடைய வாழ்வாதாரத்தையே இழந்திருந்த மக்கள் மீள வந்து தங்களுடைய கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும்போது அதற்கு இடைஞ்சலாக இருப்பதென்பது எவ்வளவு தவறானதாகும்?

முன்பு அரசாங்கத்தினது கடல் வலயத் தடைச்சட்டமும் கடற் கண்காணிப்பும் இருந்தது என்றால், இப்பொழுது இந்திய இழுவைப்படகுகளின் அட்டகாசம்.

கடல் வலயச்சட்டமும் கடலோர இடப்பெயர்வுகளும் போருக்குப் பின்னர் நீங்கி விட்டன.

பதிலாக இன்று உருவாகியிருப்பது – புதிய நெருக்கடி. அதுவும் ஈழத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவு என்று சொல்லப்படும் தமிழகத்தரப்பினால்.

ஆனால் இதைப் பற்றித் தமிழக ஊடகங்கள் கூடச் சரியான முறையில் எந்தக் கருத்தையும் வெளிப்படுத்துவதில்லை. தமிழக அரசும் ஈழத்தமிழ் அரசியற் தலைமைகளும் கூடிப் பேசலாம். வேண்டுமானால் இந்தியக் கடலோரத்திலும் இலங்கைக் கடலோரத்திலும் கூட இந்தச் சந்திப்புகளை – பேச்சுகளை வைத்துக் கொள்ளலாம்.

ஒரு பொருத்தமான கூட்டுப் பொறிமுறையை உருவாக்கலாம். உருவாக்க வேண்டும்.

ஏனெனில் இந்தப் பிரச்சினை ஏதோ இப்பொழுதுதான் உருவாகியதல்ல. ஏற்கனவே விடுதலைப் புலிகள் இருந்த காலத்திலேயே இருந்த ஒன்று.

அப்பொழுது எல்லை மீறிய ஒரு தொகுதி தமிழக மீனவர்களை விடுதலைப்புலிகள் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர். இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னரே அவர்கள் மீள விடுவிக்கப் பட்டனர். இது நடந்தது கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் – இறுதிப் போருக்குச் சற்று முன்பாக.

ஆகவே இந்தப் பிரச்சினை தொடர்ந்து கொண்டிருக்கும் ஒரு எரியும் விவகாரம்.

இந்திய மத்திய அரசுடன் கூட இதைப் பற்றிப் பேசலாம். இதைச் செய்யாமல் விடுமிடத்து ஒரு அரசியல் அபாயம் ஏற்படுவதற்கு இடமுண்டு. அது ஈழத்தமிழர்களையும் தமிழகத் தமிழர்களையும் பிரித்து விடக்கூடிய வரலாற்றுச் சூழலை உருவாக்குவதாக அமையும்.

இது மைய அரசுகளுக்கு வாய்ப்பானதாக அமையும்.

இதைப் பற்றிச் சிந்திப்போர் யார்?

கருணாகரன்...

# பூநகரி வாசிகளின் விடுதலை எப்போது?

வாழ்வாதார உதவிகளை வழங்குகிறேன் என அறிமுகமான நபருடன் தொடர்பினை பேணிய பூநகரி வாசிகள் 12க்கும் மேற்பட்டவர்கள் பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு கடந்த 2 ஆண்டு காலமாக சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

பூநகரி பகுதி மற்றும் பூநகரி முட்கொம்பன் பகுதிகளைச் சேர்ந்த வறுமையில் வாடும் குடும்பங்களை இலக்கு வைத்து அறிமுகமான நபர் ஒருவர் "விடுதலைப்புலிகள் மீள் உருவாக்கம்" செய்ய முற்பட்டார் எனும் குற்றச்சாட்டில் கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதல் வார கால பகுதியில் பயங்கரவாத தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

அவரது கைதினை தொடர்ந்து அவருடன் தொடர்புகளை பேணியவர்கள், தொலைபேசியில் உரையாடியவர்கள் என சுமார் 12க்கும் மேற்பட்டவர்கள் அடுத்தடுத்த நாட்களில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அதில் பூநகரி முட்கொம்பன் பகுதியை சேர்ந்த நண்பர்கள் குழாமான 6 இளைஞர்களும் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஒருவர் கடந்த சில தினங்களுக்கு முன்னர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நீதிமன்றினால் 50 இலட்ச ரூபாய் இரண்டு சரீர பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளதுடன் , கொழும்பில் உள்ள பயங்கரவாத தடுப்பு பிரிவில் ஒவ்வொரு மாதமும் இறுதி ஞாயிற்றுக்கிழமைகளில் கையெழுத்து இட வேண்டும் எனும் நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.



இந்நிலையில், கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞன் ஒருவரின் தாயாரான உதயசொரூபன் அம்பிகா கூறுகையில்,

எனது மூத்த மகனான உதயசொரூபன் உமாசுதன் (வயது 21) கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 07ஆம் திகதி பயங்கரவாத தடுப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தத்தில் எனது கணவனை இழந்து விட்டேன். அதன் பின்னர் வறுமையிலும் எனது உழைப்பினால் மூன்று பிள்ளைகளை வளர்த்து வந்தேன்.

எனது கஷ்டத்தை உணர்ந்து மூத்த மகன் தனது படிப்பை இடைநிறுத்தி கூலி வேலைகளுக்கு சென்று எமது குடும்பத்தை பார்த்ததுடன் , தனது சகோதரர்களையும் படிப்பித்து வந்தான்.

யுத்தம் நடக்கு போது அவனுக்கு 8 வயது. அந்த வயதில் அவனுக்கு எதுவும் தெரியாது.

கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 7ஆம் திகதி எனது மூன்றாவது பிள்ளையை போட்டி பரீட்சை ஒன்றுக்கு அழைத்து சென்று விட்டு , வீடு திரும்பிய போது , வீட்டின் முன்னால் ஒரு வெள்ளை வாகனத்தில் சிலர் நின்று இருந்தார்கள்.

அவர்கள் யார் என யோசித்துக்கொண்டு வாகனத்திற்கு அருகில் சென்ற போது எனது மூத்த மகன் அழுதவாறு , வாகனத்தினுள் இருந்தார். என்ன ? ஏது ? என விசாரிக்க முதலே அவர்கள் உங்கள் மகனை கைது செய்துள்ளோம். என ஒரு துண்டினை வழங்கி விட்டு மகனை கொண்டு சென்று விட்டனர்.

மகனை யாழ்ப்பாணம் கொழும்பு தங்காலை என இடங்களை மாற்றி இறுதியாக கொழும்பு மகசீன் சிறையில் தற்போது அடைத்து வைத்துள்ளனர்.

மகனை பார்ப்பதற்காக அவர் தடுத்து வைத்திருக்கும் இடங்களுக்கு சென்று பொருளாதார ரீதியாகவும் உடல் உள ரீதியாகவும் பெரிதும் பாதிக்கப்பட்டேன்.

தற்போது எம்மால் எதுவும் முடியவில்லை. எனது இரண்டு பிள்ளைகளின் பாதுகாப்பு, பொருளாதார நிலை , உடல் உள நிலைமை காரணமாக கடந்த 08 மாத கால பகுதியாக மகனை பார்க்க செல்லவில்லை. எனது இரண்டாவது மகனே தனது கல்வியை இடைநிறுத்தி கூலி வேலைகளுக்கு சென்று குடும்பத்தை பார்க்கின்றார். எமக்கான பொருளாதார உதவிகளோ சட்ட உதவிகளோ இன்றியே காணப்படுகிறோம்.

மனிதவுரிமை ஆணைக்குழுவினால் சட்டத்தரணி ஒழுங்கு செய்து தரப்பட்டுள்ளது. அவர்கள் ஊடாகவே சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. எனது மகனை இந்த மாத கால பகுதிக்குள் விடுவிப்பார்கள் என பெரிதும் நம்பி இருந்தேன். ஆனாலும் அவர் இன்னமும் விடுவிக்கப்படவில்லை.

எனது மகனையும் மகனுடன் சேர்ந்து கைது செய்யப்பட்ட ஏனைய மகனின் நண்பர்களையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

இவருடன் கைது செய்யப்பட்ட ரமேஸ் சுஜந்தன் (வயது 22) என்பவரின் சகோதரியான பிரணவன் சுதர்சினி தெரிவிக்கையில்.

எனது தம்பியை கைது செய்யும் போது , தம்பிக்கு 20 வயது. கடந்த 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி வாழ்வாதார உதவிகளை வழங்குவதாக கூறிய நபருடன் ஆலயம் ஒன்றில் நேர்த்தி கடனை நிறைவேற்றுவதற்காக செல்வதாக கூறி தம்பியை அழைத்து சென்றுள்ளார். அவ்வேளையிலே ஆழ்வார் கோவிலுக்கு அண்மையில் வைத்து தம்பியை கைது செய்துள்ளனர்.

எனது தம்பி உயர்தரம் வரை கற்று தற்போது VTA ( Vocational Training Authority of Sri Lanka) யில் தொழிநுட்ப உத்தியோகஸ்தருக்கான கல்வியை கற்றுக்கொண்டு இருந்தவர்.

அவர் தனது மூத்த சகோதரர்களின் பணத்திலையே கல்வி கற்று வந்தமையால் , தனது உழைப்பில் தனது கல்வியை தொடர விரும்பினார். அவ்வேளையிலேயே பூநகரியை சேர்ந்த நபர் ஒருவர் ஊடாக பார்த்தீபன் எனும் நபர் அறிமுகமாகி தான் வாழ்வாதார உதவியினை வழங்கி வைக்கிறேன் என தம்பிக்கு உறுதி வழங்கியுள்ளார். அதனை நம்பிய தம்பி அவரின் வாழ்வாதார உதவிக்கு காத்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

தம்பிக்கு வாழ்வாதார உதவி வழங்குவதாக கூறிய நபர் புலிகள் மீள் உருவாக்க குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டமையால் அவருடன் தொடர்பை பேணிய குற்றத்திலையே தம்பி கைது செய்யப்பட்டார். இந்த தகவல் தம்பியின் கைதின் பின்னரே எமக்கு தெரியவந்துள்ளது. தம்பியை பார்க்க பல தடவைகள் அம்மா யாழ்ப்பாணம் கொழும்பு வவுனியா தங்காலை என அலைந்து திரிந்து, தற்போது உடல் நலம் பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார்.

எமது தம்பியை விடுவித்து தம்பி தனது கல்வியை தொடர அனுமதித்தலே எமது குடும்பம் பொருளாதார நிலையில் உயர முடியும். எமது தம்பியின் விடுதலை வரும் வாரம் சாத்தியம் ஆகும் என எதிர்பார்த்து, எதிர்பார்த்து 2 வருடங்கள் ஆகின்றன. இன்னமும் தம்பி விடுவிக்கப்படவில்லை. தம்பியின் விடுதலையை எதிர்பார்த்து காத்திருக்கிறோம்.

தம்பியின் கைதுடன் கைதான 6 பேரில் ஒருவர் விடுவிக்கப்பட்டுள்ளார். அதே போன்று ஏனைய 5 பேரையும் விரைந்து விடுவிக்க வேண்டும் என்பதே எமது கோரிக்கை என தெரிவித்தார்.

இவர்களுடன் கைதான இரத்தினபால சிங்கம் ஈழவேந்தன் என்பவரின் தாயாரான இரத்தினபாலசிங்கம் மனோரஞ்சிதம் தெரிவிக்கையில்,

எமக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதாக கூறிய நபருடன் தொடர்பினை பேணிய குற்றச்சாட்டிலையே எனது மகனை கைது செய்துள்ளனர். மகனின் நண்பர்களை 2020ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02ஆம் திகதி கைது செய்யப்பட்ட நிலையில் எனது மகனை ஐந்து நாட்கள் கழித்து 7ஆம் திகதி கைது செய்தனர்.

மகனை கைது செய்த போது பயங்கரவாதத்தை மீள் உருவாக்கிய குற்றச்சாட்டில் கைது செய்வதாக எழுதிய துண்டில் என்னை கையெழுத்து வைக்க சொன்னார்கள். நான் அதற்கு மறுப்பு தெரிவித்து எனது மகன் அவ்வாறான செயற்பாட்டில் ஈடுபடவில்லை என கூறினேன்.

உங்களுக்கு தெரியாது நீங்கள் இதில் கையெழுத்து வையுங்கள் என கூறினார்கள். மகன் கைது செய்யப்பட்டு வெள்ளை வாகனத்தில் ஏற்றப்பட்ட நிலையில் இருந்தார். அதனால் நானும் பயத்தில் அதில் கையெழுத்து வைத்தேன்.

நான் கணவனை இழந்தவள். எங்கள் குடும்பம் பெண் தலைமைத்துவ குடும்பம். எனது மகனின் உழைப்பிலையே எமது குடும்ப பொருளாதாரம் தங்கி இருந்தது. அவ்வேளையிலேயே எமது வீட்டுக்கு வந்த நபர் ஒருவர் எமக்கு வாழ்வாதார உதவிகளை வழங்குவதாக கூறினார். எமக்கு கோழி வளர்ப்புக்கு உதவுவதாக சொன்னார். அதனை நம்பி இருந்தோம்.

அவ்வாறு வாழ்வாதார உதவி வழங்க முன் வந்தார். மீள் உருவாக்க முயன்றவர் எனும் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டார். என்றும் அவருடன் தொடர்பை பேணிய குற்றத்திலையே மகனை கைது செய்துள்ளனர்.

மகனின் கைதின் பின்னரே எமக்கு வாழ்வாதார உதவி வழங்க முன் வந்தவர் மீள் உருவாக்க முயன்றார் என்ற குற்றத்தில் கைது செய்யப்பட்டமை எமக்கு தெரியும்.

எனது மகன் மீள் உருவாக்கம் தொடர்பில் தகவல்களை அறிந்திருந்தும் அதனை கூறாமல் மறைத்தமை குற்றம் என்று தற்போது கூறுகின்றார்கள்.

மகனின் உழைப்பிலையே எமது குடும்ப பொருளாதாரமும் அவரின் இரு சகோதரர்களும் கல்வி கற்று வந்தனர். மகனின் கைதினால் , நாம் பொருளாதார ரீதியாக பெரிதும் பாதிக்கப்பட்டு உள்ளத்துடன், அவரின் சகோதரர்களின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே எமது நிலைமையை உணர்ந்து மகனையும் மகனுடன் இணைந்து கைது செய்யப்பட்டவர்களை விடுவிக்க ஜனாதிபதி , அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரினார்.

இவர்களின் கைது நடவடிக்கை தொடர்பில் குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகையா கோமகன் தெரிவிக்கையில்,

'வாழ்வாதார உதவி' என்ற முறையில் வறுமையின் பிடியில் சிக்கி

உழலும் குடும்பங்களை இலக்கு வைத்து, ஆசை வார்த்தைகளை அவிழ்த்து விடும் சதிமுகவர்கள், இறுதியில் அப்பாவிச்சனங்களை சிறை வரை கொண்டு சென்றுவிட்டு மாயமாகி விடுகின்றனர்.

இவ்வாறான திட்டமிட்ட செயற்பாடுகளின் ஊடாக எதை சாதிக்க முனைகின்றார்கள்? வடக்கு கிழக்கு பகுதிகளில் பதற்ற நிலையை தோற்றுவித்தது அதனை தக்கவைத்துக் கொண்டு கொடிய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை செழிப்புறச் செய்கிறார்களா? எனும் சந்தேகம் எழுகிறது.

அல்லது 'புலிகள் மீளுருவாக்கம்' என்றதான் ஒரு போலிப் பிரசாரத்தை பரவச் செய்து, தொடர்ந்தும் தமிழர் தாயகப் பிரதேசங்களை முப்படைகளின் முகாம்களாகவே பரிபாலிக்க நினைக்கிறார்களா? எனவும் சந்தேகிக்கிறோம்.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவை கூட இருக்கின்ற இந்தச்சந்தர்ப்பத்தில் இவ்வாறு அடிப்படையற்ற குற்றங்களை காரணம் காட்டி கைது செய்யப்பட்டு விளக்கமறியலில்

வைக்கப்பட்டிருக்கும் சுமார் 117 பேரில் வெறுமனே 27 தமிழ் தைதிகள் மாத்திரம் நிபந்தனை பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்கள்.

நடக்கின்ற விடயங்களை அவதானிக்கும் போது ஏதோ சில காரண காரியங்களுக்காக தமிழர்கள் பகடையாக பயன்படுத்தப்படுகிறார்கள் என்பது புலனாகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை அடியோடு ஒழித்துக்கட்ட வேண்டுமென்று, இலங்கை மனித உரிமைகள் ஆணையாளர் இடித்துரைத்துள்ளார். உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இக்கொடிய சட்டத்திற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டுமென பலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

கடந்த வாரம் ஜனாதிபதி உட்பட வெளிவிவகார அமைச்சர் மற்றும் சட்டம் ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சர் ஆகியோர் "பயங்கரவாதத்தடைச்சட்டத்தை பொலிஸார் அவதானமாக கையாள வேண்டும்" என்பதாக கருத்துக்களை கூறிவருகிறார்கள்.

இதனை, வெறுமனே பொலிஸாரின் மீது மாத்திரம் பழியை சுமத்தி விட்டு தப்பிக்க முயலும் விடயமாக மக்கள் நோக்கக் கூடாது. என்றால், ஏதேனும் ஒரு பொறிமுறையின் கீழ் மீதமிருக்கின்ற அத்தனை தமிழ் கைதிகளையும் அரசு விடுதலை செய்வதற்கு தயங்க கூடாது.மீளுருவாக்கக் குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் அனேகமானவர்கள் 22, 23 வயதுடைய இளைஞர்களாக இருக்கின்றார்கள்.

நாட்டில் யுத்தம் முடியும் போது இவர்கள் 10 வயதிற்குட்பட்டவர்களாகவே இருந்திருக்க முடியும். இவ்வாறு இருக்கையில், இவர்கள் தான் "புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயன்றார்கள்" எனக்கூறி கைது செய்யப்பட்டிருப்பது எந்தளவுக்கு முரண்நகையான விடயம் என்பதனை அரசு புரிந்து கொள்ள

வேண்டும்.

வாழ்வாதார உதவிகளை வழங்குவதாக கூறியவரின் பின்புலங்கள் எதனையும் அறியாது அவரை நம்பி அவருடன் பழகிய குற்றத்திற்காக பூநகரியை சேர்ந்த 12க்கும் மேற்பட்டவர்கள் சிறைகளில் வாடுகிறார்கள்.

வாழ்வாதார உதவி வழங்குவதாக கூறிய நபர் , பூநகரியில் எவருக்கும் எந்த விதமான வாழ்வாதார உதவிகளையும் வழங்கவில்லை. வெறும் வாய்ப் பேச்சில் மட்டுமே உதவி வழங்குவதாக உறுதி வழங்கியுள்ளார். அவரை நம்பியவர்கள் தற்போது சிறையில் வாடுகின்றார்கள்.

அவர்களின் விடுதலையை எதிர்பார்த்து பூநகரி மக்கள் காத்திருக்கின்றார்கள். சுதந்திர தினத்தினை முன்னிட்டு விடுவிக்கப்படுவார்கள் என காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது.

இனிவரும் காலங்களிலாவது அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேற வேண்டும் என்பதே தற்போதைய பிரார்த்தனை ஆகும்.

மயூரப்பிரியன்...

# மகத்துவம் மிக்க மகா சிவராத்திரி!



ஆதியும் அந்தமும் இல்லாத பராபர வஸ்து ஜோதி ஸ்ரூபத்திலிருந்து லிங்கமாக வெளிவந்து அருள்புரிந்த நன்நாளே சிவராத்திரி. உலகெல்லாம் நிறைந்து விளங்குகின்ற எம்பெருமான் சிவனுக்குரிய விரதங்களுள் சிறப்புமிக்கதில் ஒன்றான சிவராத்திரி விரதம் வல்லமையும்

மகத்துவமும் நிறைந்து அடியார்களுக்கு மன அமைதியை தருவதால் மகா சிவராத்திரி என்று அழைக்கப்படுகின்றது.

சைவ சமத்தவர்களால் பெரிதும் விரும்பி அனுஷ்டிக்கப்படும் இந்த சிவராத்திரி விரதம் ஆண்டுதோறும் மாசி மாத கிருஷ்ணபட்ச (தேய்பிறை) சதுர்த்தசி திதியில் இரவில் கொண்டாடப்படும். இந்ந நாளின்

சிறப்புகள் குறித்து கருட புராணம், கந்த புராணம், பத்ம புராணம் அக்னி புராணம் உள்ளிட்ட பல்வேறு நூல்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. நித்திய சிவராத்திரி மாத சிவராத்திரி, பட்ச சிவராத்திரி, யோக சிவராத்திரி, மகா சிவராத்திரி என 5 வகைப்படும்.

மகா சிவராத்திரி. மாக சிவராத்திரியே தற்போது மகா சிவராத்திரி என அழைக்கப்படுகிறது. மாசி மாதத்தில் தேய்பிறை சதுர்த்தசி நாளே மகா சிவராத்திரியாகும். இந்த சிவராத்திரிக்கு 'வருஷ சிவராத்திரி'

என்ற பெயரும் உண்டு. யோக சிவராத்திரி இது 4 வகைப்படும். திங்கட்கிழமை அன்று சூரிய உதயம் முதல் இரவு முழுவதும் 60 நாளிகையும் அமாவாசையாக இருந்தால் அன்று யோக சிவராத்தியாகும். திங்களன்று சூரிய அஸ்தமனம் முதல் இரவு 4 சாமம் (12 மணி நேரம்) தேய்பிறை

சதுர்தசி இருந்தால் அதுவும் யோக சிவராத்திரியாகும். திங்களன்று இரவின் நான்காம் சாமத்தில் அமாவாசை அரை நாளிகை (12 நிமிடங்கள்) இருந்தால் அதுவும் யோக சிவராத்திரியாகும்.

இந்த 4 யோக சிவராத்திரிகளில் ஒரு யோக சிவராத்திரி தினத்தில் விரதம் இருந்தால் மூன்று கோடி சிவராத்திரி விரதம் இருப்பதற்கான பலன் கிடைக்கு மென ஐதீக வரலாறுகள் சொல்கின்றன.

நித்திய சிவராத்திரி வருடத்தின் பன்னிரண்டு மாதங்களிலும் வரும் தேய்பிறை வளர்பிறைககளின் சதுர்த்தசி திதியில் இடம்பெறும் 24 நாட்களும் நித்திய சிவராத்திரியாகும்.

பட்ச சிவராத்திரி – தை மாத தேய்பிறை பிரதமையன அன்று தொடங்கி பதின்மூன்று நாட்கள் தினந்தோறும் முறைப்படி ஒரு வேளை உணவு உண்டு 14 ஆம் நாளான சதுர்தசி அன்று முறைப்படி விரதம் இருப்பதே பட்ச சிவராத்திரியாகும்.

பிரம்மாவும் விஷ்ணுவும் அடிமுடி தேடிய விடயம் கூறப்படுகின்றது. ஒரு காலத்திலே படைத்தல் தொழில் செய்யும் பிரம்மாவும் காத்தல் தொழில் செய்யும் விஷ்ணுவும் தாமே பெரியவர் என்று கூறி ண்டையிட்டுக் கொண்டார்களாம். அப்போது பரம்பொருளான சிவபெருமானின் முன்னே சோதிப் பிளம்பாகத் தோன்றி 'இந்த சோதியின் அடியையோ அல்லது முடியையோ யார் காண்கிறார்களோ

அவர்களே பெரியவர்' என்று அசரீரியாக சொல்லி வைத்தாராம்.. அதைக் கேட்டவுடனே பிரம்மா தான் முடியைக் கண்டு வருவதாகச் சொல்லி அன்னப் பட்சி உருவெடுத்து வானத்தில் பறந்து சென்றார். விஷ்ணு தான் அடியைக் கண்டு வருவதாகக் கூறி பன்றி உருவம் எடுத்துக் கொண்டு நிலத்தைக் குடைந்து கொண்டு கீழே சென்றார். இருவராலும் எதையும் காண முடியவில்லை. ஆனாவ் பிரம்மாவோ தான் முடியைக் கண்டதாகப் பொய்ச் சாட்சி சொல்ல வைத்தார். இவ்வாறு பொய்கூறிய காரணத்தால் பிரம்மாவுக்கு கோயிலே இல்லாமல் போனது.

இதனால் தாழம்பூ பூசைக்கு எடுக்கப்படுவதில்லை. மகா விஷ்ணு தன்னால் முடியாது என்று பணிந்து வணங்கினார். அவர் உண்மையை பேசியக் காரணத்தால் விஷ்ணுவுக்குக் கோயில் இருக்கின்றது. இவ்வாறு இறைவன் சோதியாக நின்ற நாளே சிவராத்திரியாகும்.

இந்த விரதத்தை மேற்கொண்ட உமா தேவியார் வேதாகம முறைப்படி 4 சாமம் சிவனை அர்ச்சித்து வணங்கி' பிராண நாயனரே! நான் தங்களை பூசித்த இந்த ராத்திரியே சிவராத்திரியாகும். இன்று பூசித்தவர்கள பரமானந்த முத்திப்பேற்றினை பெற வேண்டும். அதற்கு நீங்கள் திருவுள்ளம் இரங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக் கொண்டார் இவ்வாறு உமையால் கேட்டவுடனே சிவனும் இப்படியே ஆகட்டும் என்றார். அன்று முதல் சைவ சமயத்தவர்கள் இந்த விரதத்தை அனுஷ்டித்து வருவதாக புராணங்கள் கூறுகின்றன.



யதுஷா ரவித்தியாகராஜா ...


**இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்**

**சுகாதார அமைச்சு**

**ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட சுகாதார முறைமை அபிவிருத்தி செயற்றிட்டம்**

**ஆர்வ வெளிப்பாட்டிற்கான அழைப்பு**

**HSEP(AF)/PMU/PRO/C3/18/2022**

**உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக வடிவமைத்தல் மற்றும் மேற்பார்வைக்கான உசாத்துணை நிறுவனமொன்று (DSCID)**

1. சுகாதார முறைமை அபிவிருத்திக்கான செயற்றிட்டம் - மேலதிக நிதியிடல் (செயற்றிட்டம் என அழைக்கப்படுவது) இற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து மானியம் மற்றும் சலுகைக் கடனொன்றை இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கமானது பெற்றுள்ளதுடன் பெறுகைகளின் பகுதியொன்றை உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக (உசாத்துணையாளர் என அழைக்கப்படுவது) வடிவமைத்தல் மற்றும் மேற்பார்வைக்கான உசாத்துணை நிறுவனமொன்றை ஈடுபடுத்துவதற்கான செலவினத்திற்கு பயன்படுத்துவதற்காக உத்தேசித்துள்ளது.
2. இந்த பணிஒதுக்கீட்டின் நோக்கமானது உசாத்துணை நிறுவனமொன்றை பின்வருவனவற்றிற்காக பயன்படுத்துவதாகும்.
   - அ. அனைத்து 4 மாகாணங்களான மத்தி, வட மத்தி, சபரகமுவ மற்றும் ஊவா ஆகியவற்றின் ஒவ்வொரு 9 மாவட்டங்களிலும் தம்புத்தேகம, மெதிரிகிரிய, ரிக்கிலகஸ்கட, தம்புள்ள, தெல்தெனிய, வெலிமட, பிபில, கஹவத்த, மற்றும் கரணவெல ஆகிய இடங்களிலுள்ள 9 தள வைத்தியசாலைகளில் புதிய நிர்மாணங்களின் வடிவமைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல்.
   - ஆ. மத்தி, வட மத்தி மற்றும் ஊவா ஆகிய மாகாணங்களின் தம்புத்தேகம, மெதிரிகிரிய, ரிக்கிலஸ்கட, தம்புள்ள, தெல்தெனிய, வெலிமட மற்றும் பிபில ஆகிய இடங்களின் தள வைத்தியசாலைகளில் புதிய கழிவுநீர் முறைமைகளை வடிவமைத்தல் மற்றும் மதிப்பீடு செய்தல் அல்லது தற்போதுள்ள கழிவுநீர் முறைமைகளை புதுப்பித்தல்.
   - இ. தம்புத்தேகம, மெதிரிகிரிய, ரிக்கிலஸ்கட, தம்புள்ள, தெல்தெனிய, வெலிமட, பிபில, கஹவத்த மற்றும் கரவனெல்ல ஆகிய இடங்களிலுள்ள ஒவ்வொரு தள வைத்தியசாலைகளிலும் அளவை அளவீடுகளை மேம்படுத்தல்/ புதுப்பித்தலுக்கான மதிப்பீடுகள்.
   - ஈ. களுத்துறையிலுள்ள சுகாதார சேவைகளுக்கான தேசிய நிறுவனம் மற்றும் மேல், தென், கிழக்கு, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களின் 5 பிராந்திய பயிற்சி நிலையங்களுக்காக அளவை அளவீடுகளை மேம்படுத்தல் மற்றும்/ அல்லது மீள்நோக்கல் மற்றும் இற்றைவரையாக்கல்/ புதுப்பித்தல்களுக்கான மதிப்பீடுகள்.
   - உ. 9 தள வைத்தியசாலைகளில் NIHS மற்றும் 5 RTS ஆகியவற்றில் அடையாளம் காணப்பட்ட சுகாதார வசதிகளுக்கான சிவில் வேலைகளின் நிர்மாணம்/ புணர்நிர்மாணம்/ புதுப்பித்தல். அனைத்து வேலைளுக்கு விலைமனுதாரருக்கு உதவி வழங்கல், பண்டங்கள் மற்றும் சேவைகளின் பெறுகையானது ADB இன் பெறுகை வழிகாட்டிகள் மற்றும் கொள்கைகளின் அடிப்படையில் அமைந்திருக்கும்.
   - ஊ. நிர்மாண காலகட்டத்தின்போது நிர்மாணம், மேற்பார்வையிடல் மற்றும் கண்காணித்தல் சேவைகளை வழங்கல்.
   - எ. பூர்த்தி செய்யப்பட்ட அனைத்து ஆவணங்களையும் ஒப்பந்த ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் பிரகாரம் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட ஆவணங்களுடன் உரித்தான வைத்தியசாலைகளின் மருத்துவ அத்தியட்சகர்கள் மற்றும் பணிப்பாளரிடம் ஒப்படைத்தல்.
3. பணிஒதுக்கீட்டின் நியதிக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய உரித்தான விபரங்கள் ஆகியன கீழே வழங்கப்பட்டுள்ள தொடர்புகளில் காணலாம்.

   **https://www.adb.org/projects/51107-002/main#project-tenders**

   **https://hsep.lk/index.php/work-with-us/tenders**
4. பணிஒதுக்கீட்டின் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள ஆகுசெலவானது 275,715,900.00 (இடைநிகழ்வுகள் + ஏற்புடைய வரிகள் அடங்கலாக) இலங்கை ரூபாவாகும்.
5. தேவைப்படும் சேவைகளை வழங்குவதில் அவர்களின் ஆர்வத்தை வழங்குமாறு தகுதியுள்ள உசாத்துணை நிறுவனங்கள் அழைக்கப்படுகின்றன.
6. ஆசிய அபிவிருத்தி வங்கியினாலான ADB கடன் பெறுனர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகளில் சுட்டிக்காட்டியுள்ள நடைமுறைகளுக்கமைவாக உசாத்துணை நிறுவனமொன்று தெரிவு செய்யப்படும்.

   ஆர்வ வெளிப்பாட்டை சமர்ப்பிப்பதற்கான அழைப்பு:
7. 2022 மார்ச் 30 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழே சுட்டிக்காட்டப்பட்டுள்ள முகவரிக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உசாத்துணை முகாமைத்துவ முறைமை மூலம் அல்லது வன்பிரதியாக ஆர்வ வெளிப்பாடானது சமர்ப்பிக்கப்படலாம்.

   வன்பிரதி சமர்ப்பித்தலுக்கானது: (1) Obtain the template for Expression of Interest for firms at Documents for Recruitment of Firms and individual Consultants by Executing Agencies| Asian Development Bank (adb.org), மற்றும் (2) தபாலுறையொன்றில் பின்வருமாறு தெளிவாக குறிப்பிட்டு தயாரித்து கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு சமர்ப்பிக்கவும். **"Expression of Interest for Design and Supervision Consultancy Firm for Infrastructure Development – C 3 (AF)"**
8. தெரிவு செய்தல் தகவுத்திறன்: தகுதித்தன்மை, தொழில்நுட்ப அனுபவம் (பொதுவான அனுபவம், நிகரான பணிஒதுக்கீடுகளின் அனுபவம், புவியியல் அனுபவம் மற்றும் முகாமைத்துவ அனுபவம்) அணுகுமுறை மற்றும் செயன்முறைத்தன்மை, நியதிக் குறிப்புக்களுக்கான கருத்துரைகள் மற்றும் வரவுசெலவுத் திட்டம்.
9. ஆர்வ முரண்பாடு: வளமுள்ள உசாத்துணையாளர்கள் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் பெறுநர்களுக்கான பெறுகை ஒழுங்குவிதிகளுக்கான உரித்தான பிரிவுகளை பார்வையிட்ட அவைகளுக்காக அமைந்தொழுகல்.
10. மேலதிக தகவலை பின்வருமாறு பெற்றுக் கொள்ளலாம்:

தபால் முகவரி: செயற்றிட்டப் பணிப்பாளர்,
சுகாதார முறைமை அபிவிருத்தி செயற்றிட்டம் (மேலதிக நிதியிடல்),
3/**19,** கின்சி வீதி,
கொழும்பு-08, இலங்கை.

மின்னஞ்சல் முகவரி: **pmu@hsep.lk**
தொலைபேசி: +9411 269 7163/+94 112 056 535
தொலைநகல்: +94 11 269 7163


# உலக சைவப் பேரவையின் கொடிதினம்

உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை வழமைபோல இவ்வருடமும் சிவராத்திரி தினமான நாளை மறுதினம் (மார்ச் முதலாம் திகதி) சைவக் கொடிதினம் அனுஷ்டிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

மேல் மாகாணம், வடக்கு, கிழக்கு மற்றும் மலையகப் பகுதி உட்பட இலங்கையின் சகல மாவட்டங்களிலுமுள்ள பெரும்பாலான சைவ ஆலயங்கள், இந்து நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள் என்பனவற்றில் கொடிதின வைபவம் இடம்பெறவுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் கொடி விற்பனைமூலம்




கிடைக்கும் நிதியானது, அந்தந்த மாவட்டங்களிலுள்ள அறநெறிப் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும், வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கும் பயன்படுத்தப்பட்டு வருவது வழக்கமாகும்.

தற்போது நாடளாவிய ரீதியில் பரவிவரும் கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, கொடிதின நிகழ்ச்சிகள் சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளுக்கு அமைய நடத்தப்படவிருப்பதாக, உலக சைவப் பேரவையின் இலங்கைக் கிளை தலைவர் கா.தயாபரன் தெரிவித்துள்ளார்.

# மஹா சிவராத்திரி விழா

(நூரளையூரான்)

நுவரெலியா ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயம் காயத்ரி பீடத்தில் மஹா சிவராத்திரி விழா நாளை மறு தினம் 01.03.2022 செவ்வாய்க் கிழமை மாலை 04.00 மணி தொடக்கம் புதன்கிழமை அதிகாலை 06.00 மணிவரை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக நிர்வாக அறங்காவலர் ஸ்ரீ சக்திவேல் சந்திரமோகன் தெரிவித்துள்ளார்.

அன்றைய தினம் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானுக்கு மஹா மிருத்யுஞ்ஜெய தேவருக்கு நான்கு சாமங்களிலும் விசேட அபிஷேக அலங்காரப் பூஜைகள் நடைபெறும்.

மேலும் சமாதி மண்டபத்தில், குரு பூஜை, காயத்ரி பூஜை மகாமிருத்யுஞ்ஜெய ஓமம், பிரார்த்தனை, தியானம், பஜனை, சிவபஞ்சாட்சர மந்திர பாராயணம் மற்றும் அருளுபதேசம் என்பனவும் நடைபெறவுள்ளது.

முதலாம் சாமப் பூஜைகளுக்குப் பின் (மாலை 6.00 மணி தொடக்கம்) பக்தர்களின் கரங்களினால் ஸ்ரீ இலங்காதீஸ்வரப் பெருமானுக்கும், 108 பாணலிங்கங்களுக்கும் பால், இளநீர் கொண்டு அபிஷேகம் செய்யவும், இரண்டாம் சாம பூஜைகளின் பின் (இரவு 9.30 மணி தொடக்கம்) விஷேட மூலிகைகளைக் கொண்டு நடைபெறும் மகாமிருத்யுஞ்ஜெய ஹோமத்தில் ஆகுதி கொடுக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## விமர்சனங்கள் ஆர்ப்பாட்டங்களுக்கு மத்தியில்... (05ஆம் பக்கத் தொடர்)

குறிப்பாக ஒவ்வொருவருக்கும் 4 அல்லது 5 ஏக்கர் காணி இருந்தது. அவர்கள் பெரும்பாலும் அதில் சோளப் பயிர்ச் செய்கையே மேற்கொண்டனர். நீதிமன்றத்தின் உத்தரவுக்கு இணங்க தற்போது 36 பேர் அங்கிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். பதிவாளரின் முன்னிலையில் உத்தியோகபூர்வமாக அந்தக் காணியை மகாவலி அதிகாரசபை பொறுப்பேற்றுக் கொண்டது.

நீதிமன்றம் உத்தரவு வழங்கிய பின்னர் அந்த உத்தரவை ஒரு வருட காலத்திற்குள் நிறைவேற்ற வேண்டும் என்பதே நியதி.

2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளிலேயே இந்த நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. 2019 இல் அதில் ஒரு பகுதி நிறைவேற்றப்பட்டாலும் அதன் பின்னர் நாட்டில் நிலவிய கொரோனா வைரஸ் சூழ்நிலையால் அந்த நடவடிக்கைகள் தாமதமாகின.

அவ்வாறு ஒரு வருடம் கழிந்த பின்னர் நாம் அந்த நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்தோம். எனினும் அந்த விவசாயிகள் நீதிமன்ற உத்தரவை பொருட்படுத்தாது மீண்டும் அங்கு வந்து விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இன்னும் வெளியேறாமல் அந்தக் காணிகளில் தற்போது உள்ளவர்கள் நீதிமன்ற தீர்ப்புக்குப் பின்னர் மேலும் ஒரு வருடம் அந்தக் காணியில் இருக்கலாம் என்ற தவறான சிந்தனையோடு உள்ளனர், உண்மையில் அவ்வாறு இல்லை.

ஒரு வருடத்திற்குள் அவர்கள் வெளியேற வேண்டும் என்பதே நியதி. அவர்கள் அதனை தவறாக புரிந்து கொண்டுள்ளனர். சீனி உற்பத்தி நடவடிக்கைகளுக்காக 33 மூன்று வருட குத்தகை அடிப்படையில் இந்த காணி சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு மகாவலி அதிகார சபையால் வழங்கப்படுகிறது. அந்த வகையில் தற்போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் எவருக்கும் அந்தக் காணிகளில் எத்தகைய உரிமையும் கிடையாது அவர்கள் அங்கிருந்து வெளியேறுவதே சரி என்றும் மகாவலி அதிகார சபையின் ரிதிமாலியத்த தொகுதி முகாமையாளர் நிஹால் தெரிவித்தார்.

**ரிதிமாலியத்த எக்கிரியன்கும்புர விகாராதிபதி சுமணரத்ன தேரர்:**

நான் இந்த ஊரில் பிறந்து வளர்ந்தவன். நாட்டில் மிக மோசமான வறுமையான பிரதேசமாக இதனைக் குறிப்பிட முடியும். எமது பிரதேச மக்கள் முன்னேற்றம் அடைய வேண்டுமென்றால் இந்த சீனித் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும். இவராவது அதனை தடுப்பதற்கு முயற்சிப்பார்கள் ஆனால் அது இந்தப் பிரதேச மக்களின் எதிர்காலத்துக்கு செய்கின்ற துரோகமாகும்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் காலத்தில் எமது மாகாணத்துக்கு ஆடைத் தொழிற்சாலை ஆரம்பித்த முன்வந்தபோது பலரும் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தனர். அந்த எதிர்ப்பை பொருட்படுத்தாமல் ஆடைத்தொழிற்சாலை ஆரம்பிக்கப்பட்டதால் தற்போது ஐயாயிரத்துக்கும் மேற்பட்ட இளைஞர்களுக்கு அதன் மூலம் வேலைவாய்ப்பு கிடைத்துள்ளது. அது போன்றதொரு தொழிற்சாலை மீண்டும் இங்கு வருவதற்கு எவரும் எதிர்ப்பு தெரிவிக்கக் கூடாது.

**ரிதிமாலியத்த பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் நிமல் தசநாயக்க:**

எதிர்க் கட்சியில் உள்ள போது ஆளும் கட்சியினால் கொண்டுவரப்படும் இது போன்ற திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவிப்பதை நாம் வழக்கமாகக் கொண்டுள்ளோம். அந்த முறை தவறானது.

நாம் எமது பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை பலப்படுத்துவதற்கு உதவ வேண்டும். இத்தகைய தொழிற்சாலைகள் வரும்போது அரசியல் இலாபத்தை நோக்காகக் கொண்டிராமல் அதற்கான ஒத்துழைப்பு வழங்குவதே சிறந்தது என்பதே எனது கருத்து.

**பின்தென்ன மகளிர் முன்னணியின் தலைவியும் பிரதேச சபை உறுப்பினருமான ஜஸ்மின் புஞ்சி ஹேவா:**

பல ஆண்டுகளாக பாரிய துன்பங்களை அனுபவித்து வரும் இந்த மாகாண மக்கள் தொடர்ந்தும் அத்தகைய துயர நிலையை அனுபவிக்க முடியாது. அதனால் பிபில சீனி நிறுவனத்தின் தொழிற்சாலை இப்பகுதிக்கு வருவதில் நாம் மகிழ்ச்சி அடைகின்றோம். அனைத்திற்கும் மேலாக இந்த பிரதேச மக்களின் பொருளாதார முன்னேற்றம் முக்கியமானதாகும்.

ரிதிமாலியத்த பிரதேச சபையின் பொது ஜன பெரமுன உறுப்பினர் ஐ. எச்.எம். சி. பண்டார (பந்து):இந்தத் திட்டம் எனது தொகுதியில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. எனக்கு வாக்களித்த மக்களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றுவதற்கு இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியது அவசியம்.

இந்த திட்டம் கடந்த 17 வருடங்களுக்கு முன் மேற்கொள்ளப்பட வேண்டியது. அன்றிலிருந்து ஜே.வி.பி ஊவா மாகாண உறுப்பினர்கள் அதற்கு தொடர்ந்தும் எதிர்ப்பு தெரிவித்து வந்துள்ளனர். நாமும் தவறாக புரிந்து கொண்டு சில சமயங்களில் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளோம்.

தற்போது நாம் அதனை புரிந்து கொண்டுள்ளோம். அதற்கிணங்க இந்தத் திட்டத்தை வெகு விரைவில் நடைமுறைப்படுத்துமாறு நாம் ஜனாதிபதியைக் கேட்டுக்கொள்கின்றோம்.

**மகாஓயா பிரதேச சபையின் முன்னாள் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் கே. டி.சேனாரட்ன:**

உத்தேச பிபிலை சீனி தொழிற்சாலை ஆரம்பிக்கப்படும் நிலையில் அதற்கு தேவையான கரும்பு பயிர்ச்செய்கை எமது பகுதியில் ரம்பகண்ஓய நீர்த்தேக்கத்திற்கு அண்டிய பகுதியிலேயே எமது விவசாயிகளால் மேற்கொள்ளப்படுகிறது.

இதன் மூலம் எமது மகுதி மக்களுக்கு வருமானம் அதிகமாகிறது. அது தொடர்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் விமர்சனங்களையும் குற்றச்சாட்டுகளையும் நாம் முற்றாக நிராகரிக்கின்றோம். மக்கள் வீண் பயம் கொள்ளத் தேவையில்லை.

**அம்பாறை மகா ஓயா போகமுயாய கிராமத்தை சேர்ந்த விவசாயி எம். நிசங்க:**

நாம் தற்போது ஒன்றரை ஏக்கரில் கரும்பு பயிர்ச்செய்கையை மேற்கொள்கின்றோம். அதற்கு மேலதிகமாக இன்னும் ஆறு ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். எமது கரும்பை சிறந்த விலையில் விற்பனை செய்வதற்கு சீனித் தொழிற்சாலை உருவாவது முக்கியமாகும்.

ரிதிமாலியத்த பிரதேசசபையின் ஜேவிபி உறுப்பினர் கே.எச்.எம். அபேரத்ன (ஜீவன்)

இந்த சீனித் தொழிற்சாலை திட்டத்தை நடைமுறைப்படுத்த நாம் இடமளிக்கப் போவதில்லை. இதனால் எமது மக்களுக்கு தமது ஊரை இழக்க வேண்டிவரும். பல்வேறு பொய்களை கூறி மக்களை திசை திருப்பும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிராம மக்களின் பொருளாதாரம் சமூக அபிவிருத்தி தொடர்பில் சிந்திக்காமல் சிறு குழுவினர் குறுகிய அரசியல் லாபத்திற்காக இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்த ஆதரவளித்து வருகின்றனர். இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா இல்லா தொழிப்பதா என்பது தொடர்பில் ஊவா மாகாண மக்கள் மட்டுமன்றி நாட்டு மக்கள் அனைவரும் உன்னிப்பான அவதானத்தை செலுத்தி வருகின்றனர்.

**ஐரோப்பாவின் உயிர் நாடிகளில் ஒன்றான, சர்வாதிகாரத்தின் பிதாமகன் அடோல்ப் கிட்லரையே கிறங்க வைத்த பாரிஸ் நகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள எலிசே அரண்மனை (Palais de Elysee) எனப்படும் பிரான்ஸ் குடியரசின் ஜனாதிபதிகள் வாசஸ்தலம் புதிய மாறுபட்ட குடியிருப்பாளர் ஒருவரை எதிர்கொள்ளப்போகிறதா...? அல்லது ஏற்கனவே ஐந்து வருட ஒப்பந்தத்துடன் கடந்த 2017ம் ஆண்டு மே மாதம் குடிவந்தவரின் வாடகை ஒப்பந்தம் புதுப்பிக்கப்படப் போகிறதா...? என்கிற கேள்விக்கான பதிலை அண்மித்துக் கொண்டிருக்கிறது, அந்த நாட்டு மக்களைப் போல.. பிரான்ஸ் நாடு ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை அங்கே நடைபெறும் நாட்டின் அதிபர் தேர்தலை வரும் ஏப்ரல் மாதம் (April 2022) வழமை போன்ற இரண்டு சுற்றுக்களாக சந்திக்க தயாராகிக் கொண்டிருக்கிறது.**



# வெற்றி பெறுவாரா மக்ரோன்..?

கோவை நந்தன்

நேரடி மக்கள் வாக்களிப்பு மூலம் நடைபெறும் இந்த தேர்தலின் முதல் சுற்று வாக்குப்பதிவு வரும் ஏப்ரல் 10ம் திகதியும், ஏப்ரல் 24ம் திகதி இரண்டாம் சுற்று வாக்களிப்பும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டு அதற்கான ஆயத்தங்களும் வேட்பு மனுத் தாக்கல்கள், பிரசாரங்கள் என்பன ஆரம்பித்து விட்டன.

முதல் சுற்று வாக்களிப்பில் எந்த வேட்ப்பாளரும் 50%இற்கும் மேற்பட்ட பெரும்பான்மையை பெறவில்லையானால் அதி கூடிய வாக்குகளை பெற்ற முதல் 2 வேட்பாளர்கள் இரண்டாவது சுற்றிற்கு தெரிவாகி அவர்களில் ஒருவர் ஜனாதிபதியாவார்.

இரண்டாம் உலகப்போரின் பின்னரான பிரான்சின் முதல் ஜனாதிபதி சார்ள்ஸ் டி கோல் (Charles de Gaulle) இனால், 1958ம் ஆண்டு நடைமுறைப்படுத்தபட்ட நாட்டின் 5வது குடியரசு அரசியலமைப்பின்,தேர்தல்கள் நடைமுறை சட்டத்தின் பிரகாரம், பிரான்சில் நடைபெறும் அனைத்து தேர்தல்களிலும் இரண்டு சுற்று வாக்குப் பதிவு நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என்பதும், பதவியில் இருக்கும் ஒருவர் இரண்டாவது முறையாகவும் அதே பதவிக்கான தேர்தலில் போட்டியிட முடியும் என்பதும் நடைமுறை.

அதனடிப்படையில் கடந்த 2017ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் தெரிவாகி தற்போது நாட்டின் தலைவராக பதவி வகிக்கும், ஒரு மைய வலதுசாரியாக தன்னை நிலை நிறுத்தும் இம்மானுவேல் மக்ரோன் (Emmanuel JeanMichel Frederic Macron), கடந்த தேர்தலில் இரண்டாவது சுற்றிற்கு முன்னேறி மக்ரோனுக்கு சவாலை ஏற்படுத்திய தீவிர வலதுசாரிய கட்சியான Rassemblement National இன் மரீன் லு பென்(Marrine Le Pen) உட்பட பலர் இந்த தேர்தலின்வேட்பாளர் பட்டியலில் இடம்பெறவுள்ளனர்.

கடந்த 2012ம் ஆண்டு முதல் 2017ம் ஆண்டுவரை பிரான்சின் ஜனாதிபதியாக இருந்த Francois Hollande இன் சோசலிச அரசாங்கத்தின் பிற்பகுதியில் ஒரு பொருளாதார பட்டதாரி, வங்கி அதிகாரி போன்ற பிரபலத்தின் அடிப்படையில் நிதி அமைச்சராக்கப்பட்ட,தேர்தலில் முன் அனுபவம் எதுவும் அற்ற,இமானுவேல் மக்ரோன் கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஒரு வேட்பாளராக, களம் இறங்கி இறுதிச் சுற்றில் 66.06% வீதமான வாக்குகளைப் பெற்று நாட்டின் தலைவராகி இருந்தார். அவரின் ஆளுமையை, அவர் எதிர் கொண்ட ஏற்ற இறக்கங்களை, பரிசோதிக்கும் ஒரு களமாகவே இந்த தேர்தல் அமையப் போகிறது எனலாம்.

இடதும் இல்லை வலதும் இல்லை தான் ஒரு மையவாதி என பிரகடனப் படுத்திக்கொண்டு ஒரு இளம் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மக்ரோனின் பதவிக்காலம் ஐந்து வருடங்களை அண்மித்துக் கொண்டிருக்கிறது.

பிரான்சைச் சுற்றிவீசும் அரசியல் காற்று மக்ரோனின் பதவிக் காலத்தில் ஆழமான மாற்றங்களுக்கும், எதிர்பாராத சிக்கல்களுக்கும் உட்பட்டு பல சவால்களை எதிர்கொண்டது.

பதவி ஏற்ற சில மாதங்களிலேயே இமானுவெல் மக்ரோனின் பொருளாதார சீர்திருத்த முன்னெடுப்புக்கள் அவர் முன்மொழிந்த புதிய ஓய்வூதியத் திட்டம் அவற்றிற்கெதிரான மஞ்சள் அங்கி இயக்கம்,அந்த இயக்கத்தவர்களின் பலத்த தொடர் போராட்டங்கள், இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதல்கள், அதனை முறியடிக்க நாட்டின் மதச்சார் பின்மை கோட்பாட்டு நடைமுறையை வலுப்படுத்த மக்ரோன் எதிர்கொண்ட சவால்கள், இறுதியாக Covid19 தொற்றுநோய், என்பன தொடராக மக்ரோனின் பதவிக் காலத் தட்டை கனதியாகவே நிறைத்திருந்தன.

இந்த நிலையில் இரண்டாவது தேர்தலையும் எதிர்கொள்ளத் தயாராகும் அவர் கடக்க வேண்டிய பல சவால்கள் நிறையவே உள்ளதாகவும்,ஒட்டு மொத்த நாட்டு மக்களில் அதிகமானவர்கள் எனப்படும் நடுத்தர வர்க்கத்தவரின் வெறுப்பை நிறையவே சம்பாதித்து விட்டார் மச்ரோன் எனவும் கருத்து வெளியிடுகின்றனர் தீவிர வலது சாரிய ஆய்வாளர்கள்.

மற்றொரு தேர்தலை மக்ரோன் சந்திக்க வேண்டுமானால் அவர் தாண்டவேண்டிய தடைகள் பல உள்ளன என்பதே யதார்த்தம். நிதியமைச்சராக இருந்த ஒருவர் ஜனாதிபதி ஆனவுடன் முதல் நடவடிக்கையாக நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்தவே முயல்வார் என்கிற உலக நடப்புக்கு அமைய நிதி நெருக்கடியின் பிடியில் இருந்த பிரெஞ்சு பொருளாதாரத்தை மீட்டெடுப்பதில் அவர் உறுதியாக இருந்தார். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, அவர் பிரெஞ்சு தொழிலாள வர்க்கத்தினரிடையே உள்ள சமத்துவமின்மையை கவனிக்க தவறிவிட்டதால் “பணக்காரர்களின் ஜனாதிபதி” என்கிற விமர்சனத்தை அடிக்கடி எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டது..

நவம்பர் 17.2018 அன்று எரிவாயுக்களின் குறிப்பாக டீசல் வரிகளை உயர்த்தும் மக்ரோனின் முடிவை எதிர்த்தது மஞ்சள் அங்கி (The Jilet Jaunes)போராட்டங்கள் என்கிற நாமகரணத்துடன் முதன்முதலில் மக்ரோனுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. நாட்டின் நடுத்தர வர்க்கம், குறிப்பாக கீழ்நடுத்தர வருமானம் பெறும் தொழிலாளர்கள், வருமான சமத்துவமின்மையை உருவாக்கப் போகிறது இந்த வரி உயர்த்தல் எனத் தெரிவித்து ஒரு கூட்டமாக ஒன்றுபட்டனர், . இந்த ஒன்று கூடல் பின்னர் மக்ரோனின் புதிய ஓய்வூதியத் திட்ட முன்மொழிவு உட்பட பல்வேறு பிரச்சினைகளை முன்னிறுத்தியதான அரச எதிர் போராட்டங்களாக பிரதி சனிக்கழமை தோறும் முன்னெடுக்கப்பட்டது’இந்த வாராந்திர போராட்டத்திற்கு பெரும் அளவில் மக்கள் ஆதரவு இல்லை என்றாலும், பல்வேறு அரசுக்கு எதிரான மக்கள் நலன்சார் முழக்கங்களால் அதன் தீவிரம் அதிகரித்தது.

இந்த மஞ்சள் அங்கிப்போராட்டங்களில் வன்முறையாளர்கள் நுழைந்து சிறு,பெரு முதலாளிகளின் சொத்துக்களுக்கு பெரும் சேதம் விளைவித்ததும் இந்த வன்முறைகளை அடக்க காவல்துறை எதிர்வன்முறையை பிரயோகித்ததும் மக்ரோன் அரசுக்கு நெருக்கடியின் உச்சத்தை ஏற்படுத்தியது.

ஒரு தாராளவாத, சர்வதேசியவாதியாக தன்னை வெளிப்படுத்திக் கொண்ட மக்ரோன், தீவிர வலதுசாரிகளின் கண்ணோட்டங்களையும் தாராளமாகவே வெளிப்படுத்தியதால் பிரான்சில் வளர்ந்து வரும் முஸ்லிம் மக்கள் தொகைக்கு அது மறைமுக எதிரொலியாக அமைந்தது. செப்டம்பர் 2020 இல் ஒரு உரையில், "இஸ்லாமியம் ஒரு பிரிவினைவாதம்" என்று தெரிவித்த கருத்தானது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தி மக்ரோனின் அரசியலுக்கு மேலும் சிக்கலை அதிகரித்தது. பிரான்சின் மதச்சார்பற்ற மதிப்புகளைப் பாதுகாப்பதற்காகவே தான் அப்படியான கருத்தை வெளிப்படுத்தியதாக மக்ரோன் தரப்பில் விளக்கம் அளிக்கப்பட்டது.இந்த வேளையிலேயே ஒக்டோபர் 16 அன்று, பள்ளி ஆசிரியரான சாமுவேல் பாட்டி என்பவர், முஹம்மது நபியின் கார்ட்டூன் படங்களை தனது மாணவர்களுக்குக் காண்பித்து கருத்து சுதந்திரம் பற்றி பாடம் நடாத்தியதற்க்காக தலை துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார். மக்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்திய இந்த இஸ்லாமிய பயங்கரவாத தாக்குதலை அடுத்து இஸ்லாமிய பிரிவினைவாத எதிர்ப்பு மசோதா என்று அழைக்கப்படும் 'குடியரசுக் கொள்கைகளுக்கான மரியாதையை வலுப்படுத்துதல்' மசோதா பிரெஞ்சு நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த மசோதா முஸ்லிம் நாடுகளில் இருந்து கடுமையான எதிர்ப்பைப் பெற்று பிரெஞ்சு தயாரிப்புகள் புறக்கணிக்கப் பட வேண்டும் என்கிற கோசத்தை எழுப்பி நின்றன,. ஒரு மையவாதியிடம் இருந்து திசைதிருப்பல்கள் வெளிப்படுகின்றன எனவும், பிரான்சில் உள்ள முஸ்லிம் மக்களை அச்சுறுத்துகின்றன மக்ரோனின் நடவடிக்கைகள் எனவும் எதிர் விமர்சனங்கள் எழுந்தன. இவை யாவும் தனது செல்வாக்கை தக்கவைத்து கொள்வதற்க் காகவும், தீவிர வலதுசாரி வாக்காளர்களை கவர்ந்திழுக்கும் அரசியல் தந்திரம் என்றும் விமர்சனங்கள் முன் வைக்கப்பட்டன.

இதன் சூடு தணியும் முன்னரே COVID 19 பெரும் தொற்று உலகைத் தாக்க ஆரம்பித்தது, இதனால் மிகவும் பாதிக்கப்பட்ட நாடுகளில் பிரான்சும் முன்னணியில் இருந்து பெரும் உயிரிழப்புக்களையும் பாரிய பொருளாதார நெருக்கடிகளையும் எதிர்கொண்டது, எதிர் கொண்டு கொண்டிருக்கிறது. .

இதன் தாக்கம் 2022 ஆம் ஆண்டிற்குள் பிரான்சின் வேலையின்மை விகிதத்தை 7%க்கும் கீழே கொண்டு வருவேன் என்கிற மக்ரோனின் இலக்கையும் தடைப் படுத்தியுள்ளது. அவரது பதவிக்காலத்தில் ஏற்பட்ட இயற்கைத் தடையான இந்த தொற்றின் தாக்கம் கடந்த ஆண்டில் எடுக்கப்பட்ட அவரது ஒப்புதல் மதிப்பீட்டிலும் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி 40%க்கும் கீழே கொண்டு சென்றுள்ளது.

பிரான்சின் பல பகுதிகளில் கட்டாய தடுப்பூசிகள் மற்றும் முக்கிய பொது இடங்களுக்கு ஹெல்த் பாஸ் எடுத்துச் செல்ல வேண்டியதன் அவசியம் என்பவற்றிற்கு எதிராகவும் பரவலான போராட்டங்கள் வெடித்துள்ளன.

இந்த இக்கட்டான சூழலில் இரண்டாவது தவணைக்கு தயாராகும் மக்ரோன், நாட்டின் பொருளாதாரத்தை புத்துயிர் பெறச் செய்வதற்கான வெளிப்படையான பல திட்டங்களைக் கொண்டுள்ளார் எனவும் 100 பில்லியன் யூரோ மீட்புத் திட்டத்தை செயல்படுத்துவதன் மூலம் வணிகங்கள் மற்றும் தொழில்களை பாதுகாப்பதற்கான அரசின் தலையீடு அவரது உத்திகளில் அடங்கும் எனவும் அரசாங்கத்தின் சார்பில் சொல்லப்படுகிறது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# யார் பொறுப்பு?




**மனித வாழ்க்கையும் இயற்கையும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தது. அதிலும் இயற்கையின் ஒட்டுமொத்த அழகையும் அள்ளிப்பருகினாற்போல காணப்படும் இலங்கையின் மலைப்பாங்கான பிரதேசங்களைக் காணவும், அங்குவீசும் சுத்தமான காற்றை சுவாசிக்கவும், பாய்ந்தோடும் நீரில் குளிக்கவும் வருடாந்தம் சுமார் 2 மில்லியன் சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வருகின்றனர். ஆனால், உள்நாட்டில் ஒரு குறிப்பிட்ட பகுதி மக்கள் மாத்திரம் சுத்தமான காற்றை சுவாசிக்க முடியாமல், சுத்தமான குடிநீரை பருக வசதியில்லாமல் சுகாதாரமற்ற வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கின்றனர் என எம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்? இதுபற்றி ஆராய, இன்டர்நியுஸ் ஏர்த் ஜேர்னலிஸ் நெட்வேர்க்கின், சுற்றுச்சூழல் தொடர்பான நிகழ்ச்சித் திட்டத்தின் பங்களிப்புடன் மலையகத்தின் புஸல்லாவ புரொடொ:ஃப்ட் என்ற பிரதேசத்திற்குச் சென்றோம்.**

கடல்மட்டத்திலிருந்து 5550 மீற்றர் உயரத்தில் காணப்படும் புரொடொஃப்ட் பகுதியானது ஆறு பிரிவுகளைக் கொண்டது. அதில் பூச்சிகொட என்பது ஒரு பிரிவாகும். இந்த பிரதேசமானது, நுவரெலியா கண்டி பிரதான பாதையிலிருந்து சுமார் 22 கிலோமீற்றருக்கு அப்பால் அமைந்துள்ள ஒரு கஷ்டப்பிரதேசமாகும். இங்குள்ள மக்கள் தேயிலைக் கொழுந்து பறிப்பதையும் விவசாயம் செய்வதையும் பிரதான தொழிலாகக் கொண்டுள்ளனர்.

பலரது கால்களில் பாதணி இல்லை, வீடுகளின் அருகிலும் நடைபாதையிலும் துர்நாற்றத்துடனான நீர் செல்கின்றது. சிலர் பிள்ளைகளை தூக்கிக்கொண்டு ஆறுகளை நோக்கிச் செல்கின்றனர். அவ்வழியால் செல்லும் சிலர் மூக்கை மூடியவாறு செல்கின்றனர். இதனை அவதானித்த நாம், அருகிலுள்ள புரொடொப்ட் தமிழ் வித்தியாலயத்தின் அதிபர் பிரதீப்குமாரிடம் வினவினோம்.

இங்குள்ள பெரும்பாலான மக்கள் தங்கள் மலசலகூட தேவைக்காக, ஆறுகள், வயல்கள் போன்ற பொது இடங்களை பாவிப்பதாக அவர் கூறினார். வீடுகளில் இவ்வாறு பழகிய பிள்ளைகள், பாடசாலைக்கு வருகைதரும்போது அங்கும் ஆறுகளை நாடிச்சென்றுள்ளனர். பின்னர் அதிபர் அப்பிள்ளைகளுக்கு கூறிய அறிவுரையின் பின்னர் அப்பிள்ளைகள் பாடசாலை மலசலகூடங்களை பாவிப்பதாகக் கூறினார்.







அம்மக்களின் மலசல கூட பாவனை தொடர்பான விடயங்களை மேலும் அறிந்துகொள்ள கிராமத்திற்குள் நுழைந்தபோது, உடைந்த கட்டிடங்களுக்கு முன்னால் காணப்படும் ஒருபடிக்கட்டில் ராமசாமி பாலமுரளி என்ற ஒருவர் அமர்ந்திருந்தார். தான் நாட்டாமை தொழில் செய்வதாகவும் தமது மலசலகூடம் மழைகாரணமாக சுமார் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் உடைந்து சரிந்து விட்டதாகக் குறிப்பிட்டார். அப்படியாயின் தற்போது மலசலகூட பாவனைக்கு என்ன செய்கின்றீர்கள் எனக்கேட்டோம். தூரத்தே ஒருமரக்கறித் தோட்டத்தைக் காண்பித்த பாலமுரளி, அதற்குகீழ் ஒரு ஆறு செல்வதாகவும் அது மறைவாக உள்ளதால் அங்கு சென்று மலசலகூட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதாகவும் கூறினார். அவரது மனைவி மற்றும் இருபிள்ளைகளும் இவ்வாறே செய்கின்றனர்.





இவரிடம் பேசிவிட்டு அந்த ஆற்றை நோக்கிச் சென்றோம். அங்கு ஐந்து பிள்ளைகளின் தந்தையான கந்தையா கமல்ஹாசன், ஆற்றில் மலம் கழித்த தன் பிள்ளையை கழுவிக் கொண்டிருந்தார். தெளிந்த சுத்தமான அந்த நீர் கொத்மலை ஓயா, ரம்பொடை நீர்வீழ்ச்சி என இலங்கையின் பிரதான நீர்நிலைகளுடன் கலக்கின்றன. ஏன் இவ்வாறு ஆற்றுநீரில் மலம்கழிக்கின்றீர்கள் என அவரிடம் கேட்டபோது, தமக்கு மலசல கூடமே' இல்லை என்றும் அதனை அமைத்துக்கொள்வதற்கான நிலம் இல்லையென்றும் கூறினார்.

இவ்வாறு பேசிக்கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், மரக்கறித் தோட்டத்தில் கரட் கிழங்குகளை பறித்துக்கொண்டு ஆற்றைத் தாண்டி வந்தார் சாந்தி.இவர் குறிப்பிட்ட விடயம் மிகவும் பாரதூரமானது. அதாவது, சிலருக்கு மலசலகூடம் இருந்தும் முறையான குழிகள் இல்லை. அவற்றை காண்களில் செல்லவிட்டிருக்கின்றனர்.

“இந்தநீரை தொட்டுத்தான் மரக்கறிச் செய்கை மேற்கொள்கின்றோம். அதேமரக்கறியை பின்னர் சாப்பிடுகின்றோம். இதனால் நோய்தானே வருகின்றது?” என்று தனது ஆதங்கத்தை வெளிப்படுத்திய சாந்தி, அவ்வாறான இடங்களையும் எமக்குக் காண்பித்தார்.

அதற்கருகில் வசித்த 65 வயதான ஐயன் கணபதி எம்மிடம் இவ்வாறு கூறினார். “எமக்கு மலசலகூடம் உள்ளது. மழைக்காலத்தில் நிறைந்து வீட்டுக்குள் வந்துவிடும். நாற்றம் தாங்க முடியாமல் வீட்டை மூடி விட்டு நாங்கள் வெளியே ஓடி விடுவோம். குழிநிறைந்து விட்டதால் மலசலகூட கழிவை காணுக்குள் திறந்து விட்டுள்ளோம்“ என இலைகுழைகளால் மறைந்து காணப்படும் கானை எம்மிடம் காண்பித்தார். அதற்கருகில் கசிவுகளுடன் பலநீர்க்குழாய்களும் காணப்பட்டன. அது குடிநீர் என்பதை கணபதியிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டோம். அவ்வாறாயின் அந்தநீரும் கழிவுநீரும் ஒன்றாக கலக்கும் சாத்தியம் உண்டல்லவா என கணபதியிடம் கேட்டோம். “என்னசெய்யஅம்மா? இரண்டுநீரும் கலந்தாலும் எமக்கு தெரியாது. அதைத்தான் குடிக்கின்றோம்“ என்றார் ஆதங்கத்துடன்.

சாதாரணமாக மலசலகூடகுழிகள் 3 அடி ஆழம், 8 அடிநீளம், 8 அடிஅகலத்திற்கு வெட்டப்படவேண்டுமென்பதை பொறியியலாளர் திருவெங்கடேஷ்வரன் சதீஸிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டோம். அத்தோடு, அவை கொங்கிறீட்டினால் மூடப்படவேண்டும். ஆனால், இங்கு பலரது குழிகள் தடிகள், பாக்கு மட்டைகள், வெற்றுப் பைகள் போன்றவற்றால் மூடப்பட்டு காணப்பட்டன. அந்த குழிகளை நாம் அருகில் சென்றுபார்த்தபோது அங்கு புழுக்கள் நிறைந்து, ஈக்கள் மொய்த்து, அருகில் நெருங்க முடியாத தோற்றத்தில் காணப்பட்டன. மழைக்காலத்தில் இவை நிரம்பி வழிந்து நேரடியாக சுற்றுச்சூழலுக்கு செல்வது, பாரிய ஆபத்தை ஏற்படுத்தும் செயற்பாடாகும்.

(16ஆம் பக்கம் பார்க்க)

கலாவர்ஷ்னி கனகரட்ணம்...

பொருளாதார அரசியல்



கலாநிதி
எம்.கணேசமூர்த்தி
பொருளியல்துறை,
கொழும்பு பல்கலைக்கழகம்




இலங்கை பொருளாதாரம் :

# நீண்டகால பாதிப்புகளை குறுகிய காலத்தில் தீர்க்க முடியாது

**‘ இறக்குமதிக் கட்டுப்பாட்டின் மூலம் இலங்கையின் வர்த்தக நிலுவைக் குறைநிலையினை குறைக்கலாம் அத்துடன் டொலர் கையிருப்புகளை சேமிக்கலாம் என ஒரு நாடு நம்பலாம். ஆனால் குறித்த நாட்டின் ஏற்றுமதிகளை வாங்கும் ஏனைய நாடுகள் கண்ணுக்குக் கண் என்று பதில் செயல்பாட்டில் இறங்கினால் அடி மிகப்பலமானதாக இருக்கும் ’**

இந்தியன் ஒயில் கம்பனி (IOC) வெள்ளிக்கிழமை நள்ளிரவிலிருந்து இரண்டாவது தடவையாகவும் பெற்றோலியப் பொருள்களின் விலையை அதிகரித்திருக்கிறது. இதன்படி 92 ஒக்டேன் பெற்றோல் விலை 204 ரூபாவாகவும் டீசலின் விலை 139 ரூபாவாகவும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் இந்த இரு விலையதிகரிப்புகளையும் செய்யவில்லை. ஆனால் இது எவ்வளவு காலத்திற்குத் தொடரும் சாத்தியம் உள்ளது என்பதும் தெரியவில்லை.

எவ்வாறாயினும் வெள்ளிக்கிழமை உள்ள நிலவரத்தின்படி கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப்பகுதிகளிலுள்ள பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் எரிபொருள் கையிருப்புகள் இன்மையால் மூடப்பட்டுக் கிடந்தன. எரிபொருள் பற்றாக்குறை ஏற்பட்டமைக்கு இறக்குமதி நிரம்பல் உரிய காலத்தில் சந்தைக்கு வராமை ஒரு காரணம். வாகன உரிமையாளர்களின் பீதிக் கொள்வனவு ((panic buying) ) மற்றொரு காரணமாகும்.

இப்போது ஏற்பட்டிருக்கின்ற இந்த நிலைமைக்கு மூலாதாரக் காரணியாக அமைவது தொடர்ச்சியாக இலங்கை அனுபவித்துவரும் டொலர் பற்றாக்குறையாகும். இந்தப் பற்றாக்குறை நிலைமையினை தீவிரமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பதன் மூலமும் சுற்றுலாத்துறையை ஊக்குவிப்பதன் மூலமும் சமாளித்து விடலாம் என உரிய தரப்பினர் இன்னமும் நம்புவதாகத் தெரிகிறது. அவ்வாறான ஒரு சுய சீராக்கலுக்கான ஏற்பு நிலையில் இலங்கைப் பொருளாதாரம் இல்லை என்பதுதான் கசப்பான உண்மை.

ஏற்கெனவே சர்வதேச இறைமைக் கடன் தரப்படுத்தல் மட்டங்கள் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில் இலங்கையின் கடன் முறிகள் மீதான கேள்வி வீழ்ச்சியடைந்திருக்கிறது. உயர்ந்த வட்டி வீதங்களை வழங்கிய போதிலும் அவற்றின் விலைகள் இரண்டாந்தரச் சந்தைகளிலே வீழ்ச்சியடைந்துள்ளன. எனவே கடன் முறிகளைப்பயன்படுத்தி நிதி திரட்டுவதில் முடக்கம் நிலவுகிறது. சர்வதேச நிதிச் சந்தைகளிலே வணிகக் கடன்களைப் பெறுவதற்கும் தரவிறக்கம் செய்யப்பட்ட இறைமைக் கடன் தரமிடல் தடையாக உள்ளது.

அவ்வாறு வெளிநாட்டு வடிவிலான கடன்களை இப்போது பெற்று நிலைமையைச் சமாளிக்க எத்தனித்தாலும் நீண்ட கால ரீதியில் இக்கடன்சுமை எதிர்காலத்திற்கு கொண்டு செல்லப்படுவதால் இப்பிரச்சினைக்கு இந்நடவடிக்கை ஒரு போதும் ஒரு தீர்வாக அமைய முடியாது. மறுபுறம் நட்பு நாடுகளிடம் இருபக்க கடன் உடன்படிக்கைகளை செய்து நிலைமையை சமாளிக்க முனைந்தாலும் எவ்வளவு காலத்திற்கு அக்கடன்களை தொடர்ச்சியாகப் பெறமுடியும் என்பதுடன் அவற்றையும் மீளச் செலுத்த வேண்டிய எதிர்காலக் கடப்பாடும் அதிகரிக்கும்.

இது இலங்கையின் நிதி நிலைமையை மேலும் தீர்க்கமான விதத்தில் மோசமடையச் செய்யுமேயன்றி நிவாரணங்களை வழங்காது. சிறுவயதில் நாம் படித்த வருமுன் காப்பான் வரும்போது காப்பான் மற்றும் வந்தபின் காப்பான் என்ற மூன்று கதாபாத்திரங்களின் கதையை நாம் மறந்திருக்க முடியாது. ஒரு பிரச்சினை வருமுன்னர் அதற்கான அறிகுறிகளை அறிந்து உரிய புத்திசாதுரியத்துடன் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு அதனைத் தவிர்ப்பது உத்தமம். அப்பிரச்சினை வருகிறபோது சுதாகரித்துக்கொண்டு விவேகபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு அப்பிரச்சினையின் பாதிப்பிலிருந்து பாதுகாப்புத் தேட முனைவது மத்திமம்.

இதன்மூலம் குறைந்த பட்சப் பாதிப்புகளோடு தப்பிப் பிழைக்க முடியும். ஆனால் பிரச்சினை வந்த பிறகும் அதனை இனங்காண மறுத்து அதற்கு களிம்பு பூசி சமாளித்த விடலாம் என நம்பவது குருட்டுத்தனம். இவ்வாறான குருட்டுத்தனமான நம்பிக்கைகளால் அழிந்துபோன நாடுகள் பலவுண்டு. எரிகின்ற அடுப்பில் நீர்நிரப்பிய ஒரு பாத்திரத்தில் விடப்பட்ட ஒரு நண்டு ஆரம்பத்தில் வெது வெதுப்பான நீரில் ஆனந்த நீச்சல் போடுவதைப் போல இப்பிரச்சினை மூலம் இலாபம் சம்பாதிக்க முற்பட்ட பலர் இப்போது சூடேறிய நீரில் வெந்து சாகும் நண்டின் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள். உரிய தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள காலம் தாழ்த்துவதன் காரணமாக இலங்கைப் பொருளாதாரத்தில் இப்பிரச்சனைகள் ஏற்படுத்தியுள்ள நீண்டகாலப் பாதிப்புகளை குறுகிய காலத்தில் தீர்த்துவிட முடியாது

இம்மாத ஆரம்பத்தில் இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்திற்கும் இடையிலான கலந்துரையாடலின்போது இலங்கை விதித்துள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை உடனடியாகத் தளர்த்த வேண்டுமென கடும் அழுத்தம் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. மனித உரிமைக் கரிசனைகள் ஒரு புறமிருக்க, சர்வதேச நியமங்களை மதித்து இலங்கை விதித்துள்ள இறக்குமதிக் கட்டுப்பாடுகளை தளர்த்த வேண்டும் எனக் கேட்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் இதன் பொருளாதாரப் பாதிப்புகள் உடனடியாகவே உலக சந்தையில் தென்படத் தொடங்கியுள்ளன. தங்கம் பெற்றோலியம் உலோகங்கள் என்பவற்றின் விலைகளில் அதிகரிப்பு எற்பட்டிருக்கிறது. அதன் உடனடிப்பாதிப்புகள் ஏற்கெனவே பொருளாதார ரீதியில் அடிவாங்கிக் கொண்டிருக்கிற இலங்கை போன்ற நாடுகளுக்கு கடுமையானதாக இருக்கும். யுக்ரேன் இலங்கையின் ஒரு நட்பு நாடு. கோவிட் நிலைமையின் மத்தியிலும் அங்கிருந்து தான் ஒரு தொகுதி சுற்றுலாப்பயணிகள் இங்கு அழைத்துவரப்பட்டார்கள்.

ஆனால் இப்போது அந்த நாடு ரஷ்யாவின் இராணுவ ஆக்கிரமிப்புக்கு உள்ளாகியுள்ளபோது ரஷ்யாவுக்கு ஆதரவாக இலங்கையின் சமூக ஊடகங்களில் அதிகரித்த பதிவுகள் வருகின்றன. அத்துடன் தென்னிலங்கை காட்சி ஊடகங்கள் மகிழ்ச்சியோடு செய்திப்படுத்தலை இந்த இராணுவ ஆக்கிரமிப்பு தொடர்பாக செய்து வருவதைக் காணமுடிகிறது. இந்தளவுக்குத் தான் இலங்கை மக்கள் சர்வதேச உறவகளுக்கு மதிப்பளிக்கிறார்களா? நாம் மேலே சொன்ன நண்டுகளின் நிலையே நினைவுக்கு வருகிறது.

மேற்குலக இராஜதந்திரிகளின் வார்த்தைப் பிரயோகங்கள் சீனா மற்றும் ரஷ்யா போன்ற நாடுகளின் ராஜதந்திரகளைப்போல கடுமையானதாக இல்லாவிட்டாலும் அவற்றை இலகுவானதாக எடுத்துக்கொள்ளக் கூடாது அவற்றில் சொல்லப்படும் விடயங்களின் உட்பொருளை சரியாக இனங்கண்டு கொள்ள வேண்டும். ஐரோப்பிய ஒன்றியம் இலங்கைக்கு வழங்கியுள்ள GSP+ வரிச்சலுகையை தக்கவைத்துக்கொள்ள வேண்டுமாயின் அந்த இராஜதந்திர வார்த்தைப்பிரயோகங்களை மிகத் தெளிவாகப் புரிந்த செயற்படுவது அவசியமாகும்.

இன்றைய சூழலில் அச்சலுகையை இழப்பது இலங்கைக்கு மரண அடியாக அமையும். இறக்குமதிக் கட்டுப்பாட்டின் மூலம் இலங்கையின் வர்த்தக நிலுவைக் குறைநிலையினை குறைக்கலாம் அத்துடன் டொலர் கையிருப்புகளை சேமிக்கலாம் என ஒரு நாடு நம்பலாம். ஆனால் குறித்த நாட்டின் ஏற்றுமதிகளை வாங்கும் ஏனைய நாடுகள் கண்ணுக்குக் கண் என்று பதில் செயல்பாட்டில் இறங்கினால் அடி மிகப்பலமானதாக இருக்கும். இப்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப்பெற்று பொருளாதாரத்தை காப்பாற்றுவதே மதிநுட்பமிக்க ஒரேயொரு தெரிவாக இருக்க முடியும்.

ஏனெனில் இப்போது இன்னுமொரு இடியாக யுக்ரேன் நாட்டின் மீதான ரஷ்ய ஆக்கிரமிப்பு வந்து விழுந்திருக்கிறது. நாகரிக உலகில் ஒரு ஜனநாயக நாட்டை இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம் கைப்பற்ற முனைவதை ஏற்றுக் கொள்வதற்கில்லை. உடனடியாக நேட்டோ இதில் தலையிட்டு உதவவேண்டும் என யுக்ரேன் கேட்டிருக்கிறது. ஆனால் அவ்வாறான ஒரு தலையீட்டை இராணுவ ரீதியில் நேட்டோ செய்யாது என்று தெரிகிறது. மாறாக கடுமையான பொருளாதாரத் தடைகள் ஊடாக விடயத்தைக் கையாள முனைகிறது.

---



# முல் பிட்டுவ மூலம் மக்களின் இதயங்களை வென்ற பந்துல பத்மகுமார

வாழ்க்கையின் மிகப் பெரும் துயரம் அன்புக்குரியவர்களின் இழப்பாகும். அச்சு ஊடகத்திற்கும் பின்னர் இலத்திரனியல் ஊடகங்களுக்கும் நேர்மறையாகவும் திறமையாகவும் பங்களிப்பை வழங்கிய அன்பான மனிதரின் கடைசி பிரிவு பல காரணங்களுக்காக எமது மனங்களைக் கனக்கச் செய்கிறது. அழகியல், கலை மற்றும் அன்பான எண்ணங்கள், அணுகுமுறைகள் மற்றும் திறமைகளைக் கொண்டிருந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் பந்துல பத்மகுமார எம்மிடம் இருந்து பிரிந்து சென்றமை திடீரென ஏற்பட்ட எதிர்பாராத நிகழ்வாகும். நாம் பொதுவாக மரணத்தைப் பற்றிய புரிதலைக் கொண்டுள்ளோம். வாழ்வின் நிலையற்ற தன்மையை நாம் புரிந்து கொள்கிறோம். ஆனால் நமது கடந்த கால இனிய நினைவுகள் மறக்க முடியாமல் கண்களில் கண்ணீரை வரவழைக்கின்றது.




அன்றும் இன்றும் என்றும் நான் அவரை பந்துல அண்ணா என்றே அழைப்பேன். அவரும் என்னை தம்பி என்றே அழைப்பார். பிரபாத்குமார, குமுது குசும் குமார, பூஜிதசிரி குமார மற்றும் இரண்டு சகோதரிகளும் அவருக்குள்ளார்கள். எனக்குத் தெரிந்தளவில் அவரது தந்தை ஒரு அதிபராவார். ஊர் மாத்தறை கும்புறுபிட்டி என அறிந்துள்ளேன்.

குமுது குசும்குமார மற்றும் ஏ. டி. ரஞ்சித் குமார ஆகியோரால் ஆரம்பத்தில் வெளியிட்ட புகைப்பட சினிமா சஞ்சிகை பின்னர் பந்துல பத்மகுமாரவினால் வெளியிடப்பட்டது. கீதா சினிமா சஞ்சிகையும் அவரது தயாரிப்பாகும். கித்சிரி நிமல் சாந்த உள்ளிட்ட அனேகமானோர் பந்துலவின் ஊடாகவே களத்திற்குள் பிரவேசித்தார்கள்.

அவரது கை எழுத்து மிகவும் அழகானதும், கலைத்தன்மை கொண்டதுமாகும். அவர் எனக்கு முதலில் அறிமுகமானது 70ம் ஆண்டு காலப்பகுதியின் கடைசியில் பாடசாலை காலத்திலாகும். அது இளைஞர்கள் மத்தியில் பிரபலமடைந்த பத்திரியையாகும். சந்திரா வீரசிங்க, உபாலி வீரவர்தன, காமினி மெண்டிஸ், நந்தனி கால்லகே, தர்மரத்ன பெரேரா, குமார சிரிவர்தன, பத்மி பிங்தெனிய, உபாலி பண்டார வீரசேகர மற்றும் நானும் உட்பட்ட குழுவினர் அவரது நிழலில் அவருக்கு கைகொடுத்து வெகுஜன ஊடக உலகில் களமிறங்கினோம். உபுல் சாந்த சன்னஸ்கல, பிரதீப் குமார பாலசூரிய, மைக்கல் ஏன்ஜிலோ, பெர்னாண்டோ, ஜயந்த களுபஹன போன்றோர் களத்திற்கு வந்ததும் பந்துலவினால் ஈர்க்கப்பட்டாகும். கெமிலஸ் பெரேரா, ஆதர் யூ. அமரசேன போன்றோர் பந்துலவிற்கு ஆசீர்வாதம் வழங்கினார்கள். ரெஜின பத்திரிகையை பெண்களுக்காக புதிய திருப்பங்களுடன் ஆரம்பித்தார். அரலிய மற்றொரு அற்புதமான பத்திரிகையாகும்.

பாடல், இசை பற்றியதாக புதிய எதிர்பார்ப்புக்களுடன் அவர் ஹாபுரா என்ற பத்திரிகையாக வெளியிட்டார். இங்கு அறிவொளி கலாசாரம் மற்றும் பிரபல கலாசாரமும் கலந்தது. ரீடர்ஸ் டைஜஸ்ட் வகையிலான சஞ்சிகை முத்துஹர என்ற பெயரில் வெளியிடப்பட்டதோடு, நாட்டில் இன்றும் அதிக வரவேற்பைக் கொண்டுள்ள இனப்பெருக்க சுகாதார துறைக்கு அறிவை வழங்கும் பத்திபத்தினி சஞ்சிகையும், செனெல் புகைப்பட கலைக்கும், ஆடை அலங்காரத்திற்கும் பின்னைய காலங்களில் தயாரிக்கப்பட்ட அம்மீ சஞ்சிகையைப் பற்றியும் ஞாபகப்படுத்த வேண்டும். பம்பலப்பிட்டியைப் போன்று டீ. ஆர். விஜேவர்தன மாவத்தையிலும், புறக்கோட்டையில் புத்தகக் கடைகளில் நிறைந்திருக்கும் வெளிநாட்டு சஞ்சிகைகள், புத்தகங்கள், பத்திரிகைகளை விலைக்கு வாங்கி அதிக சிரமங்களுடன் தனது பத்திரிகை, சஞ்சிகைகளில் புதிய அத்தியாயத்தை உருவாக்கும் அவரது திறமை, ஆற்றல் புதுமையானதாகும். எமக்கும் அவர் வழிகாட்டினார்.



சமன்மலீ பத்மகுமார அவரது அன்புக்குரிய மனைவியாகும். ஹிரு மற்றும் முத்து என இரண்டு பிள்ளைகள் அவருக்கு உள்ளனர். முத்து ஆங்கில மொழியில் கவிதை எழுதுபவராகும். சமன்மலீ சிறுவர் கவிதைகள், பாடல்களை எழுதுபவராகும். தாகோர் சங்கத்தின் செயலாளருமாகும்.

சினிமா, இசை, நாடகம், இலக்கிய விமர்சனங்களை அதிகளவில் எழுதியுள்ள பந்துல, சினிமா திரைக்கதை வசனங்களை எழுதிய திரைப்பட இயக்குனராகவும் தனது திறமைகளை வெளிக்காட்டிய சிறந்த கலைஞருமாகும். அவர் ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியராகவும் செயற்பட்டார்.

அவரால் தயாரித்து வழங்கப்பட்டு பிரதான இலத்திரனியல் ஊடகத்தினால் ஒளிபரப்பப்பட்ட முல் பிட்டுவ மற்றும் லோக சிதியம் எமது காலத்தில் புதிய அத்தியாயத்தை உருவாக்கிய இரு சுவாரஸ்யமிக்க நிகழ்ச்சிகளாகும். உலக விவகாரங்களை காலை வேளையில் அவர் வீட்டிற்கே கொண்டு வந்தார்.

பல கவிதைகளை மொழிபெயர்ந்த பந்துல, அமரதேவவைப் பற்றியும், லெஸ்டர் தொடர்பிலும் மிகவும் பக்தியுடன் புத்தகங்களை எழுதியுள்ளார். விக்டர் ரத்நாயக்கா, பிரேமசிரிய கேமதாச ஆகியோரையும் சிறந்த நண்பர்களாக நேசித்தார். அண்மையில் ப்ளேபோய் என்ற பெயரில் சிறு கதை தொகுதி ஒன்றையும் வெளியிட்ட பந்துல, நான் உட்பட அனேகமானோரின் வாழ்க்கையின் தடைகளைத் தாண்டுவதற்கு பெருமையின்றி கைகொடுத்து உதவினார்.

மிகவும் சுத்தமாக அழகாக ஆடை அணிவதற்கு ஆசைப்படும் அவர், அடிக்கடி புத்தகங்களை வாசிப்பது எனக்கு நினைவில் உள்ளது. குமரி பத்திரிகையின் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை ஆராய்ந்து பார்ப்பதற்கு அவர் என்னை இயக்கியது எனக்கு நினைவில் உள்ளது. பிறரிடமிருந்து வாங்கிக் கொள்ளும் துவிச்சக்கர வண்டியில் காலி வீதி, கண்டி வீதி, நீர் கொழும்பு வீதிகளில் பத்திரிகை கடைகளுக்கும், புத்தகக் கடைகளுக்கும் என்னை அனுப்பியது மிகுந்த விடாமுயற்சியையும், தைரியத்தையும் என்னுள் கட்டியெழுப்பியது. எனது பல்கலைக் கழக வாழ்வில் உதவித் தொகை கிடைக்காத எனக்கு குமரி பத்திரிகையின் உதவி ஆசிரியராக வழங்கப்பட்ட சம்பளம் பெரிதும் பயனளித்தது.

விஜய குமாரதுங்கவின் தூர நாட்டிலிருந்து வந்ததைப் போன்று பத்திரிகை தொடர் கதையினை எழுத வைத்தவர் அவராகும். நான் அல்லது வேறு யாரேனும் ஒருவர் அனேகமாக அந்த தொடர்கதையின் பிரதிகளை எடுத்து வருவதற்காக பஸ்ஸில் விஜயவின் வீட்டுக்குச் சென்ற சந்தர்ப்பங்கள் அதிகமாகும். பகல் உணவு வேளைக்கு சமன்மலீ சுவையாகவும், தரமாகவும் சமைத்து அனுப்பும் உணவுப் பொதியிலிருந்து எமக்கும் சுவையான கறிகளைப் பரிமாறிக் கொள்வது என்றுமே மறக்க முடியாத நினைவுகளாகும். பிரச்சினைகள், குழப்பங்களை வெற்றி கொண்டு முன் வைத்த காலை பின்வைக்காமல் முன்னேறிச் சென்றார். அவர் வாழ்க்கையை மகிழ்ச்சியாக அனுபவித்தார்.

பேராசிரியர் பிரனீத் அபேசுந்தர
தமிழில் எம். எஸ். முஸப்பிர்
(புத்தளம் விசேட நிருபர்)

---

# பாரம்பரியம் நிகழ்ச்சியில் முது பெரும்பாடகி சுஜாதா அத்தநாயக்க

## பாரம்பரியம் நிகழ்ச்சி தொடரில் ஓர் திருப்பு முனை





ஏ. எல். எம். சத்தார்

இது வரை முஸ்லிம் சேவைக்கு வளம் சேர்த்தோர் வரிசையில் முஸ்லிம் கலைஞர்களை மட்டுமே செவ்வி கண்டுவந்த "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், முஸ்லிம் அல்லாதோர் முஸ்லிம் நிகழ்ச்சிகளுக்கு வழங்கிய பங்களிப்புகளையும் நேயர்களோடு பகிர்ந்து கொள்ளும் நோக்கில் எதிர்வரும் மார்ச் 1 ஆம் திகதி (01.03.2022) செவ்வாய் இரவு 8.15 மணியளவில் இலங்கை ஒலிபரப்புகூட்டுத்தாபன முஸ்லிம் சேவையில், ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில், சிங்கள திரை உலகின் பிரபல பின்னணிப் பாடகியும் முஸ்லிம் சேவைக்காக பல இஸ்லாமிய கீதங்கள் பாடியவருமான, திருமதி. சுஜாத்தா அத்தநாயக்க சிறப்பதிதியாக கலந்து, தன் முஸ்லிம் சேவையுடனான அனுபவங்களை பகிர்ந்து கொள்கிறார்.

ஜாத்தா அத்தநாயக்க, இலங்கை வானொலியில், தமிழ், சிங்கள மொழிகளில் அதிகமான பாடல்கள் பாடிய முதல் தர பாடகராவார். இவர் இலங்கையின் முதலாவது பெண் இசையமைபாளர் என்ற பெருமைக்குரியவர். தொடராக 1965, 1966 ஆம் ஆண்டுகளுக்கான "சரசவி" விருதும், 1967,1968 ஆம் ஆண்டுக்களுக்கான "சுவர்ண சங்க" விருதும் இவருக்கு கிடைத்தது.

சிங்களம், தமிழ் மொழிகளில் மட்டுமல்லாது அதிகளவான மொழிகளில் பாடிய பெருமைக்கும் உரியவர். எம்.எஸ்.எம். ஜின்னா செவ்வி காணும் இந்நிகழ்ச்சியினை முஸ்லிம் சேவைப்பணிப்பாளர், எம்.ஜே.பாத்திமா ரினூஸியா தயாரித்தளிக்கிறார்.

# பொற்காலத்தை நோக்கி தி.மு.க தட்டுத் தடுமாறும் அ.தி.மு.க

## தருணத்துக்காகக் காத்திருக்கும் சசிகலா

அருள் சத்தியநாதன்

"என் கண்களுக்கு எட்டிய தூரம் வரை பார்க்கிறேன். என் கண்களுக்கு எந்த எதிரியும் தென்படவில்லை" என்று பெருங் கரகோஷத்தின் மத்தியில் பெருமிதத்துடன் அகங்காரத்தையும் கூட்டியே சொன்னார் மறைந்த முதல்வர் ஜெயலலிதா. அவருக்கு அடுத்தடுத்து கிடைத்த வெற்றிகள் அவரை இப்படிப் பேச வைத்திருக்க வேண்டும். தன்னிகரற்ற தலைவராக அவர் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார் என்பதும் உண்மையே. இத்தனைக்கும் நீதிமன்றம், வழக்கும், தண்டனைகள் என்றிருந்தவருக்கு, அவர் புரிந்த ஊழல் மோசடிகளை கணக்கில் எடுக்காது மக்கள் தமது ஆதரவை அள்ளி வழங்கினார்கள் என்பது தமிழக அரசியல் இதற்கு முன்னர் காணாதது. இக் கண்மூடித்தனமான பக்தி எப்படி உருவானது என்பது ஆய்வுக்குரியது. தமிழர் உளவியலுடன் தொடர்பு பட்டது. ஏனெனில் எழுபதுகளில் ஊழல் செய்தார் என்பதற்காக பதவி நீக்கப்பட்ட கலைஞர் கருணாநிதி மீண்டும் ஆட்சிபீடமேற 13 வருடங்கள் காத்திருக்க வேண்டியிருந்தது. ஜெயலலிதாவின் ஊழல், மோசடி, அதிகார துன்பிரயோகம் என்பனவற்றுடன் கலைஞர் புரிந்ததாக சொல்லப்பட்ட ஊழல்களை ஒப்பிட்டால் அது மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசமாகவே இருக்கும்.

அ.தி.மு.க.மீதான எம்.ஜி.ஆர் காலத்தில் காணப்பட்ட மக்கள் செல்வாக்கை ஜெயலலிதா தன் காலத்தில் பன்மடங்கு உயர்த்தி உச்சத்தில் வைத்து விட்டே சென்றார். அவர் மறைந்த பின்னர் அக்கட்சி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகி விட்டிருக்கிறது. கடந்த சட்டசபைத் தேர்தலில் அ.தி.மு.க 77 இடங்களைக் கைப்பற்றி ஓரளவுக்கேனும் மானத்தை காத்துக் கொண்டது. எனினும் ஸ்டாலின் ஆட்சி பீடமேறி ஒரு வருடத்துக்கும் குறைவான காலப்பகுதியில் அ.தி.மு.க. மேலும் செல்வாக்கு இழந்து மிகுந்த பின்னடைவை சந்தித்து இருக்கிறது என்பதை நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் எடுத்துக் காட்டியுள்ளன.

'என் கண்களுக்கு எட்டிய தூரம் வரை அங்குமிங்குமாகப் பார்க்கிறேன், எந்தவொரு எதிரியும் கண்களுக்கு தென்படுவதாக இல்லை' என ஸ்டாலின் இறுமாந்து பேசுவதற்கான சூழல் இன்று தி.மு.கவுக்கு ஏற்பட்டுள்ளது. எனினும் வெற்றி பெற்ற பின்னர் இறுமாப்பு கொண்ட எந்த வார்த்தையையும் ஸ்டாலின் விடவில்லை என்பது கவனிக்கப்பட வேண்டும். அன்றைக்கு ஜெயலலிதா இறுமாப்புடன் குரல் கொடுத்தார். இன்று எடப்பாடியார் வடிவேலு பாணியில், வெற்றி தோல்வியெல்லாம் சகஜமப்பா என்பது போல சமாதனம் கூற வேண்டிய நிலைக்கு அ.தி.மு.க வந்திருக்கிறது.

உள்ளூராட்சித் தேர்தலில் அ.தி.மு.க அவமானகரமானத் தோல்வியை சந்தித்திருக்கிறது. தமிழகத்தின் எந்தவொரு மாநகராட்சியையும் அதனால் கைப்பற்ற முடியவில்லை. 138 நகராட்சிகளில் அ.தி.மு.க கைப்பற்றியவை மூன்று மாத்திரமே. ஊழல்ல மோசடி குற்றவாளியானாலும் ஜெயலிலதாவே எங்கள் தலைவி என்பதை ஆணித்தரமாகச் சொன்ன தமிழ் வாக்காளர்கள், இன்று, எடப்பாடி பழனிச்சாமியும் ஓ. பன்னீர் செல்வமும் எமக்குத் தலைவர்களே அல்ல என்பதைத் தான் தமது வாக்குகள் மூலம் அ.தி.மு.க தலைமைக்கு அழுத்தம் திருத்தமாகச் சொல்லி இருக்கிறார்கள்.

அ.தி.மு.க.வின் இப் பரிதாப நிலையைப் பார்த்து கவலை வெளியிட்டுள்ள தோழி சசிகலா, நாம் ஒன்றிணைய வேண்டியதன் அவசியத்தை தேர்தல் முடிவுகள் அறிவித்துள்ளன என்று எடப்பாடி பன்னீர் இணைத் தலைமைக்கு அழைப்பு விடுத்துள்ளார். டி.டி.வி. தினகரன் நடத்தும் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் ஒரு புறம்; சசிகலா ஆதரவாளர்கள் மறுபுறம்; அ.தி.மு.க இன்னொரு புறம் என எம்.ஜி.ஆரின் கட்சி மூன்றாகப் பிரிந்து கிடக்கிறது. மற்றொரு அ.தி.மு.க அரசை தமிழகத்தில் அமைக்க வேண்டுமானால் இம் மூன்று பிரிவுகளையும் ஒன்றிணைந்து ஒரே அ.தி.மு.க வாக தேர்தல்களில் போட்டியிட வேண்டும் என்பது சசிகலாவின் தரப்பு முன் வைக்கும் வாதம் அல்லது திட்டம். இதுசரியானதாகவும் படுகிறது. ஆனால் பூனைக்கு மணி கட்டுவது யார் என்பது தான் கேள்வி. மூன்று பிரிவுகளும் ஒன்றிணைந்த பின்னர் கட்சிக்குத் தலைவர் யார் என்பதே முக்கிய சிக்கல். முதல்வர் கதிரைக்கு ஆசைப்படும் சசிகலா, கட்சித் தலைவர், முதல்வர் என இரு பதவிகளையும் வகிக்கத் தொடங்கிய பின்னர் தமது கதி என்னாகும் என்பது எடப்பாடி மற்றும் பன்னீரின் கவலை.

எனவே அ.தி.மு.க தற்போது ஒரு முச்சந்தியில் நின்று கொண்டிருக்கிறது. பயணிக்க இரு பாதைகள் உள்ளன. ஒன்று தனி வழி. இவ்வளவு காலமாக இப்பாதையில் பயணித்தும் அதற்கு மக்கள் அங்கீகாரம் அளிக்கத் தவறிவிட்டார்கள். இனி இருப்பது சசிகலாவையும் இணைத்துக் கொண்டு



தனியொரு அ.தி.மு.கவாக மக்களிடம் சென்று ஆக்கபூர்வமான அரசியல் செல்வது. இல்லையேல் அ.தி.மு.கவுக்கு மீட்சி இருப்பதாகத் தெரியவில்லை. பா.ஜ.க உடன் கூட்டு வைத்துக் கொள்வதால்தான் மக்கள் கட்சியை நிராகரிக்கிறார்கள் என்று அ.தி.மு.க தலைமை கருதி வந்தது. எனவே இம்முறை அ.தி.மு.க பா.ஜ.கவுடன் இணையாமல் தனியாகத்தான் போட்டியிட்டது. எனினும் இம்முறையும் மக்கள் அ.தி.மு.கவைக் கண்டுகொள்ளவில்லை. எனவே பிரச்சினை, தலைமையில் தான் இருக்கிறது என்பது தெளிவாகியுள்ளதால், சசிகலாவுக்கு வாய்ப்பான காலம் வந்திருப்பதாகவே யூகிக்க முடிகிறது. எடப்பாடி பழனிச்சாமியும் ஓ. பன்னீர்செல்வமும் இனிமேலும் தமது பலவீனமான, மக்களிடம் செல்லுபடியாகாதத் தலைமைத்துவத்தை மூடி மறைத்துக் கொண்டிருக்க முடியாது. பைக்குள் பூனைக்குட்டி இருந்தால் அது வெளிவந்துதானே ஆக வேண்டும்!

அ.தி.மு.க வின் பலவீனமான நிலையை வெளிச்சம் போட்டுக் காட்டிய இத்தேர்தலை கொஞ்சம் பார்ப்போம்.

தி.மு.க. ஏற்கனவே நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்களில் பெரு வெற்றி பெற்றிருந்த நிலையில் இத் தேர்தலிலும் வெற்றி பெறும் என்பது எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான். எப்போதுமே சட்ட சபைத் தேர்தலோடு பாராளுமன்றத் தேர்தலை ஒப்பிட முடியாது. மக்களின் தெரிவுகள் தேர்தலுக்கு தேர்தல் மாறக்கூடும்.

எம்.ஜி.ஆர். முதல்வராக இருந்தபோது இந்தியப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெற்றது. கலைஞர் கருணாநிதி இந்திரா காந்தியுடன் கூட்டணி அமைத்து போட்டியிட்டார். தேர்தலில் தி.மு.க. காங்கிரஸ் கூட்டணி அதிக இடங்களைக் கைப்பற்றி வெற்றி பெற்றது. எம்.ஜி.ஆரின் அ.தி.மு.க. குறைவான இடங்களையே பெற்றது. டில்லி சென்ற கலைஞர் கருணாநிதி இந்திராகாந்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். நமது கூட்டணி தமிழகத்தில் ஆட்சியைப் பிடிக்க வேண்டுமானால் அதற்கான ஒரே வழி, எம்.ஜி.ஆர். பின்னடைவை சந்தித்திருக்கும் இத் தருணத்தை பயன்படுத்திக் கொள்வதிலேயே தங்கியுள்ளது. எனவே தமிழக சட்ட சபையைக் கலைத்துவிடுங்கள் என்று பரிந்துரை செய்தார். அதை பிரதமர் இந்திரா ஏற்றுக் கொண்டு சட்டசபையைக் கலைத்தார்.

1980 ஜனவரி 6ம் திகதி நடைபெற்ற 542 தொகுதிகளுக்கான பாராளுமன்றத் தேர்தலில் இந்திரா காந்தி 351 இடங்களைக் கைப்பற்றினார். கலைக்கப்பட்ட தமிழக சட்ட மன்றத் தேர்தல் பெப்ரவரி 18ம் திகதி நடைபெற்றது. காங்கிரஸ் 110 ஆசனங்கள் தி.மு.க 110 ஆசனங்கள் என தொகுதிகளைப் பிரித்துக் கொண்டு தேர்தலில் நின்றன. எம்.ஜி.ஆரின் கதை முடிந்தது என கருணாநிதி நினைத்தார். வாக்களிப்பு முடிந்து வாக்குகள் எண்ணப்பட்டு ஜூன் 1ஆம் திகதி முடிவுகள் வெளியாகின. இறுதி முடிவு கருணாநிதிக்கு அதிர்ச்சி அளிப்பதாக இருந்தது. ஏனெனில் 234 சட்டசபைத் தொகுதிகளில் எம்.ஜி.ஆர். 128 இடங்களைக் கைப்பற்றியிருந்தார். தி.மு.க கைப்பற்றிய தொகுதிகள் வெறும் 38 மட்டுமே. காங்கிரஸ் 30 தொகுதிகளைக் கைப்பற்றியது. பாராளுமன்றத் தேர்தலில் ஒரு மாதிரியும் சட்டசபைத் தேர்தலில் இன்னொரு மாதிரியும் வாக்காளர்கள் முடிவெடுக்கிறார்கள் என்பதற்கு இத் தேர்தல் முடிவு உதாணமாக அமைந்தது.

ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. பதவியேற்று பத்து மாதங்கள கடந்த நிலையில் நடைபெற்றிருக்கும் இத் தேர்தல், பத்து மாதங்களுக்கு முன் தமிழகத்தில் தி.மு.க.வுக்குக் காணப்பட்ட செல்வாக்கு பல மடங்காக இப்போது வளர்ந்திருப்பதை புலப்படுத்துகிறது. அவர் பதவியேற்றது முதல் கொரோனா பெருந்தொற்றுடன் போராட வேண்டியதாயிற்று. அத்தொற்று சமூகத்தில் ஏற்படுத்தும் பொருளாதார இழப்புகளுக்கான பொறுப்பையும் அரசே ஏற்க வேண்டியிருக்கும் என்பதும் அது அரசின் மீதான மக்கள் அபிமானத்தில் வீழ்ச்சியையும் வெறுப்பையும் ஏற்படுத்தும் என்பதும் இயல்பானதே. இவ்வகையான இடர்களையும் தாண்டி கிராமப்புற உள்ளூராட்சித் தேர்தல்களிலும் தற்போது பெருநகர, நகர சபைத் தேர்தல்களிலும் தி.மு.க. அபார வெற்றி பெற்றிருப்பது, ஸ்டாலின் தி.மு.க.வின் பொற்காலத்தை மீண்டும் உருவாக்கி இருக்கிறார் என்பதையே காட்டுகிறது.

கலைஞர் கருணாநிதிக்கென பல்லாயிரம் அபிமானிகளும், லட்சக் கணக்கில் தொண்டர்களும் இருந்த போதும், அம்மா விசிறிகள் இலட்சக் கணக்கில் ஆர்ப்பரித்து வந்துள்ள போதிலும் அனைத்து வாக்காளர்களின் அடி மனதிலும் எமக்கு வித்தியாசமான, ஊழல் மோசடியற்ற, செயல்திறன் கொண்ட ஒரு அரசும், மக்களின் தேவைகளை அறிந்து விரைவில் நிறைவேற்றும் தலைவரும் எப்போது வந்து வாய்ப்பார் என்ற எதிர்பார்ப்பு இருந்திருக்கிறது என்பதையே ஸ்டாலினுக்கு அடுத்தடுத்து கிடைத்து வரும் வெற்றிகள் புலப்படுத்துவதாகக் கொள்ள முடியும்.

தேர்தல் நடைபெற்ற மொத்தத் தமிழக மாநகராட்சி (முனிசிபல்)களின் எண்ணிக்கை 21. வார்டுகள் தொகை 1373. இவற்றில் 1090 வார்டுகளைக் கைப்பற்றி 21 மாநகராட்சிகளையும் தன் வசப்படுத்தியுள்ளது தி.மு.க.

நகராட்சிகளின் மொத்த எண்ணிக்கை 138. இவற்றில் 132 நகராட்சிகளை தி.மு.க. கைப்பற்றியுள்ளது. அ.தி.மு.க மூன்றையும் ஏனையவை மூன்றையும் கைப்பற்றியுள்ளன. 3842 வார்டுகளில் தி.மு.க. கைப்பற்றியவை 2658.

பேரூராட்சிகளின் மொத்த எண்ணிக்கை 489. அவற்றில் 402 சபைகளை தி.மு.க. கைப்பற்றியுள்ளது. அ.தி.மு.க. வசம் சென்றவை 18. ஏனையவை 34.

பொதுவாகவே சென்னை மாநகராட்சி தி.மு.க. வசம் செல்வதே வழக்கம். இம்முறை 183 வார்டுகளை தி.மு.க. கைப்பற்றியுள்ளது. அ.தி.மு.க கைப்பற்றிய வார்டுகள் வெறும் 15மட்டுமே. மதுரையை எடுத்துக் கொண்டால் தி.மு.க. 57இடங்களையும் அ.தி.மு.க. 12 இடங்களையும் கைப்பற்றியுள்ளன. திருச்சியின் 65 ஆசனங்களில் 49 வார்டுகள் தி.மு.க வசம் சென்றுள்ளன. அசைக்கமுடியாத கோயம்புத்தூர் மாநகரசபையும் தி.மு.க.வசம் சென்று விட்டது இத் தேர்தலில் முக்கியமாகக் கவனிக்க வேண்டிய விஷயம் பாஜ.கவின் வளர்ச்சி. தனியாகப் போட்டியிட்டு இத் தேர்தலில் 308 வார்டுகளை அது கைப் பற்றியுள்ளது.

தி.மு.க. இத்தகைய பிரமாண்ட வெற்றியை மிக நீண்ட நாட்களின் பின்னர் பெற்றுள்ளது. காரணம் தலைமை. புதுத் தலைமை. சொன்னதைச் செய்வோம்; செய்ததையே சொல்வோம், சொல்லாததையும் செய்வோம் என்ற ஸ்டாலினின் மந்திரம் மக்களிடம் வேலை செய்துள்ளது. இத் தேர்தலில் கலைஞரினால் சாதிக்க முடியாததையும் ஸ்டாலின் சாதித்திருக்கிறார். அதுதான் கோயம்புத்தூர் மாவட்டத்தில் தி.மு.க. பெற்றிருக்கும் வெற்றி. இங்கு கொங்கு வேளாளர் வகுப்பினர் வசிப்பதால் கொங்கு மண்டலம் என அழைக்கப்படுகிறது. எழுபதுகளில் எம்.ஜி.ஆர்., அ.தி.மு.க.வை. ஆரம்பித்த காலம் முதல் கொங்கு மண்டலம் அ.தி.மு.க. வசமே இருந்து வந்தது. அது ஜெயலலிதா காலத்திலும் தொடர்ந்தது.

2010ம் ஆண்டு கலைஞர் கருணாநிதி செம்மொழி மாநாட்டை மிகப் பிரமாண்டமாக கோவையில் நடத்தியதோடு பல வளர்ச்சித் திட்டங்களையும் அறிவித்தார். எனினும் கொங்கு மண்டலத்தில் இருந்து அ.தி.மு.க.வை அசைக்க முடியவில்லை. கோயம்புத்தூர், கரூர், திருப்பூர், ஈரோடு, சேலம் என்பன கொங்கு மண்டலத்தின் கீழ் வருகின்றன.

கடந்த தமிழக சட்டமன்றத் தேர்தலில் அ.தி.மு.க. கூட்டணி வென்ற 77 தொகுதிகளில் 44 தொகுதிகள் கொங்கு மண்டலம் தந்தவை. ஒரு வருடத்துக்கு முன்னர் காணப்பட்ட இந்நிலைமை இப்போது தலைகீழாகியுள்ளது. இத் தேர்தலில் அ.தி.மு.க. வின் கொங்கு கோட்டையை தி.மு.க. தகர்த்திருக்கிறது. முதல் தடவையாக கொங்கு மண்டல உள்ளூராட்சி தி.மு.க.விடம வந்திருப்பது அ.தி.மு.க.வுக்கு நிச்சயம் அதிர்ச்சியைத் தந்திருக்கும்.


மேலும் இம் மண்டலத்தைச் சேர்ந்த எடப்பாடியிலும் தி.மு.க. வெற்றி பெற்றுள்ளது. ஓ.பன்னீர் செல்வத்தின் போடி சட்ட மன்றத் தொகுதிக்கு உரிய உள்ளாட்சி அதிகாரங்களும் தி.மு.க. வசமே சென்றுள்ளன. இதனால் இவ்விரு தலைவர்களும் கலக்கம் அடைந்திருக்கின்றனர். மேலும் இத் தேர்தல் பரபரப்பு ஓய்ந்த பின்னர் எடப்பாடியார் மற்றும் பன்னீர் செல்வத்தின் இரட்டைத் தலைமைக்கு எதிரான குரல்கள் அ.தி.மு.க.வுக்குள் வலுக்கலாம்.

இது இப்படி இருக்க, அடுக்கடுக்கான இவ்வெற்றிகள் ஸ்டாலினுக்கு மலர்ப்படுக்கை என்பதை விட சுமை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் வெற்றி மமதையில் கட்சிக்காரர்களும் அதிகாரத்தில் இருப்பவர்களும் ஆட்டம் போடத் தொடங்குவார்கள் என்றால் கிடைத்த வெற்றிகள் வந்த வழியே போய் விடவும் செய்யும். வெற்றிகளை தக்க வைப்பது மிகக் கடுமையான பணி. ஆட்சியை இதே கட்டுக் கோப்புடன் நடத்தினால் மட்டுமே ஸ்டாலின் பக்கம் மக்கள் நிற்பர்கள்.



சென்னை 45 ஆவது புத்தகத் திருவிழாவில் அகநீ வெளியிடு 310, 311 அரங்கில் மனம்விட்டுப் பேசலாம் வாங்க என்ற நூலை மு.முருகேஷ் வெளியிட இலக்கிய புரவலர் ஹாசிம் உமர் நேற்று பெற்றுக் கொண்டார். உடன் கவிஞர் பா.தென்றல், கவிஞர் சொர்ணபாரதி அகியோர்.



# உண்மை வாழ்வு வாழ்வோமடி!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்

சிந்தைதனில் நானிருப்பதாய்
தெற்றத் தெளிவாகக்
கூறினாயடி பெண்ணே
முற்றும் முழுதும் இழந்து
முல்லைக் கொடி உன்னை
இறுகப் பற்றிடவே
விருட்சமாய் வந்தேனடி
கோலமாய் வாழ்வமைத்து
குதர்க்கமில்லா நிலைசமைத்து
பாலமாய் பத்திரமாய்
பாவை உன்னை நான்
பார்ப்பேனடி!

பிணக்கு வேண்டாம்
பிடிவாதமும் வேண்டாம்
உனக்கு நான்
எனக்கு நீ
உண்மை வாழ்வுதனை
உலகிலே வாழ்வோமடி!

# தனிமையின் வலிகள்

பொத்துவில் அஜ்மல்கான்

மறக்கவும் இழக்கவும்
முடியாத நினைவுகளைத்
தந்தவள் அவள்

கனவுகளையும் இனிமைகளையும்
களவு செய்து
போன பாசக்காரியும்
அவள்

வலிகளை விழிகளுக்குல்
உட்புகுத்தி வழிகள்
எதுவும் இல்லாது
செய்து போனவள்
அவள்

இதயம் துடிக்க
மறந்தாலும் என்னை
அழைக்க மறக்காமல்
இருந்து போனவள்
அவள்

இன்று மறந்தும்
இழந்தும் இருக்கின்றாள்
ஆனந்தமாய்

நான் கல்லறையில்
பூத்த காதலன்
என்பதால் கல்லறையோடு
மாய்ந்து போய்
உள்ளேன் இன்றுவரை

புரிந்து கொள்ளாதளவு
காதலை தந்தவள்
பிரிந்து போனதன்
நோக்கம்தான் என்னவோ
எனப் புரியவும்
அறியவும் முடியவில்லை

இருந்தும் மகிழ்ந்து
கொள்! நான்
உன்னை நினைத்துக்
கொண்டு வாழ்ந்து
கொண்டு இருக்கிறேன்
கல்லறை காதலனாய்
என்றும்



# விழிகள்

என். பாரத்,
மானிப்பாய்

விழிகளே
விழித்திடுங்கள்
கண்ணிமைக்கும்
நேரத்தில்
அவள்
விழிகளை
களவாடிவிடுவாள்
இன்றாவது
அவளது விழிகளை
சிறை பிடிக்க வேண்டும்
விழிகளே
விழித்திருங்கள்

# ஆறுதல் வேண்டுகிறேன்



ஷப்ரா இல்முத்தீன்
அட்டாளைச்சேனை

வேண்டாத கவலைகளும்
விலகிச் செல்லும் உறவுகளும்
வழி மாறும் நினைவுகளும்
நினைவிழக்கும் சந்தோஷங்களும்
உனக்கு மட்டுமல்ல எனக்கும் தான்...

தூக்கமிழந்த இரவுகளை
யாரிடமும் விவரிக்க முடியாத் துன்–
பத்தை
நீ என்னிடம் ஒன்றும்
விளக்கத் தேவையேயில்லை
.
ஏனெனில் அதனை விட
இரண்டு மடங்கு அதைப்பற்றி
உணர்ந்தவள் நான்..

இதுவே கடைசியும் முதலும்
இனிமேல் வாழ்வில்
ஏமாறவே மாட்டேனென
கொஞ்சம் சத்தமாய் கூறிவிட்டு
மீண்டும் அதே வலையில் விழுந்தது
நீ மட்டுமல்ல நானும்தான்
தூண்டிலில் மாட்டிக்கொண்ட மீனாய்

ஆசைப்பட்டதெல்லாம்
ஆசைப்பட்ட போது கிடைக்காத
ஆற்றாமையில்

இனிமேல் கிடைக்காத ஒன்றுக்கு
ஆசைப் படவே கூடாதென
அதிகமாய் சப்தமிட்டது
உன் மனது மட்டுமல்ல
என் மனதும் தான்...

பிடித்தது எதுவும் கிடைக்கவில்லை
அதனால் கிடைத்ததை
பொறுத்துக் கொள்கிறேன் என
எடுத்த முயற்சியில்
தோற்றுப் போனது
நீ மட்டுமல்ல நானும் தான்

உன்னை பிடிக்கவில்லை என்று
என்னிடம் நீ கூறிய
வார்த்தைகளுக்காய்
முகம் புதைத்து அழுதது நீ மட்டுமல்ல
சரி போனால் போவென்று விட்டு
தலையணைக்குள் நானும்தான்
தஞ்சம் புகுந்தேன்

இங்கே நான் எடுக்கும் முடிவுகளும்
நீ எடுக்கும் முடிவுகளும்
வெறும் மனதோடு மட்டும்
நின்று கொள்வதனால் தான்

நீயும் நானும்
இந்த எழுத்துக்களுக்குள் ஆறுதல்
தேட வேண்டி இருக்கின்றது
கொஞ்சம் அதிகமாக...



# ஆனந்தமயி

ரதிதேவி, மானிப்பாய்

இரவின் அருவம்
ஈடிணையில்லாப் பருவம்
கருவின் கர்வம்
கதைசொல்லும் நேரம்
முதலின் அமைதி
முடிவின் பயம்
முயற்சித் தோல்வி
முழுநிலவின் மகிழ்ச்சி
அவள் அவள் அவள்
அன்பின் அதிர்ச்சி
அஃறினையுள்ளும் பாய்ந்த
ஆதி உயிர்
அளவற்ற கடல்
கடக்கமுடியா வானவெளி
வளர்பிறை
ஒளியின் கதி
யார் அவள் ? யார் அவள் ? யார் அவள் ?

ஒளிஆண்டுகள் நீளத் தொப்புள்கொடி
ஒரு வேரின் பல கிளைகள்
ஒற்றுமையின் பலரூபங்கள்
இரவு மழை
இன்னிசை புகும் பனிப்புகார்
இன்றியமையாதவள்
இன்ப துயரம் தாண்டியவள்
தங்கத்தீவாம் கதிரவனுள்
நான் காண்பவள்

அவளை மறந்ததும்
இன்று மூச்சொவொன்றோடும்
அவளை நினைவுகூற முயற்சிப்பதும்
ஒரு கண்ணாம்பூச்சி விளையாட்டுத்தானே



# இனிதாய் வாழ்வோம்...!

வினாயகமூர்த்தி அபிவர்ணா
முல்லைத்தீவு

பரணியைப் பாடி
செய்வோம் விதியை
நம்குடி கெடுப்பவர்
பிறர்குடி வதைப்பவர்
யாராய் இருந்தும்
யாம் விடமாட்டோம்
செய்வோம் விதியை
உடனே புதிதாய்
தீயவை ஒழிந்து
நல்லவை பெருகட்டும்
இனிமை விதிகள்
வளமாய் செய்தே
ஒற்றுமை பெருகிட
வலிமை உயர்ந்திட
புதுமை வாழ்வினை
இனிதாய் வாழ்வோம்

# மகுடம் சூடிடுவோம்!

கவியரசி எஸ்.ஏ.இஸ்மத் பாத்திமா
பஸ்யால

அன்புச் சகோதரா
சமூகம் பொல்லாதது
அதில் எல்லாவித
நச்சுப் பாம்புகளுமுண்டு!
வருந்தாதே சகோதரா
சமூகம் உன் பெறுமதியை
உணர்ந்து கொள்ள
வெகுகாலம் செல்லாது!
எண்ணம் எனும் ஏட்டில்
தூய்மையை நாம்
தூரிகையால் வரைந்தே
அர்ப்பணிப்புகள் செய்திடுவோம்!
காலங்கள் கடந்தாலும்

நன்மையைக் கல்வெட்டிலும்
தீமையைக் கடற்கரை மண்ணிலும்
எழுதிக் கரைத்திடுவோம்!
பிறர் எமக்கிழைக்கும்
அநீதியை அநியாயத்தைத்
தீங்கினைப் பாங்காய்
நாம் மறந்திடுவோம்!
எப்போதும் எங்கும் – நாம்
தவறிழைக்காது தற்காத்து
தலைநிமிர்ந்து வாழ்ந்தே
மகுடம் சூடிடுவோம்!

# பட்டாம் பூச்சி

பின்த்அமீன் மாவனல்லை

பாடசாலைக் கல்வியை
பற்றிப்பிடித்ததெல்லாம்
பல்கலைக்கு அடியெடுத்து
பசுமைநாட்களை
பெற்றுக் கொண்டாடவே

கனவின் மயக்கமோ என
கிள்ளிப்பார்க்கத்தோணுமளவு
கற்ற கல்விக்காய்
கலைப்பீட பட்டமளிப்புவிழா
கலையக அரங்கினிலே
கச்சிதமாய் அரங்கேறியது

காத்திருப்பு கைகூட
கனாக்களும் நிறைவேற
கொண்டாட்டம்தான் எங்களுக்கு
கல்விக்கு முடிசூட்டிய நாள் நமதே

உபகுலபதியாய் ரமீஸ் சேர்
இதைத்தாண்டி வேறென்ன
இன்பம் எமக்கு
உற்சாகம் எம்மில் ஊற
அவர்கையால் பட்டங்களை
அன்பூறப்பெற்றோம்

புதுமணப்பெண் உட்பட
புதுயுகக்கண்கள்
பட்டம் பெற வரிசையாய்
பாரினில் வலம்வர
பெற்றோர்கள் சிறகடித்துப்
பறக்கின்றனர்
பெருமைகொண்டு நம்மை
பெற்ற சந்தோஷத்திலே

நல்ல நட்புக்கள்
நாலாபக்க உறவுகள்
நல்ல நாளில் சேர்ந்த களிப்பில்
எண்ணிலடங்கா புகைப்படங்கள்
உணர்ச்சிவசப்படும் நற்பொழுதுகள்

பிரசவ வலியிலும்
பிறந்த குழந்தையுடனும்
பிறநாட்டிலிருந்து ஓடிவந்து சேர்ந்த
பிரமிப்பிலுமென
பட்டதாரிகளுக்குப் பின்னால்
பலகதைகள் பொக்கிஷமாக

பட்டம் சூட
பாவை நான் பரவசம்கொள்ள
பெற்றவள் கண்குளிர்ந்த
பொன்நாள் இது எனக்கு
பல்லாயிரம் நினைவலைகள்
பட்டாம்பூச்சியாய் இன்னும்
பறந்துகொண்டிருக்கிறது

# விதவை



நுஸ்ரத் மஹ்ரூப்
மாதம்பை

விதியின் விளையாட்டில்
விடைதெரியா பயணத்தின்
தொடர்ச்சி தானே
விதவைப் பட்டம்...

விசும்பல்களோடு விம்மித் தவிக்கும்
விதவைகள் தான் எத்தனை பேர்....
விழியோரக் கண்ணீரோடு வீட்டிற்குள்
இருப்பது வழி தெரியாமல் தானே...

உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்தி
உயிர் வாழ்ந்திடலாம்
உயிர் மூச்சின் இறுதி வரை...
உணவுக் கவளங்களின் உதவியும்
உறவுகளின் அரவணைப்புமின்றி
அவளால் உயிர் வாழ்ந்திடலாமா..

நிலவொளி வெளிச்சத்தில்
நிலாச்சோறு உண்ண
அவளொன்றும் கைப்பாவை அல்லவே...
அழுகைகளோடு அசந்து தூங்கும்
அவன் வாரிசுகளும்
அவளுக்கு உண்டு....

வசந்தங்கள் அவள் வாழ்வில்
மணம் வீசுவது எப்போது...
மலையளவு மனப்பாரங்கள்
கரைந்தோடுவது எப்போது...

ஒருநாள் என் மனைவியும்
இளம்வயது விதவைகள் கோலத்தில்...
வேண்டாம் என் பேனா முனைகளினால்
கவி வரிகள்...
என் கற்பனைகளையும்
மௌனிக்கச் செய்கின்றேன்...

ஆண்மை நிரம்பிய ஆண்களே...
அவள் வாழ்வு அழகுற
அவள் தேவைகளையும்
தோள் சுமங்கள் ஆதரவாய்...

ஏனெனில் அவளுக்குள்ளும்
ஒரு ஆன்மா ஜீவிக்கின்றது...

# கடலின் அவதி...



ஷஹீ ஸாதிக்

கடலின் அவதி
கரைக்கெப்படித் தெரியும்?

தினம் தினம் தொட்டு,
திரும்பிடும் ஸ்பரிசம்
பகலிரவென்று
பருவம் உணராப் பாவை!

கருமையிலும் வெண்
கரம் நீட்டி,
ஒருமையாய் –அவள்,
ஒளியாய்!

அலைக்கரங்கள்
அப்படியே பதிய,
நுரைக் கண்ணீரோடு
நுனியில் தொட்டும் தொடாமல்!

அவள்
பெருமூச்சு
பேரலையென உயர,
பெருங்கடலும்
பெண்ணல்லவோ...!

தொட்டும் தொடாமல்
தயங்கி நின்ற,
தொடுதூரமும்
தடுத்து வென்ற,– அவள்
ஆவல் முற்றுறா...

எப்படியும் அடைந்திட
சலித்திடா பேராசை!
எழுந்தெழுந்துருவெடுக்கும்
சலசலக்கும் சலத்தின் ஓசை...

கொதித்திடும் பருவமும்
துளைத்தெழும் அவளுள்ளம்!
குதித்தோடி கரையை நாடி
துள்ளி ஆடும் சுனாமி!

கரை தொட்ட பூரிப்பில்
கதறி அழுத
கன்னிக் கடல்....
கரையெல்லாம் ஈரம்!

# கடைசி நிமிடம்!

இணுவில் வாகீசன்

விழிகளில் விழி நீர்
மௌனிக்கும் வார்த்தைகள்
கையசைத்து யாரையோ
அழைத்து நிற்பார்
தேவாரம் பாடச்சொல்லி
கைகூப்பி தொழுது நிற்பார்
சுற்றியிருப்போர்
அழத்தொடங்க
சுற்றமெல்லாம் கூடுகிறது

மரண அழைப்பின்
கடைசி நிமிடங்களின்
மௌனிக்கும் வார்த்தைகளை
யார் அறிவார் இவ் உலகில்

# துன்பத்தில் துணை வரும் தோழன்

ஜலீலா முஸம்மில்
ஏறாவூர்

வாழ்க்கை நாடக மேடை அறிவாயா
வாழ்ந்து பார்த்து அனுபவம் புரிவாயா
இன்பம், துன்பம் இரண்டும் இணைந்தே
இனிதாய்ப் பாடங்கள் கற்றுத் தந்திடும்
துயரம் வருகையில் துவண்டிட வேண்டாம்
மகிழ்ச்சி மலர்கையில் மமதை கூடாது
இடுக்கண் களையவே தக்க தருணத்தில்
தோள் கொடுத்து உதவுவான் தோழன்
தடுக்கி விழுகையில் கைகள் தந்து
தூக்கி விடும் தூய குணமுடையவன்
தரணியில் உள்ளார் நல்லோர் வரிசையில்
தன்னிகரில்லா சேவை செய்பவன் நண்பனே

## வெட்டப்பட்டது ஒரு ஆலமரம் மட்டுமல்ல...

(08ஆம் பக்கத் தொடர்)

ஆசிரியர் மகேஸ்வரனின் மரணத்தை சிறிய விபத்தாக காட்டி உண்மையை மூடி மறைக்க எவரும் முயற்சிக்கக் கூடாது விபத்துக்கான உரிய விசாரணையை முறையாக மேற்கொள்ள வேண்டும் என பலதரப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

தலவாக்கலை லோகி வழிப்பிள்ளையார் கோவில் மிக பழைமை வாய்ந்த ஒரு சக்திமிக்க கோவிலாகும். அதன் அருகிலேயே 200 வருட பழைமை வாய்ந்த ஆலமரம் உள்ளது. குறித்த வழிப்பிள்ளையார் கோவில் கூம்மூட் தோட்டத்திற்கு உரித்துடையது என அத்தோட்ட மக்களால் தொடரப்பட்ட வழக்கு இடை நடுவே அத்தோட்ட மக்களால் பொருளாதார பின்னணி காரணமாக கைவிடப்பட்டதாக மக்கள் தெரிவிக்கின்றனர். அண்மையில் இந்த ஆலமரத்தின் ஒரு பகுதி சேதமடைந்துள்ளதாகவும் அதன் அருகே இருக்கும் கோவில் மற்றும் அதன் உரிமையாளரின் குடியிருப்பும் பாதிக்கப்படும் அபாயம் இருப்பதாகக் கூறி அப்பகுதி கிராம சேவகரிடம் ஆலமரக் கிளைகளை வெட்ட அனுமதி கேட்டிருந்தபோது அப்பகுதி கிராம சேவகர் ஊடாக நுவரெலியா மாவட்ட பிரதேச செயலாளரின் அனுமதியுடன் வன திணைக்களம் அதன் கிளைகளை வெட்டுவதற்கு அனுமதி வழங்கியுள்ளது.

மரக்கிளைகளை வெட்டுவதற்கு தனியார் ஒருவருக்கு வன திணைக்களம் ஒப்பந்தம் வழங்கியுள்ளது. இதனையடுத்தே ஆலமரத்தின் கிளைகளை வெட்ட ஆரம்பித்துள்ளனர். ஆனால் மிக சூட்சுமமான முறையில் ஆலமரத்தின் கிளைகள் வெட்டப்பட்டதாக பிரதேச வாசிகள் தெரிவிக்கின்றனர். மிக விரைவில் மரங்களை துண்டு துண்டுகளாக அரியும் மிக சக்தி வாய்ந்த உபகரணங்கள் பயன்படுத்தப்பட்டதாகவும் ஆலமரத்தின் கிளைகள் பிரதான வீதியின் நடுவே விழாமல் மரத்தின் உச்சியிலிருந்து வெட்டப்பட்ட கிளைகள் கயிற்றினூடாக கீழே இறக்கப்பட்டதாகவும் அதனை தூரத்திலிருந்து பார்வையிட்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

ஆனால் மரத்தின் கிளைகள் வெட்டப்பட்ட அன்றைய தினம் மரத்தின் கிளைகள் வெட்டப்போவதாக தலவாக்கலை பொலிஸாருக்கோ லிந்துலை பொலிஸாருக்கோ உரிய தகவல் வழங்கப்படவில்லை என்பது பொலிஸார் தெரிவிக்கும் தகவல். நுவரெலியா ஹட்டன் பிரதான வீதி எப்போதுமே வாகன நெரிசல் மிக்க வீதி. அதுவும் தலவாக்கலை நகரை அண்மித்த ஒரு பகுதியில் பாரிய மரம் ஒன்றை வெட்டுவதாக இருந்தால் அதற்கான சில ஒழுங்கு விதிகளை பின்பற்றியிருக்க வேண்டும். நுவரெலியா பிரதேச காரியாலயம், வனப்பாதுகாப்பு திணைக்களம், தலவாக்கலை லிந்துலை பொலிஸ் நிலையங்கள் மற்றும் நகரசபை ஆகியவை இணைந்து சரியான முறையில் செயற்பட்டிருந்தால் இந்த விபத்தை தடுத்திருக்கலாம்.

ஆலமரக் கிளையை வெட்ட காரணமாக இருந்த நபர் தலைமறைவாகியிருப்பதாகவும் அவர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் பிரதேச மக்கள் கூறுகின்றனர். பொதுவாக வீதிகள் செப்பனிடும்போது கூட வீதிகள் செப்பனிடப் படுவதாக பெயர் பலகைகள் வைக்கப்பட்டு சாரதிகளுக்கு அறிவுறுத்தல்க ள் வழங்கப்படுவதுடன் இரு பக்கங்க ளிலும் வாகனத்தை நிறுத்தி சரியான முறையில் போக்குவரத்தை செய்வதற்கு ஊழியர்களும் கடமையில் இருப்பார்கள்.

ஆனால் எவ்வித பாதுகாப்பு நடைமுறையும் பின்பற்றாமல் ஒரு பிரதான வீதியில் பாரிய மரம் ஒன்றை வெட்டியதால் பெறுமதிமிக்க ஒரு ஆசிரியரின் உயிர் இழக்கப்பட்டிருக்கிறது. மூன்று நாட்களுக்கு மேலாக குறித்த ஆலமரத்தின் கிளைகள் வெட்டப்பட்டு வந்ததாகவும் இறுதியாக முழு மரத்தையுமே வெட்டி வீழ்த்தியிருப்பதாக பிரதேச மக்கள் தெரிவித்தனர். ஒரு மரம் வெட்டும்போது அப்பகுதி கிராம உத்தியோகத்தர் அவ்விடத்தில் கட்டாயமாக இருக்கவேண்டும். ஆனால் கிராம உத்தியோகத்தருக்கு மரம் வெட்டப்போவதாக தனக்கு தகவல் தரப்படவில்லை என்கிறார் கிராம உத்தியோகத்தர்.

அதேபோல நகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியிலே இந்த மரம் வெட்டப்பட்டுள்ளதால் அதில் செல்லும் வாகனங்களுக்கும் பாதசாரிகளுக்கும் நிச்சயமாக பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்கவேண்டும். இவை அனைத்தையுமே கவனத்தில் கொண்டே செயற்பட்டிருக்க வேண்டும். ஆனால் இத்தகைய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மரம் அவ்விடத்தில் வெட்டப்படுவதாக எவ்வித அறிவித்தலையும் தனக்கு வழங்கவில்லை எனவும் பிரதேச செயலகமோ, கிராம சேவகரோ எந்தவொரு நிறுவனமோ தனக்கு இது தொடர்பில் அறிவிக்கவில்லை என்றும் தலவாக்கலை லிந்துலை நகரசபைத் தலைவர் லெச்சுமன் பாரதிதாசன் கூறியிருப்பது முக்கியமானது.

இதனை ஒரு சிறிய விபத்தாக கருதி மூடிமறைக்க முற்படுவது ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒன்றல்ல. இந்த வீதியை செப்பனிடும்போது இந்த கோவிலையும் இந்த மரத்தினையும் அகற்ற எத்தனித்த வீதி அபிவிருத்தி அதிகார சபையிடம் அன்றைய அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அதன் ஒரு கிளையைக்கூட வெட்ட அனுமதிக்கவில்லை. அதேபோல மேல் கொத்மலை அபிவிருத்தித் திட்டத்தின் போதும் கூட அக்கோவிலையோ அந்த ஆலமரத்தையோ அகற்ற முன்னாள் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் அனுமதி வழங்கவில்லை. எமது பாரம்பரியங்களையும் எமது ஆகமங்களையும் நாம் பாதுகாக்க வேண்டும் என பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

எனவே இவ்விடத்தில் இந்த ஆலமரத்தின் கிளைகளை வெட்டி வீழ்த்துவதற்கு அனுமதியை வழங்கிய அரச நிறுவனங்கள் உட்பட அனைவரும் விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும். ஆசிரியர் மகேஸ்வரனின் மரணத்திற்கு நியாயமான தீர்வை வழங்க வேண்டும். வீட்டில் ஒரு தலைவன் இல்லாவிட்டால் அக்குடும்பம் எவ்வளவு சிக்கல்களை எதிர்கொள்ள நேரிடும் என்பது அனைவருக்கு தெரியும். இந்த பச்சிளங் குழந்தைகள் சிறுவயதிலேயே தனது தந்தை இழந்து நிற்கின்றன.

எனவே இந்த உயிரிழப்புக்கு உரிய தீர்வு வேண்டும். இறந்தவரை மீண்டும் உயிர்ப்பிக்க முடியாது. ஆனால் வீதியில் செல்லும் எத்தனையோ மகேஸ்வரன்களின் உயிர்களை பாதுகாக்க வேண்டும். எனவே எதிர்காலத்தில் இவ்வாறான கவனக்குறைவான செயல்களில் எவரும் ஈடுபடக்கூடாத வகையில் சட்டரீதியான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதே அனைவரின் வேண்டுகோளாகும்.

முறையற்ற விதத்தில் 200 வருடம் பழைமை வாய்ந்த ஆலமரத்தை வெட்டி ஒருவரின் உயிரிழப்புக்கு காரணமான நபர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என தோட்ட உட்டகட்டமைப்பு சமுதாய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார். இது அறிவிப்பாக மட்டும் இருந்துவிடக் கூடாது.

மேலும் அவரின் குடும்பத்தாருக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதுபோன்ற அபாயகரமான சம்பவங்கள் மலையகத்தில் இனி ஒருபோதும் நிகழாத வண்ணம் இதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள போவதாகவும் உறுதியளித்தார் அமைச்சர்.


# விலைமனுக் கோரல்

## இலங்கை விமானப்படைக்கான பொருட்கள் கொள்முதல்

1. இலங்கை விமானப்படையின் திணைக்கள வழங்கல் குழுவின் தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை வழங்குவதற்கான தகுதி மற்றும் தகைமைகளைக்கொண்ட மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

| இல | வழங்கல் அடையாள எண் | தகவல்கள் | மனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி / திறக்கப்படும் திகதி மற்றும் நேரம் | மீளச் செலுத்தப்படாத கட்டணம் (ரூபா) | மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதித் திகதி | மனு தொடர்பான கூட்டம் நடைபெறும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | AHQ/22/FS/CLO/ 1006 | விமான வீரர்களுக்கான கருப்பு இறப்பர் பாதணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 19 1030 மணி | 12,500.00 | 2022 ஏப்ரல் 18 | 2022 மார்ச் 16 0930 மணி |
| 02. | AHQ/22/FS/CLO/ 1015 | கருப்பு நிற பூட் கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 19 1030 மணி | 12,500.00 | 2022 ஏப்ரல் 18 | 2022 மார்ச் 16 0930 மணி |
| 03. | AHQ/22/FS/CLO/ 1011 | விமான வீரர்கள் ஆண் மற்றும் பெண்களுக்கு ஜாகிங் பாதணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 19 1030 மணி | 20,000.00 | 2022 ஏப்ரல் 18 | 2022 மார்ச் 16 1030 மணி |
| 04. | AHQ/22/FS/CLO/ 1014 | பாதுகாப்பு பாதணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 19 1030 மணி | 12,500.00 | 2022 ஏப்ரல் 18 | 2022 மார்ச் 16 1130 மணி |
| 05. | AHQ/22/FS/CLO/ 1008 | விமானப்படைக்கான நீல நிற பொலியஸ்டர் துணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 19 1030 மணி | 3,500.00 | 2022 ஏப்ரல் 18 | 2022 மார்ச் 21 0930 மணி |
| 06. | AHQ/22/FS/CLO/ 1009 | கரும் நீல நிற பொலியஸ்டர் துணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 20 1030 மணி | 6,000.00 | 2022 ஏப்ரல் 19 | 2022 மார்ச் 21 1030 மணி |
| 07. | AHQ/22/FS/CLO/ 1013 | கெமப்லாஜ் துணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 20 1030 மணி | 24,000.00 | 2022 ஏப்ரல் 19 | 2022 மார்ச் 21 1130 மணி |
| 08. | AHQ/22/FS/CLO/ 1007 | வெள்ளை நிற டீ-சர்ட் துணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 20 1030 மணி | 6,000.00 | 2022 ஏப்ரல் 19 | 2022 மார்ச் 22 0930 மணி |
| 09. | AHQ/22/FS/CLO/ 1010 | வெள்ளை நிற PT சிறிய காற்சட்டை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 20 1030 மணி | 3,500.00 | 2022 ஏப்ரல் 19 | 2022 மார்ச் 22 1030 மணி |
| 10. | AHQ/22/FS/CLO/ 1012 | வேலை செய்யும் சட்டை துணிகளை கொள்வனவு செய்தல் | 2022 ஏப்ரல் 20 1030 மணி | 12,500.00 | 2022 ஏப்ரல் 19 | 2022 மார்ச் 22 1130 மணி |

2. மனுக்கோரலானது சர்வதேச மனுக்கோரல் போட்டி முறைக்கமைய இடம்பெறும்.
3. இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு, இலங்கை விமானப்படை இணையத்தளமான www.airforce.lk மூலம் ஆங்கில மொழியினால் ஆன முழு ஆவணத்தொகுப்பை பரீசித்துக்கொள்ள முடியும். **2022 பெப்ரவரி 28 ஆம் திகதி 1000 மணி தொடக்கம் 1400 மணித்தியாலம்** வரை அனைத்து காரியாலய வேலைநாட்களிலும் மேலே 01 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மனு ஆவணங்களை வழங்கும் இறுதித்திகதிக்கு முன் **இலங்கை விமானப்படை நிலையத்தின் சிராப்பர், இல.140, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை இல் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தியதன்** பின் **வழங்கல் பிரிவு, இல.140, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை** எனும் முகவரியில் அமைந்துள்ள மனுக்களுக்கான பிரிவில் மனு ஆவணத் தொகுப்பை பெற்றுக்கொள்ள முடியும். மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்திய பற்றுச்சீட்டின் முதற் பிரதியையும் இணைத்து முன்வைத்தல் வேண்டும். பற்றுச்சீட்டுகள் இல்லாமல் முன்வைக்கப்படும் மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாத மனுக்களாக கருதப்படும்.
4. முத்திரையிடப்பட்ட இரண்டு பிரதிகளுடன் கூடிய மனுக்கள் இறுதித் திகதிக்கு முன் கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலின் மூலம் **"தலைவர், திணைக்கள வழங்கல் குழு"** அனுப்பிவைத்தல் அல்லது இறுதித்திகதிக்கு முன் **இல 140, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை இல் அமைந்துள்ள இலங்கை விமானப்படை நிலையத்தின் பிரதான பாதுகாப்பு அறையில்** மனுக்களை சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இட வேண்டும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளல் நிறைவடைந்த உடனேயே **இல.140, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02,** இலங்கை இல் அமைந்துள்ள இலங்கை விமானப்படை நிலையத்தில் மனுக்கள் திறக்கும் அறையில் மனுக்கள் திறக்கப்படும்.
5. மனுதாருக்கு அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிக்கு தேசிய அடையாள அட்டை மற்றும் அவர்களின் தொழில்வழங்குனரின் அனுமதிக்கடிதத்தை முன்வைப்பதன் மூலம் மனுக்களை திறக்கும் சந்தர்ப்பத்தில் கலந்து கொள்ள அனுமதி வழங்கப்படும். மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் நேரம் முடிவடையும் நேரத்திற்குப் பிறகு, மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி மனு திறப்பில் கலந்து கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார்கள்.
6. மனு ஆவணங்களை கொள்வனவு செய்த மனுதாரர்களுக்கு, மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரத்தில் **இல.140, ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு 02, இலங்கை** இல் அமைந்துள்ள இலங்கை விமானப்படை நிலையத்தில் மனுக்கள் திறக்கும் அறையில் இடம்பெற திட்டமிட்டிருக்கும் மனு தொடர்பான கூட்டத்தில் கலந்து கொள்ள முடியும்.
7. சமர்ப்பிக்கப்பட்ட ஏலங்களில் வட் மற்றும் பிற வரிகள் உட்பட அனைத்து வரிகளுடன் தங்களின் அனைத்து செலவுகளையும் உள்ளடக்கி, இலங்கை விமானப்படைத் தளமான கட்டுநாயக்கவிற்கு பொருட்கள் வழங்கப்பட வேண்டும் என்பதை அறிந்திருக்க வேண்டும்.
8. இது தொடர்பில் ஆர்வமுள்ள மனுதாரர்களுக்கு **பிரதான வழங்கல் அதிகாரி (தொலைபேசி - 011-2325468) அல்லது பணியாளர் அதிகாரி வழங்கல் (மனுக்கள்) (தொலைபேசி: 011-2441553 மற்றும் 011-2441044) நீட்டிப்பு- 23569, பெக்ஸ் : 011-2441553 மற்றும் 011-2347694)** மூலம் அல்லது கீழ் குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் எழுத்து மூல விண்ணப்பத்தை முன்வைத்து மேலதிக விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

**வழங்கல் பிரிவு,**
**இலங்கை விமானப்படை,**
**இல.140,**
**ஸ்ரீமத் சித்தம்பலம் ஏ கார்டினர் மாவத்தை,**
**கொழும்பு 02,**
**இலங்கை.**

**விமானப்படை தளபதி**



## பீப்பள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பீ.எல்.சி.

மற்றும்

## பீப்பள்ஸ் மைக்ரோ – கொமர்ஸ் லிமிடெட்

# தரமான வாகனங்களின் ஏல விற்பனை

டீசல் மற்றும் பெற்றோல் வாகனங்கள், முச்சக்கர வண்டிகள் மற்றும் டிராக்டர்கள், இயந்திர உபகரணங்கள் உட்பட 88 வாகனங்கள்

2022 மார்ச் 05 ஆம் திகதி சனிக்கிழமை BMICH இல் "மிஹிலக்க மெதுர" வில் காலை 9.00 மணி முதல் நடைபெறும்.

முழு நாடும் உள்ளடக்கப்படும் வகையில் தெரிவு செய்யப்பட்ட 09 கிளைகளில் நேரடியாக ஏல விற்பனையுடன் தொடர்புகொள்வதற்கு வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அன்றைய தினம் கீழ் குறிப்பிடப்படும் கிளைகளுக்கு பிரவேசிப்பதன் மூலம் உங்களுக்கு இந்த ஏல விற்பனையில் விலை மனுக்களை முன்வைப்பதற்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

காலி/ கம்பஹா/ குருநாகல்/ தம்புள்ளை/ மொனராகலை/ மாத்தறை/ கண்டி/ வவுனியா/ அநுராதபுரம்

பரீட்சிப்பது பெப்ரவரி 28 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 03 ஆம் திகதி வரை காலை 9.00 தொடக்கம் மாலை 5.00 வரையான காலத்தில் கீழுள்ள வாகனக் கூடங்களில்.

மாபிம : 0112 401031 / கலேவெல : 0662 287355
மாலபே : 0761 064773 / மாத்தறை : 041-3127271 / மொனராகலை : 055-2277461

### கலேவெல வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| CP-HM-4XXX | BUS | LANKA ASHOK LEYLAND VIKING seats 49 | 2003 |
| SG-HI-01XX | BUS | TATA LPO1313 seats 60 | 2003 |
| WP-GX-9XXX | BUS | LANKA ASHOK LEYLAND VIKING seats 49 | 2002 |
| CP-PR-9XXX | CAB | MAHINDRA MAXXIMO | 2011 |
| NW-PS-8XXX | CAB | TATA ACE ZIP | 2012 |
| CP-LH-8XXX | CRANE | ISUZU BDG-NPR85AR ELF | 2010 |
| SG-LL-6XXX | FREEZER | MITSUBISHI PDG-FG84D CANTER | 2009 |
| CP-ZA-6XXX | LOADER | KOMATSU WA200PT WHEEL LOADER | 2008 |
| SP BGU-2XXX | MOTOR BIKE | HERO SPLENDER ISMART 110 | 2017 |
| WP LY-9XXX | PRIME MOVER | DAF FTG CF85.430 | 2005 |
| NC AAT-5XXX | THREE WHEELER | BAJAJ RE | 2014 |
| NC YR-7XXX | THREE WHEELER | BAJAJ RE-205 | 2011 |
| EP-RF-5XXX | TRACTOR | MASSY FERGUSON MF1552 | 2017 |
| EP-RG-0XXX | TRACTOR | KUBOTA L4508SR | 2019 |
| NW-RF-9XXX | TRACTOR | NEW HOLLAND 4710 | 2018 |
| NW-RD-9XXX | TRACTOR | TAFE 45DI | 2015 |
| CP-RF-9XXX | TRACTOR | TAFE 45DI | 2018 |
| NW-RE-9XXX | TRACTOR | MASSEY FERGUSON MF1540 | 2016 |
| WP-JI-3XXX | TRAILER | DUTCH LANKA TRAILER DLFT40/50T | 2004 |
| 50 SRI 8XXX | VAN | TOYOTA | 1984 |
| 48-0XXX | LORRY | TATA 1612 | 1995 |
| EP-RF-8XXX | TRACTOR | NEW HOLLAND 4710 | 2017 |

### மாபிம வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| WP-NA-0XXX | BUS | LANKA ASHOK LEYLAND VIKING seats 42 | 2005 |
| WP-NA-3XXX | BUS | LANKA ASHOK LEYLAND VIKING seats 54 | 2006 |
| WP-NB-0XXX | BUS | ZONDA YCK6849HP seats 33 | 2011 |
| SP-ND-1XXX | BUS | DAEWOO seats 42 | 2006 |
| NW-ND-8XXX | BUS | NISSAN U-RA530RBN seats 56 | 1995 |
| 61-6XXX | BUS | TOYOTA COASTER seats 29 | 1986 |
| SG-NC-4XXX | BUS | LANKA ASHOK LEYLAND VIKING seats 42 | 2008 |
| SG-NC-2XXX | BUS | EICHER SKYLINE 20.15 MLPO seats 54 | 2015 |
| 60-7XXX | BUS | TOYOTA seats 25 | 1985 |
| SP-PS-4XXX | CAB | MAHINDRA MAXXIMO | 2011 |
| NW-PK-7XXX | CAB | MAHINDRA MAXXIMO PLUS | 2014 |
| WP-KJ-8XXX | CAR | TATA NANO | 2012 |
| 18-1XXX | CAR | B.M.W. 316I | 1991 |
| 300-2XXX | CAR | MERCEDES BENZ | 1990 |
| WP-LK-8XXX | LORRY | TATA LPT 1618 | 2012 |
| SP-LO-2XXX | LORRY | NISSAN CABSTAR | 2015 |
| 41 SRI 7XXX | LORRY | TATA 1210SE | 1987 |
| WP MA-7XXX | MOTOR BIKE | SUZUKI EN 125 | 2005 |
| WP TU-9XXX | MOTOR BIKE | SUZUKI GN125 H | 2007 |
| WP XO-2XXX | MOTOR BIKE | HERO HONDA HUNK | 2012 |
| WP BEH-5XXX | MOTOR BIKE | BAJAJ PLATINA | 2016 |
| WP BGW-8XXX | MOTOR BIKE | BAJAJ PULSAR-150 | 2018 |
| WP BGX-0XXX | MOTOR BIKE | HERO MAESTRO EDGE | 2018 |
| WP BG-1XXX | MOTOR BIKE | BAJAJ PLATINA | 2019 |
| WP BGZ-6XXX | MOTOR BIKE | TVS WEGO | 2018 |
| WP BGP-9XXX | MOTOR BIKE | TVS STRYKER | 2017 |
| SG BDR-5XXX | MOTOR BIKE | MAHINDRA RODEO RZ | 2015 |
| SP BGE-0XXX | MOTOR BIKE | TVS WEGO | 2017 |
| SG BGN-6XXX | MOTOR BIKE | HERO MAESTRO EDGE | 2018 |
| SG BGQ-4XXX | MOTOR BIKE | BAJAJ V12 | 2018 |
| 47-4XXX | PRIME MOVER | MERCEDES BENZ PRIME MOVER | 1994 |
| SP-AAR-0XXX | THREE WHEELER | BAJAJ RE | 2014 |
| WP-YR-5XXX | THREE WHEELER | TVS KING | 2011 |
| SP-YD-0XXX | THREE WHEELER | HEROWHEELS HRW | 2010 |
| WP QW-5XXX | THREE WHEELER | BAJAJ ARIS-UG | 2009 |
| WP YA-3XXX | THREE WHEELER | BABAJ ARIS-UC | 2010 |
| WP ABE-9XXX | THREE WHEELER | BAJAJ RE | 2015 |
| WP AAE-0XXX | THREE WHEELER | BAJAJ RE 205 | 2012 |
| WP AAX-3XXX | THREE WHEELER | BAJAJ RE | 2015 |
| WP ABD-5XXX | THREE WHEELER | BAJAJ RE | 2015 |
| WP AAU-1XXX | THREE WHEELER | BAJAJ RE | 2014 |
| WP-LG-8XXX | TIPPER | LANKA ASHOK LEYLAND COMETIPPER | 2007 |
| WP GN-7XXX | VAN | TOYOTA HIACE | 1996 |
| WP-NC-7XXX | BUS | MITSUBISHI KK-BE63EG ROSA seats 28 | 2007 |
| WP-NC-8XXX | BUS | MITSUBISHI BE63EG seats 28 | 2012 |
| WP JG-9XXX | VAN | HYUNDAI GRACE H 100M | 1999 |
| WP KP-5XXX | CAR | PEUGEOT 3008 | 2011 |

### மகோல வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| PRINTING MACHINE | PRINTING MACHINE | SOLNA SOLNA OFFSET | 1989 |

### மாலபே வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| WP-NB-6XXX | BUS | NISSAN DIESEL KC-RA531MBN seats 50 | 1996 |
| WP-NC-7XXX | BUS | TOYOTA PB-XZB50 COASTER seats 28 | 2007 |
| WP-ND-8XXX | BUS | MITSUBISHI U-MS729S seats 54 | 1992 |
| WP-KT-5XXX | CAR | FORD FOCUS | 2011 |

### மாத்தறை வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| 62-6XXX | BUS | TOYOTA seats 27 | 1988 |
| SP-KH-8XXX | CAR | MICRO TREND | 2008 |

### மொனராகலை வாகனக் கூடம்

| Reg.No | Vehicle Type | Make & Model | YOM |
|---|---|---|---|
| COMBINE HARVESTER | COMBINE HARVESTER | KIOTI DSF75GT | 2016 |
| UP BDL-7XXX | MOTOR BIKE | MAHINDRA RODEO UZO | 2015 |
| UP BGV-6XXX | MOTOR BIKE | BAJAJ PULSAR 150 | 2018 |
| UP BIQ-2XXX | MOTOR BIKE | YAMAHA YC - 125-5 | 2019 |
| EP BIG-5XXX | MOTOR BIKE | BAJAJ PLATINA | 2019 |
| PAVER MACHINE | PAVER MACHINE | BARBER GREENE SA144A | 1993 |
| ROAD ROLLER | ROAD ROLLER | INGERSOLL RAND IR DD90 | 1993 |
| EP-RF-7XXX | TRACTOR | MAHINDRA YUVO 575 DISPS | 2017 |
| EP-RF-9XXX | TRACTOR | FARMTRAC FT-6050 | 2018 |
| EP-RF-7XXX | TRACTOR | MITSUBISHI MAHINDRA GX3600S | 2018 |
| EP-RG-03XXX | TRACTOR | FARMTRAC FT_6050 | 2018 |
| CP-ZA-6XXX | WHEEL LODER | CASE 721 WHEEL LOADER | 2004 |

**விற்பனை தொடர்பான நிபந்தனை**

- உரித்துரிமை : ஏல விற்பனை அரசாங்கத்தின் [illegible] சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கமைய மேற்கொள்ளப்படும். [illegible]
- கொடுப்பனவு : [illegible] 25% [illegible] 75% [illegible] 2022 மார்ச் 09 ஆம் திகதி புதன்கிழமை மாலை 5.00க்கு முன்னர் [illegible]
- [illegible]

ஏல விற்பனையாளரின் முடிவே இறுதி முடிவாகும்.

ඒ එන් අල්ගෙවත්ත ඕක්ෂනියර්(ස්)
A N ALGEWATHTHA AUCTIONEER
#333, Janajaya City, Rajagiriya.
+94 71 790 5 790 | info@anaauctioneer.com
www.lankaauction.lk

# இலங்கையின் சுழற்சிமுறை பொருளாதாரத்தை பலப்படுத்துகிறது Eco Spindles

இலங்கையின் மிகப் பெரிய பிளாஸ்டிக் மீள்சுழற்சி நிறுவனமான Eco Spindles (Private) Limited, மீள்சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்கைப் பயன்படுத்தி தனது தையல் நூல் உற்பத்தித் திறனை மேலும் விரிவுபடுத்தவும், உலகின் முன்னணி நாகரீக வர்த்தக நாமங்களைப் பயன்படுத்தி தங்கள் தயாரிப்புகளை மீள்சுழற்சி செய்யவும் மற்றும் அதன் சுற்றுச்சூழலுக்கு உகந்த தயாரிப்பு சேகரிப்பில் புதிய தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவும் திட்டமிட்டுள்ளது. மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலியேதிலீன் டெரெப்தாலேட் (PET) பிளாஸ்டிக்கின் சிறிய துண்டுகளிலிருந்து நேரடியாக பொலியஸ்டர் நூலை உற்பத்தி செய்யும் வசதியுடன், Eco Spindles தற்போது உலகில் உள்ள இரண்டு தொழிற்சாலைகளில் ஒன்றாகும். ஏப்ரல் 2022இல் அதன் தையல் நூல் தொழிற்சாலை விரிவாக்கத் திட்டத்தின் இரண்டாம் கட்டம் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, நிறுவனம் மீள்சுழற்சி செய்யப்பட்ட பொலியஸ்டர் நூலின் உற்பத்தி திறனை 100 தொன்களில் இருந்து 220 தொன்கள் அல்லது 120%ஆக அதிகரிக்க எதிர்பார்க்கிறது.

## யார் பொறுப்பு... (11ஆம் பக்கத் தொடர்)

இங்கு நாம் அவதானித்த விடயங்களில் பலரது மலசலகூட கழிவுகளுக்கு குழிகள் இன்றி, நேரடியாக தரையில் விடப்படுகின்றன. சிலர் நீரோடைகளிலும் ஆறுகளிலும் மலம் கழிக்கின்றனர். சிலரது மலசலகூட குழிகள் உரியமுறையில் மூடப்படாமல் காணப்பட்டன. இவ்வாறான மலசலகூட பாவனை சுற்றுச்சூழலுக்கு எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென சூழலியலாளரான பேராசிரியர் திலக்பண்டாரவிடம் வினவிவோம்.

''திறந்த மலசலகூட பாவனையால் நிலம், நீர், காற்று மாத்திரமன்றி தாவரங்கள் மற்றும் விலங்கினங்களும் பாதிப்படைகின்றன. துர்நாற்றம் காரணமாக வளியின் தன்மையில் மாற்றம் ஏற்படுகின்றது .இதனை மக்கள் சுவாசிக்கும்போது மக்களும் பாதிக்கப்படுகின்றனர்.

மலக்கழிவுகள் நிலத்திற்கு நேரடியாக கவிடப்படும்போது மண்ணின்தன்மை பாதிப்படைகின்றது. .மனிதனின் மலம் மண்ணுக்குள் செல்லும்பொது அதுஉரமாகின்றது என்ற தவறான கருத்து மக்களிடம் உண்டு. அது உரமாகவேண்டுமாயின் நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் ஆகியன அதிகளவில் உள்ளடங்கியிருக்க வேண்டும். அதற்குபதனாக்கல் செயற்பாடு உண்டு .அதனை முறையாக மேற்கொண்ட பின்னரே உரமாக பயன்படுத்த முடியும். அதனை நேரடியாக ஒரு போதும் உரமாக பயன்படுத்த முடியாது. அதனால்தான் நாம் கழிப்பறை பதனாக்கல் நிலையத்தை பயன்படுத்துகின்றோம்.

மலையகத்தில் நீரானது மலைப்பகுதியிலிருந்து பாய்ந்து செல்கையில் அதற்கு கீழ்ப்பகுதியில் உள்ள மக்கள் பாதிப்படைகின்றனர். இதே யாழ்ப்பாணம், குருநாகல் போன்ற தட்டையான பிரதேசங்களில் நிலக்கீழ் நீர்மாசடையும். காலனித்துவ காலத்தில் அமைக்கப்பட்ட இந்த மலசலகூடங்கள் அதற்கு பின்னர் புதுப்பிக்கப்படவில்லை.பலஇடங்களில்.மழைக் காலத்தில் அவை நிரம்பி வழியும் நிலை ஏற்படுகின்றது. இது சூழலுக்கு அச்சுறுத்தலாகும்.

வெளியிடங்களில் மலக்கழிவுகள் காணப்படும்போது சிறுவர்கள் தொடுவார்கள், அவற்றை உண்ண மிருகங்கள் வருகின்றன. அவை ஆங்காங்கே இழுத்து போடும் போது சுற்றுச்சூழல் மாசடைகின்றது.இதனை பாதுகாக்க வேண்டுமாயின் மக்களின் குடியேற்ற முறை மாற்றமடைய வேண்டும்.அவர்களுக்கு முறையான கழிப்பறை வசதிகளைசெய்து கொடுக்க வேண்டும்'' என்றார்.

நாகரீகம் எவ்வளவுதான் வளர்ச்சியடைந்தாலும், தொன்றுதொட்டு வந்த பழக்கவழக்கம், வறுமை, கல்வியில் பின்னடைவு போன்ற பலகாரணங்களால் திறந்த மலசலகூட பாவனையானது ஆசியநாடுகளில் இன்றும் காணப்படுகின்றது. இதனால், ஒருபுறம் சுற்றுச்சூழல் பாரிய அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதோடு மறுபுறம் மக்கள் சுகாதார பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளதை காணக்கூடியதாக உள்ளது.

பூச்சிகொடயில் வாழும் சுமார் 400 குடும்பங்களில், சுமார் 150 குடும்பங்களுக்கே முறையான மலசலகூடங்கள்உள்ளன.ஏனைய அனைவரும் முறையான மலசலகூடங்கள் இன்றி அல்லது மலசலகூடமே இல்லாமல் வாழ்கின்றனர்.

உலக சனத்தொகையில் 12 சதவீதமானோர் திறந்தவெளியில் மலம்கழிப்பதாக உலக வங்கியின் புள்ளிவிபரம் கூறுகின்றது. மலையகத்தில் புரொடொப்ட் பகுதி மட்டுமல்ல, இன்னும் எத்தனையோ பின்தங்கிய கிராமங்களில் திறந்தவெளியில் மலம்கழிப்பதும், உரிய மலசலகூட வசதிகள் இன்மையும் நீடிக்கின்றது .இங்கு மலக்கழிவுகள் நேரடியாக சுற்றுச்சூழலில் விடப்படும்போது எண்ணற்ற நச்சுக்களும் பக்டீரியாக்களும் சுற்றுச்சூழல் அமைப்பில் உருவாகின்றன.


வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்படுத்தல் மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சு

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம்

அலுவலக கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கோரல்

இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் கீழ்க்காணும் நகரங்களில் கிளை அலுவலகங்களை நடத்திச் செல்வதற்காக தகைமையான கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக விடுக்கப்படும் திறந்த விலைமனுக்கோரல்.

**தற்போது நடத்திச் செல்லப்படும் கிளை அலுவலகங்களுக்காக,**

| | கிளை அலுவலகம் | சதுர அடி அளவு |
|---|---|---|
| 01 | திருகோணமலை மாவட்ட நிலையம் | 3000 - 3500 இடையில் |
| 02 | யாழ்ப்பாண மாவட்ட நிலையம் | 3000 - 3500 இடையில் |
| 03 | மட்டக்களப்பு மாவட்ட நிலையம் | 3000 - 3500 இடையில் |
| 04 | பொலன்னறுவை மாவட்ட நிலையம் | 3000 - 3500 இடையில் |
| 05 | கிழக்க மாகாண குடியகழ்வு வள நிலையம் - அம்பாறை | 3000 - 3500 இடையில் |
| 06 | காலி மாவட்ட நிலையம் | 3000 - 3500 இடையில் |

**கட்டிடம் சம்பந்தமாக பூர்த்தி செய்ய வேண்டிய தகைமைகள்**

- இக் கட்டிடம் மாதாந்த குத்தகை அடிப்படையில் வழங்கப்பட வேண்டும்.
- இக் கட்டிடம் பொது போக்குவரத்து வசதிகளை பாவித்து இலகுவாக அடையக்கூடிய வர்த்தகமயமான பிரதேசத்திற்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- குறைந்தபட்சம் கிட்டத்தட்ட 05 வாகனங்கள் நிறுத்தி வைப்பதற்கு இடவசதிகள் இருத்தல் வேண்டும்.
- மூன்று சுற்று மின் வழங்கலுடன் வேறாக மின் மீற்றர் இருத்தல் வேண்டும். மின்சாரம் தடைப்படும் வேளையில் பாவிப்பதற்கு மின் பிறப்பாக்கி இயந்திரம் இருப்பது மேலதிக தகைமையாகும்
- நேரடி நீர்க் குழாய் தொடர்புகளுடன் வேறாக நீர் மீற்றர் இருத்தல் வேண்டும். அத்துடன் கட்டிடத்திற்கு மேலாக நீர் கிட்டத்தட்ட 2000L அளவு சேமித்து வைக்கக்கூடிய நீர்தாங்கி/தாங்கிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- நிலையான தொலைபேசி வசதிகள் இருத்தல் வேண்டும்.
- பிரதான மின் விநியோக பலகையுடன் அடிப்படை மின் கட்டுப்பாட்டு அமைப்பு மின் விசிரிகள் மற்றும் ஏனைய துணைப் பாகங்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.
- இடத்தை தேர்ந்தெடுத்துக் கொண்டதாக அறிவித்த பின்னர் கட்டிடம் முழுமையாக வேலை பூர்த்தி செய்யப்பட்டு 02 வாரத்திற்குள் பெற்றுக் கொள்ளும் தகைமை இருத்தல் வேண்டும்.
- சேவையை பெற்றுக் கொள்வதற்கு வருகைதரும் பயனாளிகள் 10 பேர் மட்டில் ஒரே முறையில் அமர்ந்து தமது கடமை சேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கான இடவசதிகள் கட்டிடத்திற்குள் இருத்தல் வேண்டும்.
- ஒரு தடவையில் அண்ணளவாக 30 பயிற்சியாளர்களுக்கு வகுப்பு நடத்தக்கூடிய 400 சது அடிஅளவான 02 விரிவுரை மண்டபங்கள் இருத்தல் வேண்டும்.
- கழிவு நீர் மற்றும் மலக்கழிவுகளை அகற்றும் முறைமைகள் முறையாகத் தயார் செய்யப்பட்ட கட்டிடமாக இருத்தல் வேண்டும்
- ஊழியர் குழாம் மற்றும் வெளியாட்களுக்கு பாவிப்பதற்காக கிட்டத்தட்ட 06 மலசல கூடங்கள் வேறு வேறாக இருத்தல் வேண்டும்.
- அறைகளை வேறாக்குதல் பணியகத்தின் தேவையின் பிரகாரம் இடம்பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும்.
- அலுவலகத்தை நடத்திச் செல்வதன் காரணமாக குறித்த கட்டிடம் அமைந்துள்ள பிரதேசத்திற்கு அருகில் வசிப்பவர்களுக்கு எந்த தொந்தரவும் அற்ற இடமாக இருத்தல் வேண்டும்.
- வளிச்சீராக்கி அமைப்பை பொருத்தி இருத்தல் மேலதிக தகைமையாகும்.
- அதிகாரிகளுக்கு தங்கும் வசதிகள் பெற்றுக்கொள்ளக்கூடியவாறு பிரிக்கப்பட்ட இரு அறைகள் அல்லது பல மலசல கூட வசதிகள் கட்டிடத்திற்குள் அமைந்திருத்தல் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்ட உள்நுழைவுக் கதவு இருத்தல் அல்லது இவ் வளாகத்திலேயே இதற்காக கட்டிடமொன்று அமைந்திருத்தல் மேலதிக தகைமையாகும்.
- குத்தகை வழங்குநரால் குறிப்பிடப்பட்டுள்ள மாதாந்த வாடகை தொகை அரச மதிப்பீட்டு அறிக்கைக்கு உட்பட்டு கொடுப்பனவுகள் இடம் பெறும் (குறைந்தபட்ச தொகை)

**கட்டிட உரிமையாளரால் இங்கு குறிப்பிடப்படும் ஆவணங்களின் பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்**

- விலைமனு பத்திரத்துடன் பணியகத்திற்கு வழங்கப்படும் கேள்வி ஆவணம்
- மாதாந்த குத்தகைத் தொகை ரூபா
- குத்தகையுடன் சம்பந்தப்பட்ட சொத்தின் நிலையான முகவரி
- கட்டிட உரிமையாளர் உரிமை பெற்றுக் கொண்ட உறுதியின் உறுதி செய்யப்பட்ட பிரதியொன்று மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட ஆவணங்கள்
- சொத்துடன் சம்பந்தப்பட்ட வரைபடம்
- உறுதி செய்யப்பட்ட அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபடம் (குறித்த கட்டிட வரைபடம் A4 அளவான அல்லது A3 அளவானதாக சிறியதாக்கப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்ட போட்டோப் பிரதியாக இருத்தல் வேண்டும்)
- குத்தகை வழங்குநரின் பெயர்/முகவரி/தேசிய அடையாள அட்டை இல மற்றும் அதன் தெளிவான போட்டோப் பிரதி
- கட்டிட உரிமையாளரின் தொலைபேசி இலக்கம்
- இணக்கச் சான்றிதழ்
- கடந்த 06 மாதத்திற்குள் பெற்றுக்கொண்ட மின்சாரம், தொலைபேசி, வரிக்கட்டணம் போன்ற சிட்டைகளின் பிரதிகள்
- குத்தகைக்கு விடுவதற்கு எதிர்பார்க்கும் குறித்த சொத்திற்கான உரித்துரிமை அறிக்கையை சொத்துரிமையுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அதனை பிரதேசத்தின் சட்டத்தரணியொருவரை ஈடுபடுத்தி தயாரித்து இறுதியில் அவரது பரிந்துரையுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

பத்தரமுல்ல, கொஸ்வத்த, டென்சில் கொப்பேகடுவ மாவத்த, இல. 234இல், இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப்பணியகத்தில் அமைந்துள்ள பிரதி பொது முகாமையாளர் (செயற்பாட்டு பெறுகை) பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2022.03.23ம் திகதி மு.ப. 10.00 இற்கு அல்லது அதற்கு முன்பு உள்ளிடல் வேண்டும். மற்றும் அதே நாளில் காலை 10.00 மணிக்கு டென்டர் (ஒப்பந்தம்) ஆரம்பிக்கப்படும். உங்களது விண்ணப்பத்தை உள்ளிடும் உறையின் இடது மேற்பக்க மூலையில் கட்டிடங்களை வாடகை அடிப்படையில்/குத்தகை அடிப்படையில் கொள்வனவு செய்தல் PR/02/04 என்று குறிப்பிடுதல் வேண்டும்.

ஏதேனும் விண்ணப்பமொன்றை நிராகரிக்கும் அல்லது ஏற்றுக் கொள்ளும் உரிமை பணியகத்தின் பெறுகைக் குழுவிற்கு உரித்தாவதுடன் பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும். அரச மதிப்பீட்டாளரின் அறிக்கைகளுக்கு உட்பட்டு தேர்ந்தெடுத்தல்கள் இடம்பெறும். மீளளிக்கப்படாத ரூபா 1000.00 தொகையை, 0000001650 பணியக கணக்கில் வைப்புச் செய்து பற்றுச் சீட்டை சமர்ப்பித்து கீழ்க்காணும் முகவரிகளில் அலுவலகத்தின் மூலம் 2022.02.28 முதல் 2022.03.22 வரை அலுவலக நேரங்களில் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.

| | கிளை அலுவலகம் | முகவரி |
|---|---|---|
| 01 | திருகோணமலை மாவட்ட நிலையம் | இல. 344, 4ஆம் கட்டை கண்டி வீதி, திருகோணமலை |
| 02 | யாழ்ப்பாண மாவட்ட நிலையம் | இல. 56, செப்பல் வீதி, யாழ்ப்பாணம் |
| 03 | பொலன்னறுவை மாவட்ட நிலையம் | இல. 63, புதிய நகரம், பொலன்னறுவை |
| 04 | கிழக்க மாகாண குடியகழ்வு வள நிலையம் - அம்பாறை | 23/58 ஏ, கெமுனுபுர, அம்பாறை |
| 05 | மட்டக்களப்பு மாவட்ட நிலையம் | பொதுச் சந்தை கட்டிடத் தொகுதி, மட்டக்களப்பு |
| 06 | காலி மாவட்ட நிலையம் | 147, பொட்டிகலவத்த, காலி. |

**தலைவர் - திணைக்கள பெறுகைக்குழு,**
**இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம்,**
**இல. 234, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**கொஸ்வத்த, பத்தரமுல்ல.**
**தொலைபேசி/பெக்ஸ்: 2880550/ 2887585**
**இணையதளம்: www.slbfe.lk**

**அக்கறையில் மான்புற**
**இக்கறையில் கைகோர்ப்பு**


## வெற்றி பெறுவாரா மக்ரோன்... (11ஆம் பக்கத் தொடர்)

*இருப்பினும், Covid19 தொற்றுநோய், அதன் பொருளாதார தாக்கங்கள் என்பனவே அனைத்துக்கும் மேலாக மக்ரோனின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கும் காரணியாக மாறியுள்ளது என்றே சொல்லவேண்டும்'*

*இந்த 2022 தேர்தலிலும் தீவிர வலதுசாரியான மரின் லு பென் தனது முதன்மை எதிரியாக இருப்பார் என்பதை மக்ரோன் அறிந்திருந்தாலேயே அவரது அரசியல் சித்தாந்தத்தில் ஒரு மாற்றத்தை அவதானிக்க முடிந்தது எனவும் இதன் வெளிப்பாடே இஸ்லாமிய பிரிவினைவாத மசோதா எனவும் விமர்சனங்கள் உண்டு.*

*இம்மானுவேல் மக்ரோன் இரண்டாவது முறையாக போட்டியிடுவதை இன்றைய (27.02.2022)திகதிவரை அறிவிக்கவில்லை எனினும், கடந்த ஜனவரி 1ம திகதி முதல் ஐரோப்பிய யூனியனின் தலைமைப் பொறுப்பை France ஏற்றதில் இருந்தே அவரின் பிரசார வியூகங்கள் ஆரம்பித்துவிட்டதாகவும் தேர்தல் குறித்த அதிகாரப்பூர்வ அறிவிப்பை மிக விரைவில் வெளியிடுவார் எனவும் அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர்.*

*2022 தேர்தலில் மக்ரோனுக்கு சவாலாக இருக்கும் வேடப்பாளர்களாக மூவரே பரவலாக எதிர்பார்க்கப்படுகிறார்கள்.*

*1.மரின் லு பென்(Marine le Pen) தேசிய பேரணி:*

*கடந்த 2017 தேர்தலில் இரண்டாம் சுற்றுக்கு தெரிவாகி தோல்வியை சந்தித்த தீவிர வலதுசாரி தலைவரான இவர் தற்போதைய கருத்துக் கணிப்புகளில் தொடர்ந்தும் முதல் சுற்று வாக்கெடுப்பில் முன்னணியில் உள்ளார். தற்போது, பிரான்சின் தேசிய சட்டமன்ற உறுப்பினராக உள்ள இவர், நாட்டின் வெளிநாட்டவர்களுக்கு எதிரான கொள்கைகளுக்காக பிரபலமடைந்தவர். 2021 இல், குடியேற்றத்தை கணிசமாகக் கட்டுப்படுத்தும் மக்கள் வாக்கெடுப்பை முன்மொழிந்துநாட்டின்கவனத்தைஈர்த்தஇவர்,2017 தேர்தல் தோல்வியில் இருந்து பல பாடங்களைக் கற்றுக்கொண்டிருப்பார் என எதிர் பார்க்கலாம்.*

*2.எரிக் செமூர் (Eric Zemmour):*

*மிதவாத வாக்காளர்களையும் ஈர்ப்பதற்காக மரின் லு பென் தனது கட்சியின் தீவிர நிலைப்பாட்டில் இருந்து சற்று இறங்கிவர அதே அதிதீவிர பாதைக்கு மேலும் முலாம் பூசி தனதாக்கிக் கொண்ட மற்றொரு அதி தீவிரவாத வலது வேட்பாளர்தான் இவர். தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி (Talk Show) மூலம் பிரபலமான ஏரிக் செமூர் கடந்த நவம்பர் மாதமே தனது தேர்தல் போட்டி பற்றி அறிவித்து களம் இறங்கி விட்டார், பல வழிகளில் டொனால்ட் டிரம்பை நினைவுபடுத்தும் இவர் பிரான்சில் உள்ள முஸ்லிம்கள் மற்றும் குடியேறிகள் மீது தனது வெறுப்பை வெளிப்படையாகவே காண்ப்பிக்கிறார்,வெளிநாட்டினரை அவர்களின் நிறம் மற்றும் மதத்தின் அடிப்படையில் அவமதித்து கருத்து வெளியிடும் இவர் பிரான்சில் பல தசாப்தங்களாக நீடித்துவரும் குடியேற்றம் மற்றும் தாராளவாதக் கொள்கையில் இருந்து நாட்டை காப்பாற்ற போவதாக அறிவித்துள்ளார். ஓரினச் சேர்க்கையாளர்கள்,பெண்ணியவாதிகள்,மாணவர் போராட்டங்கள் மற்றும் சமூக இயக்கங்களுக்கு எதிரான இவரும் தேர்தலின் இரண்டாம் சுற்றுக்கு தெரிவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. .*

*3.Valerie PecresseLes Republicains: "மூன்றில் இரண்டு பங்கு ஏஞ்சலா மேர்க்கெல் மற்றும் மூன்றில் ஒரு பங்கு மார்கரெட் தாட்சர்",என வர்ணிக்கப்படும் வலரி பெர்கிரேஸ் அம்மையார் மையவலது சாரிய கட்சியின் வேட்பாளர் ஆவார். மக்ரோனை விட மிதமான மற்றும் பழமைவாத, வாக்காளர்களின் ஆதரவையும் பெற சில தீவிர வலதுசாரி சொற் பிரயோகங்களையும் வெளிப்படுத்தி வருகிறார்.*

*பிரான்சில் பெருமளவில், குடியேறியவர்களையும், இஸ்லாமியவாதத்தின் வளர்ச்சியையும் கண்டிக்கும் இவர் நாட்டில் குற்றங்கள் மற்றும் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரிப்பதற்கு இவையே காரணம் என்று தெரிவிக்கிறார்.*

*தேர்தலின் முதல் சுற்றில் மக்ரோன் 24% பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவார் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. ஓட்டப்பந்தயத்தின் இரண்டாவது சுற்றில் அவருக்கு எதிரணியில் மோத இருப்பது யார் என்பது கேள்விக்குறியாகவே உள்ள நிலையிலும் அவர் இரண்டாவது முறையாகவும் பதவியேற்பதற்கான வாய்ப்புகளே அதிகம் உள்ளதாக தெரிகிறது..*

*கடந்த 2017 இல் எலிசே அரண்மனைக்கு யாருமே எதிர்பாராமல் நுழைந்து (Wild card Entry) அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது மட்டுமல்லாது பிரான்ஸ் மற்றும் ஐரோப்பாவின் மேலாதிக்க முகமாக தன்னை நிலைநிறுத்திக் கொண்ட இம்மானுவேல் மக்ரோன் அவரது இரண்டாவது மற்றும் இறுதி பதவிக் காலத்திற்கான போட்டியிலும் தன்னை நிலைநிறுத்திக் கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டாலும் 2017ஐ போன்ற பெரும்பான்மையை பெறுவது சாத்தியமற்றதாகவே காணப்படுகிறது.*

*குடியேற்றம் மற்றும் பயங்கரவாதம் பற்றிய அவரது கருத்துக்கள் நடைமுறைக்கு மாறுபட்டவையாக இருந்த போதிலும், பிரான்சின் கூடுதலான பாரம்பரிய வாக்காளர்கள் மற்றவர்களை விட மக்ரோனையே விரும்புவார்கள் எனெனில் தீவிர வலதுசாரிகளுக்கு அதிகாரத்தை வழங்குவது பிரான்சின் மதச்சார்பற்ற சித்தாந்தத்தை எதிர்மறையாக பாதிக்கும் என்பதால்.*

*மேலும், சீன மற்றும் ரஷ்ய வளர்ச்சி கட்டுப்படுத்தப் படவேண்டும் என்கிற பூசாண்டியின் பேரில் ஐரோப்பா மீதான தனது பிடியை இறுக்கும் அமெரிக்காவிடமிருந்து மீள்வதற்கு ஏதுவான ஆளுமை மிக்க தலைவர்களில் ஒருவரான மைக்ரோனை இழக்க ஐரோப்பிய ஒன்றியமும் விரும்ப மாட்டாது என்பதுவும் யதார்த்தமே..*


இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு

நிதி அமைச்சு

சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டம்

ஆலோசனைச் சேவைகள் - நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஆர்வத்தை வெளிப்படுத்துதல் (EOI)

**பெறுகை நிறுவனத்தின் பெயர்:** நிதி அமைச்சிலுள்ள சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டம்
**செயற்றிட்டத்தின் பெயர்:** சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டம் (SSNP)
**செயற்றிட்ட அடையாள இல.** P156056
**கடன் இல.** 5915

**பணியின் தலைப்பு:** நிதி அமைச்சின் சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தில் ''ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமைக்கான'' மென்பொருள் அபிவிருத்திக் குழுவிற்கான ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவு செய்தல்.
குறிப்பீட்டிலக்கம்: MF/SSNP/4/12/3 - 2022

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம் சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செலவினங்களின் செயற்றிறன் மற்றும் செயற்றிறனை மேம்படுத்துவதற்கு உலக வங்கியிடம் கடனொன்றைப் பெற விண்ணப்பித்துள்ளது. நாட்டின் நிதிநிலைத் தன்மையைப் பராமரிக்கும் அதே வேளையில் செலவானது அர்த்தமுள்ளதாகவும் ஏழை மற்றும் நலிவுற்ற மக்களுக்கு நன்மையாகவும் இருக்க வேண்டும். சமூகப் பாதுகாப்பு வலையமைப்புச் செயற்றிட்டத்தின் (SSNP) இந்த நோக்கத்திற்காக இந்தக் கடனின் ஒரு பகுதியை நிதி அமைச்சின் சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தில் ''ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமைக்கான" மென்பொருள் அபிவிருத்திக் குழுவிற்கான ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவு செய்தல்" எனும் ஒப்பந்தத்திற்காக பயன்படுத்த விரும்புகின்றது.

இலங்கை அரசாங்கத்தின் நிதி அமைச்சு சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தை (SSNP) நலன்புரி நன்மைகள் சபை (WBB), சமுர்த்தி மாநில அமைச்சு, வீட்டுப் பொருளாதாரம், நுண் நிதி, உள்துறை அமைச்சகம், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரகம் (ICTA) ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்துகிறது. நலன்புரி நன்மைகள் சட்டத்தில் கூறப்பட்டுள்ள நோக்கத்தை அடைய. சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தின் (SSNP) நோக்கம் ஏழை மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்களின் நலனுக்காக இலங்கையின் சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களின் மேம்பட்ட சமபங்கு, செயல்திறன் மற்றும் வெளிப்படைத்தன்மைக்கு பங்களிப்பதாகும். ஆலோசனை சேவைகள் (''சேவைகள்") பலன்களை வழங்குவதற்கு வசதியாக, பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களுக்கு பயனாளிகளை பதிவு செய்தல், தேர்வு செய்தல், பதிவு செய்தல் ஆகியவற்றை எளிதாக்கும் வகையில் ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமையை உருவாக்க ஆலோசனை நிறுவனத்தைத் தேர்ந்தெடுப்பதற்கான ஏற்பாடு அடங்கும். பயனாளிகளின் முன்னேற்றத்தை தொடர்ந்து கண்காணித்தல் மற்றும் பொதுமக்கள் குறைகளை இனங்காண்பது மற்றும் கண்காணிப்பதாகும். IWMS முறைமையானது இலங்கையில் பல சமூக பாதுகாப்பு வலைத் திட்டங்களை ஒரே தளத்தில் ஒருங்கிணைக்க முன்மொழிகிறது

நிதி அமைச்சின் சமூக பாதுகாப்பு வலைகள் திட்டத்தின் சார்பாக திட்ட ஆலோசகர்கள் பெறுகைக் குழு (CPCP) இப்போது ஆர்வமுள்ள தகுதியுள்ள ஆலோசனை நிறுவனங்களிடமிருந்து (இலங்கையில் முன்னணி நிறுவனம் வியாபாரப் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்) ஆர்வ வெளிப்பாடுகளை (EOIS) அழைக்கின்றது. ஆர்வத்திற்கான வெளிப்பாடானது "EOI தகவல் படிவத்தில்" குறிப்பிடப்பட்டுள்ளபடி கோரப்பட்ட தகவல்களையும், முக்கிய வியாபாரத்திற்கு ஆதரவாக ஆவண ஆவணங்கள் மற்றும் நிறுவன சுயவிவரத்துடன் வர்த்தகத்தில் ஈடுபட்டுள்ள ஆண்டுகள், கணக்காய்வு செய்யப்பட்ட மூன்று நிதியாண்டுகளுக்கு முந்தைய நிதிநிலை அறிக்கைகள், வியாபாரம் மற்றும் நிர்வாக வலிமை/நிலை, தகுதிகள் ஆகியவற்றைச் சேர்க்க வேண்டும். மற்றும் ஒத்த நோக்கம் மற்றும் சிக்கலான பணிகளை மேற்கொள்வதில் அனுபவம் (இணைப்பு 01 - ''திட்டக் குறிப்புத் தாள்" ஐப் பயன்படுத்தவும் மற்றும் முடிக்கப்பட்ட திட்டங்களுக்கு அந்தந்த வாடிக்கையாளர் வழங்கிய திட்ட நிறைவு கடிதங்களை சமர்ப்பிக்க வேண்டும்). நிறுவனத்தின் தொழில்நுட்ப மற்றும் நிர்வாக அமைப்பு, தொழில்நுட்ப திறன்கள் மற்றும் நிறுவனத்தின் முக்கிய ஊழியர்களின் பொருத்தமான திறன்கள் (முக்கிய பணியாளர்களுக்கான சுயவிபரம் (Curriculum vitae) - இணைப்பு 02 - "CV வடிவம்" பயன்படுத்தவும்) மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள், ஆலோசகர்கள் தங்கள் தகுதிகளை மேம்படுத்திக்கொள்ளலாம். அனைத்து ஆவணங்களும் ஆங்கில மொழியில் இருக்க வேண்டும் மற்றும் கொடுக்கப்பட்ட வடிவங்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும் என்று ஆர்வமுள்ள அனைத்து தரப்பினருக்கும் தெரிவிக்கப்பட்டுகின்றது. கொடுக்கப்பட்ட வடிவங்கள் இல்லாமல் வழங்கப்பட்ட தகவல்கள் மதிப்பீட்டிற்காக கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது.

"குறிப்பு விதிமுறைகள்" (TOR), "திட்டக் குறிப்புத் தாளுடன் EOI தகவல் படிவம்" மற்றும் ''மாதிரி CV வடிவம்" ஆகியவை இப்போது சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தில் (SSNP) மேலதிக தகவலுக்குக் கிடைக்கின்றன. ஆர்வமுள்ள தரப்பினர் இந்த ஆவணங்களை http://www.treasury.gov.lk/web/guest/procurement-notice எனும் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

ஆலோசகர்களின் தகுதித் தேர்வு முறையின் (CQS) அடிப்படையில் ஆலோசனை நிறுவனம் தேர்ந்தெடுக்கப்படும் மற்றும் உலக வங்கியின் வழிகாட்டல்களின் IBRD கடன்கள் மற்றும் IDA கடன்கள் மற்றும் உலக மானியங்களின் கீழ் ஆலோசகர்களைத் தேர்வு செய்தல் மற்றும் பணியமர்த்துதல், வங்கிக் கடன் வாங்கியவர்கள் ஜனவரி 2011 ஜூலை 2014 ஆண்டில் திருத்தப்பட்டது (''ஆலோசகர் வழிகாட்டுதல்கள்") வழிகாட்டியின் தற்போதைய பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகளின்படி தேர்ந்தெடுக்கப்படுவர்:

கோரப்பட்ட அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய ஆர்வத்தின் வெளிப்பாடுகள் 2022-03-15ஆம் திகதி 1500 மணித்தியாலத்திற்கு முன் ஒன்றில் (i) நேரில் ஒப்படைத்தல் (ii) செயற்றிட்டப் பணிப்பாளர், சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டம், நிதி அமைச்சு, 1வது மாடி, புதிய கட்டிடம், கொழும்பு 01, இலங்கை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். ஆர்வத்தின் வெளிப்பாட்டை உள்ளடக்கிய கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் நிதி அமைச்சின் சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தில் "ஒருங்கிணைந்த நலன்புரி முகாமைத்துவ முறைமைக்கான மென்பொருள் அபிவிருத்திக் குழுவிற்கான ஆலோசனை நிறுவனத்தைத் தெரிவு செய்வதற்கான ஆர்வத்தின் வெளிப்பாடு" எனக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் ஆர்வ வெளிப்பாடுகள் நிராகரிக்கப்படும் மற்றும் திறக்கப்படமாட்டாது.

மேலதிக தகவல்களை சமூக பாதுகாப்பு வலையமைப்புத் திட்டத்தின் பெறுகை முகாமையாளரிடமிருந்து அலுவலக நேரங்களில் (0900 முதல் 1500 மணித்தியாலம் வரை உள்ளூர் நேரம்) +94112484600 - நீடிப்பு 1186/1138 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**செயற்றிட்ட ஆலோசனைப் பெறுகைக் குழு (CPCP),**
**சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு செயற்றிட்டம்,**
**நிதி அமைச்சு,**
**1ஆம் தளம், புதிய கட்டிடம், கொழும்பு 01,**
**இலங்கை.**
**2002-02-27**







மங்கையர் முற்றம்

# எதிரிகளும் எமக்கு நன்மை செய்வார்கள்

**நாம்** செய்யும் செயல்களில் குறைகள் இருக்கத்தான் செய்யும். அந்த குறைகளை சுட்டிக்காட்டும்போது வருத்தப்படாமல் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோமேயானால் நம்மை நாமே செம்மைப்படுத்திக் கொள்ளலாம்.

நாம் எதிரிகளே இல்லாத வாழ்க்கை வாழ விரும்புகிறோம். அது தவறு. எதிரிகள் நமக்கு பல விஷயங்களை கற்றுத்தருவார்கள். அவைகளை நாம் கற்றுக்கொண்டால்தான் பலம் பெற முடியும். நமக்கு எதிரிகள் இல்லாவிட்டால் நமது குறைகளே நமக்கு தெரியாது.

எந்த நேரம் நம்மை பற்றி என்ன விமர்சனம் வருமோ என்று நாம் விழிப்புடன் இருக்க நமது எதிரிகள்தான் உதவுகிறார்கள். அதனால் நாம் செய்யும் ஒவ்வொரு செயலிலும் நமக்கு விழிப்புணர்வு ஏற்படுகிறது.

நம்மையும் சிலர் உற்று நோக்குகிறார்கள் என்ற எண்ணம் நம்மை ஒவ்வொன்றிலும் சிறப்பாக செயல்பட வைக்கிறது. அந்த வகையில் நம் திறமைகளை பெருக்கிக்கொள்ள எதிரிகள் ஒரு தூண்டுகோலாக இருக்கிறார்கள்.

நம் ஒவ்வொருவருக்கும் எப்போதும் ஒரு தூண்டுகோல் தேவை. நாம் எங்கேயாவது சோர்ந்து உட்கார்ந்து விடாமல் இருக்க அந்த தூண்டுகோல்தான் உதவுகிறது.

எதிரிகளே இல்லாத அரசனுக்கு வெற்றி என்பது கிடையாது. அப்படிப்பட்டவர்களுக்கு சரித்திரத்திலும் இடம் கிடையாது. ஒரு அரசனின் அத்தனை புகழுக்கும் காரணம் அவரது எதிரிகள்தான். ஒருவரது வீரமும், விவேகமும் எதிரிகள் முன்னிலையில்தான் பறைசாற்றப்படுகிறது அப்படியானால் எதிரிகள் மதிப்பிற்குரியவர்கள் தானே!

நண்பர்களை புகழ்ந்து கொண்டாடும் நேரத்தில் எதிரிகளை பற்றியும் சிந்திக்க வேண்டும். இருவரையும் கவனித்து கணித்துப் பார்க்க வேண்டும். அப்போது நண்பர்கள் மூலம் கிடைத்த பலன்களைவிட எதிரிகள் மூலம் கிடைத்த பலன் அதிகம் என்பது புரியும். எதிரிகளாக யாரையாவது நினைத்து மன அழுத்தம் கொள்ளும்போது, பழைய எதிரிகளால் கிடைத்த நன்மைகளை கணக்குப்போட்டு பார்த்தால், அந்த மனஅழுத்தம் நீங்கிவிடும்.

'எந்த ஒரு தொழிலிலும் போட்டி என்ற ஒன்று இல்லாவிட்டால் புதிய சிந்தனைகள் எதுவும் தோன்றாது' எதிரிகளை சந்திக்க தயாராக இல்லாதவர்களால் வெற்றியை எட்டவே முடியாது. பெரிய தொழிலதிபர்களிடம் கேட்டால் அவர்கள் எதிரிகளை பற்றிதான் நிறைய தெரிந்து வைத்திருப்பார்கள். அவர்களை பற்றிதான் நிறைய கதைகளை சொல்வார்கள்.

ஆனால் ஒரு உண்மையை எல்லோரும் ஒத்துக்கொண்டுதான் ஆகவேண்டும். யாராலும் எதிரிகளை நேசிக்க முடியாது. எதிரிகளை நினைத்து வேதனைப் படாமல், தற்போது இருப்பதைவிட சிறப்பாக அவர்கள் முன்னால் வாழ்ந்து காட்டுவேன் என்று உறுதி எடுத்துக்கொள்ளுங்கள். அப்படி உறுதி எடுத்துக்கொள்ளும்போது பல விதமான புதிய வழிகள் தோன்றும். முயற்சி நம் முன்னே வந்து நிற்கும். அதுதான் வெற்றிக்கான வழி.

நாம் செய்யும் செயல்களில் எப்படியும் குறைகள் இருக்கத்தான் செய்யும். நம்மை சுற்றியிருக்கும் நண்பர்கள் அந்த குறைகளைக்கூற தயங்குவார்கள்.

ஆனால் எதிரிகள் அந்த குறைகளை தயங்காமல் கூறுவார்கள். அதை நினைத்து வருத்தப்படாமல் குறைகளை நிவர்த்தி செய்ய முயற்சி செய்வோமேயானால் நம்மை நாமே செம்மைப்படுத்திக் கொள்ளலாம்.

யாருடைய குறைகளும் நிரந்தரமானது அல்ல. எதிரிகள் முன்பு நம்மை ஹீரோவாக காண்பிக்க முயற்சி செய்யும்போதுதான் நமது திறமைகள் நமக்குள்ளே இருந்து வெளிவரும்.

# கெரட்டீன் சிகிச்சை



கெரட்டீன் என்பது ஒருவகையான புரதம். இது தலைமுடியை வலுவாக்கும். தலைமுடி உதிர்வதை முற்றிலும் நிறுத்தும். ஆனால், தலைமுடிக்கு இது தற்காலிகமாக சில மாதங்களுக்கு மட்டுமே பொலிவைக் கொடுக்கும். இந்த கெரட்டீன் சிகிச்சை பெரும்பாலும் அழகு சிகிச்சை நிலையங்களில் தான் செய்யப்படுகிறது.

இச் சிகிச்சைக்கு சில க்ரீம்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதனால் கண் எரிச்சல், தலைமுடி வேர்க்கால்களில் அழற்சி போன்ற சில பக்க விளைவுகள் ஏற்படுகின்றன.

பக்க விளைவுகள் இல்லாமல் கண்டிப்பாக வீட்டிலுள்ள சில பொருட்களை வைத்து மிக எளிமையாக சிலவே இல்லாமல் கெரட்டீன் சிகிச்சை செய்து கொள்ள முடியும். இதற்கு



**தேவையான பொருள்கள்**

தேங்காய்ப்பால் - கால் கப்
தேங்காய் எண்ணெய் -3 ஸ்பூன்
அரிசி சாதம் -4 ஸ்பூன்
முட்டையின் வெள்ளைக்கரு - 1

**பயன்படுத்தும் முறை**

முதலில் தேங்காய்ப்பாலில் தேங்காய் எண்ணெய் மற்றும் முட்டையின் வெள்ளைக் கரு சேர்த்து நன்கு கலந்து கொள்ளுங்கள். இதை நன்கு அடித்து எடுத்தால் அது பேஸ்ட் போல வரும்.



அதனுடன் அரிசி சாதத்தைச் சேர்த்து நன்கு பிளண்டரில் போட்டு பேஸ்ட்டாக்கி தலையில் பிரஷால் பூசி விடுங்கள்.

45 நிமிடங்கள் அப்படியே உலர விட்டுவிட்டு பின் மென்மையான ஷெம்பு கொண்டு தலையை அலசுங்கள்.

**குறிப்பு இந்த சிகிச்சை செய்து கொண்ட பின் அடுத்த மூன்று நாட்களுக்குத் தலைக்கு ஷாம்பு பயன்படுத்தக்கூடாது.**



# மிளகாய்

காய்ந்த மிளகாயை வறுக்கும்போது சிறிது கல் உப்புப்போட்டு வறுத்தால் கமறல் ஏற்படாது. வீடு சின்னதாக இருந்தாலோ வீட்டில் கைக்குழந்தைகள் இருந்தாலோ நெயில்லாமல் காய்ந்த மிளகாய் வறுக்க இந்த முறையைப் பின்பற்றலாம்.



உங்களுக்குத் தெரியுமா?



# முகம் பளபளக்க தேங்காய்த் தண்ணீர்

**தினமும் 1 டம்ளர் தேங்காய்த் தண்ணீர் குடியுங்கள். இது உங்கள், சருமத்திற்கு பளபளப்பைக் கொடுக்கவும், சுருக்கங்கள் மற்றும் நேர்த்தியான கோடுகளைக் குறைக்கவும், முகப்பரு / பருக்களுக்கு சிகிச்சையளிக்கவும் மற்றும் சருமத்தின் ஈரப்பதத்தை அதிகரிக்கவும், உடலில் நீரேற்றத்தை அதிகரிக்கவும் உதவுகிறது. இனி தேங்காய் தண்ணீரை வீணாக்காதீர்கள்.**

# மன உளைச்சலுக்குள்ளாக்கும் முகப்பரு



முக அழகைக் கெடுக்கும் முகப்பருக்கள் வந்துவிட்டாலே தொல்லைதான். இது இளம் வயதினரை பாதிப்புக்குள்ளாக்கும் பிரச்சினையாகும். இதனால் ஏற்படும் மனஉளைச்சலும் தாழ்வுமனப்பான்மையும் கடுமையானவை.

முகப்பருக்கள் வரும் அறிகுறி தெரிந்தாலே அதை நீக்க முயற்சி செய்வது அவசியம். இதற்கு சுத்தமான காற்றும், சூரிய ஒளியும் முகத்துக்குத் தேவை. அவ்வப்போது காலையில் 7 முதல் 8 மணி வரை சன்பாத் எடுப்பது அவசியம்.

**முகப்பரு வராமல் தடுப்பது எப்படி?**

★ முகப்பருக்கள் வராமல் தடுக்க உணவுக் கட்டுப்பாடு மிகவும் அவசியம். எளிதில் ஜீரணம் ஆகக்கூடிய உணவுகளையே உண்ண வேண்டும். பழங்கள், காய்கறிகள், கீரை வகைகளை உணவில் அதி கம் சேர்க்க வேண்டும்.

★ கீரைகள் மற்றும் பச்சைக் காய்கறிகளை நிறையச் சாப்பிட வேண்டும். தினமும் இரண்டு லீட்டருக்குக் குறையாமல் தண்ணீர் குடிக்க வேண்டும்.

★ கொழுப்பு நிறைந்த அசைவ உணவுகளையும், நெய், வெண்ணெய், கேக், ஐஸ்கிரீம், சொக்லேட் போன்றவற்றையும் தவிர்ப்பது நல்லது.

பருக்கள் ஏற்பட, மலச்சிக்கல் ஒரு முக்கியக் காரணி. அன்றாட உணவு பழக்கத்தைச் சரிசெய்வதன் மூலமாக மலச்சிக்கல் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

★ பருக்களைக் கிள்ளவோ, அழுத்தவோ கூடாது. மருத்துவரின் பரிந்துரை இல்லாமல், கடைகளில் கிடைக்கும் எந்தவித வாசனை சோப்புகளையும் லோஷன்களையும் பயன்படுத்தக் கூடாது.

★ முகத்தில் எண்ணெய் வழியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். அவ்வப்போது நீரில் முகத்தைக் கழுவி, சுத்தப்படுத்த வேண்டும்.

தினமும் உடற்பயிற்சி செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும்போது வெளியேறும் வியர்வையால், சருமத் துவாரங்களில் உள்ள அழுக்குகள் நீங்கி, பருக்கள் வராமல் தடுக்க உதவும்.

**முகப்பரு நீங்க இயற்கை மருத்துவம்**

★ துளசி இலையை எடுத்து, நன்கு காயவைத்து பொடி செய்து, அதில் மஞ்சள்தூள் கலந்து குளிப்பதற்கு முன்பு முகத்தில் பூசவும். நன்கு உலர்ந்த பிறகு குளித்தால் சில நாட்களிலேயே பருக்களும் வடுக்களும் காணாமல் போய்விடும்.

★ வேப்பிலை ஒரு கைப்பிடி எடுத்து நீரில் நன்கு கொதிக்க வைத்து ஆறிய பிறகு அந்த நீரில் முகத்தைக் கழுவி வந்தால் பருக்கள் குறையும். பருத்தொல்லை நீங்க உதவும்.

★ வெந்தியகீரை ஒரு கைப்பிடி அளவு, துளசி சிறிதளவு,கொத்தமல்லியிலை சிறிதளவு ஆகியவற்றை ஒன்றாக அரைத்து பருக்கள் மீது தடவினால் பருக்கள் மறைய உதவும்.

★ வெள்ளரி 2 துண்டுகள், தக்காளி 2 துண்டுகள் மற்றும் கரட் 2 துண்டுகள் ஆகியவற்றை ஒன்றாக அரைத்து அவற்றில் தேன் கலந்து முகத்தில் தடவி வர முகப் பருக்கள் நீங்க காணலாம்.

★ தொற்றுக் கிருமிகளை நீக்கும் ஆற்றல் பூண்டுக்கு உண்டு. குறிப்பாக இதில் இருக்கும் சல்ஃபர் முகப்பருக்களை போக்க கூடியது.

பூண்டை மையாக அரைத்து அதன் சாறை பருக்கள் உள்ள இடத்தில் தடவுங்கள். முகப்பருக்கள் நீங்கி, முகம் பளிச்சென்று அழகு பெறும்.

★ முகப்பரு வரக் காரணமான கிருமிகளை எலுமிச்சை முற்றிலும் அழித்துவிடும். எலுமிச்சை சாறைப் பிழிந்து, பஞ்சில் நனைத்து பருக்களின் மேல் ஒத்தி எடுங்கள். பருக்கள் உடைந்து இருந்த இடம் தெரியாமல் போகும்.

# உடலை வலுப்படுத்தும் இஞ்சி துவையல்

இஞ்சி துவையல் நோயெதிர்ப்பு சக்தியை வலுப்படுத்தும். பித்தத்தை குறைத்து உடலுக்கு நன்மை தரும்.

**தேவையான பொருட்கள்**

காய்ந்த மிளகாய்
தேங்காய் துருவல்
உ.பருப்பு
இஞ்சி
புளி
கடுகு
கறிவேப்பிலை



**செயல்முறை**

வாணலியில் சிறிது எண்ணெய் விட்டு, காய்ந்த மிளகாய், தேங்காய் துருவல், உ.பருப்பு, இஞ்சி ஆகியவற்றை பொன்னிறமாக வதக்கவும். பிறகு உப்பு, புளி, நீர் சேர்த்து அரைக்கவும். இறுதியில் கடுகு, உ.பருப்பு, கறிவேப்பிலை சேர்த்து தாளிக்கவும்.



# சினிமாவுக்கு முழுக்கு போடும் நடிகை சயீஷா..

ஜெயம் ரவி நடிப்பில் வெளிவந்த வனமகன் படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் கதாநாயகியாக பிரபலமானவர் நடிகை சயீஷா.

இப்படத்திற்கு பின், கார்த்தியுடன் கடைக்குட்டி சிங்கம், சூர்யாவுடன் காப்பான் என முன்னணி நட்சத்திரங்களுடன் இணைந்து நடித்து வந்தார். இவருக்கு கடந்த 2019ஆம் ஆண்டு நடிகர் ஆர்யாவுடன் திருமணம் நடைபெற்றது. இதனை தொடர்ந்து கடந்த ஆண்டு அழகிய பெண் குழந்தைக்கு தாய் ஆனார். இந்நிலையில், தற்போது குடும்பத்தை பார்த்து கொள்வதா, இல்லை சினிமாவில் பாடங்கள் நடிப்பதா என்று குழப்பத்தில் இருக்கிறாராம் நடிகை சயீஷா.

இதனால், விரைவில் நடிகை சயீஷா சினிமாவை விட்டு விலகிவிடுவார் என்று கூறப்படுகிறது.



சினி மஞ்சரி

# பிக்பாஸ் நிகழ்ச்சியில் களமிறங்கிய சிம்பு



ரசிகர்களால் கொண்டாடப்படும் பிக்பாஸ் நிகழ்ச்சியை தொகுத்து வழங்க நடிகர் சிம்பு களம் இறங்கியிருக்கிறார். சிம்பு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் மிகவும் பிரபலமானது பிக்பாஸ் நிகழ்ச்சி. இந்த நிகழ்ச்சிக்கென்று தனி ரசிகர்கள் பட்டாளமே நிரம்பியுள்ளது. இந்நிகழ்ச்சியை நடிகர் கமல்ஹாசன் தொகுத்து வழங்கி வருகிறார். இதுவரை தமிழில் ஐந்து சீசன்கள் முடிந்துள்ளன. தற்போது பிக்பாஸ் அல்டிமேட் என்ற புதிய நிகழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்த பிக்பாஸ் அல்டிமேட் நேரடியாக ஓடிடி தளத்தில் 24 மணி நேரமும் ஒளிப்பரப்பாகிறது, இதனையும் நடிகர் கமல் தொகுத்து வழங்கி வந்தார்.

பல போட்டியாளர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்நிலையில், கடந்த 21ஆம் திகதியன்று பிக்பாஸ் அல்டிமேட் நிகழ்ச்சியில் இருந்து வெளியேறுவதாக நடிகர் கமல்ஹாசன் அறிவித்திருந்தார். இதனை சற்றும் எதிர்ப்பார்க்காத பிக்பாஸ் ரசிகர்கள், அடுத்து இதனை தொகுத்து வழங்கப் போவது யார் என முணுமுணுத்து வந்தனர். இந்நிலையில் இதனை தொகுத்து வழங்க நடிகர் சிம்பு களம் இறங்கியுள்ளார். இதனை அதிகாரப்பூர்வமாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது. சிம்பு இடம்பெற்றுள்ள புரோமோ வீடியோ சமூக வலைத்தளத்தில் வைரலாக பரவிவருகிறது.



# பிரபல மலையாள நடிகை லலிதா காலமானார்

பிரபல மலையாள நடிகை லலிதா உடல் நலக் குறைவால் காலமானார். விஜய் நடிப்பில் வெளியாகி சூப்பர் ஹிட்டான காதலுக்கு மரியாதை என்ற படத்தில் ஷாலினிக்கு அம்மாவாக நடித்தவர் நடிகை கேபிஏசி லலிதா (74). இவர் ஏராளமான மலையாள படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்து பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இந்நிலையில், நடிகை லலிதா உடல்நலக் குறைவால் காலமானார். அவரது மறைவுக்கு சினிமா பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் இரங்கல் தெரிவித்து வருகின்றனர்.

மலையாளம் மற்றும் தமிழ் என மொத்தம் 550க்கும் மேற்பட்ட படங்களில் நடித்துள்ளார். நடிகை லலிதாவின் மரணம் மலையாள திரையுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# புதிய சாதனை படைத்த தனுஷ் பாடல்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகரான தனுஷின் பாடல் புதிய சாதனை படைத்துள்ளதை ரசிகர்கள் கொண்டாடி வருகின்றனர்.

தனுஷ் துள்ளுவதோ இளமை படத்தின் மூலம் தமிழ் சினிமாவிற்கு அறிமுகமானவர் நடிகர் தனுஷ். அதன்பின் காதல் கொண்டேன், திருடா திருடி, புதுப்பேட்டை, பொல்லாதவன், ஆடுகளம் போன்ற பல படங்களில் நடித்து தனக்கென தனி ரசிகர்கள் பட்டாளத்தையே உருவாக்கிக் கொண்டார். 2015இல் இவர் நடித்த "மாரி" திரைப்படம் அனைவரின் கவனத்தையும் ஈர்த்தது.

இயக்குனர் பாலாஜி மோகன் இயக்கிய இந்த திரைப்படத்தில் தனுஷின் கதாப்பாத்திரத்திற்கும் அவருடைய காஸ்டியூமிற்கும் இன்றளவும் ரசிகர்கள் குவிந்திருக்கின்றனர். இப்படத்தில் அனிருத் இசையமைத்த அனைத்து பாடல்களும் ஹிட் அடித்தது. இந்நிலையில் மாரி படத்தில் இடம் பெற்ற "தரலோக்கல்" என்ற பாடல் 100 மில்லியன் பார்வையாளர்களை கடந்து புதிய சாதனை படைத்துள்ளது.

இப்பாடல் தனுஷுடைய 100 மில்லியன்களை கடந்த 5வது பாடல் என்பது குறிப்பிடத்தக்கது.





# ரஷ்மிகாவுடன் திருமணமா?.. விஜய் தேவரகொண்டா விளக்கம்

தெலுங்கு திரையுலகின் முன்னணி நடிகை ராஷ்மிகாவுடன் திருமணம் என்று பரவிய தகவலுக்கு நடிகர் விஜய் தேவரகொண்டா பதிலளித்துள்ளார். ரஷ்மிகா மந்தனா விஜய் தேவரகொண்டா தெலுங்கில் திரையுலகில் பிரபல கதாநாயகியாக இருப்பவர் ரஷ்மிகா மந்தனா. தமிழில் கார்த்திக்கு ஜோடியாக சுல்தான் படத்தில் நடித்து பிரபலமானார். தெலுங்கில் நடித்த "டியர் காமரேட்" படம் தமிழிலும் வந்தது. அல்லு அர்ஜுன் நடிப்பில் தமிழ், தெலுங்கு, இந்தி மொழிகளில் வெளியாகி வசூல் குவித்த புஷ்பா படத்திலும் கதாநாயகியாக வந்தார்.

ரஷ்மிகாவும், முன்னணி தெலுங்கு நடிகர் விஜய் தேவரகொண்டாவும் காதலிப்பதாகவும், திருமணம் செய்துகொள்ள முடிவெடுத்து இருப்பதாகவும் ஏற்கனவே கிசுகிசுக்கள் வந்தன. இருவரும் ஜோடியாக சுற்றும் புகைப்படங்களும் வெளிவந்தன. இதனை ரஷ்மிகா மறுத்திருந்தார். தனக்கு திருமணம் செய்து கொள்ளும் அளவுக்கு போதிய வயது இல்லை என்றும், திருமணத்தை பற்றி யோசிக்க நேரம் இல்லை என்றும் கூறியிருந்தார். இந்த நிலையில் ராஷ்மிகாவும், விஜய் தேவரகொண்டாவும் திருமணம் செய்துகொள்ள தயாராகி இருப்பதாகவும், இவர்கள் திருமணம் விரைவில் நடக்க உள்ளது என்றும் தெலுங்கு இணையதளங்களில் தீயாக தகவல் பரவியது. திருமண திகதியை ரகசியமாக வைத்துள்ளனர் என்றும் கூறப்பட்டது.

இந்நிலையில் இதற்கு பதிலளிக்கும் வகையில் நடிகர் விஜய் தேவரகொண்டா சமூக வலைத்தளத்தில் பதிவிட்டிருக்கிறார். அதில், வழக்கம் போல் கிசுகிசுக்கப்படுகிற செய்தி தான் இது. இந்த செய்தியை நாங்கள் ரசிக்கிறோம் என்று பதிவிட்டிருக்கிறார்.



# புதிய அவதாரம் எடுக்கும் பூமிகா..

விஜய், சூர்யாவுடன் ஜோடியாக நடித்த நடிகை பூமிகா தற்போது புதிய அவதாரம் எடுத்திருப்பது அவருடைய ரசிகர்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளது.பூமிகாதமிழில் 2001ல் விஜய் நடித்த பத்ரி படம் மூலம் கதாநாயகியாக அறிமுகமானவர் பூமிகா. அதன்பிறகு ரோஜா கூட்டம் படத்தில் ஸ்ரீகாந்துடன் நடித்தார். பின்னர், சில்லுனு ஒரு காதல் படத்தில் சூர்யாவுக்கு ஜோடியாக நடித்து இருந்தார். இந்த படம் மூலம் பல ரசிகர்களை தன்வசப்படுத்திக் கொண்டார்.

களவாடிய பொழுதுகள், கொலையுதிர் காலம் உள்ளிட்ட மேலும் சில படங்களிலும் நடித்துள்ளார். தெலுங்கிலும் முன்னணி கதாநாயகியாக இருக்கும் பூமிகா. 2007ல் பரத் தாகூர் என்பவரை திருமணம் செய்து கொண்டார். சமீப காலமாக பூமிகாவுக்கு கதாநாயகி வாய்ப்புகள் கிடைக்கவில்லை. இதனால் குணச்சித்திர வேடங்களில் நடித்து வந்தார்.

இந்நிலையில், தற்போது கதாநாயகியின் அம்மா கதாபாத்திரத்தில் நடிக்க வந்துள்ளார். மலையாளத்தில் தயாராகும் "பட்டர்பிளை" என்ற படத்தில் கதாநாயகியாக நடிக்கும் அனுபமா பரமேஸ்வரனுக்கு அம்மாவாக நடிக்கிறார். விஜய், சூர்யாவுக்கு ஜோடியாக வந்தவர் தற்போது, அம்மா கதாபாத்திரத்தில் நடிப்பதை ரசிகர்கள் பரபரப்பாக பேசுகின்றனர்.

தாய், மகள் பாசத்தை மையமாக வைத்து இந்த படம் தயாராகிறது. தொடர்ந்து பூமிகாவுக்கு கதாநாயகன் மற்றும் கதாநாயகிக்கு அம்மா வேடத்தில் நடிக்க வாய்ப்புகள் வருகின்றன.

# கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸின் சான்றிதழ் வழங்கும் விழா

**இலங்கையில் வாழும் அனைவருக்கும் கல்வி சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதனை தமது இலக்காகக் கொண்டு கல்விச் சேவையினை கோல்டன் கொலேஜ் கல்வி நிறுவனம் வழங்கி வருகின்றது**

இக்பால் அலி
படங்களும் தகவல்களும்



கண்டி பேராதனை வீதியில் 548 இல் அமைந்துள்ள கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸ் மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கற்கை நெறியினை மேற்கொள்ளும் அதி உயர் கல்வி நிறுவனமாகும். நாட்டின் மாணவர்களது தொழில் வழிகாட்டுதலை மேற்கொள்வதற்கும் மாணவர்களது முன்னேற்றகரமான கல்வி வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்காக இக் கல்வி நிறுவனம் 2009 ஆகஸ்ட் 8 ஆம் திகதி ஸ்தாபிக்கப்பட்டது. இதன் முகாமைத்துப் பணிப்பாளர் தலைவருமான ஏ. எம். எம். பரக்கத் அலி திகழ்கிறார். தொழில் கல்வி விரிவுரையாளர்கள் மற்றும் அலுவலக உத்தியோகஸ்தர்கள் உள்ளிட்ட குழுமத்தினர்கள் இணைந்து மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கற்கை நெறியை திறன்பட வழங்கி வருகின்றனர்.

2009 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இக்கல்வி நிறுவனம் விஸ்தரிக்கப்பட்டு கம்பளை, கெலிஓய, கட்டுகஸ்தோட்டை, உக்குவளை, பறகஹதெனிய, மல்லவப்பிட்டிய போன்ற பிரதேசங்களிலும் கிளை நிறுவனங்களை ஸ்தாபித்து வெற்றிகரமான முறையில் தமது அடையாளத்தை முழுமையாகப் பதிவு செய்துள்ளது.இக் கல்லூரியில் கற்கை நெறியை மேற்கொள்ள வரும் மாணவ மாணவிகள் அனைவருக்கும் திறன்பட கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. பட்டம் பெற்று வெளியே செல்லும் மாணவர்கள் தம் தொழில் துறையில் ஆரோக்கியமானதாகவும் திறப்படவும் சிறப்பாகவும் மேற்கொள்வதற்கு அதி உட்சபட்ச கற்பித்தலை இக்கல்வி நிறுவனம் வழங்கி வருகிறது.

கொவிட் 19 கொரோனா தொற்றுக் காலத்தில் நாடு முடக்கப்பட்ட சூழலிலும் கூட மாணவர்களது கல்வி நிலை பாதிக்காமல் இணையவழியின் மூலமாக கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகள் தளர்வடையாமல் மேற்கொள்ளப்பட்டன. பாடம் தொடர்பான பல்வேறு மதிப்பீட்டுக் கருத்தரங்குகள் மற்றும் இணையவழிக் கருத்தரங்குகள் போன்றவை இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

சர்வதேச ரீதியாகவும் மற்றும் உள் நாட்டு மட்டத்திலும் மாணவர்களின் திறமையை மேம்படுத்துதல் என்பவற்றின் ஊடாக சவால்களுக்கு முகம் கொடுக்கக் கூடிய அதிக சந்தை வாய்ப்புள்ள மூன்றாம் நிலை தொழில் முறைக் கல்விக்குரிய கற்கை நெறிகளே இங்கு போதிக்கப்படுகின்றன. கூடியளவிலான மாணவர், மாணவிகள் தொழில் தகைமையை பெற்றுக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உயர் பதவிகளையும் வகித்து வருகின்றனர்.

இலங்கையர்களுக்கு உலக அங்கீகாரம் பெற்ற வேலைவாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்பை உருவாக்குவதே இக்கல்லூரியின் முக்கியமான தொலை நோக்காகும். அந்த நோக்கத்திற்கு அமைய சிறிய மற்றும் ஆரம்ப கல்வி, பட்டப்படிப்பு, வியாபார முகாமைத்துவம், கணனி தொழில் நுட்பம், பொறியியல், படம் வரைஞர், சுற்றுலா, முகாமைத்துவம், முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கற்பித்தல் கல்வி, கணக்கியல், எயா லைன் டிக்கட்டிங், ஆங்கில மொழி, இஸ்லாமிய வங்கி முறை, கையடக்கத் தொலைபேசி திருத்துதல், வாகனப் பொறியியல் தொழில் நுட்பம் என இன்னும் எத்தனையோ கற்கை நெறிகள் திறமை மிக்க இலங்கை மாணவர்களுக்கு உரிய கல்வியை சிறந்த முறையில் பயிற்சியுடன் பெற்றுக் கொடுத்து அவர்களது தொழில் வாழ்க்கையை மேம்படுத்தி வரும் கோல்டன் கொலேஜ் சிட்டி கம்பஸ் கண்டி மாவட்டத்திலும் அம்மாவட்டத்தை அண்மித்த புறநகரங்களிலும் கிளைகளை வியாபித்துள்ளது.







கோல்டன் கொலேஜ் சிட்டி கெம்பஸ் ஆனது இக்கல்லூரியில் கல்வி பயிலும் மாணவர்களின் நலன் கருதி மூன்றாம் நிலைக் கல்வி தொழில் கல்வி ஆணைக் குழுவின் கீழ் பதிவு செய்யப்பட்டு (TVEC Reg. No. PO9/0148) அரச அங்கீகாரச் சான்றிதழ்களையும் மற்றும் சர்வதேச நாடுகளுடைய பல்கலைக்கழக சான்றிதழ் அங்கீகாரத்தையும் பெற்று செயற்படும் கல்வி நிறுவனமாகும்.

இக்கல்வி நிறுவனம் வெளிநாட்டு உள்நாட்டு பல்கலைக்கழகங்களுடன் மிக நெருக்கமான உறவைப் பேணி வருகிறது. இலங்கையில் குறிப்பாக தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தோடு இணைந்து வெளிவாரி பட்டப்படிப்பு கற்கை நெறிகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே இக் கல்வி நிறுவனத்தின் கல்வி பயிலும் மாணவர்கள் வெளிநாடுகளில் தொழில்வாய்ப்பை பெற்றுக் கொள்வதற்கான பல்வேறு கற்கை நெறிகள் இங்கு கற்பிக்கப்படுகிறது. அதுவும் திறன்வாய்ந்த விரிவுரையாளர்கள் திறன்பட தமது பங்களிப்பை மாணவர்களின் நலன்களுக்காக செய்து வருகிறார்கள். இதன் காரணமாக மாணவர்களின் தொகை அதிகரித்துள்ளதுடன் புறநகரங்களில் இந்நிறுவனத்தின் கிளைகளையும் திறந்து கல்வி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாடசாலையை விட்டு வெளியேறுவோருக்கான தொழில் வழிகாட்டி புறநகரங்களில் நடைபெறும் நிகழ்ச்சித் திட்டங்களில் ஏராளமான மாணவர்கள் கலந்து கொள்கின்றனர். இக்கற்கை நெறிகளை மேற்கொள்வதற்கு தூர இடங்களில் இருந்து வரும் மாணவர்களின் நலன்கருதி ஆண், பெண் இருபாலாருக்கும் வெவ்வேறான தங்குமிட விடுதி வசதிகளும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளமை முக்கிய அம்சமாகும்.

தொழிலை நாடி நிற்கும் இளைஞர்கள் பாடசாலையை விட்டு வெளியேறுபவர்கள் இணைந்து கொள்ளும் விதத்தில் இங்கு பல்வேறு பட்ட கற்கை நெறிகள் மூன்றாம் நிலை தொழில் முறைக் கல்விகள் கற்பிக்கப்படுகின்றன.

தற்போது க. பொ. த உயர் தரப் பரீட்சை எழுதி விட்டு பெறுபேற்றுக்கு காத்திருக்கும் மாணவர்களின் எதிர்கால நலனைத் கருத்திற் கொண்டு குறுகிய காலத்தில் சான்றிதழைப் பெற்றுக் கொள்ளும் வகையில் கற்கை நெறிகள் போதிக்கப்படுகின்றன. கனணி கற்கை நெறி, படவரைஞர், வெப் டிசைனிங், ஆங்கில மொழிக் கல்வி, ஹார்ட்வெயார் உள்ளிட்ட தொழில் கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.



Real Access Program (Pre Degree Course) Diploma in Construction Management (Auto Cad computer Aided Desining and Derafting. M S Projct. MEP Auto Cad ) Busines Management. Hotel Managment, Computerized Accounting, Teacher Training Program, Airline Ticketing, Netwark Admnistration, English IT, Mobile Phone Repairing, Islamic Banking and Finanec and Automobile Engineering Technology,

முதலிய பாடங்கள் இங்கு போதிக்கப்படுகின்றன.

மத்திய மலைநாட்டின் தலைநகரமான கண்டி நகரில் 12 ஆண்டுகளாக சர்வதேசம் அங்கீகரிக்கப்பட்ட பட்டப்படிப்புகள் மூலம் இலங்கையிலும் உலகெங்கிலும் பெறுமதிமிக்க கல்வித் தகுதிகளையும் தரத்தையும் தொடர்ந்து வழங்கி வருகிறது. உயர் கல்வித் துறையில் ஒரு முன்னோடியாக உள்ள வெளிநாட்டுப் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தொழில் முகவர்களாகவும் வணிகத் தலைவர்களாகவும் பட்டதாரிகளாக மாற்றுவதற்கு கோல்டன் கொலேச் சிட்டி கம்பஸ் வலுவூட்டக் கூடியதாக அமைந்துள்ளது. இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் உத்தரவாதம் அளிக்கும் அதேவேளையில் தொழில் வாய்ப்பை விரைவாக பெற்றுக் கொள்ள வழிகோலும் கல்வி நிறுவனமாக அமைந்துள்ளது என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

உயர்தர கல்வியை வழங்க வேண்டும் என்று ஆரம்பிக்கப்பட்ட இக்கல்வி நிறுவனம் இலங்கை மாணவர்களின் கல்வித் தேவைகளை கணிசமானளவு பூர்த்தி செய்துள்ளது.





கோல்டன் கொலேஜ் சிட்டி கம்பஸ் ஆசிரியர் பயிற்சி நெறியை நிறைவு செய்த ஆசிரியைகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் கண்டி இந்து கலாசார நிலையத்தில் இக்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரும், தலைவருமான ஏ.எம். எம். பரக்கத் அலி தலைமையில் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறுகிறது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக அல்சாப மஹா வித்தியாலயத்தின் அதிபர் நூஸ்ரி நிதார், அக்குறணை முஸ்லிம் பாலிகா மஹா வித்தியாலயத்தின் அதிபர் சுஹீரா சித்தீக் நுஸ்ரி ஆகியோர் கலந்து சிறப்பிக்கின்றனர்.



இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக சி. சி. ஏ. எஸ். கெம்பஸ் தலைவர் செய்னுலாப்தீன் நஜிமுடீன், மடவளை எமரல்ட் கல்லூரியின் பணிப்பாளர் சுல்பிகார் அலி , ஐடெக் கல்வி நிறுவனத்தின் இயக்குனர் ஐ. ஐனுடீன், கண்டி மாநகர சபை உறுப்பினர் ஏ. சி. எம். ஏ. மரைக்கார் உள்ளிட்ட முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பிக்கின்றனர்.



**இக்கல்வி நிறுவனத்தின் பிரதான நிறைவேற்றுப் பணிப்பாளரும், தலைவருமான ஏ.எம்.எம். பரக்கத் அலி கருத்து தெரிவிக்கையில்.....**

இக் கல்வி நிலையத்தில் ஆசிரியர் கற்கை நெறியினை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கி வைப்பதில் மட்டில்லா மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்போது நாம் முன்னணிமிக்க நாடுகளோடும் மற்றும் வளரும் நாடுகளோடும் ஒன்றாகிவிட்டோம்.

கல்வியை எல்லா இடங்களிலும் சமமான முறையில் வழங்கப்பட வேண்டும் என்பதே எங்களுடைய முழு நோக்கமாகும்.

புகழ்பெற்ற சர்வதேச பல்கலைக்கழகங்களிலும் மற்றும் சிறந்த கல்வி நிறுவனங்களிலும் தொழில் தகைமையுடையவர்களை மாணவர்களை உருவாக்கும் விடயத்தில் கோல்டன் காலேஜ் கல்வி வளாகம் முனைப்புடன் செயற்பட்டு வருகிறது.

இது இலங்கையில் வளர்ந்து வரும் உயர்தர கல்வி வளாகம். இதன் இயக்குனர் என்ற வகையில் புதிய தொழில் சந்தை வாய்ப்பினை கண்டு பிடித்து அக்கல்வியினை அறிமுகம் செய்து தொழில் வழிகாட்டுதலை வழங்க வேண்டிய பொறுப்பு கல்வி நிறுவகத்திற்கு இருக்கிறது.

ஒழுங்கு முறையான கற்பித்தல் மற்றும் தொழில்முறை பயிற்சி அணுகுமுறை. இவை தவிர கோல்டன் கொலேஜ் சிட்டி வளாகம் மாணவர்களுக்கு தேவையான கல்வி வாய்ப்புகளை வழங்கி வகிறது, மாணவர்கள் இங்கு பல்வேறு துறைகளில் தங்கள் ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்கின்றனர்.

நாங்கள் அடிப்படையில் தனித்துவமானவர்கள். கடந்த 12 வருட வெற்றியின் போது பல சாதனைகளை நிலைநாட்டியுள்ளோம் என்பதை பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

எங்கள் நிறுவனத்தில் கல்வி பயின்று வெளியேறியவர்கள் இப்போது உயர்ந்த நிலையில் இருக்கிறார்கள்.

எங்கள் மாணவர்கள்தான் எங்கள் சொத்து. நாங்கள் உலகளாவிய அறிவாளிகளுக்கு முன்னால் எங்கள் மாணவர்களை முன்நிறுத்த வேண்டும். மாணவர்களின் ஆற்றல்களை வலுப்படுத்தி புதிய பரிமாணத்திற்கு கொண்டு செல்வதற்கான கல்வி நடவடிக்கைகளை இக் கல்வி வளாகம் கொண்டுள்ளது.

எங்கள் அனுபவம் வாய்ந்த மற்றும் கல்விசார் அனைத்து ஊழியர்களும் ஒன்றாக இணைந்து மாணவர்களை ஊக்குவிப்பதில் அர்ப்பணிப்போடு செயலாற்றி வருகின்றனர். இன்று சான்றிதழ்களைப் பெறும் மாணவிகள் இக்கல்வி வளாகத்தில் பெற்றுக் கொண்ட அறிவு ஆற்றல்களை சமூகத்திற்கு ஆக்கபூர்வமாக வழங்க வேண்டும் எனத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**எம்மோடு தொடர்பு கொள்ள 0812205544, 0777222527, 0777222529**




# BUDGET adz

தினகரன் வாரமஞ்சரி

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067 / Umanga - 077 727 0845


## PAMUNUGAMA

**900 PERCH PRIME LAND**

**FOR IMMEDIATE SALE**

Facing Pamunugama- Thalahena main road and borderng the lagoon

Contact

0771 053 403, 0772 701 011



வாரமஞ்சரி BUDGET adz

போட்டோ குறும் விளம்பரம்



Toyota Toyo S, GB xxxx, length 10 2/1 ‘, Aluminum Body, Double wheel, 14 B Engine, Power Steering in mint condition. Price 26/50.
072 325 75 77

## WEBINAR

IMMIGRATE TO CANADA NEWS



- குடிவரவு
- வேலை
- கல்வி கற்றல்
- வர்த்தகம்

கனடாவில் குடியேறுவதற்காக விரிந்த சேவைகளுடன் குளோபல் ஸ்டார்ட் அப் உசாத்துணையாளர்களுடன் உங்கள் விபரங்களை இற்றைவரையாக்கிக் கொள்ளுங்கள்

குளோபல் ஸ்டார்ட் அப் உசாத்துணையாளர்கள்
114, அன்டர்சன் வீதி, களுபோவில, தெஹிவளை
0769366246 - அனுஷா
0113 462 634
info.anusia@gmail.com

## Largest Pipeline Company In Sri Lanka




**ALLIED TRADING INTERNATIONAL (PVT) LTD**
301 Old Moor Street, Colombo 12, Sri Lanka 011- 739 7777 011- 2435180 alliedint@eureka.lk www.allied.lk

வாரமஞ்சரி BUDGET adz



## VISA REFUSALS AND FRESH VISA APPLICATIONS

Migration, Student , Visitor and Dependant Visas etc. - UK, Canada, Australia etc.
(Consultant is formerly attached to Sam & Co. Solicitors, UK)

PR Visa Consultancies
No. 53, Sanasa Square, Court Road, Gampaha.
0773 051 518
prconsulting.services@yahoo.com

## Grandfather Clocks



D.M.D. Roanos 18 Years of Excellent service.

Service, Repairs, Replacement of "Grandfather" and all Wall Clocks undertaken.

WATCH Repair & Service

We undertake any Condition of your Antique Clocks.

- Original German Grand Father Clock FOR SALE
- Brand New Cases of Grand Father Clocks also available undertaken in Colombo and any outside places.
- Damaged cases of Grand Father Clocks are Newly made by us.

0777 658 621 / 071 7371 122 / 0112 754 545
No.620B, Highlevel Road, Wijerama, Nugegoda.

## Advertise Here

5.8cm (Height) x 8cm (Width)
Rs. 1,500/- +VAT

adzsuo@gmail.com

## UK VISA WITHOUT IELTS

MCS INTERNATIONAL CONSULTANTS

- WORK VISA AFTER A ONE YEAR SHORT COURSE
- FULL TIME EMPLOYMENT OPPORTUNITY FOR SPOUSE
- EVERYONE IN THE FAMILY CAN GET A VISA AT ONCE
- FREE EDUCATION FOR CHILDREN
- JOB OPPORTUNITIES DURING EDUCATION
- ABILITY TO PAY COURSE FEES IN INSTALLMENTS

FREE CONSULTATION SERVICE

Study in UK

15 YEARS EXPERIENCE

LONDON + 44 7763 842740
COLOMBO +94 77 811 99 81
KURUNEGALA + 94 77 076 1446
Consultants.MCS

124B Madivela Road, Embuldeniya, Nugegoda. (Colombo Office)
117 Ainslie Wood Road, Chingford, London. (London Office)

தினகரன் வாரமஞ்சரி

## திருமண சேவைகள்

உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்

**classified@lakehouse.lk**

உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.

உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.

முதல் 15 சொற்களுக்கு **100/-** ரூபா

இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377

ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
- ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்

அனுஷா - 077 7 278 948
ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383
கயனி - 011 2 429 342

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

116

### வாகனங்கள் வாடகைக்கு/ குத்தகைக்கு

சாரதி உடன் அல்லாமலோ, 56க்கு மேற்பட்ட Dolpine, Caravan, Mazda, H.100, Mitsubishi, Double Cabs - Toyo t a, Bolo r o, Mahend r a, Tata போன்ற வாக னங்கள் நீ ண்ட கா லத்திற்கு சாரதிக ளு ம் தேவை. 0722 253545, 077 3500055. 015221

## வர்த்தகம்

207

### வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

எல்லவில் 8 அறைகளுடனான சுற்றுலா ஹோட்டல் உடனடியாக விற்பனைக்கு. (சுற்றுலா சபையின் அனுமதி உண்டு) 077 6641055. 013955

எல்ல, சுற்றுலா பிரதேசத்தி ல் 10 அறைகளுடன் ஹோட்டல் Roof Top Restaurant and Kitchen ஒரு பேர்ச் 32.5 120 மில்லியன். 0773146676 014554

கொழும்பு6, கிருலப்பனை பிரதான வீதி முகப்புடன் Commercial காணி விற்பனைக்கு 1600 சதுர அடி விபரங்களுக்கு அழையுங்கள். 0715454114 014436

பஸ்ஸர நகரில் வியாபாரஸ்தலம்/ D.S. சேனாநாயக்க மாவத்த வியாபார காணித் துண்டுகள் விற்பனைக்கு. 075 0150750/078 2315030. 013951

கண்டி பெறுமதியான கட்டிடம் விற்பனைக்கு. 06 மாடிகள் (20 பேர்ச்) கண்டி, குண்டசாலை குடி யிருப்புப் பிரதேசம். 18000 சதுர அடி. பிரதான வீதிக்கு முகப்பாக 80 அடி அகலம். பிரதான வீதிக்கு சமாந்தரமாக மாடி. 06 கடைகள், மேல் மாடி 07 கடைகள், 02 பிரத்தியேக மண்டபங்கள். நிலக்கீழ் மாடி உண்டு. பிரத்தியேகமாக 02 மண்டபங்களுடன் களஞ்சியங்கள், குடியிருப்பு அறை பிர தேசங்கள். மாதாந்த வருமானம் 4 இலட்சம் (வங்கிக் கடனுடன்) ரூபா 1200 மி ல் லி ய னு டன் எல்லா வசதிகளும். தரகர்கள் வேண்டாம். 0777114136, 0777114253. 007993

0777282147 கண்டி முதல் கடுகண்ணாவ வரை, கண்டி முதல் திகன நகர் வரை, கண்டி முதல் குருநாகல் வீதி வரை, கண்டி முதல் மாத்தளை வீதி வரை காபட் வீதிக்கு முகப்பாக பல்வேறு வியாபார ஸ்தலம் மற்றும் வீதியிலிருந்து உட்புறமாக 100, 200 மீற்றர். சாதார ண ஹோட்டல்/ வீடு/ வெற்றுக் காணி 20 மில்லியன் முதல் அதற்கு மேல் விற்பனைக்கு. (வங்கிக்கடன் உள்ள/ இல்லாத) 077 7 4 381 69 008013

211

### விதைகளும் செடிகளும் தேவை

சிறந்த கொக்கோ விதைகள் தேவை. கையிருப்பிலுள்ள அளவு மற்றும் விலையை தெ ரி வி க் க வு ம் . வட்ஸ்அப் அல்லது தொலைபேசி 077 8967171 அல்லது (071) 2757716. 014944

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 100/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

## வேலைவாய்ப்பு

312

### வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

மின் தொழில்நுட்பவியலாளர்கள் (2500) மற்றும் கையுதவியாட்கள் 2000 தேவை. கொழும்புக்கு அருகில் வேலைத்தளத்திற்கு. 077 9503657, 071 7215368. 013931

வத்தளையில் அ மைந்துள்ள எமது தொழிற்சாலைக்கு புதிதாக தண்ணீர் குழாய்கள் பொருத்தவும் அவற்றை பராமரிக்கவும் 50 வயதிற்கு குறைவான மற்றும் குறைந்தது 05 வருட அனுபவமுள்ள குழாய் செப்பனிடுபவர் (Plumber) தேவை. இலவச தங்குமிட வசதியுடன் சகாய விலையில் மூன்று நேர உணவும் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு. 076 6200300. 015149

315

### வெற்றிடங்கள் கல்வி

மொனராகல, நுவரெலியா, கம்ப ஹா மாவட்டத்தை மையமாகக் கொண்டுள்ள புளுமின் பட்ஸ் சமூக ஒத்துழைப்பு மன்றத்தினால் செயற்படுத்தப்படும் 'தவறவிடப்பட்ட கல்விக்கு கைகொடுத்தல்'' என்ற கல்வி நிகழ்ச்சிக்கு தொண்டர் அடிப்படையில் உதவி செய்யக்கூடிய ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் தேவை. மேலும் அந்த வேலைத் திட்டத்திற்கு ஏதேனும் வகையில் பங்களிப்பு செய்யக்கூடிய பரோபகாரிகள் தேவை. 388/ 1/ 1, பேஸ்லைன் வீ தி, தெமட்டகொட, 0112 677641, 0703 318641, 0775 509641 013006

புளுமின் பட்ஸ் சமூக கண்காணிப்பு மன்றத்திற்கு செயற்றிட்டம் எழுதுவதற்கு ஆங்கிலம் சிறந்த திறமையுள்ள எமது செயற்றிட்டத்திற்கு மதிப்பீடு செய்து நிர்வகிப்பதற்கு இயலுமான வர்கள் தேவை. 388/ 1/ 1, பேஸ்லைன் வீ தி, தெமட்டகொட. 0112 677641, 0771 529731, 0775 509641 012996

316

### வெற்றிடங்கள் ஆடை தயாரிப்பு/ புடவைகள்

இரத்மலானையில் ஆடை நி று வ ன மொ ன் றி ற்கு களஞ்சியசாலை ஆண் உதவியாளர்கள் தேவை. ஊதியம், தங்குமிடம் மற்றும் இன்னும் கொடுப்பனவுகள். 0112710281, 076 4716072 015117

318

### வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதி அனுமதிப்பத்திரமுள்ள ஓட்டுநர்கள் டிலிவரி வாகனங்களுக்கு இரத்மலான மொரட்டுவ, தெஹிவளை, பாணந்துறை, களுத்துறை, வென்னப்புவ நயினமடம பிரதேசங்களில் தேவை. சம்பளம் 35, 000 முதல் மேல் விசாரணைகள் நெஸ்கோ என் ட பி ரை ச ஸ், இல. 29/ 5, 4ஆம் ஒழுங்கை இரத்மலான. தொ. பே . 0777 263954. 010347

வத்தளை பிரதேசத்தில் உள்ள காகித நிறுனம் ஒன்றில் திறமையான மற்றும் அனுபவம் வாய்ந்த நபர்களுக்கு பின்வரும் வெற்றிடங்கள் உள்ளன. ★ Lorry Driver * Heavy Vehicle Driver - 20 Feet தொடர்பு கொள்ளவும் Mrs. Ratneswary 077-3290441. 015074

319

### வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

கண்டி நகரத்தில் அருகில் உள்ள ஓர் வீட்டிற்கு ஆண் அல்லது பெண் வீட்டு வேலைக்கு தேவை. தொடர்புகளுக்கு அழைக்கவும். 0766935466, 0772648943 014558

கம்பஹா தொம்பே பிரதேசத்தில் வீட்டில் தங்கி வேலை செய்வதற்கு ஒருவர் தேவை. வயது 18 35 இடையில் ஆண், திருமணமாகாத, நீண்ட நாள் த ங்கி இருக்கக்கூடிய வெளி மாகாண ஒருவர் விரும்பத்தக்கது. (சிங்களம் பேசக் கூடிய தமிழரும் விருப்பப்படுவர்) முச்சக்கர வண்டி ஓட்டுதல் மேலதிக தகைமையாகும். சம்பளம் பேசித் தீர்க்கலாம். தொ.பே. 071 0588534/ 0112 409289 014294

தலவத்துகொடவில் உள்ள வீட்டிற்கு சமைக்க தெரிந்த பெண் தேவை. வயது (4050) தங்குமிட வசதி உண்டு. தொடர்புகொள்ள அழைக்கவும். 0777752120/ 0777368174 014556

நன்றாக உணவு சமைப்பதற்கு முடியுமான 50 வயதிற்கு மேற்பட்ட அனுபவமுள்ள ஊழியர் கொழும்பு வீட்டிற்கு தேவை. வீட்டை சுத்தமாக வைத்திருத்தல் வேண்டும். 071 4409088. 014987

320

### வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

திறமையான கோக்கி, ரொட்டி பாஸ், உ தவியாளர்கள் தேவை. பார்க்வின் ரெஸ்டூரண்ட், பாரூலிய, ஹிக்கடுவ. 072 2 5 3 0261 014555

மால பே உ ணவகத்திற்கு சீன, இந்திய மேற்கத்தை ய உணவு வ கை க ளை சமைக்கக்கூடிய கோக்கி மற்றும் கையுதவியாட்கள் தேவை. 070 7226722, 077 3344768 014709

321

### வெற்றிடங்கள் தோட்டத்துறை

குருநாகல் தோட்டத்திற்கு 50 வயதிற்கு குறைந்த ஆண் (தனியாள்) அல்லது குடும்பம் தேவை. 0770311963. 014221

குருநாகல் வாரியபொல சிலாபம் வீதியில் அமைந்துள்ள தென்னங்காணிக்கு 4055 இடைப்பட்ட தொழிலாளர் தேவை. தங்குமிட வசதியுண்டு. வாகனங்களை ஓட்டக்கூடியவர் விரும்பத்தக்கது. அழையுங்கள். 077 3165395. 013946

சிலாபம் தென்னந்தோட்டத்தில் தங்கி வேலை செய்வதற்கு தொழிலாளர், குடும்பம் தேவை. அழையுங்கள். 077 1 180110, 078680 7 125. 014439

323

### வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

நிறுவனத்திற்கு பெற்றரி வெட்டுவதற்கு ஊழியர்கள் தேவை. 1 தொன் இற்கு 1100/ பதுளை ஹட்டன் வி ரும்பத்தக்கது. 076 2360828. 013932

யாழ்ப்பாணத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் வீதி அபிவிருத்திக்கு ஊழியர் சேர்த்துக்கொள்ளப்படுவர் தங்குமிட வசதி உண்டு0729971791, 0767702627 014363

325

### தொழில்துறை பொது

கொள்ளுப்பிட்டி தனியார் நிறுவனத்தில், சுத்திகரிப்பதற்கு மற்றும் தேநீர் தயாரிக்க பெண் ஊழியர்கள் உடன் சேர்த்துக் கொள்ளப்படுவர். சம்பளம் 23000 முதல் 25000. 0773627519. கொழும்புக்கு அருகில். 014649

சீதுவவில் அமைந்துள்ள அச்சுத் துறையில் ஈடுபட்டுள்ள ஐடா ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் எனும் எமது நிறுவனத்தில் பல வேலை வாய்ப்புக்கள். Printers, Helpers, Quality Checkers, Sample Helpers போன்ற பல வெற்றிடங்கள் காலை பகல் உணவு தங்குமிட வசதிகளுடன் கூடுதல் சம்பளம் . பயிற்சி காலத்தில் ரூ. 35, 000/ சம்பளத்தை பெறலாம். முகாமையாளரை அழையுங்கள். 0707220885 014715

டீ பெக்ஸ் தனியார் கம்பனியொன்றிற்கு கை உதவியாளர்கள் (டீ போய்ஸ்) தேவை. அழைக்கவும். 0779980257 014340

பாதுகாப்பு அதிகாரி/ OIC அப்பாட்மென்ட் சேவை. சம்பளம் ரூ. 40,000/ இற்கு மேல். கல்கிசை, தெஹிவளை வெள்ளவத்தை விசேட கொடுப்பனவு. ஸ்பெஷல் கார்ட் தெமட்டகொட. 077 2205009, 011 2669199. 014654

பிலியந்தலை, சுப்பர் மார்கட் விற்பனை நிலையத்திற்கு உதவியாளர்கள் மற்றும் பெண் ஊழியர்கள் தேவை. சம்பளம் ரூ. 30,000/ முதல் உணவு தங்குமிடம் வழங்கப்படும். மேலதிக விபரங்களுக்கு 0777543773 014708

பிலியந்தலை, வீட்டில் தங்கியிருக்கக் கூடிய சமைய ல் தெரிந்த பெண் ஊழியர் தேவை. 0742 526555 014701

தங்கொடுவையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சிபெற்ற/ பயிற்சிபெறாத ஆண், பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நாள் சம்பளம் ரூ . 1200 ரூ.1500 ரூ. 2000 (மாதாந்த சம்பளம்) வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக்கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு. 076 6200300. 015154

போகுந்தரவில் அமைந்துள்ள முதல்தர உணவகத்தில் கீழ்க்காணும் வெற்றிடங்கள் உண்டு. 01. சமையலறை உதவியாளர். 02. சோட்ஈட்ஸ்/ அப்பம் பாஸ் 03. வெயிட்டர் 04. சாரதி 05. தொழிலாளர்கள். உணவு, தங்குமிட வசதியுடன் கூடுதல் சம்பளம். இன்றே அழையுங்கள். 0719258357 (MKS பெர்னான்டோ) 014698

வத்தளையில் அமைந்துள்ள எமது துணி உற்பத்தித் தொழிற்சாலைக்கு பயிற்சிபெற்ற/ பயிற்சி பெறாத ஆண், பெண் ஊழியர்கள் தேவை. ஒரு நா ள் சம்பளம் ரூ. 1200 ரூ.1500 ரூ. 2 000 (மாதாந்த ச ம்ப ளம்) வழங்கப்படும். இலவச தங்குமிட வசதி மற்றும் சகாய விலையில் மூன்று வேளை உணவு பெற்றுக்கொள்ளும் வசதி. மேலதிக விபரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரிக்கு நேரில் வரவும். இல. 18, வெளியமுன வீதி, ஹேகித்த, வத்தளை. தொடர்புகளுக்கு . 0766200300. 015152

மாத்தறை நாயிம்பத்தில் அமைந்துள்ள வாகனம் சேவை செய்யும் இடம் ஒன் றுக்காக ஹொயிஷ்ட்மன்மார், வொஷ்மன்மாத் (ஊழியர்கள்) தேவை. வெளி மாவ ட்ட ஊழியர்களுக்கு தங்குமிட வசதிகள் உண்டு. தொடர்புகளுக்கு. 0711350383, 0761750383 014557

077 9975547, 071 8653778 நட்சத்திர தர ஹோட்டலுக்கு சிவில் உடையில் பாதுகாப்பு அதிகாரிகள் துரிதமாக சேர்த்துக் கொள்ளல் உணவு இலவம். (12 மணி நேரம்) இற்கு 1750 1450 கொழும்பு 071 8653780, அலுவலகம் 071 3155331/ 070 6655 331/ 070 0989129/076 8171053. 014854

## சொந்த விடயம்

528

### தங்குமிட வசதிகள்

தங்குமிட வசதிகள் காலி மாவட்டத்தின் போத்தல மற்றும் மொனராகல மாவட்டத்தில் புத்தல மிகவும் இதமான சூழலில் ஆரம்பித்து நடத்திச் செல்லப்படும் சமிந்து செவன முதியோர் பாதுகாப்பு நிலையத்திற்கு ஓய்வு பெற்ற, நோயாளியான, நோயற்ற அங்கவீனமா ன முதியோர் போலவே புத்தி சுவாதீனமற்ற 18 வயதுக்கு மேற்பட்டவர்களும் சேர்த்துக் கொள்ளப்படுவர். 0775509641, 0703318641, பதுவத்த, பலகொட, போத்தல, கா லி. 013014

தெஹிவளை நகரில் பெய ர்லைன் வீதி இணைந்த குளியலறையுடன் தனி அறை மற்றும் 2 அறை. குளியலறையுடன் வாடகைக்கு. 0777348764 014717

## காணி/தோட்டம்

616

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கல்கிசை டெரஸ் மாவத்தையில் அமைந்துள்ள 3 1/ 4 பேர்ச் வீட்டுடன் காணி விற்பனைக்கு. காலி வீதிக்கு 100m தூரத்தில் 071 4075213/ 071 4807687. 014982

கல்கிசை, காலி வீதியில் 8.5 பேர்ச் காணி உடனடியாக விற்பனைக்கு. ஒரு பேர்ச் 35 இலட்சம் விலை பேசித்தீர்க்கலாம். தொ.பே. 076 0211886. 014833

621

### வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

0777438169 தொடம்வல 17 பேர்ச் வீடு, அருப்பல 14 பே ர்ச் வீடு, நத்தரம்பொத்த 22 பேர்ச் வீடு, குண்டசாலை 24 பேர்ச் வீடு, யக்கஹபிட்டிய 40 பேர்ச் வீடு, கட்டுகஸ்தொட்ட 17 பேர்ச் வீடு. இவ்வீ டுகள் 15 25 மில்லியனுக்கு இடையி ல். 10 30 பே ர்ச் வெற்றுக் காணி உடரட்டசெதெல்ல, வேவெல்ல, அ முனுகம 1 பேர்ச் 3 இலட்சம் 5 இலட்சத்துக்கு இடையில். ஹரெகம வீதி 1 ஏக்கர் 10 மில்லியன். பேசித் தீர்க்கலாம். 0777282147. 008004

0777 114253 கட்டுகஸ்தொட்ட கடயால தென்ன மணிக்கூட்டு கோபுரத்திற்கு அருகாமைக்கு 500 மீற்றர் 20 பேர்ச் 1 பேர்ச் 5 1/2 லட்சம். லேவல்ல அ ம்பலத்திற்கு அருகாமைக்கு 500 மீற்றர் 15 பேர்ச் 1 பேர்ச் 3 1/ 2 லட்சம். தமுனுகம மடவல பிரதான வீ திக்கு 500 மீற்றர் இடைநிலை பயிர்ச் செய்கையுடன் புதிய வீடு (3 படுக்கையறைகள்) 21 பேர்ச் சகல வசதிகளுடன் விலை 95 லட்சம். விலைகள் பேசித் தீர்க்கலாம். 0777 114136. 012132

626

### வீடு சொத்து பதுளை மாவட்டம் விற்பனைக்கு

பதுளை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்திற்கு அருகில் சகல வசதிகளுடன் 03 காணித் துண்டுகள் 9.5 பேர்ச் 10 பேர்ச் அனுமதிக்கப்பட்ட வரைபடங்கள் NBRO வங்கிக் கடன், நீர் மின்சாரத்துடன் 075 0150750/ 078 2315030. 013950

641

### வீடு சொத்து கொழும்பு மாவட்டம் வாடகைக்கு குத்தகைக்கு

முகத்துவாரம், அளுத்மாவத்தை கொழும்பு 15. 178, 155 பஸ் பாதையில் வீடு வாடகைக்கு . மாதாந்த வாடகை 50, 000/ 076 9658 101. 014050

## மணமகள்

முவமலே பெற்றோர்கள் தனது மகளுக்கு தகுந்த கணவரொருவர் தேடுகின்றனர் உயர் 5' 1" திருமணமாகி மூன்று மாதத்தில் விவாகரத்து பெற்றுள்ளார் பிள்ளைகள் இல்லை. சீதனமாக வீடு வழங்கப்படும். 0766257300 B177099



தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும்
classified@lakehouse.lk
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
அனுஷா - 077 7 278 948 ரமணி - 011 2 129 347
பியுமி - 011 2 429 383 கயனி - 011 2 429 342/343



வாங்கிவிட்டீர்களா?
வண்ண வானவில்
சிந்தையெங்கும் வர்ணஜாலம்
நாடெங்கும் பரபரப்பான விற்பனையில்!
50 ரூபாய் மட்டுமே
பெப்ரவரி மாத இதழ்
நெற்றித் திலகம் போல இது குடும்பத்துக்கான ஒரு முழுமையான பத்திரிகை
இலக்கியம், சிறுகதை, விளையாட்டு, சினமா, கவிதை, சிறுவர் பகுதி,
எஸ்.எம்.எஸ் ஜோக்ஸ், நட்சத்திர அல்பம் என வாசிப்புக்கு ஏகப்பட்ட விஷயங்கள்!
ஏனைய பத்திரிகைகள் தயங்கும் இடங்களில் நெஞ்சு நிமிர்த்தும் துணிச்சல்...
LAKE HOUSE
பக்கத்துக்குப் பக்கம் இனிமை, இளமை, செழுமை
தனித்துவம் அது வானவில் முத்திரை!

## களனிப் பல்கலைக்கழகம் - இலங்கை

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக 2022-03-16ஆம் திகதி வரை என்னால் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**விஞ்ஞான பீடம்**

01 கைத்தொழில் நிர்வாக கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுனர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**மானுடவியல் பிரிவு**

01. சிங்கள கல்வி பிரிவு
சிங்களம் தொடர்பிலான பேராசிரியர் / சிரேஷ்ட பேராசிரியர்
02. நூதன மொழி கல்விப் பிரிவு
விரிவுரையாளர் (பயிலுனர்) / விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத) / சிரேஷ்ட விரிவுரையாளர் II/I

**உடற்கல்விப் பிரிவு**

01. உடற்கல்விப் பணிப்பாளர்

மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பதவிக்காவும் சேர்த்துக் கொள்வதற்கான தகைமைகள் மற்றும் இயைபுடைய சகல தகவல்களையும் https://www.kln.ac.lk/vacancies ஊடாக பெற்றுக்கொள்ளலாம்.

**சம்பள அளவு**

1. விரிவுரையாளர் (பயிலுனர்)
ரூபா 54,600 – 10 x 1,335 - 67,590 p.m. (*U-AC 3 (IV)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 136,110.00)
2. விரிவுரையாளர் (சேவை உறுதிப்படுத்தப்படாத)
ரூபா 69,580 – 5 x 1,630 – 77,730 p.m. (*U-AC 3 (II)* (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 182,445.00)
3. சிரேஷ்ட விரிவுரையாளர் - **II**
ரூபா 79,360 – 11 x 1,630 – 97,290 p.m. (*U-AC 3 (II)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 222,865.00)
4. சிரேஷ்ட விரிவுரையாளர் - **I**
ரூபா 91,310 – 7 x 2,170 – 106,500 p.m. (*U –AC 3 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 255,250.00)
5. பேராசிரியர்
ரூபா 117,350 - 13x2,700 - 152,450 p.m. (*U –AC 5 (II)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 338,727.00)
6. சிரேஷ்ட பேராசிரியர்
ரூபா 139,175 - 11x2,925 - 171,350 p.m. (*U –AC 5 (I)*) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 407,232.25)
7. உடற்கல்விப் பணிப்பாளர்
ரூபா 66,180 - 8 x 1,335 ; 8 x 1,630 - 89,900 p.m. (U-EX 2(II)) - (அண்ணளவான மொத்தச் சம்பளம் ரூபா 145,160.00)

**விண்ணப்பிக்கும் முறை**

இந்த பதவியின் பொருட்டான விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை அலுவலக நேரத்தினுள் சிரேஷ்ட உதவிப் பதிவாளர்/ கல்வி நிறுவனங்கள் அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். அவ்வாறே https://www.kln.ac.lk/vacancies எனும் பல்கலைக்கழக இணையதளத்திற்குப் பிரவேசித்து உரிய விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தரவிறக்கம் (Downloads) செய்துகொள்ளலாம். விண்ணப்பங்கள் மற்றும் விபரங்களை தபாலில் பெற வேண்டுமானால் அதற்கான வேண்டுகோளொன்றுடன் முகவரி எழுதப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட 23x10 செ.மீ. அளவான கடித உறையொன்றை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர்கள் ஒவ்வொரு பதவியின் பொருட்டும் தனித்தனியான விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 2022-03-16ஆம் திகதி அல்லது அதற்கு முன் சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / கல்வி நிறுவனங்கள், களனிப் பல்கலைக்கழகம், களனி எனும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அல்லது பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி, திணைக்களம் மற்றும் மின்னஞ்சல் ஊடாக விண்ணப்பத்தை அனுப்பும்போது தலைப்பு (Subject) குறிப்பிடப்படும் நிரலில் விண்ணப்பிக்கும் பதவி மற்றும் திணைக்களம் என்பன குறிப்பிடல் வேண்டும். பூரணமற்ற, தெளிவற்ற மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

விஞ்ஞான பீடம் - applysc@kln.ac.lk
மானுடவியல் பீடம் - applyhu@kln.ac.lk
உடற்கல்விப் பணிப்பாளர் - aead@kln.ac.lk

அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சட்டச்சபை, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர்கல்வி நிறுவனங்களின் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைமையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். விண்ணப்படிவங்களை குறும்பட்டியலிடும் முழுமையான உரிமையை பல்கலைக்கழகம் தன்னகத்தே கொண்டுள்ளது.

**பதிவாளர்**
**களனிப் பல்கலைக்கழகம்,**
**களனி.**
2022-02-23

**உடனடி வேலைவாய்ப்பு**

நாவலப்பிட்டியில் பிரசித்திபெற்ற ஹாட்வெயார நிறுவனம் ஒன்றில் தொழில் வாய்ப்பை பெற்றுக் கொள்ள விரும்பும் உங்களுக்கு இதோ ஒரு அரிய சந்தர்ப்பம்.

- Sales Rep
- Data Entry
- Account Assistants
- Computer Operator
- Accountant
- Store Keeper

உணவு தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு
0779792078/077 0665874

**பயிற்ச்சியற்ற வேலை ஆற்கள் தேவை ஆண்/பெண்**
❊ உணவு தங்குமிடம் இலவசம்
❊ ஊதியம் 35,000.00 மேல்

**தொடர்புகளுக்கு:**
**071 4333203**

## இலங்கைப் பாராளுமன்றம்

# பதவி வெற்றிடங்கள்

பாராளுமன்ற செயலாளர் நாயகத்தின் பணியாட்டொகுதியில் கீழ்க்காணும் பதவிகளில் நிலவும் வெற்றிடங்களுக்கு சிறந்த உடலாரோக்கியமும் மற்றும் நல்லொழுக்கமும் உடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பாராளுமன்ற உரை பெயர்ப்பாளர்
2. கணனி செயற்றிட்ட வரைவளர்
3. தொழில்நுட்ப உத்தியோகத்தர் (மின்னியல்)

2022ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி பிரசுரிக்கப்பட்ட வர்த்தமானியில் தரப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்டு பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2022ஆம் ஆண்டு மார்ச் மாதம் 11ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் 'பாராளுமன்ற செயலாளர் நாயகம், இலங்கை பாராளுமன்றம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே' எனும் முகவரிக்கு வந்தடையும் வண்ணம் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பிக்கப்படும் பதவி விண்ணப்பம் தாங்கிவரும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடப்படுதல் வேண்டும். மேற்குறித்த வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள விபரங்களை www.parliament.lk எனும் இணைத்தளத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

**பாராளுமன்ற செயலாளர் நாயகம்.**

**இலங்கை பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே.**
2022 பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி

## பரதநாட்டிய அரங்கேற்றம்



நித்யகலைக் காவேரி பரத நாட்டியப் பள்ளியின் அனுசரைணயில் பரத கலை வித்தகர் திருமதி ரேணுகாதேவி நமசிவாயத்தின் மாணவிகளான தனுக்ஷனி செந்தில்குமார் அபிராமி தயாளன் மற்றும் பிருந்தா வேல்முருகன் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு கொழும்பு 10 மருதானை டவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நாட்டிய கலாசூரி திருமதி வாசுகி ஜெகதீஸ்வரன் கலந்துக் கொள்வார். கௌரவ விருந்தினர்களாக பேட்ரம் பெரேரா சேவைகால ஆலோசகர் (கொழும்பு) இந்து மகளிர் மகாவித்தியாலய அதிபர் திருமதி வி.சாந்தினி Global kids pre school pvt பணிப்பாளர் சுகிர்தர் ஞானபிரகாசம் ஆகியோரும் கலந்துக் கொள்ளவுள்ளனர். அத்தோடு சிறப்பு விருந்தினர்களாக மானிப்பாய் கலைக்கோயில் பணிப்பாளர் திருமதி செல்வாம்பிகை வீரசிங்கம் பிரிட்ஜ் அகடமி பணிப்பாளரும் தஞ்சாவூர் நுண்கலைக் கல்லூரி தமிழ் பல்கலைக்கலக இணைப்பாளருமான துரைரட்ணம், சிறிசுடரோன் சிவஷேத்ரம் நடனபள்ளியின் பணிப்பாளர் விஜேந்திரன் வீரசிங்கம் ஆகியோரும் கலந்துக் கொள்ளவுள்ளனர்.

***தகவல் யதுஷா ரவித்தியாகராஜா***

## சீனா, பாகிஸ்தான் அச்சுறுத்தினால்...

*(06ஆம் பக்கத் தொடர்)*

சுகோய், மிராஜ், ஜகுவார் போர் விமானங்களின் பழைய வடிவத்தை சீரமைக்கும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

சீனா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருப்பதாக இந்திய பாதுகாப்புத்துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இந்தியாவின் வான்வெளி பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் 'எஸ் 400 ஏவுகணை மறிப்பு சிஸ்டம்' களத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

அதாவது சீனா, பாகிஸ்தான் உள்ளிட்ட நாடுகளில் இருந்து வரும் ஏவுகணைகளை வழிமறித்து வானத்திலேயே தாக்கி அழிக்கும் வகையில் இந்த 'மிஸைல் சிஸ்டம்' களமிறக்கப்பட்டுள்ளது. ரஷ்யாவின் தயரிப்பான 'எஸ் 400 மிஸைல் சிஸ்டம்' தற்போது களத்தில் பயன்படுத்தப்பட தொடங்கி உள்ளது.

இதேவேளை இந்தியா ரஷ்யா இடையிலான இந்த ஆயுத ஒப்பந்தத்தை அமெரிக்கா தொடக்கத்தில் இருந்தே விரும்பவில்லை. இந்த நிலையில் தான் இந்தியா எஸ் 400 மிஸைல் சிஸ்டத்தை பயன்படுத்தத் தொடங்கி உள்ளது. உலகிலேயே அதி வேகமாக ஏவுகணைகளை தாக்கி அழிக்கும் சிஸ்டம் S400 missile சிஸ்டம் ஆகும். மிஸைல் டிபன்ஸ் சிஸ்டம் (missile defence system) என்பது ஏவுகணைகளைத் தாக்கி அழிக்கும் ஏவுகணைகள் அல்லது எதிர் ஏவுகணைகள் அல்லது குண்டுகள் என்றும் கூறலாம்.

ஒரு நாட்டைத் தாக்க வரும் ஏவுகணைகளை முறியடிக்க எதிர் ஏவுகணைகளை ஏவி முறியடிக்க முடியும். மிஸைல் டிபன்ஸ் சிஸ்டம் (missile defence system) மூலம் இவ்வாறு தாக்கி அழிக்க முடியும். எஸ்400 (S400) ரஷ்யாவில் உருவாக்கப்பட்டது ஆகும். இது 400 கி.மீ தூரத்தில் இருக்கும் போதே ஏவுகணைகளை குறி வைத்து தாக்கி அழிக்கவல்லது. 30 கிமீ தூரத்தில் உள்ள ஏவுகணைகளை கூட எஸ்400 தாக்கி அழிக்கும். எஸ்400 (S400) என்பது பல பயன்பாட்டு ரேடார் வசதி கொண்ட multifunction radar கொண்ட சிஸ்டம் ஆகும்.

இதில் இருக்கும் ரேடார் ஒரே நேரத்தில் பல்வேறு ஏவுகணைகளை கண்டுபிடிக்கும் திறன் கொண்டது. தானாக ஓட்டோமெட்டிக் முறையில் ஏவுகணைகளை கண்டுபிடித்து, அதை இலக்கு வைத்து, தாக்கி அழிக்கும். மொத்தம் மூன்று விதமான ஏவுகணைகளை ஏவி எதிரி ஏவுகணைகளை தாக்கி அழிக்கும். ஒரே நேரத்தில் 36 இலக்குகளை எஸ்400 தனது ஏவுகணைகள் மூலம் தாக்கி அழிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது.

**Repeat Your Ad For Better Offers**

# பதவி வெற்றிடம்

## அரச மருந்தாக்கல் உற்பத்திக் கூட்டுத்தாபனம் (SPMC)

***மருந்தாக்கல்களை, உற்பத்தி செய்தல், வழங்கல் மற்றும் ஒழுங்காக்கல் இராஜாங்க அமைச்சு***

பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்காக தகைமையுள்ள, சுயமாக சிந்திக்கக்கூடிய, தொழில் அர்ப்பணிப்புள்ள நபர்களை எம்முடன் இணைவதற்காக அழைக்கின்றோம்.

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(i) இலங்கை பிரஜையாகவிருத்தல்
(ii) பதவியின் கடமைகளை சரிவரச் செய்வதற்காக உடல் உள ஆரோக்கியத்தையும் தீவின் எப்பாகத்திலும் சேவை செய்யக்கூடியதாகவும் இருத்தல்
(iii) மிகச்சிறந்த குணவியல்புகளை கொண்டிருத்தல்

### வேதியியலாளர் பதவி (Post of Chemist) (JM-1-1 தரம் II)

**தகைமைகள் - வெளிவாரி விண்ணப்பதாரிகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல் அல்லது மருந்தாக்கத்தை ஒரு பாடமாக அடங்கலாக விஞ்ஞானத்தில் பெற்ற இளமானிப்பட்டம்.

**குறிப்பு:** பகுப்பாய்வு வேதியியல் பின்புலமாக அமைந்திருப்பது சேர்க்கப்பட்ட தகைமையாகும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள்: (கீழேயுள்ள 1 அல்லது 2 இற்கானது)**

1. மேலேயுள்ளதில் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்காக தேவைப்படுத்தப்படும் தகைமைகளை பெற்றிருத்தல்.
2. பதவிக்கு உரித்தான விடயப்பரப்பில் 'முகாமைத்துவ உதவியாளர்-தொழில்நுட்பவியல்' (எம்ஏ 2-1) தரம் II பதவியில் ஆகக் குறைந்தது ஐந்து (05) வருட திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**சம்பள அளவுத்திட்டம்:**

JM 1-1-2016 – 42,600/= - 10x755-18x1135-70,580 ரூபா.

**வயதெல்லை:**

22 வயதிற்கு குறையாமலும் 45 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரிகளுக்கு மேல்வயதெல்லை ஏற்புடையதாகாது.

**ஆட்சேர்ப்பு முறைமை:**

எழுத்து மூலமான போட்டிப் பரீட்சை மற்றும் கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சை மூலமானது.

**மேலதிகமான நன்மைகள்:**

- வரவு மற்றும் செயற்பாட்டு ஊக்குவிப்பு படி
- பாவிக்கப்படாத வருடாந்த மற்றும் சுகவீன விடுமுறைக்கான மீள்நிரப்பல்.
- மருத்துவ காப்புறுதி திட்டம் மற்றும் மருத்துவ மீள்நிரப்பல் திட்ட வழங்கல்
- ஊ சே நி இற்கு கூட்டுத்தாபனமானது சம்பளத்தின் 15% ஐ வழங்கும் அதே வேளையில் ஊழியர் 10% ஐ வழங்குவார்.
- சம்பளத்தின் 3% ஐயும் ஊ ந நி இற்காக கூட்டுத்தாபனம் வழங்கும்.
- 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க பணிக்கொடை சட்டம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்கள சுற்றறிக்கைகளுக்கு அமைவாக பணிக்கொடை செலுத்தப்படும்.
- ஏனைய மேலதிகமான நன்மைகள்.

**பொதுவான பணிப்புரைகள்:**

- விண்ணப்பமானது விதிக்கப்பட்ட படிவத்தில் இரு உறவினர் அல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு விபரங்கள் ஆகியன சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விண்ணப்பத்துடன் அனைத்து கல்விசார் சான்றிதழ்களின் பிரதிகள் அடக்கப்படல் வேண்டும். **http://www.spmclanka.lk** என்ற அரச மருந்தாக்கல் உற்பத்தியாக்கல் கூட்டுத்தாபனத்தின் இணையதளத்திலிருந்து விண்ணப்பப் படிவங்கள் தரவிறக்கம் செய்யப்படலாம்.
- அரசாங்க திணைக்களங்கள் மற்றும் நியதிச்சட்ட சபைகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் நிறுவனங்களின் தலைவர்களூடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டுமென்பதுடன் தெரிவு செய்யப்படின், விண்ணப்பதாரியை விடுவிக்க இயலுமா என்பது தொடர்பாகவும் அறிவித்தலை வழங்கல் வேண்டும்.
- விண்ணப்பத்தை உள்ளடக்கிய தபாலுறை இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட 10 நாட்களுள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவி பெயர் குறிக்கப்பட்டு பின்வரும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.
- மேலேயுள்ள தேவைப்படுத்தல்களுக்கு அமைந்தொழுகாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் கொத்தலாவல மாவத்தை, கண்டவள தோட்டம்,**
**இரத்மலானை.**

## ஔடத உற்பத்தி, வழங்கல் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சு

## இலங்கை அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம் (SPMC)

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்

# CIVIL WORKS OF SPMC LOTUS PHARMA PROJECT

**(2022 மார்ச் 21 ஆம் திகதியன்று மூடப்படும்)**

| விலைமனு குறிப்பீடு | நிர்மாணத் தலைப்பு | மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணம் | விலைமனு பிணைய பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலம் | நிர்மாணக் காலப்பகுதி | தேவைப்படும் ஆகக் குறைந்த CIDA பதிவுத் தரம் |
|---|---|---|---|---|---|
| SPMC/ LP/003/2022 | Civil Works of SPMC Lotus Pharma Project | 20,000 ரூபா | 1,500,000 ரூபா. மூடும் திகதியிலிருந்து 120 நாட்கள் வரையும் | 180 நாட்கள் | சி-3 அல்லது மேற்பட்ட தரம் |

1. ஹொரண, மில்லாவவில் அமைந்துள்ள லோட்டஸ் பார்மா செயற்றிட்டத்திற்காக சிவில் வேலைகளான சுற்றுவட்ட வேலி, நுழைவாயில் கேட்டுக்கள், பாதுகாப்பு அறைகள் மற்றும் தொடர்புள்ள வேலைத்தள அலுவலகம் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து SPMC லோட்டஸ் பார்மா செயற்றிட்டத்தின் சார்பாக, லோட்டஸ் பார்மா செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. தகைமைகள், மேலேயுள்ள பணி ஒதுக்கீடுகளை செயற்படுத்துதலில் முன்னைய அனுபவம் தொழில்நுட்ப இயலுந்தன்மைகள் மற்றும் பொருத்தமான நிபுணத்துவம் ஆகியவற்றை காட்சிப்படுத்துவதற்கான ஆவணச் சான்று அடங்கலாக தேவைப்படும் விபரங்களை சமர்ப்பிக்குமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. மில்லாவயில் செயற்றிட்ட வேலைத்தள விஜயத்தின் பின்னர், 2022 மார்ச் 10 ஆம் திகதியன்று இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவள மாவத்தை, 11 ஆம் இலக்கத்திலுள்ள அரச மருந்தாக்கல்கள் உற்பத்திக் கூட்டுத்தாபனத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். சேயற்றிட்ட தள விஜயமானது அதே நாளின் மு.ப. 8.00 மணிக்கு ஆரம்பமாகும்.
4. இந்த பெறுகைக்காக முழுமையான விலைமனுக்கோரல் ஆவணங்களின் தொகுதியொன்றில் தனித்தனியாக தயாரிக்கப்பட்டு நகல்பிரதி மற்றும் மூலப்பிரதியென தனித்தனியாக முத்திரையிடப்பட்டு பதிவுத் தபாலில் தலைவர், லோட்டஸ் பார்மா செயற்றிட்டத்திற்கான பெறுகைக் குழு, அரச மருந்தாக்கல் உற்பத்திகள் கூட்டுத்தாபனம், இல.11, சேர் ஜோன் கொத்தலாவள மாவத்தை, கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது மேலேயுள்ள முகவரியின் தரை மாடியில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. பின்வருவனவற்றை சமர்ப்பித்து, 2022 பெப்ரவரி 28 ஆம் திகதியன்று ஆரம்பித்து, வேலை நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 3.00 மணிக்குமிடையில் மேலேயுள்ள முகவரியிலிருந்து விலைமனு ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம்.
   - இலங்கை, இரத்மலான, கந்தவள தோட்டம், சேர் ஜோன் கொத்தலாவள மாவத்தை, இல. 11, அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபன திட்டமிடல் மற்றும் பெறுகைக்கான பிரதி பொது முகாமையாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்று.
   - SPMC இன் கணக்கிடல் திணைக்களத்திற்கு ரொக்கப் பணத்தில் மேலே கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை செலுத்துதல்.
6. விலைமனுக்கள் 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளினால் நிருவகிக்கப்படுவதனால், விலைமனுதாரரொருவர் முகவரொருவரை, உபமுகவரொருவரை, பிரதிநிதியொருவரை, பெயர் குறிப்பிட்டுள்ளரொருவரை விலைமனுதாரருக்காகவும் அவரின் சார்பாகவும் தக்கவைத்துக்கொள்ள விரும்பினால், அவர் தன்னை, பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 10 ஆம் பிரிவிற்கமைவாக அவ்வாறான பொது ஒப்பந்தங்களுக்காக பதிவு செய்து செல்லுபடியாகும் தன்மையிலுள்ள பதிவை விலைமனுக்கோரல் அல்லது செயற்பாட்டின் காலத்தின் எந்தவொரு கட்டத்திலும் எந்தவொரு விலைமனுக்கோரல் தொடர்பான கொடுக்கல் வாங்கல் ஆகியவற்றிற்காக முன்வைத்தல் வேண்டும்.
7. இரத்மலான, SPMC இல் விலைமனுக்களை மூடிய பின்னர், உடனடியாகவே அவைகளை திறக்கப்படுமென்பதுடன் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
8. அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபன அலுவலகத்தில் தேவைப்படின் இலவசமாக கேள்வி ஆவணமானது பரீட்சிக்கப்படலாம்.
9. பூர்த்தி செய்யப்படாத மற்றும் தாமதமான விலைமனுக்களின் சமர்ப்பித்தல்கள் நிராகரிக்கப்படும்.
10. எந்தவொரு விலைமனுக்களையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கான உரிமையை பெறுகைக் குழுவானது கொண்டுள்ளது.
11. மேலதிக தகவலை SPMC இன் பொறியியலுக்கான பிரதி பொது முகாமையாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 2623246/ 2635353 (பொது) – நீடிப்பு 701/702.
இந்த பெறுகையின் விபரங்களை www.spmclanka.com என்ற எமது இணையதளத்தில் பார்வையிடலாம்.

**தலைவர் - லோட்டஸ் பார்மா செயற்றிட்டத்திற்கான பெறுகைக் குழு**
**அரச மருந்தாக்கல் உற்பத்தி கூட்டுத்தாபனம்,**
**இல. 11, சேர் ஜோன் கொத்தலாவள மாவத்தை,**
**கந்தவள தோட்டம், இரத்மலான, இலங்கை.**

**தொலைபேசி : 2635353/ 2637574/ 2623298**
**தொலைநகல் : 2634771/ 2626621**

## ஐ.நா பேரவையில் நாளை...

*(06ஆம் பக்கத் தொடர்)*

இந்த முழுமையான தொகுதிகளும் ஏறத்தாழ 70,000 பக்கங்களைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களைத் தடுக்கத் தவறினார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வந்த முன்னாள் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தர மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஹேமசிறி பெர்னான்டோ ஆகியோர் மேல்நீதிமன்றத்தினால் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறான நிலையில் உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலுக்குக் காரணமானவர்கள் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. இந்தப் பின்னணியில் பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தற்பொழுது வத்திக்கான் சென்றுள்ளதுடன், இவர் தன்னுடைய இவ் விஜயத்தின் போது உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் குறித்த விசாரணைகள் பற்றி வத்திக்கானுக்கு விளக்கமளிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவையெல்லாம் இவ்வாறு இருந்தபோதும், அரசாங்கம் இவ்விடயத்தில் உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது என்பதை எவரும் மறுக்க முடியாது. நீதித்துறையில் தேவையற்ற தலையீடுகள் இன்றி சுயாதீனமான விசாரணைகளுக்கு அரசாங்கம் இடமளித்திருப்பதாக ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் பலரும் தெரிவித்துள்ளனர். இதுபோன்ற சவால்களுக்கு மத்தியில் ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கை விவகாரம் நாளை பேசப்படவுள்ளது. இலங்கைக்கு ஆதரவு வழங்கும் நாடுகளின் ஒத்துழைப்புடன் தமக்கு நீதி கிடைக்கும் என அரசாங்கம் நம்பிக்கை கொண்டுள்ளது.

**வத்தளையில்**
**ஆடம்பர வீடொன்று விற்பனைக்கு**

வத்தளை அவரிவத்த பாதையில் மதிப்பான குடும்பங்கள் கொண்ட சூழலில் அனைத்து உயர்தர பாடசாலைகள், வைத்திய சாலைகள் மற்றும் பொழுது போக்கு நிலையங்களுள்ள இடத்தில் அமைந்துள்ளது. 15 பேர்ச் காணி 3 மாடி வீடு. 20 அடி அகலமான பாதை, அனைத்து படுக்கையறைகளும் வளிச்சீராக்கல் கொண்டது. 4 படுக்கையறைகள், 3 குளியலறைகள் வெந்நீர் கொண்டவை மதுபானமிடம் சிறந்த காட்சியுடன் 2 பன்ரீக்கள் கிரனயிட் பதிக்கபபட்டவை. பணியாளர் அறை பணியாளர் குளியலறைகளுடன் முழுவதும் தரை ஓடு பதிக்கப்பட்டது. நெதும் பலகையிலான படிக்கட்டு அனைத்து கதவுகள் மற்றும் யன்னல்கள் பலாமர பலகை காணி சீராக்கப்பட்ட தோட்டம், தானியங்கும் இரு ரோலர் கேட்டுக்கள். கட்டிடக் கலையுடன் வடிவமைக்கப்பட்டது. 3 வழி மின்சாரம். முழுவதற்குமான CCTV 80 மில்லியன் மாத்திரமே. தொடர்பெண் 070 5031726.

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 350

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | 05 | 06 |
| 07 | | 08 | | | 09 |
| 10 | 11 | 12 | | 13 | 14 |
| 15 | | | 16 | 17 | |
| | 18 | | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | | 25 | |

பெயர் ..........................................................

வகுப்பு ..........................................................

பாடசாலை பெயர் ..........................................................

பாடசாலை முகவரி ..........................................................

..........................................................

.............................. ..........................................

மாணவரின் பெயர் வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

**இடமிருந்து வலம்**

(01) எவராவது தங்களுக்கு இழைக்கப்படுகின்ற அநீதிக்கு நியாயம் காண வேண்டுமானால் நாட வேண்டிய இடம்.

(10) பலவிதமான பொருட்களும் விற்பனை செய்யப்படுகின்ற கடைகள் அடங்கிய தொகுதி. இங்கு நாம் சென்றால் மரக்கறி, மீன், இறைச்சி உட்பட பல்வேறு பொருட்களை வாங்கிக் கொள்ள முடியும்.

(13) பூக்களின் அமுதம் இது. வண்ணத்துப்பூச்சிகள், தேனீக்கள் போன்றவையெல்லாம் பூக்களை நாடி வருவது இதனை அருந்திச் செல்வதற்கே ஆகும். (தலைகீழான சொல்)

(16) கடலிலும், ஆற்றிலும், குளத்திலும் மீன்பிடிப்பதற்கு பல்வேறான உபகரணங்கள் உள்ளன. அவற்றில் பிரதான உபகரணம் இதுவாகும். (தலைகீழான சொல்)

(19) ஒரு வருடத்தின் பன்னிரண்டிலொரு பகுதி இது. ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பெயர்.

(22) புவியைச் சூழ்ந்தபடி வளிமண்டலத்தில் வெகுதொலைவில் கவசம் போலக் காணப்படும் வாயுப் படலம் இது. இவ்வாயு புவியைச் சூழ்ந்து பாதுகாப்புக் கவசம் போன்று இருப்பதாலேயே, சூரியனில் இருந்து புறஊதாக் கதிர்கள்(நச்சுக் கதிர்கள்) பூமியை வந்தடையாமல் தடுக்கப்படுகின்றன.

**மேலிருந்து கீழ்**

(1) நாம் நீரில் மூழ்கி விடாதபடி தப்பிக் கொள்ள வேண்டுமானால், இந்தக் கலையைத் தெரிந்து வைத்திருக்க வேண்டும். பலநாள் பயிற்சியினாலேயே இக்கலையைப் பயின்று கொள்ளலாம்.

(3) மனிதனால் வருமானம் கருதி வளர்க்கப்படும் ஆடு, மாடுகள் போன்றவற்றை நாம் கால்நடைகள் என்று சொல்கின்றோம். கால்நடைகளை இவ்வாறும் குறிப்பிடலாம்.

(6) எமது உடலை உடம்பு, மேனி, சரீரம் என்றெல்லாம் கூறுவது போன்று இப்பெயரிலும் குறிப்பிடலாம். (தலைகீழான சொல்)

(13) உலகுக்கு ஒளியும், சக்தியும் தந்து உயிரினங்களின் வாழ்வுக்கு உதவுகின்ற பிரதான சக்திமுதல். (தலைகீழான சொல்)

(16) ஆதவன் மறையும் அந்திப் பொழுது. (தலைகீழான சொல்)

(18) மரம், செடி, கொடிகள் நிறைந்த பூங்கா போன்ற இடம் இது. இங்கே உலாவுவது உள்ளத்துக்கு இதமளிக்கும். (தலைகீழான சொல்)

**போட்டி இல. 350**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834.**
**கொழும்பு**

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 349

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. கிரகணம் 09. மன்னவன் 14. வால்
17. பல்லி 21. தோகை 23. ஆவணி

**மேலிருந்து கீழ்**

01. கிவி 03. கவின் 05. புவனம்
09. மல்லிகை 19. அணி 20. ஆணை

### புதிதாக ஆரம்பமாகும் சிறுவருக்கான குறுக்கெழுத்துப் போட்டி

உங்கள் அபிமான மஞ்சரி சிறுவர் உலகம் குறுக்கெழுத்துப் போட்டியை எதிர்வரும் மார்ச் 06ம் திகதியில் இருந்து முதலாம் இலக்கத்தில் இருந்து ஆரம்பிக்கவுள்ளோம்.
பரிசுகளும் உங்களுக்காக காத்திருக்கிறது.

**முதல் பரிசு** ரூ. 500/
**இரண்டாம் பரிசு** ரூ. 350/
**மூன்றாம் பரிசு** ரூ. 250/

தயவு செய்து நீங்கள் அனுப்பும் கூப்பனுடன் உங்கள் சொந்த தபால் முகவரி, உங்களுடைய வங்கி சேமிப்பு புத்தக கணக்கு இலக்கம், வங்கியின் பெயர், கிளை என்பனவற்றையும் குறிப்பிட மறக்க வேண்டாம். சேமிப்பு புத்தகம் இல்லாதவர்களுக்கு காசோலை அனுப்பி வைக்கப்படும். பெயர் முகவரியை ஆங்கிலத்தில் தெளிவாகக் குறிப்பிடுவது வசதியாக இருக்கும். (ஆ -ர்)

## கோடை!

சுள்ளெனவே சூரியனும்
சுட்டெரிக்கும் கோடை
சோலையிலும் பாலைபளல்
சூழவைக்கும் கோடை

கள்ளிகளும் வாடிமுளை
கருக வைக்கும் கோடை
கானருவி ஆறுகளைக்
காயவைக்கும் கோடை!

வெ ள்ளமெனத் தேகமதை
வியர்க்க வைக்கும் கோடை
விசிறிகளை ஓய்வில்லாமல்
வேலை வாங்கும் கோடை

அங்கமெல்லாம் வேர்க்குருவை
அள்ளித்தரும் கோடை
அரிப்பெடுத்து இராப்பகலாய்
அவதி தரும் கோடை

உள்ளமதில் தாகமதை
ஓங்க வைக்கும் கோடை
உதடுலர்த்தி, நாவறட்சி
உண்டுபண்ணும் கோடை

குளிர்பானம், செவ்விளநீர்
விற்க வரும் கோடை
விருப்ப மூட்டிக் காசுபணம்
விரயமாக்கும் கோடை!

கல்லொளுவை பாரிஸ்



குறளமுதம் :

**பல்லார் முனியப் பயன்இல சொல்லுவான்**
**எல்லாரும் எள்ளப் படும்.**

**தெளிவுரை :**
கேட்டவர் பலரும் வெறுக்கும்படியாகப் பயனில்லாத சொற்களைச் சொல்லுகின்றவன், எல்லோராலும் இகழப்படுவான்.

## கொரோனா



கொரோனா என்றாலே அனைவரும் பீதியடையும் செய்தியாகி விட்டது. உலக மக்களை ஆட்டிப்படைக்கும் 'கொவிட் 19' எனும் கொடிய கண்ணுக்குப் புலப்படாத சிறிய வைரஸ் கிருமி மனிதரை மரணத்துக்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

சீனாவின் வூஹான் மாநிலத்தில் முதன் முதலில் பரவிய கொடிய வைரஸ் நோயால் உலக நாடுகள் அனைத்தும் சொல்லொனா துன்பத்திற்கு உள்ளாக்கிக் கொண்டிருக்கிறது.

ஏழை, பணக்காரன் என்ற பேதமின்றி அனைத்து தரப்பினரையும் விட்டுவைக்கவில்லை இந்த கொடிய வைரஸ். இந்த கொரோனா நோயிலிருந்து உலக மக்களை காப்பதற்காக உலக சுகாதார ஸ்தாபனம் மற்றும் சுகாதார அமைச்சு, மருத்துவ நிபுணர்கள், மருத்துவர்கள் மற்றும் சுகாதாரத்துறை ஊழியர்கள் என அனைத்து தரப்பினரும் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இது தவிர, ரஷ்யா, சீனா, அமெரிக்கா என உலக நாடுகள் பல வைரஸ் தொற்றுக்கு எதிராக தடுப்பூசி மருந்துகளை கண்டு பிடித்து விநியோகித்து வருகின்றன.

எனவே உலக மக்களாகிய நாம் வைத்தியர்களின் ஆலோசனைகளுக்கமைய செயற்படுவோம். அத்துடன் சமூக இடை வெளியைப் பேணுவது மற்றும் முகக்கவசம் அணிவது. கைகளை நன்றாக கழுவுவது செனிட்டைசரைப் பாவிப்பதையும் வழக்கமாகக் கொள்வோம். இவ்வாறு செயற்படுவோமானால் கொரோனா வைரஸிடமிருந்து எம்மை நாம் பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக இருக்கும்.

**புகழேந்திரன் ரக்ஷனா,**
மட்/அருணோதயா வித்தியாலயம்,
மட்டக்களப்பு.




ஸைனி - ஜுஸா,
காத்தான்குடி

## கடற்கரையில் ஒருநாள்




செம்மஞ்சள் நிற வானம்
மாலைநேர சூரியன்
கூடு நோக்கிச் செல்லும்
வான் பட்சிகள்
அமைதிக் கடல்
மெல்லிசை எழுப்பும்
மெல்லிய அலைகள்
களைப்போடும் கைநிறைய மீனோடும்
கரை சேரும் மீனவர்கள்
மீனை எதிர்பார்த்து காத்திருக்கும்
வியாபாரிகள், மக்கள், காக்கைகள்
மணல் வீடு கட்டும் குழந்தைகள்
அலையையே கண் சிமிட்டாமல்
பார்த்து கொண்டிருக்கும் பெற்றோர்கள்
துள்ளித் திரியும் நாய்க்குட்டி
கடல் பார்த்து மெலிந்த நடை
நடக்கும் வயோதிப தம்பதிகள்
நானும் மூழ்கினேன் இயற்கையில்

**வரக்காமுறை மர்யம்,**
தரம் 08 E,
மா/ஆமினா மகளிர் தேசிய பாடசாலை, மாத்தளை.






பி. பிரித்திகா,
க.பொ.த (உ/த) இந்துக்கல்லூரி,
வெளிமடை.



எம்.இஸட். ஸிக்ரா சுஹைர்,
தர் 04, வாடியதென்ன க. வித்தியாலயம்,
ஹெம்மாத்தகம.

## கருத்துடன் செயற்படு!

ஒரு நாள் ஒருவன் அவன் வீட்டுப் பரணைச் சுத்தம் செய்து கொண்டிருந்தான். அப்போது அதுவரை அவன் கவனித்திராத ஒரு புத்தகத்தைக் கண்டெடுத்தான்.

அது ஒரு மிகப் பழைய புத்தகம். பக்கங்கள் மஞ்சள் படிந்து மடித்துப் போயிருந்தன. பக்கங்களைத் திருப்புகையில் மிகக் கவனம் தேவையிருந்தது. இல்லாவிட்டால் பக்கங்கள் உதிரத் தொடங்கின.

அவன் அந்தப் புத்தகம் மந்திர மாயங்களைப் பற்றியது என்று அறிந்து கொண்டான். எத்தனையோ முறை படிக்க முயன்றும் அவன் ஒரே ஒரு பத்தியில் உள்ள கருத்தை மட்டும் தெரிந்து கொள்ள முடிந்தது. மற்றவை அவனுக்குப் புரியவில்லை.

அந்தப் பத்தியில் கருங்கடற் கரையில் கிடக்கும் மாய சக்தி மிக்க ஒரு கறுப்புக் கூழாங்கல்லைப் பற்றிச் சொல்லப்பட்டிருந்தது. அந்தக் கல்லால் எதைத் தொட்டாலும் அதைத் தங்கமாக மாற்றி விடுமாம்.

அந்தக் கல்லை எப்படிக் கண்டு கொள்வது என்றும் அந்தப் புத்தகத்தில் சொல்லப் பட்டிருந்தது. தொட்டுப் பார்த்தால் மற்ற கற்கள் எல்லாம் பனிக் கட்டி போல் குளிராய் இருக்க, அந்தக் கல் மட்டும் வெதுவெதுப்பாய் இருக்குமாம்.

இதைத் தெரிந்து கொண்ட மனிதனுக்கு இருப்புக் கொள்ளவில்லை. கருங்கடல் கரை நோக்கி உடனே புறப்பட்டான்.

அங்கு தினமும் காலையிலிருந்து மாலை வரை அவன் ஒவ்வொரு கல்லாய் தொட்டுப் பார்த்துத் தேடத் துவங்கினான். கடற்கரையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை கருங்கூழாங்கற்கள் கிடந்தன. அவனுக்கு ஒரு முறை சோதித்த கல்லை மறுபடி மறுபடி சோதிக்காமல் இருக்க வேண்டுமே என்ற கவலை வந்து விட்டது. சோதித்த கல்லைக் கடலுக்குள் உடனே எறிந்து விட்டால் குழப்பம் வராது என்று யோசித்து, அதன்படியே ஒவ்வொன்றாகக் கற்களைக் கடலுக்குள் எறிந்தான்.

பல மாதங்களும் வருடங்களும் கடந்து போயின. கல்லும் கிடைக்கவில்லை, அவனும் விடுவதாய் இல்லை. கற்களைத் தொட்டுப் பார்த்து கடலுக்குள் எறியும் பணி அவனுக்கு அனிச்சைச் செயல் போல் ஆகிவிட்டது.

ஒரு நாள் மாலை, மிகுந்த தேடலுக்குப் பிறகு களைத்துப் போய் கடற்கரையை விட்டுச் செல்லும் போது ஒரு கறுப்புக் கூழாங்கல் அவன் கண்ணில் பட்டது. அதைக் கையில் எடுத்தான். அது வெதுவெதுப்பாய் இருந்தது. ஆனால், பல வருடப் பழக்கத்தால், எப்பொழுதும் போல் அதையும் யோசிக்குமுன் கடலில் தூர எறிந்து விட்டான்.

செய்யும் செயல்களில் எப்பொழுதும் கருத்தும் கவனமும் தேவை. பழக்கங்களுக்கு அடிமையாவதைத் தவிர்க்க வேண்டும்!

**எஸ். விஷாலினி,**
கொட்டகலை.

## சின்னச் செல்லங்களுக்கு...!

முகக்கவசம் நீ அணிந்திடு பிறர்
முத்தமதை நீ மறுத்திடு
இடைவெ ளி நீ பேணிடு உன்
இன்முகம் காட்டி நீ சிரித்திடு

வெ ளிச் செல்லல் நீ குறைத்திடு வாசல்
வழி காட்டல் நீ தவிர்த்திடு
கைகால் நீ கழுவிடு தினம்
கவனமாய் நீ உனைப் பேணிடு

செய்திகள் தினம் நீ கேட்டிடு நற்
சுகாதார வழிமுறைகள் நீ பேணிடு
மெய்நிலை நீ அறிந்திடு நாட்டினர்
மேன்மை எண்ணி நீ உழைத்திடு

உன்னை நீ அறிந்திடு உன்
உற்றார் மதித்திட நீ நடந்திடு
கண்ணென கல்வியை நீ கற்றிடு பின்
கணப் பொழுதையும் பெரிதாய்
நீ மதித்திடு.

**மொழிவரதன்,**
கொட்டகலை.

## மாணவர் கழக அனுமதி

மாணவர் பெயர் ........................................

பிறந்த திகதி ........................................

வகுப்பு ........................................

பாடசாலை ........................................

........................................

........................................

வகுப்பாசிரியர் கையொப்பம்

**வர்ணப் புகைப்படம்**

**மாணவர் கழகம்**
**சிறுவர் உலகம்**
**தினகரன் வாரமஞ்சரி**
**த.பெ.இல.834 கொழும்பு.**



எம்.எச்.எப். ஹனா,
தரம் 07, அல் அஷ்கர் கல்லூரி,
ஹெம்மாத்தகம.



# விளையாட்டு




## மெட்வடேவ் முதலிடத்திற்கு முன்னேற்றம்

கடந்த வியாழன் அன்று நடந்த ஏடிபி மெக்சிகோ பகிரங்க கால் இறுதி ஆட்டத்தில் யோஷிஹிட்டோ நிஷியோகாவை 6-2, 6-3 என்ற செட் கணக்கில் வீழ்த்தி டேனியல் மெட்வெடேவ் உலகின் முதலினை தரவரிசைக்கு முன்னேறினார். 26 வயதான ரஷ்ய வீரர், டுபாயில் நடந்த காலிறுதி ஆட்டத்தில் செர்பிய நட்சத்திரம் நோவக் ஜோகோவிச்சின் தோல்விக்கு நன்றி செலுத்தி முதலிடத்தை பிடிப்பேன் என்பதை அறிந்த பிறகு உணர்ச்சிகளின் ரோலர் கோஸ்டரில் சவாரி செய்தார்.

ஆனால், அவுஸ்திரேலிய பகிரங்க இறுதிப் போட்டியின் ரஃபேல் நடாலுடன் அரையிறுதியில் மோதலாம் என்பதற்காக, ஜப்பானின் நிஷியோகாவுக்கு எதிராக அவர் தனது 21வது கிராண்ட் ஸ்லாம் பட்டத்தினை வென்றார். அவுஸ்திரேலிய பகிரங்க இறுதிப் போட்டியில் இரண்டு செட்களில் இருந்து மெட்வடேவை ஐந்து செட்களில் வீழ்த்திய நடால் வியாழன் அன்று நடக்கவிருக்கும் காலிறுதிப் போட்டியில் டாமி பாலை எதிர்கொள்கிறார். 'பகலில் இது (செய்தி) கிடைக்கும் போது உண்மையில் ஒரு போட்டியை விளையாடுவது எளிதானது அல்ல,' என்று மெட்வெடேவ் திங்கட்கிழமை தரவரிசையில் ஜோகோவிச்சைப் பின்னுக்குத் தள்ளுவார் என்பதை அறிந்த பிறகு தனது கவனத்தைத் தக்க வைத்துக் கொண்டார். ஜோகோவிச் 6-4, 7-6 (7/4) என்ற செட் கணக்கில் செக் உலகின் 123வது இடத்தில் உள்ள ஜிரி வெஸ்லியை வீழ்த்தி செர்பியரின் ஆட்சி முடிவுக்கு வருவதை உறுதி செய்தார்.

'உண்மையைச் சொல்வதானால், அவர் தோற்றதை நான் பார்த்தேன், ஆனால் அவர் தோற்றால் நான் முதலிடத்தைப் பெறுவேன் என்று எனக்குத் தெரியாது,' என்று மெட்வெடேவ் கூறினார். 'இங்கே ஏதாவது பெரிய விஷயத்தைச் செய்ய வேண்டும் என்று நினைத்தேன். அதனால் எல்லா செய்திகளையும் பெறும்போது, சரி, அது நடக்கும் என்று எனக்குப் புரிந்தது.

'இன்றும் வெற்றி பெறுவதே எனக்கு முதல் இலக்காக இருந்தது, ஏனென்றால் நான் விளையாடும் ஒவ்வொரு போட்டியிலும் வெற்றி பெற முயற்சிக்கிறேன். 'ஆனால் இது நிச்சயமாக சில சிறந்த செய்தி.'

ஜோகோவிச், நடால், ரோஜர் பெடரர் மற்றும் அண்டி முர்ரே ஆகியோரின் ஆட்டத்தின் 'பிக் ஃபோர்' க்கு வெளியே 2004 ஆம் ஆண்டு முதல் முதலிடத்தை பிடிக்கும் முதல் மனிதர் மெட்வடேவ் ஆவார்.

எவ்ஜெனி கஃபெல்னிகோவ் மற்றும் மராட் சஃபினுக்குப் பிறகு முதலிடத்திற்கு ஏறிய மூன்றாவது ரஷ்ய மனிதர் ஆவார். நாளின் கவனச்சிதறல்கள் இருந்த போதிலும், நிஷியோகாவை அனுப்ப மெட்வெடேவுக்கு 70 நிமிடங்கள் தேவைப்பட்டன. ஜப்பானிய தகுதிச் சுற்று இரண்டாவது செட்டில் ஆரம்ப இடைவெளி வரை சென்றது, ஆனால் மெட்வெடேவ் பொறுமையாக வெற்றிக்காகத் திரும்பினார்.

'அவர் ஒரு கடினமான எதிரி,' மெட்வெடேவ் கூறினார். 'அவருக்கு எப்படித் திரும்புவது, எப்படி ஓடுவது, நீங்கள் எதிர்பார்க்காத போது சில பைத்தியக்காரத்தனமான ஷொட்களை எப்படி உருவாக்குவது என்பது அவருக்குத் தெரியும். கடைசிவரை என்னால் நிம்மதியாக இருக்க முடிந்ததில் மகிழ்ச்சி.'

## இலங்கை-இந்திய டெஸ்ட் தொடர் இவ்வாரம் ஆரம்பம்

சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலினால் அறிமுகப் படுத்தப்பட்ட டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடரின் 2வது அத்தியாயம் தற்போது நடைபெற்று வருகின்றது. இதன் முதல் சம்பியனாக நியூசிலாந்து மகுடம் சூடிக்கொண்டது. முதலாவது உலகக்கிண்ண டெஸ்ட் தொடரில் 7வது இடத்துக்கு தள்ளப்பட்ட இலங்கை அணி இம்முறை இத்தொடரின் கீழ் இதுவரை தாம் சந்தித்த இரு போட்டிகளிலும் வெற்றிபெற்று 100 சதவீத வெற்றியுடன் முதலிடத்திலுள்ளது. டெஸ்ட் உலகக் கிண்ண வரிசையில் இலங்கை அணி சந்திக்கும் இரண்டாவது தொடராக இவ்வார இறுதியில் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் செய்து இருபோட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடரின் இரண்டாவது அத்தியாயம் கடந்த நவம்பர் மாதம் இந்தியஇங்கிலாந்து அணிகளுக்கிடையில் நடைபெற்ற தொடருடன் ஆரம்பமாகி 2023ம் ஆண்டு நடுப்பகுதிவரை ஆட்டங்கள் தொடர்ந்து நடைபெறவுள்ளன. டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற 12 நாடுகளில் ஆப்கானிஸ்தான், சிம்பாப்வே, அயர்லாந்து அணிகளைத் தவிர மற்றைய 9 நாடுகளும் இத்தொடரில் பங்குபற்றுகின்றன. ஓர் அணி ஆறு அணிகளுடன் 6 தொடர்களில் விளையாட வேண்டும். இவ்வடிப்டையில் உள்நாட்டில் 3 தொடர்கள், வெளிநாடுகளில் 3 தொடர்களில் பங்குகொண்டு விளையாடி வருகின்றன.

இத்தொடரில் இம்முறை அதிக போட்டிகளில் விளையாடும் அணியாக இங்கிலாந்து அணி 22 ஆட்டங்களில் மோதுவதுடன், அவ்வணிக்கு இலங்கை மற்றும் பங்களாதேஷ் அணிகளுடனும், இந்திய அணி 18 போட்டிகளில் விளையாடவுள்ளதுடன் அவ்வணிக்கு பாகிஸ்தான் மற்றும் மேற்கிந்தியத் தீவுகளுடனும், அவுஸ்திரேலியா இத்தொடரில் 19 ஆட்டங்களில் மோதவுள்ளதுடன் பங்களாதேஷ், நியூசிலாந்து அணிகளுடனும், தென்னாபிரிக்க அணி 15 போட்டிகளில் களமிறங்கவுள்ளதுடன் அவ்வணிக்கு இலங்கை, பாகிஸ்தானுடன் போட்டிகள் இல்லை.

இலங்கைக்கு இம்முறை இங்கிலாந்து, தென்னாபிரிக்க அணிகளுடனும், மேற்கிந்தியத் தீவுகளுக்கு இந்தியா, நியூலிலாந்து அணிகளுடனும், பங்களாதேஷ் அணிக்கு இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகளுடனும் போட்டிகள் இல்லை. பாகிஸ்தான் அணி 14 போட்டிகளிலும் கடந்த முறை சம்பியனான நியூசிலாந்து அணி 13 போட்டிகளிலும், பங்களாதேஷ், இலங்கை அணிகள் தலா 12 போட்டிகளிலும் உலக டெஸ்ட் சம்பியன் கிண்ணப் போட்டிகளில் மோதவுள்ளன. இதுவரை இலங்கை நூறு சதவீத வெற்றியுடன் முதலிடத்திலுள்ளதுடன் அண்மையில் முடிவுற்ற ஆஷஸ் டெஸ்ட் தொடரை 4-0 என்ற ரீதியில் வெற்றி பெற்ற அவுஸ்திரேலியா அணி 80 சதவீத வெற்றியுடன் இரண்டாவது இடத்திலுமுள்ளது. பாகிஸ்தான் 75 சதவீத வெற்றியுடன் மூன்றாவது இடத்திலுமுள்ளது.

இம்முறை இலங்கை அணி சந்தித்த முதல் தொடரிலேயே மேற்கிந்தியத் தீவுகள் அணியை 2-0 என்ற ரீதியில் வென்று நல்ல ஆரம்பத்தைப் பெற்றுள்ளது. அடுத்து இவ்வார இறுதியில் ஆரம்பமாகும் இந்தியத் தொடர் இலங்கை அணிக்கு கடினமான தொடராகும். 40 வருட கால இலங்கை டெஸ்ட் வரலாற்றில் இதுவரை இந்திய மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியிலும் இலங்கை அணி வெற்றிபெற்றதில்லை. டெஸ்ட் போட்டிகளில் துடுப்பாட்டத்திலும், பந்து வீச்சிலும் இலங்கை அணி தற்போது முன்னேற்றம் கண்டு வருவதால் இத்தொடரில் சாதிக்கும் என எதிர்பார்க்கலாம். உலக டெஸ்ட் கிண்ணத் தொடரின் அடிப்படையில் இவ்வருட ஜுன் மாதத்தில் அவுஸ்திரேலிய அணியுடனும், ஜுலை மாதத்தில் பாகிஸ்தான் அணியுடன் இரு தொடர்கள் இலங்கையில் நடைபெறவுள்ளன. இவ்விரு அணிகளும் பிரபல அணிகளானாலும் தொடர் இலங்கையில் நடைபெறுவதால் இலங்கை அணிக்கு அது அனுகூலமாக அமையலாம். டெஸ்ட் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கைக்கான அடுத்த இரண்டு தொடர்களும் நியூசிலாந்திலும், பங்களாதேஷிலும் நடைபெறவுள்ளன. இத்தொடர்களில் நியூசிலாந்துடனான தொடர் சற்றுக் கடினமானதாக அமையுமென்றாலும் அம்மண்ணில் இலங்கை அணி டெஸ்ட் போட்டிகளில் வென்றுள்ளதால் முடிவுகள் இலங்கைகு சாதகமாக அமையலாம். பங்களாதேஷுடனான தொடரில் இலங்கை அம்மண்ணில் ஒரு டெஸ்ட் போட்டியிலாவது தோல்வி கண்டதில்லை. எனவே நம்பிக்கையுடன் இத்தொடரில் இலங்கை அணி விளையாடும் என எதிர்பார்க்கலாம்.





இத் தொடர் போட்டிகளுக்கு இதுவரை கொரோனாவால் பாதிப்பேற்படவில்லை. ஆனால் கடந்த தொடரின் போது கடைசி நேரத்தில் கொரோனா பரவல் காரணமாக அவஸ்திரேலியா அணியின் நியூசிலாந்து மற்றும் பங்களாதேஷ் அணிகளுடனான தொடர்கள் இரத்தானாதால் அவ் அணிக்கு இறுதிப் போட்டிக்குத் தெரிவாவதில் சிக்கல் ஏற்பட்டது. அதேவேளை பங்களாதேஷ்பாகிஸ்தான், பங்களாதேஷ்நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான தொடர்களும் இத்தொற்றால் கைவிடப்பட்டது. இதுவரை இந்திய அணி இங்கிலாந்து, நியூசிலாந்து, தென்னாபிரிக்கா அணிகளுடன் மூன்று தொடர்களில் 10 போட்டிகளில் விளையாடியுள்ளதுடன் 5 போட்டிகளில் வெற்றி பெற்றுள்ளதுடன் 3 போட்டிகளில் தோல்வியடைந்துள்ளது. கடைசியாக தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 3 போட்டிகள் கொண்ட தொடரில் 2-1 என்ற ரீதியில் அவ்வணி தோல்வியடைந்துள்ளது. அதன் பின் அவ்வணியின் தலைமைப் பொறுப்பிலிருந்தும் விராட் கோஹ்லி விலகியுள்ளதால் புதிய தலைவர் ரோஹித் சர்மாவின் தலைமையில் இந்திய அணி முதலாவது டெஸ்ட் தொடரை சந்திக்கவுள்ளது.

இரு அணிகளையும் பொறுத்த வரையில் இந்திய அணியே முன்னிலையில் உள்ளது. அவ்வணியின் சுழற்பந்து, வேகப்பந்து என இரு துறைகளிலும் சம பலத்திலுள்ளது. எந்த ஆடுகளங்களிலும் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரிட் பும்ரா திறமையாகவே பந்து வீசி வருகிறார். அவர்களது சுழற்பந்து வீச்சாளர்களான அஸ்வின், ஜடேஜா ஜோடி இந்திய மண்ணில் அந்நிய அணிகளுக்கு சவாலாகவே பந்து வீசி வருகின்றனர். துடுப்பாட்டத்தைப் பொறுத்த வரை மாயக்ங் அகர்வால், ரோஹித் சர்மா, சுப்மன் கில், ஸ்ரேஸ் அய்யர் என அவ்வணியின் ஆரம்பத்துடுப்பாட்டம் மற்றுமல்லாது நடுவரிசைகூட பலமாகவே உள்ளது. கடந்த இரு வருடங்களில் சதங்கள் குவிக்காவிட்டாலும் சுமாரான ஓட்டங்களை விராட் கோஹ்லி சேர்த்து இந்திய அணியின் வெற்றிக்கு பங்களித்து வந்துள்ளார். ஆனால் இத்தொடரில் அவரின் துடுப்பாட்டம் பழைய நிலைக்கு திருப்ப வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**எம்.எஸ்.எம்.ஹில்மி...**

இலங்கை அணியைப் பொறுத்தவரை துடுப்பாட்டத்தில் தலைவர் திமுத் கருணாரத்னவையே பெரிதும் எதிர்பாத்துள்ளது. கடந்த காலங்களில் அவரே இலங்கை அணியின் துடுப்பாட்டத்துக்கு வலுச் சேர்த்துள்ளார். கடந்த வருடம் ஓட்டங்கள் குவித்தோர் வரிசையில் இங்கிலாந்து அணித் தலைவர் ஜோ ரூட்டுக்கு அடுத்த இடத்தில் உள்ளார். புதிய வீரர்களான அசலங்க, பெத்தும் நிஸ்சங்க இவர்களுடன் அனுபவ வீரர்களான குசல் மெண்டிஸ், அஞ்சலோ மெத்தியூஸ் போன்ற வீரர்களும் சோபித்தால் சிறந்த போட்டித் தொடராக இது அமையும், பந்து வீச்சைப் பொறுத்த வரை சுழற்பந்து வீச்சாளர்களான லசித் எம்புல்தெனிய, கடந்த மேற்கிந்தியத் தொடரில் 2 போட்டிகளில் 18 விக்கெட்டுகளை வீழ்த்திய ருமேஷ் மெண்டிஸ் ஆகியோரையே இலங்கை அணி பெரிதும் நம்பியுள்ளது.

சுமார் 40 வருட இலங்கை இந்திய டெஸ்ட் வரலாற்றில் இதுவரை 44 போட்டிகள் நடைபெற்றுள்ளன. இதில் 20 போட்டிகளில் இந்திய அணியும் 07 போட்டிகளில் இலங்கை அணியும் வெற்றி பெற்றுள்ளது. 17 போட்டிகள் வெற்றி தோல்வியின்றி முடிவுற்றுள்ளது. இரு அணிகளுக்கிடையில் கூடிய ஓட்டங்களாக 1997ம் ஆண்டு ஆர் பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கை அணி பெற்ற 952 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. குறைந்த ஓட்டங்களாக 1990ம் ஆண்டு சண்டிகாரில் இலங்கை அணி பெற்ற 82 ஓட்டங்களே பதிவாகியுள்ளது.

ஒரு வீரர் பெற்ற கூடிய ஓட்டங்களாக 1997ம் ஆண்டு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் இலங்கையின் சனத் ஜயசூரிய பெற்ற 340 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. இதுவரை பெற்ற கூடிய மொத்த ஓட்டங்களாக இந்திய வீரர் சச்சின் டெண்டுல்கார் 25 போட்டிகளில் பெற்ற 1995 ஓட்டங்களே பதிவாகியுள்ளது. ஒரு வீரர் பெற்ற கூடிய சதங்களாக சச்சின் டெண்டுல்கார் பெற்ற 9 சதங்கள் பதிவாகியுள்ளன. இதுவரை ஒரு வீரர் பெற்ற மொத்த விக்கெட்டாக இலங்கை சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் 22 போட்டிகளில் பெற்ற 105 விக்கெட்களே பதிவாகியுள்ளது. ஒரு இன்னிஸ்சில் சிறந்த பந்து வீச்சாக 2001ம் ஆண்டு கொழும்பு எஸ். எஸ். சி மைதானத்தில் முத்தையா முரளிதரன் 87 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ளார்.

இதுவரை உலக டெஸ்ட் சம்பியன் தொடரில் நடைபெற்ற போட்டிகளில் அடிப்படையில் அணிகளின் புள்ளிப்பட்டியல் வருமாறு:

| நாடுகள் | போட்டிகள் | வெற்றி | தேல்வி | சமநிலை | புள்ளிகள் | வெற்றி வீதம் |
|---|---|---|---|---|---|---|
| இலங்கை | 2 | 2 | 0 | 0 | 24 | 100% |
| அவுஸ்திரேலியா | 5 | 4 | 0 | 1 | 52 | 88% |
| பாகிஸ்தான் | 4 | 3 | 1 | 0 | 36 | 75% |
| தென்னாபிரிக்கா | 4 | 2 | 2 | 0 | 24 | 50% |
| இந்தியா | 10 | 5 | 3 | 2 | 68 | 50% |
| நியூசிலாந்து | 3 | 1 | 1 | 1 | 16 | 33.33% |
| மே.இ.தீவுகள் | 4 | 1 | 3 | 0 | 12 | 25% |
| இங்கிலாந்து | 10 | 1 | 7 | 2 | 15 | 10% |
| பங்களாதேஷ் | 2 | 0 | 2 | 0 | 00 | 00% |

## மகளிர் உலகக் கிண்ணம் 2022: அட்டவணை வெளியீடு



2022 ஆம் ஆண்டு மகளிர் ஒருநாள் உலகக் கிண்ணம் நியூசிலாந்தில் மார்ச் 4 ஆம் திகதி தொடங்குகிறது. புதிய உலக சம்பியனைத் தீர்மானிக்க, மூன்று நொக் அவுட் ஆட்டங்கள் உட்பட, எட்டு அணிகளுக்கு இடையே மொத்தம் 31 ஆட்டங்கள் மார்க்யூ நிகழ்வின் போது விளையாடப்படும். போட்டியின் தொடக்க ஆட்டத்தில் நியூசிலாந்து மேற்கிந்திய அணியை எதிர்கொள்கிறது, அதே நேரத்தில் இந்தியா தனது அண்டை நாடான பாகிஸ்தானுக்கு எதிராக தனது போட்டியை மார்ச் 6 அன்று தொடங்குகிறது. 2017 இல் இறுதிப் போட்டியில் இந்தியாவை வீழ்த்திய நடப்பு சம்பியன் இங்கிலாந்து, மார்ச் 5 அன்று தனது பிரச்சார தொடக்க ஆட்டத்தில் அவுஸ்திரேலியாவை எதிர்கொள்கிறது. போட்டியின் முழு அட்டவணை இங்கே:



| திகதி | அணிகள் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| மார்ச் 4 | நியூசிலாந்து எதிர் மேற்கிந்திய தீவுகள் | 6:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 5 | பங்களாதேஷ் எதிர் தென்னாபிரிக்கா | 3:30AM IST | டுனெடின் |
| மார்ச் 5 | அவுஸ்திரேலியா எதிர் இங்கிலாந்து | 6:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 6 | பாகிஸ்தான் எதிர் இந்தியா | 6:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 7 | நியூசிலாந்து எதிர் பங்களாதேஷ் | 3:30AM IST | டுனெடின் |
| மார்ச் 8 | அவுஸ்திரேலியா எதிர் பாகிஸ்தான் | 6:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 9 | மேற்கிந்திய தீவு எதிர்இங்கிலாந்து | 3:30AM IST | டுனெடின் |
| மார்ச் 10 | நியூசிலாந்து எதிர் இந்தியா | 6:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 11 | பாகிஸ்தான் எதிர் தென்னாபிரிக்கா | 6:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 12 | மேற்கிந்திய தீவு எதிர் இந்தியா | 6:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 13 | நியூசிலாந்து எதிர் அவுஸ்திரேலியா | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 14 | பாகிஸ்தான் எதிர் பங்களாதேஷ் | 3:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 14 | தென்னாபிரிக்கா எதிர் இங்கிலாந்து | 6:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 15 | அவுஸ்திரேலியா எதிர் மேற்கிந்திய தீவு | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 16 | இங்கிலாந்து எதிர் இந்தியா | 6:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 17 | நியூசிலாந்து எதிர் தென் ஆபிரிக்கா | 6:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 18 | பங்களாதேஷ் எதிர் மேற்கிந்திய தீவுகள் | 3:30AM IST | டௌரங்கா |
| மார்ச் 19 | இந்தியா எதிர் அவுஸ்திரேலியா | 6:30AM IST | ஒக்லாந்து |
| மார்ச் 20 | நியூசிலாந்து எதிர் இங்கிலாந்து | 3:30AM IST | ஒக்லாந்து |
| மார்ச் 21 | மேற்கிந்திய தீவு எதிர் பாகிஸ்தான் | 6:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 22 | தென்னாபிரிக்கா எதிர் அவுஸ்திரேலியா | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 22 | இந்தியா எதிர் பங்களாதேஷ் | 6:30AM IST | ஹாமில்டன் |
| மார்ச் 24 | தென்னாபிரிக்கா எதிர் மேற்கிந்திய தீவு | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 24 | இங்கிலாந்து எதிர் பாகிஸ்தான் | 6:30AM IST | கிறிஸ்ட்சர்ச் |
| மார்ச் 25 | பங்களாதேஷ் எதிர் அவுஸ்திரேலியா | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 26 | நியூசிலாந்து எதிர் பாகிஸ்தான் | 3:30AM IST | கிறிஸ்ட்சர்ச் |
| மார்ச் 27 | இங்கிலாந்து எதிர் பங்களாதேஷ் | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 27 | இந்தியா எதிர் தென் ஆபிரிக்கா | 6:30AM IST | கிறிஸ்ட்சர்ச் |
| பிளே ஆப்கள் | | | |
| மார்ச் 30 | SF1 TBD எதிர் TBD | 3:30AM IST | வெலிங்டன் |
| மார்ச் 31 | SF 2 TBD எதிர் TBD | 6:30AM IST | கிறிஸ்ட்சர்ச் |
| ஏப்ரல் 3 | இறுதி TBD எதிர் TBD | 6:30AM IST | கிறிஸ்ட்சர்ச் |

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

# மஞ்சரி களஞ்சியம்

தினகரன் வாரமஞ்சரி

## வாழ்வாதாரமா சேதாரமா 213



தமிழ்க் கவி பேசுகின்றார்

### தற்காப்புக்கலையை கற்றுக் கொள்ளாதவரை

# பெண்கள் எந்த சுதந்திரத்தையும் அனுபவிக்க முடியாது



சினிமா என்ற ஊடகத்திற்கு கவர்ச்சி என்னும் மூலதனம் மிக அவசியம்; எனவே மக்களை கவரும்படியாக அவர்களது கதைகளும் அதை நடிப்பவர்களும் இருக்க வேண்டியதாகிறது. தொலைக்காட்சித் தொடர்களில் வில்லனே (பெரும்பாலும் வில்லிகள்தானே) வெற்றியைத் தட்டிச் செல்வதுண்டு. அப்படி இல்லையேல் கதை முடிந்துவிடும். பின்னர் அந்த நாடகக் குழு வேறு பிழைப்பு தேடியாக வேண்டும். சினிமா அப்படியல்ல. குறித்த நேரத்துக்குள் படத்தை முடிக்க வேண்டி இருப்பதால் வில்லர்கள் விரைவில் அதாவது இரண்டரை மணித்தியாலத்துக்குள் ஒரு வழிக்கு வந்தாகிவிடும் கட்டாயத்தில் இருப்பர்.

இப்போது நாம் விசயத்துக்கு வருவோம். ஊருக்கூர் சண்டியர்கள் இருப்பதுண்டு. இவர்கள் குறிப்பிட்ட காலம்வரை அவர்களது எல்லைவரை அதாவது ஊர் எல்லை வரை கலக்கித் திரிவார்கள். ஓரளவுக்கு அவர்கள் குடும்பம் குழந்தைகள் என்று ஆன பிறகு, எல்லாப் பிரச்சினைகளிலுமிருந்து ஓதுங்கி நல்ல பிள்ளைகளாக வாழத் தலைப்படுவார்கள். ஆனாலும் என்ன ஊருக்குள் எதாவது அசம்பாவிதமாக நடந்தால் மக்களும் காவல்துறையும் இவர்களையே முதலில் சந்தேகிப்பார்கள். முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும் என்பது போல அவர்கள் முன்னம் செய்த செயல்களின் பலனாக உயிருள்ளவரை நிம்மதி கெட்டு அலைய வேண்டியதாகிறது.

இந்தக் காவாலி கடப்புளி சண்டியன் போக்கிலி என ஆண்கள் மட்டுமல்ல பெண்களும் சக்கைபோடு போட்டிருக்கிறார்கள். ஊர்ச்சண்டைகளில் உச்சமாக ஆண்களுடன் வாயாடிக் கொண்டே தன் சேலையை உயர்த்திக் காட்டி ' வாடா வந்து இதுக்குச் சொல்லு' என்று அதட்டிய பெண்ணிடமிருந்து தப்புவதற்காக ஆண்கள் மட்டுமல்லாமல் ஓடி ஒளிந்து கொள்ளும் மக்கள் கூட்டத்தை நான் சின்ன வயதில் பார்த்திருக்கிறேன். இந்தப்பெண் யாருடனாவது சண்டையை தொடங்கினால் நாங்களும் ஒளிந்து கொள்வோம். ஆக, இந்த சண்டித்தனமும் சவடால்களும் ஆதிகாலம் தொடக்கம் இருந்து கொண்டுதான் இருக்கிறது. என்றாலும் இந்த சவடால்தனங்கள் ஒரு போதும் அப்பாவிகளை தாக்கியதில்லை. அவர்களாக இடையில் மாட்டிக்கொள்ளாமல் இருக்கும்வரை.

இன்றைய நிலை அப்படியல்ல. பெரும்பாலும் பெண்களே இந்த அடாவடிக்காரர்களிடம் மாட்டிக் கொள்கிறார்கள். தொந்தரவுகளில் மோசமான தொல்லைகளாக பாலியல் ரீதியான தொல்லைகளே முதன்மை பெறுகின்றன. பெண்களை காதலிப்பதாக கூறி அவளது நட்பை பெறுகின்ற ஓருவன் அவள் தன்னளவில் அவனை நம்பத் தொடங்கியதும் அவளை தனியிடத்துக்கு அழைத்து செல்கிறான். அங்கே ஏற்கெனவே தனது நண்பர்களையும் அழைத்து வந்து அந்தப்பெண்ணை கூட்டாக வன்முறைக்கு உட்படுத்துகின்ற செயல்கள் பரவலாக நடந்து கொண்டிருக்கிறது. அந்த வகையில் அண்மையில் கிளிநொச்சியில் மகளிர் விவகார அமைப்பிடம் அந்த கூட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் உருக்கமான முறைப்பாடாக இதை வைத்த போது மிகவும் ஆச்சரியமாக இருந்தது. காரணம் அந்த இடம் மிகவும் பகிரங்கமான இடத்தில் பலர் நடமாட்டம் உள்ள இடத்தில் அமைந்திருக்கிறது. காவல்துறையினரின் கண்காணிப்பிலும் பல நாட்கள் இருக்கிற இடம். அங்கே பொதுவாக ஆண், பெண் இளையவர்கள் தினசரி கூடுகிற இடம். இந்த இடம் எப்படி? என்று நான் சந்தேகமாகக் கேட்ட பொழுது அதைப்பற்றி பேசிய பெண் 'உண்மையாத்தான் நாங்களே பல பெண்களை காப்பாற்றி பெற்றோரிடம் ஒப்படைத்திருக்கிறோம்' என்றார். தொடர்ந்து 'நாம் கடைசியாக ஒப்படைத்த பெண்ணுக்கு வயசு பன்னிரண்டுதான் என்றாள். அதை ஏன் அவர்களே தீர்க்கிறார்கள். சம்பந்தப்பட்ட பெண்கள் காலைப்பிடித்து கதறுகிறார்கள். இது வெளியே தெரிந்தால் எனது பெற்றோருக்கு அவமானம் நானும் வெளியே நடமாட முடியாது தயவு செய்து விட்டுவிடுங்கள் என்கிறார்கள், என்றார். இவருக்கு ஆதரவாக மேலும் இரண்டு, அதே அயலில் வாழும் பெண்கள் கருத்துக் கூறினார்கள்.

மகளிர் விவகாரங்களில் கடமையாற்ற வந்த அரச ஊழியர் அதை அக்கறையாக கேட்டதுடன் தான் நடவடிக்கை எடுப்பதாகவும் கூறினார். இதுவும் ஒரு கண்துடைப்பான செயல்தான். ஏனெனில் அந்தப் பெண் இந்த மகளிர் விவகாரத்தின் பொறுப்பில் ஏழு வருடங்களாக எதுவும் செய்ததாக வரலாறு இல்லை. கடந்த இரண்டாயிரத்துப் பதினாலாம் ஆண்டு ஒரு நிர்வாகத்தை தெரிவு செய்ததாகவும் அதன் நிர்வாக உறுப்பினர்கள் எவரும் இப்போது சமூகம் அளிக்கவில்லை எனவும் கூறியதுடன் அந்த பழைய உறுப்பினர்களிடம் பேசுவதற்கான முயற்சிகளை தொலைபேசியூடாக செய்து பார்த்தும் முடியாமல் அவசர அவசரமாக புதிய நிர்வாகத்தை தெரிவு செய்வதில் மும்முரமாக நின்று தெரிவும் செய்து முதல் அறிக்கையையும் அவரே வடிவமைத்து கொடுத்துவிட்டுத்தான் பெருமூச்சு விட்டார்.

நகரத்தின் பிரதான இடம் பிரதேச செயலகங்கள் பல அமைந்துள்ள இடம் இரவில் முற்றாக இருளில் கிடக்கிறது. அங்கே எந்த ரோந்துப்பணியும் நடப்பதில்லை. மக்கள் இரவில் நடமாட முடியாதபடிக்கு இரவில் மதுபான வகைகளை அருந்திக் கொண்டு தெருவில் கும்பலாக நிற்பவர்களை எல்லா இருண்ட சந்திகளிலும் தெருக்களிலும் காணக் கூடியதாக உள்ளது. பிரதானமாக இவர்கள் தமது குடியை அப்படியே முடிப்பதில்லை இவர்களுக்கு பெண்தொடர்புகளும் அமைகிறது. .

பெண்களின் உள்ளாடைகளை களவாடுபவர்கள் இருக்கிறார்கள். நான் அறிந்த வகையில் இது ஒரு மன நோயாக கணிக்கப்படுகிறது. இந்தவகை களவுகளை நடுத்தர வயதைக் கடந்த ஆண்களே செய்கிறார்கள். அதேபோல சிறுமியரை பாலியல் தொல்லை கொடுப்பதிலும் இந்த வயதினரே அதிகம். இளைஞர்கள் பெண்களை ஏமாற்றி அவர்களை பயன்படுத்திய பின் சிலர் நண்பர்களுடனும் பகிர்ந்த கொள்வதுண்டு. பெண்கள் தாமாகவே தமக்குரிய துணையை தேடுவதை பெற்றோர் அறியாமல் அதை காப்பாற்றுவதிலும்கூட இந்த ஆபத்து வந்து சேர்கிறது. பெண்கள் தற்காப்புக்கலையை கற்றுக் கொள்ளாதவரை அவர்கள் எந்த சுதந்திரத்தையும் அனுபவிக்க முடியாது. இங்கேயும் சண்டித்தனங்கள் பதிவு செய்யப்படுகிறது. வாள்கள் கத்திகள் சகிதம் இந்த சம்பவங்களுக்கு காவல் நிற்கிறார்கள் என்பதும் தெருவில் போவோர் வருவோர் எந்த வகையிலும் கவுரவமாக செல்ல முடியவில்லை என்பதும் எல்லா இடங்களிலும் இருக்கும் ஒரு சராசரிப் பிரச்சினைகள்தான்.

அப்படி இரவிலும் திரிய வேண்டிய கட்டாயமுள்ளவர்கள். தமது கடமைகளைப் புறந்தள்ளி காலைவரை காத்திருக்கிறார்கள்.

யாருடனும் இலகுவாக நட்புக் கொள்ள முடியவில்லை. காரண காரியமில்லாத நட்புகள் இப்போது இல்லை என்னும் அளவுக்கு வநது விட்டது. முற்காலத்தில் ஒருவருக்கு பக்கத்துவீட்டு நண்பன் பாடசாலை நண்பனாகவும் அவனே தொழில்முறை நண்பனாகவும் ஒவ்வொரு நட்பும் நகமும் சதையும்போல இருபத்தைந்து முப்பது ஆண்டுகள் சேர்ந்திருந்த நட்புகளாக இருந்தன.

இன்று அப்படியல்ல பிறந்த இடத்திலேயே வசிப்பர்கள் மிக மிகக் குறைவே. எமது அயலிலும் யார்யாரோ புதிது புதிதாக வந்து குடியிருக்கிறார்கள். திடீரென பொருட்களைக் கட்டிக் கொண்டு வேறிடம் போகிறார்கள்.

மீண்டும் அந்த இடத்தில் புதியவர்கள் வந்தமருகிறார்கள்.

ரயில் பயணங்களில் ஏற்படுகின்ற நட்புகள் போல ஒட்டாத உறவுகள் யார் எப்படிப்போனால் நமக்கென்ன என்கிற மனோபாவம். இவர்களிடையே நாம் அன்பையல்ல அடாவடியைத்தானும் இனங்காண முடியாத பயமும் ஏக்கமும் கலந்த வாழ்வே இன்று மீதமிருக்கிறது.

# "குழந்தைகளின் நடத்தைகளும் உளவியல் வழிகாட்டல்களும்" நூல் வெளியீட்டு விழா

உளவள சிகிச்சையாளரான கலாநிதி எம். என். லூக்காமானுல் ஹக்கீம் எழுதிய " குழந்தைகளின் நடத்தைகளும் உளவியல் வழிகாட் டல்களும் " நூல் வெளியீட்டு விழா கொழும்பில் நிகழ்நிலையில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக வைத்திய கலாநிதி கடம்பநாதன் தானபாலசிங்கம் (consultant psychiatrist) கலந்து கொண்டார். வரவேற்புரையை எழுத்தாளர் ஏ.ஸீ. எம். நதீர் மற்றும் நூல் பற்றிய விமர்சன உரையை வைத்தியர் எம். ஜி. எம். மபாஸ் (consultant psychiatrist) ஆகியோரும் நிகழ்த்தினார்கள்.

இந்நிகழ்வில் உளவியல் துறை மாணவர்கள், பெற்றோர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.இக்கால அவசர உலகில் நாம் ஒரே பரபரப்பாக ஓடிக்கொண்டிருகி ன்றோமே தவிர நம்மையும் நம் குழந்தைகளையும் பராமரிக்கத் தவறி விடுகின்றோம்.



இதனால் நம் குழந்தைகள் அதிகம் உடல் மற்றும் உள ரீதியாகப் பாதிக்கப்படுகின்றனர் என்பதே நிதர்சனமான உண்மை ஆகும். குழந்தைகளைப் பராமரிப்பது மற்றும் அவர்களை புரிந்து அவர்களுக்கு ஏற்றாப்போல நடப்பது என்பது எல்லா பெற்றோர்களாலும் ஆசிரியர்களாலும் முடியாத காரியமே எனலாம். பலரும் தங்கள் குழந்தைகளை இப்படி வளர்ப்பது என்ற குழப்பதிலேயே உள்ளனர்.

இப்பிரச்சினைக்கு முற்றுப் புள்ளி வைக்கும் முகமாகவே இந்நூலாசிரியரினால் அனைவருக்கும் விளங்கக்கூடிய எளிமையான மொழிநடை மற்றும் உதாரணங்களுடன் இந்நூல் பிரசவிக்கப்பட்டுள்ளது. மேலும் பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இது ஒரு கைநூல் ஆக வடிவம் பெற்றுள்ளமை இந்நூலின் குறிப்பிடத்தக்க அம்சமாகும். அனஸ் பாத்திமா நுஸ்ரத் நூலாசிரியரிடமிருந்து நூல்பிரதி ஒன்றையும் பெற்றுக் கொண்டார்.



அஷ்ரப் ஏ சமத்...




## கிணற்றுக் குளியல்

வயல்வெளிகள் சூழ நடுவே குளம்; மழை சற்றுப் பலமாகத் தூறினாலேபோதும் குளத்தோடு அண்டியிருந்த வயல் நிலங்கள் எல்லாம் நீர் தேங்கி நாசியை ஒருவிதக் கூழான் வாசம் துளைத்தெடுக்கும்; தூக்கம் இல்லாமல் புரண்டு கிடக்கும் முதல் நாள் எதோ வயிற்றுப் பிரச்சினை என்று நினைப்பார்கள்; ஒத்துக் கொள்ளாத எதையோ தின்று விட்டால் சில நாட்கள் உண்பதில், உறங்குவதில் கோளாறு காட்டி நிற்கும்; அடுத்த நாள் படுக்கப்போகும் முன்னிரவில் சுடுதண்ணீர் பருகுவதும் அதனை மேலெங்கும் ஊற்றிக் கழுவி விடுவதும் வழக்கமாகிவிடும்...



சுடுதண்ணீர் அந்நாளில் சகல வருத்தங்களுக்கும் மருந்தாகவே இருந்தது; ஒவ்வொரு வீட்டிலும் வாத்துவாளி என்கிற அகன்ற வாயுடைய நீர்ப்பாத்திரம் கொளுகித் தொங்கும்; "வெந்து கிடக்கிற உடம்பில இந்த மனிசன் சுடு தண்ணி வாக்குது" மாமியின் நச்சரிப்புக்கு "எருமைக்குச் சேத்துத் தண்ணிதான் விருப்பம்; இந்தச் சுகம் எங்க விளங்கப் போகுது.." என்று சொல்லிச் சிரிப்பார்; ஓலைக் குடிலுக்குள் கயிற்றுக் கட்டிலைப் போட்டுப் படுப்பது அவர் வழக்கம்; வெயில், மழை, காற்று எதுவென்றாலும் உசும்பாமல் தூங்குவார்; இப்படித் தூக்கம் கொள்ள எதுவாக இருப்பதே இந்தச் சுடுதண்ணீர் குளியல்தான்; தூக்கத்தை வரவழைக்கும் சக்தி குளியலுக்கு எப்போதும் உண்டு; உடம்பைத் துவட்டியதும் ஒரு தூக்கச்சடைவு தோன்றும்; என்ன செய்கிறோம் என்பது கூட நினைவிருக்காது; 'உடலைப் பாயில் நீட்டி விடலாம்' என்றே தோன்றும்...

காலையில் கண்கள் கோவைப் பழமாகி பிதுங்கித் தெரிந்தால், எல்லோரும் விசாரிப்பார்கள்; தண்ணீர் சரியாகத் தலையில் படாத கோலம் இதுவென்று பேசுவார்கள்; பெரும்பாலும் இந்த நிலைமை சரிவரச் சூடுதண்நீரைத் தவிர்த்துப் பச்சைத் தண்ணீரையே ஊற்றச் சொல்வார்கள்; வாப்பாவின் கீழ் நின்று குளிப்பதில் கிடைக்கும் பெருமிதம் சொல்லில் அடங்காது; அவர் ஒவ்வொரு பட்டையாக நீரள்ளி வார்க்கும்போது, அக்குலுக் குத்துவதுபோல் நெளிவேன்; சிறு பராயத்தில் உம்மா இரு கால்களுக்கிடையேயும் என்னை இடுக்கி வைத்துக் கொண்டு நீரள்ளிக் குளித்து விடுவார்; சில நேரங்களில் நெல்லுப் பானையில் நீர் நிரப்பி, உள்ளே என்னை இருத்திக் குளிப்பாட்டும்போது நாசிக்கு நீர் நேரே சென்று விடக் கூடாது என்ற அக்கறையில் நெற்றியோடு சேர்த்து வாழையிலை மடல் பிடிப்பார்; அந்நேரம் வழிகின்ற நீரை நாக்கில் வாங்கித் தும்பி விட்டு மகிழ்வேன்...

வெயில் எரிக்கும் மொட்டை மத்தியானத்தில் குளிப்பது கூடாது என்று சொல்வார்கள்; "மாட்டுக் கட்டுத்தரைச் சாணமும் அடுப்புப் புகையும் தவிர அவளுக்கு வேறென்ன தெரியு"மென்று பொண்ணப்பா திட்டுவது கேட்கும்; அந்த நேரத்தில் தண்ணீர் வார்க்கும் பொன்னும்மாவுக்குத்தான் என்று யூகித்துக் கொள்வோம்; முன்பு ஒருபோதும் வெளியூருக்குப்போய் இவர்கள் தங்கியதில்லை; அப்படிக் கட்டாயமாய்த் தங்க நேர்ந்த ஒரிரு சந்தர்ப்பங்களில் என்னையும் அழைத்துக் கொண்டு சென்றிருக்கிறார்கள்; ஏறாவூரில் இருக்கும் சொந்த உறவுகளின் வீட்டுக்குத்தான் போயிருந்தோம்; பொன்னும்மா அன்று தூங்கவே இல்லை; பிசாசு குடி வந்து படுத்த இடத்தில் அயர்ந்தால் தூக்கம் வராது இதற்குப் பிராயச்சித்தமாக ஏழு கிணற்றில், மூன்று மூன்று வாளிகள் குளிக்க வேண்டுமென்று விடிந்தும் விடியாத பொழுதில் எழுந்திருந்து புலம்பிக்கொண்டு ஆயத்தமானார்; அப்போதே பொன்னப்பாவுக்கும் இவருக்குமிடையே தோன்றிய முறுகல் நிலை, வீடுபோய்ச் சேர்ந்த பிறகும் நீடித்தது...

துலாந்து போடும் அசைவு யாரோ ஒரு பெண் கொட்டாவி விடுவதுபோல் இரண்டு மடிப்பாக மடிந்து ஓசையாக வெளிவரும்; "அன்னா ராபியா ராத்தா குளிக்கிறா" என்பார்கள்; அவர் குளிக்கின்ற கிணறு வெட்டிய நாள் இப்பொழுது ஞாபகத்தில் வருகிறது; இரவு ஒன்பது மணியளவில் ராபியா ராத்தா தந்த வெற்றிலைத் தட்டங்களை வீடு வீடாகப் பகிர்ந்து சென்றவன் நான்; அதில் வெற்றிலை, பாக்கு அடங்கலாக கொழுக்கட்டை ஒன்றும் இருந்தது; மருதோன்றித் துளிரும் பூவும் ஓரத்தில் மணத்தோடு வைத்திருந்தார்; தட்டத்தின் மேல் பகுதியை ஒரு வெள்ளைத் துணியால் மூடி, ஒவ்வொன்றாய் அடுக்கிச் சரியாதபடி தருவார்; "திரவு வெட்டுதல்" என்றாலே பெண்களும் ஆண்களும் குழுமி விடுவார்கள்...

வீட்டின் முன்றலில் பாய்களைப் பரத்தி அமர்ந்து குடும்பம் குடும்பமாய் பலகாரம் உண்பார்கள்; சிறுவர்கள் துள்ளி ஓடுவர்; பெண்கள் வெற்றிலைச் சிவப்பு வாயால் குரவை இடுவார்கள்; நெடுகிலும் நெருக்கமாய் அகல் விளக்குகள் கம்பங்களில் கட்டப்பட்டு திரவின் வாய் ஓரங்களில் ஒளிரும்; நிலவு தென்னை மரக் கொண்டைகளுக்கு மேலேறி வரும்போது, குழி ஆழத்தை அடைந்துவிடும்; மொத்து மொத்தென்று, வித்தை இடிவதும் மீண்டும் மண்ணை அள்ளி அணைப்பதும் வயதில் முதியவர்கள் சிலர் முக்கி, முனகிக் குனிந்து மண்வெட்டியால் சிராய்ந்து அள்ளுவதும் கிணறு தோண்டுபவர்கள் பாடாகத் தெரியும்; ஆனாலும் ஒரே பாட்டும் கவியும் தளர்வை அகற்றித் தெம்பை ஊட்டி நிற்கும்; படி வெட்டி அதன் வழியாகவே ஏறி இறங்குவர்....

இதற்கிடையில் தேநீர், சாப்பாடு என்று ஆரவாரமாகக் கொடுப்பார்கள்; பொழு பொழுவென்று விடியும்நேரம்தான் ஒரு கைப் பிடி மண்ணை அள்ளி மேலே எறிவார்கள்; நின்றிருந்தவர்கள் தண்ணீர் கண்டு விட்ட ஆனந்தத்தில் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு சத்தம் போடுவார்கள்; "ஏர்றத்துக்கு முன்னாலேயே இந்த வளையத்தை வைச்சிரணுமப்பா.." என்பார்கள்; கொட்டுக் கட்டுவதற்கு முன்னாடி காட்டிலிருந்து தறித்துக் கொண்டுவந்து கிணற்றின் வடிவில் செய்யப்பட்ட மரவுரி வளையம் நீருக்கடியில் பதிக்கப்படும்; அந்தக் கிணற்றிலிருந்து கிடைக்கும் நீர் எப்போதும் குளிர்ச்சியாக இருக்கவே அவ்வாறு செய்வார்கள்; அந்த வளையம் ஒருபோதும் இத்துப் போனதாக யாருமே சொன்னதில்லை...

கால் விரல்கள் வெளியில் தள்ளும் பீற்றல் செருப்புகள்தான் கிணறடிச் செருப்புகளாகப் பயன்பட்டன; அதனைத் தரையில் இழுத்துத் தேய்த்துக்கொண்டே லெக்கப்பா பயிர்களுக்கு நீர் இறைப்பார்; மின்னிய கண்களும் வாய் வெட்டும் அவர் நகைச்சுவைப் பான்மையை அறிவித்தன; அன்னாசி, பப்பாளி என்பன பயிரிட்டிருந்தார்; அவர் கூட்டாளிமார் பெயர்களுக்குப் பதிலாக நாவன்னா பாவன்னா, காவன்னா கூனா, சாவன்னா என்று தமிழில் இரண்டிரண்டு எழுத்துகளைக் கூட்டிச் சுருக்கமாகப் பெயர் வைத்திருந்தார்; சவ்வன்னா மருவி ஒருவருக்குச் சொக்கேனாப் போடி என்றும் பெயரானது; "நாவன்னா தானே, இப்போதான் போறார்.." என்பார்; "மனண்ணுயிர்க்கெலாம் புத்துயிர் ஊட்டவே நீர் வார்க்கிறேன்." என்று வாளிக் கணக்கில் நிலமெல்லாம் நீர் தெளிப்பார்; தேய்ந்து மினுங்கும் இரு வவ்விகளுக்கிடையே அங்கும் இங்குமாய் அசையும் கிடைப் பொல்லில் கப்பியை முடிந்திருப்பார்; நீரள்ளும்போது, கீச்சுப் பூச்சுச் சத்தம் கேட்டவண்ணமிருக்கும்.

# தனித்துவமான Find X5 தொடரை அறிமுகப்படுத்தும் OPPO

ஸ்மார்ட்சா த னங்களில்முன்னணியில்திகழு ம்தர க்குறியீடான OPPO, உலகின் முதலாவது புகைப்படவியல் அனுபவங்களைக்கொண்ட அதன் உயர்நிலை, தனித்துவ ஸ்மார்ட்போனான OPPO Find X5 தொடரை அறிமுகம் செய்துள்ளது.

OPPO INNO Day 2021 இல், OPPO அதன் MariSilicon X தொடர்பில் அறிவித்திருந்தது. இது பிரத்தியேக புகைப்படவியல் நரம்பியல் அமைப்பாக கருதப்படும் Neural Processing Unit ஆகும். இது ஸ்மார்ட் போனில் வீடியோக்களை எடுப்பதிலுள்ள மிகப்பெரிய சவாலான இரவு நேர வீடியோ பதிவை இலகுவாக்குகிறது. அதிநவீன 6nm கட்டமைப்பு, நிகழ்நேர RAW செயலாக்கம், 20 மடங்குவேகமான 4K AI செயல்திறன் ஆகியவற்றின் மூலம் வீடியோ தரத்தை புதிய உச்சத்திற்கு கொண்டு செல்வதன் மூலம், Find X5 Pro ஆனது இரவில் அதன் திறமையை வெளிப்படுத்துகிறது.



Find X5 Pro புதிய தலைமுறை, multicore Snapdragon 8 Gen 1 processor மூலம் இயக்கப்படுவதால், எவ்வகையான உச்சபயன்பாட்டின் போதும் தடையின்றி இயங்குவதுடன், மிகவும் பிரபலமான பாரிய செயற்பாடுகளைக் கொண்ட கேம்கள் மற்றும் செயலிகளைக் கையாளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. வெளிப்புற தோற்றத்தில், அமைதியான மற்றும் எக்காலத்திற்கும் பொருத்தமான அழகியல் உணர்வை வெளிப்படுத்தும் ஒருஎ திர்கால வடிவமைப்பை இது கொண்டுள்ளது. மிகக்கடினமான, அசல் செரமிக் பின்பகுதியைக் கொண்டுள்ள FindX5Pro ஆனது, தூய, நவீனநுட்பத்தை கொண்டி ருப்பதுடன், அதன் உடலில் ஏற்படும் கைரேகை பதிவுகளைக் காண்பிப்பதனை குறைக்கும் வகையிலான மேற்பரப்பையும் கொண்டுள்ளது. கெமரா தொகுதியை மிருதுவானதாக மெருகூட்டுவதற்காக, முழுமையான மென்மையான, சீரான, சாய்வும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# 80 வருட கால சுவிஸ் பாரமுயர்த்திக்கு பிரியாவிடை வழங்கியது பவர்

தினசரி எமது பணியிடங்களில் இலகுவாக பணிபுரியும் தளத்துக்கு செல்வதற்கான நடமாடல் தேவையை நிவர்த்தி செய்யும் பாரமுயர்த்திகளின் (எலிவேற்றர்) முக்கியத்துவத்தைப் பற்றி நாம் அதிகம் சிந்திப்பதில்லை. ஆனாலும் அவற்றின் பல தசாப்த கால வரலாற்றை எடுத்துப்பார்த்தால், அவற்றினுள் நாம் மேற்கொண்ட சந்திப்புகள், பெறுமதி வாய்ந்த உரையாடல்கள் மற்றும் ஏற்படுத்திக் கொண்ட புதிய நட்புகள் போன்றன மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தனவாக அமைந்திருக்கும். சிறிய, நெருக்கமான பகுதியாக அமைந்திருந்தாலும், வாழ்க்கையில் அது அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்கியிருக்கும்.

பாரமுயர்த்தியுடன் ஆழமான உணர்வுபூர்வ பிணைப்பை நாட்டிலுள்ள பன்முகப்படுத்தப்பட்ட நிறுவனங்களில் ஒன்றான பவர் கொண்டுள்ளது. அவ்வாறான சுமார் 80 வருட கால வரலாற்றைக் கொண்ட பாரமுயர்த்திக்கு அண்மையில் பவர் பிரியாவிடை வழங்கியிருந்தது.

பவர் நிறுவனத்தின் கொள்முதல் மற்றும் நிர்வாக பொது முகாமையாளர் ஷேன் பீற்றர்ஸ், சுவிஸ் எலிவேற்றர் வர்த்தக நாமமான டிரேட் Schindler இன் இலங்கையில் 33 வருடங்களுக்கு மேலாக பிரதிநிதிகளாக செயலாற்றும் பிரமோட்டர்ஸ் லிமிடெட் இணை முகாமைத்துவ பணிப்பாளர் அனோமால் டி சொய்ஸா உடன் பவரின் பாரமுயர்த்தியில் இறுதியாகப் பயணம் மேற்கொண்டனர். 2022 ஜனவரி 31ஆம் திகதி காலை 10.18 எனும் சுபவேளையில் புத்தம் புதியSchindler பாரமுயர்த்தி பயன்பாட்டுக்காக அறிமுகம் செய்து வைக்கப்பட்டது.



“elevator whisperer” என செல்லமாக அழைக்கப்படும் பீற்றர்ஸ், இந்த பாரமுயர்த்தியின் பராமரிப்பு பணிகளை கடந்த 24 வருடங்களாக மேற்கொண்டிருந்தார். பவர் நிறுவனம் தனது பழமையான பாரமுயர்த்திக்கு பிரியாவிடை வழங்கும் அதே காலப்பகுதியில், பெப்ரவரி மாத இறுதியில் நிறுவனத்திலிருந்து ஓய்வு பெறுவதற்கு பீற்றர்ஸ் தீர்மானத்துள்ளமையும் விசேட அம்சமாகும். இவருக்கும் பாரமுயர்த்திக்குமிடையிலான உறுதியான பந்தம் பவர் வரலாற்றில் நீங்கா நினைவுகளாக என்றும் நிலைத்திருக்கும்.

# ஒரு கிளிக்கில் DhanaMaga – நிதிக் கல்வி!

இலங்கையின் முன்னணி முதலீட்டு நிறுவனமான Asia Securities, இலங்கையர்கள் தங்களின் நிதி சார்ந்த எதிர்காலத்தைக் கட்டுக்கோப்புடன் வைத்திருப்பதற்கு உதவும் நோக்கில், மும்மொழி நிதிக் கல்வியறிவுத் திட்டமான DhanaMaga (தன மார்க்கம்) திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

DhanaMaga, அதன் முதலாவது ஒன்லைன் தளம் மற்றும் கையடக்கத் தொலைபேசி செயலியை 2022, பெப்ரவரி 21ஆம் திகதி உத்தியோகபூர்வமாக அறிமுகப்படுத்தி வைத்துள்ளது. Asia Securities யினால் முன்னெடுக்கப்பட்டுள்ள இந்த முயற்சியின் நோக்கம், அனைத்து இலங்கையர்களுக்கும் அவர்களின் நிதி/பணம் தொடர்பில் எழும் சந்தேகங்களுக்கு பதிலளிப்பதாகும். சிறு வணிகங்களுக்கு நிதியளித்தல் மற்றும் தனிப்பட்ட நிதித் திட்டங்களை உருவாக்குதல், நிறுவனத்தின் நிதி அறிக்கைகளைப் புரிந்துகொள்வது, பொருத்தமான முதலீட்டு விருப்பங்களைத் தேர்ந்தெடுப்பது முதல் அதனை எவ்வாறு மேற்கொள்வது என்பதைப் புரிந்துகொள்ள அது உதவுகின்றது. .



DhanaMaga, பின்பற்றுவற்கு எளிதான, 100 இற்கும் அதிகமான, ஈடுபடுத்தலை ஏற்படுத்தக்டிய சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளிலான வீடியோக்களை கொண்டுள்ளது. அவை அனைத்து வயதினருக்கும், அனைத்து மட்டத்திலான திறமை நிலைக்கும், வாழ்க்கையின் எந்தவொரு நிலைக்கும் ஏற்றதாகும். www.dhanamaga.lk தளம் வழியாகவோ அல்லது கையடக்கத் தொலைபேசி செயலி ஊடாக பதிவிறக்குவதன் மூலமாகவோ வீடியோக்களை முற்றிலும் இலவசமாகப் பார்வையிட முடியும்.

சுயமாக இயக்கப்படக் கூடிய இந்த வீடியோக்களை, பார்வையாளர்கள் தங்களுக்கேற்ற வேளையில், தங்களுக்கு அவசியமான, எந்தவொரு நேரத்திலும், எந்தவொரு இடத்திலும் வைத்து, கற்றலை மேற்கொள்ள வாய்ப்பை ஏற்படுத்துகின்றன. வீடியோ உள்ளடக்கமானது, பொருந்துகின்ற தன்மை மற்றும் துல்லியத் தன்மை ஆகியவற்றின் அடிப்படையில், DhanaMaga பாடத்திட்டக் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படுகின்றது. நிதி ஒழுங்குபடுத்தல் மற்றும் கல்வித் துறையில் 70 இற்கும் அதிக வருட கூட்டு அனுபவம் கொண்ட முக்கிய உள்நாட்டு நிபுணர்கள் இக்குழுவில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.



# வர்த்தகம் மற்றும் முதலீட்டு ஒத்துழைப்புகளில் IMPA உடன் கைகோர்த்துள்ள இலங்கை

சர்வதேச முதலியார் மற்றும் பிள்ளைமார் சங்கம் (IMPA) என்பது தென்னிந்தியாவை தளமாகக் கொண்ட ஒரு இலாப நோக்கற்ற, அரசியல் சார்பற்ற அமைப்பாகும், இது உலகளவில் 25000 க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்டுள்ளது. தென்னிந்தியாவில் உள்ள கிராமப்புற சமூகங்களில் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயம் ஆகியவற்றின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்ட தென்னிந்திய வம்சாவளியைக் கொண்ட புகழ்பெற்ற வணிக உரிமையாளர்களை IMPA உருவாக்குகிறது.

சென்னையில் உள்ள இலங்கையின் துணை உயர் ஸ்தானிகர் டாக்டர் டி. வெங்கடேஷ்வரனின் அழைப்பின் பேரில், IMPA இன் தலைவர் மற்றும் மூத்த அதிகாரிகள் உட்பட சுமார் 60 வணிக உரிமையாளர்கள் 'இலங்கையில் முதலீடு மற்றும் வணிக வாய்ப்புகள்' என்ற தலைப்பில் கடந்த 18 ஆம் தேதி சான்சரி வளாகத்தில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்றனர். பிப்ரவரி, 2022.

பிரதான உரையை ஆற்றிய பிரதி உயர்ஸ்தானிகர், ‘நீங்கள் ஏன் இலங்கையில் முதலீடு செய்ய வேண்டும்’ என்ற உண்மையை வலியுறுத்தினார். ‘இலங்கையை முதலீடு செய்வதற்கான வழிகள்’ மற்றும் ‘இலங்கை – முன்னோக்கி செல்லும் பாதை) பற்றிய விளக்கக்காட்சிகள் இரண்டாம் செயலாளர் (வர்த்தகம்) .திலங்க ஹெட்டியாராச்சி மற்றும் இரண்டாவது செயலாளர் (கலாச்சார மற்றும் அரசியல்) .சுபுன் தேசபிரேம ஆகியோரால் முன்வைக்கப்பட்டது.

# 10 வருடங்கள் அர்ப்பணிப்பான மருத்துவ சேவையை பூர்த்தி செய்த Physio Medicare




தலைநகர் கொழும்பு தெகிவளை மற்றும் புறநகர் பிரதேசங்களில் மருத்துவ சேவை வழங்களில் பிரசித்து பெற்று விளங்கும் Physio Medicare நிறுவனம் அதன் அர்ப்பணிப்பான நவீன மருத்துவ சேவையின் 10வது வருட நிறைவை அண்மையில் கொழும்பு Cinnomon Grand ஹோட்டலில் நிறுவனத்தின் ஸ்தாபகரும் தலைமை மருத்துவருமான நிலக்ஷி காசிலிங்கம் தலைமையில் விமரிசையாக கொண்டாடியது.

Physio Medicare நிறுவனம் Physiotherapy சம்பந்தப்பட்ட அதி நவீன உபகரணங்களை மற்றும் கருவிகளை கொண்டுள்ளதுடன் உயர்தர நவீன Physiotherapy மருத்துவ பயிற்சிகளையும் வழங்கிவருகிறது. மருத்துவர் நிலக்ஷி காசிலிங்கம் பேராதனை மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களில் Physiotherapy பட்டத்துக்கான வெளிவாரி விரிவுரையாளராக பணியாற்றுவதுடன் Physiotherapy சம்பந்தப்பட்ட தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் குழுநிலை, விவாத நிகழ்வுகள், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களில் பங்குபற்றி வருகிறார். அத்துடன் Covid–19 தாக்கத்தை தொடர்ந்து இணைய வழி, காணொளிகளை வழங்கி வருவதுடன் இடம் பெயர்ந்தோர் முகாம்களுக்காக Physiotherapy மருத்துவ சேவையையும் வழங்கி வருகிறார்.

# கொழும்பு சிட்டிசென்டரில் புதிய NOLIMIT விற்பனை நிலையம் திறப்பு



முன்னணி நவநாகரிக சில்லறை விற்பனைச் சங்கிலியான NOLIMIT, கொழும்பு சிட்டிசென்டர் வளாகத்தில் புதிய அதிநவீன விற்பனை நிலையத்தைத் திறந்துள்ளது.

கடந்த 12 ஆம் திகதி நடைபெற்ற புதிய கிளை திறப்பு விழாவின்போது வாடிக்கையாளர்கள், விசேட விருந்தினர்கள், வணிக சமூகத்தினர் மற்றும் பொதுமக்களை சிறப்பாக வரவேற்றது. திறப்பு விழாவைக் கொண்டாடும் வகையில், NOLIMIT கொழும்பு சிட்டிசென்டர் கிளையானது, தொடக்கநாளில் அனைத்து விருந்தினர்களையும் உற்சாகமான செயல்பாடுகளுடன் வரவேற்றது.

அதேநேரத்தில், தனித்துவமான கொள்வனவு அனுபவத்தையும், அதியுயர்ந்த வாடிக்கையாளர் சேவையை அனுபவிக்கும் வாய்ப்பையும் தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்குகிறது. இலங்கை முழுவதும் 15 நகரங்களில் பரவியுள்ள நிலையில், இப்புதிய விற்பனை நிலையம், பிரபல நவநாகரிக சில்லறை விற்பனைச் சங்கிலியின் 24 ஆவது கிளையாகும்.

தொடக்கநாளில் விற்பனை நிலையத்திற்குச் சென்ற அனைத்து வாடிக்கையாளர்களும் அவர்கள் கொள்வனவு செய்த அனைத்துப் பொருட்களுக்கும் 25% தள்ளுபடியும், மறுநாள் (13) விற்பனை நிலையத்திற்குச் சென்றவர்களுக்கு 20% தள்ளுபடியும் கிடைத்தது. நீண்டகாலமாக சிறப்பாக நிலைபெற்றுள்ள சில்லறை வர்த்தகநாமமாக, NOLIMIT தனது அனைத்து விற்பனை நிலையங்களிலும் ஒரு சௌகரியமான சூழ்நிலையில் சிறந்த கொள்வனவு அனுபவத்தை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

# பணியாற்றுவதற்கு சிறந்த இடத்துக்கான GPTW விருதை வென்ற லங்கா வோல் டைல்ஸ் குழுமம்

லங்கா வோல் டைல்ஸ் குழுமம் பணியாற்றுவதற்கு சிறந்த இடமாக Great Place To Work விருதை வென்றுள்ளது. 2021 நவம்பர் 17ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற விருது வழங்கும் நிகழ்வில் இந்தப் பெருமைக்குரிய அங்கீகாரம் உறுதிப்படுத்தப்பட்டது. லங்கா வோல்ட் டைல்ஸ் பிஎல்சி, லங்கா டைல்ஸ் பிஎல்சி, ஸ்விஸ்டெக் சிலோன் பிஎல்சி மற்றும் ஸ்விஸ்டெக் அலுமினியம் லிமிடட் ஆகிய நான்கு நிறுவனங்கள் சார்பிலும் லங்கா வோல் டைல் குழுமம் இந்த விருதை வென்றுள்ளது.



லங்கா வோல் டைல்ஸ் பிஎல்சி மற்றும் லங்கா டைல்ஸ் பிஎல்சி நிறுவனங்கள் முப்பத்தைந்து வருடங்களுக்கு மேலாக இலங்கையின் முன்னணி செரமிக் வோல் டைல்ஸ் உற்பத்தியாளர், சந்தையின் முன்னணி மற்றும் முன்னணி ஏற்றுமதியாளராக விளங்கி வருகின்றன. சுவிஸ்டெக் சிலோன் பிஎல்சி மற்றும் சுவிஸ்டெக் அலுமினியம் லிமிடட் ஆகிய நிறுவனங்கள் ஒரு தசாப்தத்துக்கு மேலாக குழுமத்தின் உறுப்பினர்களாகக் காணப்படுவதுடன், அவை தமது துறையில் சந்தையின் கணிசமாகப் பங்காற்றுகின்றன.

அண்மைய அங்கீகாரம் குறித்துக் கருத்துத் தெரிவித்த லங்கா வோல் டைல்ஸ் பிஎல்சி இன் முகாமைத்துவப் பணிப்பாளர் மகேந்திர ஜயசேகர குறிப்பிடுகையில், ”லங்கா வோல் டைல்ஸ் குழுமம் பணியாற்றுவதற்கு சிறந்த இடமாக அங்கீகரிக்கப்பட்டதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஒப்பிடமுடியாத மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய தரத்துடன் உற்பத்திகளை வழங்கி லங்கா வோல் டைல்ஸ் பொது மக்களுக்குக் கடந்த மூன்று தசாப்தங்களாக சேவையாற்றி வருகிறது. எமது பணியாளர்கள், எமது பணியாளர்களை நடத்தும் விதம் தொடர்பான எமது நோக்கம் மற்றும் ஒரு நிறுவனமாக நாம் பணியாற்றும் விதம் என்பனவே எமது நீண்டகால வெற்றிக்குக் காரணமாக அமைந்துள்ளன” என்றார்.

# மூன்று CNCI விருதுகளை வென்று பார்ம்கெமி பீட்கெமி நிறுவனங்கள் சாதனை

இலங்கையில் கால்நடை சுகாதார உற்பத்தித் துறையின் முன்னோடியான வரையறுக்கப்பட்ட பார்ம்கெமி (தனியார்) நிறுவனம், இலங்கை தேசிய கைத்தொழில் சபை ஏற்பாடு செய்த சிறந்த கைத்தொழிலாளர்களுக்கான விருது விழாவில் இலங்கையின் சிறந்த 10 கைத்தொழில்களுக்கு வழங்கப்படும் விருதையும் தேசியமட்ட, உற்பத்திப் பிரிவில், பாரியளவிலான பிரிவின் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதையும் வென்று சாதனை படைத்துள்ள நிலையில் அதன் இணை நிறுவனமான பீட்கெமியும் தேசியமட்ட, உற்பத்திப் பிரிவில் பாரியளவிவான பிரிவின் சிறந்த தொழில் முயற்சியாளருக்கான விருதை வென்றுள்ளது. விருதுவிழா கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவங்ச தலைமையில் கொழும்பு கலதாரி ஹோடடலில் அண்மையில் நடைபெற்றது.



20 ஆண்டுகளுக்கு மேல் பார்ம்கெமி நிறுவனம் தமது வர்த்தக நாமமான பார்ம்ஸ்டார் உற்பத்திகள், கால்நடை மருந்துகள் மற்றும் கால்நடை உணவு உற்பத்திகளுடன் உள்நாட்டு சந்தையோடு சர்வதேச சந்தையினையும் வென்று வெற்றிநடை போடுகிறது. இந்தியா, உகண்டா, பங்களாதேஸ், பாகிஸ்தான், நேபாளம் மற்றும் ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளில் 2018 ஆம் ஆண்டு தொடக்கம் பார்ம்கெமி உற்பத்திகள் சந்தைப்படுத்தப்பட்டு வருகின்றன.

மூன்று ஊழியர்களுடன் தொடங்கப்பட்ட இத்தொழில் வெகு சீக்கிரமாகவே கால்நடைச் சுகாதார உற்பத்தித்துறைச் சந்தையின் முன்னோடியாக விளங்குவதற்கு பண்ணை சார்ந்த பிரச்சினைகளையும் தேவைகளையும் முன்கூட்டியே இனங் காண்பதற்கும் அவற்றுக்குத் தீர்வு காண்பதற்கும் கொண்டிருந்த ஆர்வமும் அர்ப்பணிப்புமே காரணம் என பார்ம்கெமி நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் உதித்த வனிகசிங்க தெரிவித்தார்.

# வாரபலன்



27.02.2022 - 05.03.2022

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். மகர சுக்ரனால் நிகரற்ற வாழ்வு உங்களுக்கு வரப்போகிறது. காரணம் தனசப்தாதிபதியாக விளங்குபவர் சுக்ரன். ஆவர் தொழில் ஸ்தானத்தில் சுஞ்சரிக்கும் இந்த நேரத்தில் தொழில் முன்னேற்றம் ஏற்படும். புதிய பங்குதாரர்கள் வந்து சேர்வார்கள். பொருளாதார நிலை உயரும். வாடகை கட்டிடத்தில் நடைபெற்ற தொழிலை சொந்த கட்டிடத்திற்கு மாற்றும் எண்ணம் கைகூடும். வரன்கள் பார்த்துகொண்டிருந்தால் அது சுமுகமாக முடியும்.

## ரிஷபம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். இக்காலம் உங்களுக்க ஒரு இனிய காலமாக அமையும். உங்கள் ராசிநாதன் சுக்ரன 9ம் இடத்தில் புதனோடு வந்து சேர்வதால் புதசுக்ர யோகம் செயல்படும் நேரம் இது. கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும். தேங்கி நின்ற காரியங்கள் இனி சுறுசுறுப்பாக நடந்தேறும். திட்டமிட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். கல்யாண கனவு நனவாகும். பூமியால் லாபம் உண்டாகும்.

## மிதுனம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். அவர் அங்குள்ள சனியோடு இணைவதால் சுய விரயங்கள் ஏற்படும். பெண் வழி பிரச்சினைகள் தீரும். புதிய வாய்ப்புக்கள் தேடி வரலாம். தொழில் ரீதியான ஒப்பந்தங்கள் வரும்போது அதனை பரிசீலனை செய்து ஏற்றுக்கொள்ளுங்கள். உங்கள் ராசிக்கு 5, 12 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். எனவே பிள்ளைகளின் திருமணம் கைகூடலாம்.

## கடகம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். அங்கு சப்தமாதிபதியான சனியோடும் விரயாதிபதி புதனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். எனவே மனைவி பிள்ளைகள் வழியிலும் சகோதரங்கள் வழியிலும் விரயங்களை சந்திக்க நேரிடும். குடும்பத்திற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் கவனம் செலுத்துவீர்கள். இல்லத்தில் நடைபெறும் சுப சடங்குகளுக்குச் செலவிடுவீர்கள். பயணங்கள் அதிகரிக்கும். உத்தியோக மாற்றம் உறுதியாகலாம். வீடு மாற்றம் வேதனை தரலாம்.

## சிம்மம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். அவர் அங்குள்ள சனியோடும் தனலாபாதியான புதனோடும் இணைந்து சஞ்சரிக்கிறார். இதனால் பொருளாதார பற்றாக்குறை அகலும். புதிய திருப்பங்கள் ஏற்படும். கொடுக்கல் வாங்கலை ஒழுங்கு செய்வீர்கள். ஜீவன ஸ்தானம் பலம் பெறுவதனால் நிலையான வருமானத்திற்கு வழியமைப்பீர்கள். குடும்பத்திற்கு தேவையான அத்தியாவசிய மற்றும் ஆடம்பர பொருட்களை வாங்குவீர்கள். பொதுவாக இக்காலத்தில் நல்ல சம்பவங்கள் பல நடைபெறும்.

## கன்னி

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 2 , 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் பூர்வ புண்ணிய ஸ்தலத்தில் சஞ்சரிப்பதால் பொருளாதார நிலை சீராகும். பிள்ளைகளின் எதிர்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும். வளர்ச்சிப் பாதையில் இருந்த இடையூறுகள் அகலும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு எதிர்பார்த்த புதிய வேலை கிடைக்கலாம். பொதுவாழ்வில் உள்ளவர்களுக்கு நல்ல பொறுப்புக்கள் கிடைக்கும். புதனோடு சுக்ரன் சேர்ந்து புதசுக்ர யோகத்தை உருவாக்குவதால் நல்ல சம்பவங்கள் பல நடைபெறப் போகிறது.

## துலாம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிநாதன் சுக்ரன் சுக ஸ்தானத்திற்கு செல்வது நல்லதுதான். ஏற்கனவே அஷ்டாமத்துசனியில் ஆதிக்கம் உள்ளது. இப்போது சுக்ரனும் புதனும் சனியுடன் இணைந்து செயற்படப் போகிறார்கள். புதசுக்ர யோகம் செயற்படப் போகும் இந்த நேரத்தில் பொருளாதார பற்றாக்குறை அகலும். ஆரோக்கிய தொல்லையில் இருந்து விடுபட புது மருத்துவம் கைகொடுக்கும். இடம் பூமி வாங்குவதில் இருந்த தடைகள் அகலும். ஏதை செய்ய நினைத்தாலும் உடனே செய்து முடிக்கும் ஆற்றல் பிறக்கும்.

## விருச்சிகம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 3ம் இடமான சகாயஸ்தானத்திற்கு சுக்ரன் செல்வதால் வாழ்க்கைத் துணை வழியே உத்தியோக சம்பந்தமாக எடுத்த முயற்சி கைகூடும். உதிரி வருமானங்கள் உண்டு. அதிகார பதவியில் உள்ளவர்களின் ஆதரவால் ஒரு சில காரியங்களை திட்டமிட்டு செய்து முடிப்பீர்கள். சப்தம விரயாதிபதியாக சுக்ரன் விளங்குவதால் இல்லத்தில் மங்கல ஓசை கேட்பதற்கான வாய்ப்பு உண்டு. தொழில் வெற்றி நடைபோடும். ஆடை ஆபரண சேர்க்கை உண்டு.

## தனுசு

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 6, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் தன ஸ்தானத்திற்கு இப்போது வருவதால் பொருளாதார பற்றாக்குறை அகலும். ஸ்தம்பித்து நின்ற தொழில் தானாக நடைபெறும். பெண்வழி பிரச்சினைகள் அகலும்.புதிய வேலைக்கு விண்ணப்பித்திருந்தால் அது கிடைப்பதற்கான வாய்ப்பு உண்டு. வெளிநாட்டில் இருந்து அழைப்புக்கள் வரலாம். தேங்கியிருந்த சரக்குகள் விற்பனையாகும். பொதுவாழ்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புக்களில் மாற்றம் ஏற்படும்.

## மகரம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். அதாவது உங்கள் ராசிக்கு சுக்ரன் வரும் இந்த நேரம் உன்னதமான காலமாகும். 5, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதியாக சுக்ரன் விளங்குவதால் தொழிலில் படிப்படியாக முன்னேற்றம் வந்து சேரும். பழைய தொழிலை மாற்றி புதிய தொழில் தொடங்கலாமா? என்று சிந்திப்பீர்கள். அதிக சம்பளம் தருவதாக சொல்லி அழைப்புக்கள் வரலாம். ஆயினும் ஜென்ம சனியின் ஆதிக்கம் நடப்பதால் எதையும் யோசித்து ஏற்றுக்கொள்ளுங்கள் கூட்டாளிகளால் அமைதி குறையலாம்.

## கும்பம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 4, 9 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சுக்ரன். அவர் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் இந்த நேரத்தில விரயங்கள் கூடும். குறிப்பாக வாகனங்களின் பழுதுச்செலவை முன்னிட்டு ‘ புதிய வாகனங்கள் வாங்கலாமா? ‘ என்று சிந்திப்பீர்கள். உத்தியோகத்தில் புதிதாக வேலைக்கு சேர்ந்த இடம் திருப்தி தரவில்லையே என்று நினைப்பீர்கள். அடகு வைத்த நகைகளை மீட்டுக்கொண்டுவரும் வாய்ப்பு கிடைக்கும்.

## மீனம்

மாசி மாதம் 14ம் திகதி மகர ராசியில் சுக்ரன் சஞ்சரிக்கிறார். உங்கள் ராசிக்கு 3, 8 ஆகிய இடங்களுக்கு அதிபதியான சுக்ரன் லாப ஸ்தானத்தில் உள்ள சனியோடு இணைவதால் நூதன பொருள் சேர்க்கை ஏற்படும். அடகு வைத்த நகைகளை மீட்பீர்கள். வெளிநாட்டில் இருந்து அழைப்புக்கள் வரலாம். குருபெயர்ச்சிக்கு பின்னர் அதனை ஏற்றுக்கொள்ளலாம். குடும்பத்தில் உள்ளவர்களின் குறைகளை தீர்க்க முன்வருவீர்கள்.

# பாடசாலை கழிவு முகாமைத்துவ திட்டத்தின் மூலம் சிறந்த நடத்தைக்கான மாற்றங்கள்



பாடசாலை கழிவு முகாமைத்துவ திட்டத்தின் மூலம் இரத்தினபுரி மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு கழிவு முகாமைத்துவத் தொகுதிகளை நெஸ்லே லங்கா நிறுவனம் தனது 2022 பெப்ரவரி 1ஆம் திகதியன்று வழங்கியுள்ளது. மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை, கல்வி அமைச்சு மற்றும் உள்நாட்டு மாநகர சபைகள் ஆகியவற்றுடன் இணைந்து செயற்படுத்தப்படும் இந்த வேலைத் திட்டம் இலங்கையின் எதிர்கால சந்ததியினர் மத்தியில் நேர்மறையான நடத்தை மாற்றத்தை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் கழிவுகளற்ற எதிர்காலத்தை அடைவதற்கான முயற்சிகளின் ஒரு பகுதியாக 2020 ஜனவரியில் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன், இந்த ஆண்டு நாடு முழுவதும் உள்ள 250 பாடசாலைகளுக்கு விரிவுபடுத்தப்பட்டு 400,000 க்கும் அதிகமான சிறுவர்களை இது எட்டவுள்ளது.

உரிய அதிகார சபைகளின் வழிகாட்டுதலின் பேரில், பாடசாலைக் கழிவு முகாமைத்துவத் திட்டம், பாடசாலை வளாகத்தில் உள்ள கழிவுகள் தரம் பிரிக்கப்பட்டு, பொறுப்புணர்வுடன் அகற்றப்படுவதை உறுதி செய்கிறது.

மேலும், மத்திய சுற்றுச்சூழல் அதிகார சபை அதிகாரிகள் பாடசாலைகளின் சுற்றுச்சூழல் முயற்சிகள் சார்ந்த சங்கங்களுடன் இணைந்து கழிவுகளை முறையாக அகற்றுதல் மற்றும் அவற்றின் முகாமைத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதோடு, மாணவர்கள் சுற்றுச்சூழல் நலனுக்கான தூதுவர்களாகச் செயல்படவும் ஊக்குவிக்கிறார்கள். அதன் பிறகு, அப்பகுதியில் உள்ள சம்பந்தப்பட்ட நகராட்சி சபை, கழிவுகள் சேகரிக்கப்பட்டு முடிந்தவரை மீள்சுழற்சி அல்லது அதிலிருந்து எரிசக்தி பெறப்படுவதற்காக அனுப்பப்படுவதை உறுதி செய்கிறது.

இரத்தினபுரி மாநகர சபையின் முதல்வரான டிரோன் அத்தநாயக்க இது தொடர்பில் கருத்து வெளியிடுகையில், 'கழிவுகள் பொறுப்புணர்வுடன் அகற்றப்பட்டால் பெறுமதியான ஒரு வளமாகும். தரம் பிரிக்கப்பட்ட கழிவுகள் மூலம் நிறையப் பயனை அடைந்து கொள்ள முடியும், ஆனால் துரதிர்ஷ்டவசமாக, பெரும்பாலான மக்களுக்கு இது தொடர்பில் போதிய விழிப்புணர்வு இல்லை. எனவே, இலங்கையின் எதிர்கால சந்ததியான பாடசாலை மாணவர்களின் நடத்தை மாற்றத்தை ஊக்குவிப்பதற்கான வலுவான அத்திவாரத்தை அமைப்பதால் இந்த வேலைத்திட்டம் மிகவும் அவசியமானது,' என்று குறிப்பிட்டார்.

நீண்ட கால அடிப்படையில் நேர்மறையான தாக்கத்தை உருவாக்குவதற்கு சிறுவயதிலேயே நல்ல பழக்கவழக்கங்களை உட்புகுத்துவதன் முக்கியத்துவம் குறித்து சப்பிரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளரான சேபால குருப்பு ஆராச்சி கருத்து தெரிவிக்கையில், 'நமது நாட்டின் மிக முக்கியமான சுற்றுச்சூழல் பிரச்சினைகளில் ஒன்றின் மீது நடவடிக்கை எடுப்பது மற்றும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த அரசதனியார் கூட்டு முயற்சியில் ஒரு அங்கமாக இருப்பது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது,' என்று குறிப்பிட்டார்.

பூமிக்கு நன்மைபயக்கும் செயல்களை முன்னெடுப்பதற்கு உறுதிபூண்டுள்ள, நல்லுணவு, நல்வாழ்வுக்கு வித்திடுகின்ற நிறுவனம், பிளாஸ்திக் உட்பட தனது பொதியிடல் எதுவும் நிலத்தையோ அல்லது நீர்நிலைகளையோ சென்றடைவதை தடுப்பதை உறுதி செய்யும் இலட்சியத்துடன், இலங்கையில் பிளாஸ்திக் கழிவு மாசுபாட்டைச் சமாளிக்கும் தனது முயற்சிகளை தீவிரப்படுத்தியுள்ளது.

இந்த நோக்கத்திற்காக, நெஸ்லே லங்கா நிறுவனம் தனது தயாரிப்புகளை மீள்சுழற்சி செய்யக்கூடிய அல்லது மீண்டும் பயன்படுத்தக்கூடிய பொதியிடலுக்கு மாற்றுவது, தொற்று அகற்றப்பட்ட பான அட்டைப்பெட்டிகளுக்கு ஒரு சுழற்சிப் பொருளாதாரத்தை உருவாக்க உதவுவது அத்துடன் இலங்கையில் பசுமையான மற்றும் தூய்மையான ஒரு நடவடிக்கைக்கு ஊக்கமளிக்கும் மற்றும் நடத்தை மாற்றத்தை ஏற்படுத்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுவது உட்பட பல பசுமை சார்ந்த முயற்சிகளை செயல்படுத்தியுள்ளது.


- இந்திரா



சிங்கப்பூரில் AAC அதிகாரிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தலைமையகத்தைப் பார்வையிடுவதற்காக 2022 பெப்ரவரி 14 மற்றும் 15 ஆம் திகதிகளில் தமது நாட்டுக்கு விஜயம் செய்யுமாறு AA சிங்கப்பூரின் Bernard Tay தலைவர் மற்றும் CEO Lee Wai Mun ஆகியோரால் இலங்கை ஆட்டோமொபைல் சங்கத்தின் (AAC) தலைவர் தம்மிக்க ஆட்டிகல மற்றும் தேவப்பிரிய ஹெட்டியாராச்சி ஆகியோர் அழைக்கப்பட்டனர். சிங்கப்பூர், ஸ்கொட்ஸ் வீதியில் இலக்கம்.25 இல், கொவிட் தொற்றுநோய், மின்சார வாகனங்கள் மற்றும் சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் வீதிப்பாதுகாப்பு தொடர்பான ஆசியா பசிபிக் பிராந்தியம் மற்றும் ஐ.நா. பத்தாண்டு கால நீடிக்கப்பட்ட வீதிப்பாதுகாப்பு தொடர்பான விஷயங்கள் 2031 வரையிலான சமூக/பொருளாதார பாதிப்புகள் குறித்த விவாதங்களை நடத்தியது. ஏஏ சிலோன் மற்றும் ஏஏ சிங்கப்பூர் அதிகாரிகள் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட ஏஏ சிலோன் மற்றும் ஏஏ சிங்கப்பூர் அதிகாரிகளுக்கு முன்னால் கலந்துரையாடல் சிங்கப்பூரில் ஏஏ தலைமையகத்தில் நடைபெற்றது.

# கலாநிதி சந்திரிகா சுப்ரமணியனின் 'ஊடகச் சட்டங்கள் ' நூல் நல்லதோர் வழிகாட்டி

வழக்கறிஞரும் ஊடகத்துறை விற்பன்னருமான முனைவர் சந்திரிகா சுப்ரமண்யன் அண்மையில் வெளியிட்டுள்ள 'ஊடகச் சட்டங்கள்' என்ற நூலை வாசிக்கும் வாய்ப்பு கிட்டியது. இலங்கையிலும் இந்தியாவிலும் ஊடகத் துறையில் 30 வருடங்களுக்கும் மேல் பணியாற்றியவரும் சந்திரிகா சுப்ரமண்யன் தற்போது அவுஸ்திரேலியாவில் வசித்து வருவதுடன், அவுஸ்திரேலிய உச்ச நீதிமன்ற மற்றும் உயர் நீதிமன்ற வழக்கறிஞராகவும் சுமார் 20 வருட காலமாக பணியாற்றி வருகின்றார்.



சமயம், கணினி, தமிழ் மொழியின் சிறப்பு, ஊடகம் என பல துறைகளையும் சார்ந்த நூல்களை வெளியிட்டுள்ள இவர் அண்மையில் வெளியிட்டுள்ள மேற்படி ' ஊடகச் சட்டங்கள் ' நூலானது ஊடகத்துறையில் உள்ளோருக்கு நல்லதோர் வழிகாட்டி நூலாக அமைந்துள்ளது எனலாம்.

இந்திய ஊடக சட்டங்களை அடியொட்டியதாக விபரங்கள் இதில் அடங்கப்பட்டிருந்தாலும் இலங்கைவாழ் ஊடகவியலாளர்களுக்கும் இதில் அறிந்துக் கொள்ள வேண்டிய, கற்றுக் கொள்ளக்கூடிய ஏராளமான விடயங்கள் உள்ளன. ஊடகத்துறையில் ஈடுபட்டுள்ள எந்தவொருவரும் ஊடகத்துறை சார்ந்த சட்டங்களை அறிந்திருக்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். ஊடக சட்டங்களை அறியாத எந்தவொரு ஊடகரும் தற்காப்புக் கலை தெரியாதவர் என்றே கருத முடியும்.

எனவே, அத்தகைய சட்ட திட்டங்களை அறிவதற்கு இந்த 'ஊடகச் சட்டங்கள்' நூல் நல்லதோர் வழிகாட்டியாக இருக்கின்றது எனலாம். குறிப்பாக, மிக நீண்ட வசனங்களையோ, மிக நீண்ட பந்திகளையோ அமைக்காமல் கூற வரும் விடயத்தை மிக அழகாக, நேர்த்தியாக, லாவகமாக சுருக்கமாக சிறு சிறு பந்திகளாக எழுதியிருப்பது, சந்திரிகா சுப்ரமண்யன் அவர்களின் ஊடக உளவியலை நன்றாக உணர்த்தி நிற்கின்றது.

ஊடகவியலாளர்கள் மட்டுமன்றி ஊடக நிர்வாகத் துறையினர் கூட அறிந்திருக்க வேண்டிய பல விடயங்களையும் இந்நூலில் அவர் உள்ளடக்கியுள்ளார். மேலும், இன்றைய காலத்தில் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகை ஆகியன மட்டுமன்றி சமூக ஊடகங்களும் செல்கின்ற போக்கினையும் அதில் காணப்படுகின்ற தவறுகள், குறைகள் குறித்தும் சிறப்பாக இடித்துரைத்துள்ளார்.

உதாரணமாக குறிப்பிடக்கூடிய சில வரிகள் வருமாறு : "தமது பொறுப்பை மறந்து ஊடகங்கள் வெறும் பொருளாதார, வணிக நிறுவனங்களாக, விற்பனை நிலையங்களாக, செய்திகளை நுகர் பொருளாக உற்பத்தி செய்யும் கூடங்களாக மாறியிருக்கின்ற நிலை மக்களாட்சிக்கு எந்தப் பங்களிப்பையும் செய்யப் போவதில்லை" என விளாசியுள்ளார்.

இன்னுமொரு கட்டத்தில் , " ஊடகச் செய்தி என்பது தனி மனித கூட்டு சமுதாயத்தின் உணர்ச்சிகளுடன் தொடர்புடையது. செய்தியின் தன்மை பாதிக்கப்பட்டவரைச் சார்ந்த வாசகர்கள் அல்லது உறவுகளுக்கு ஆத்திரம், சினம் ஆகியவற்றை தூண்டும் வகையில் அமையக் கூடாது. சம நிலையோடு சொல்லாடலில் கவனமாக இருக்க வேண்டும் " எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்நூலில் அநாவசியமாக ஆங்கில சொற்களை புகுத்தாமல் இயன்றவரையில் தமிழ் சொற்களை நேர்த்தியாக பயன்படுத்தியிருப்பது இன்னுமொரு சிறப்பம்சமாகும். இத்தகைய சிறப்புமிக்க ஒரு நூலினை சிரமேற்கொண்டு ஊடகத்துறைக்கு தந்துள்ள முனைவர் சந்திரிகா சுப்ரமணியன் பாராட்டுக்குரியவர். ஊடகத்துறைக்கு இன்னும் பல நூல்களை அவர் படைக்க வேண்டும்.

வி. ரெட்லி ஹெரிசன் ...




என். சரவணன்

# கொழும்பில் செழித்து வளர்ந்திருந்த கறுவாத் தோட்டங்கள்


இலங்கை காலனித்துவத்துக்குள் சிக்கிக்கொள்ள வழிவகுத்ததே கறுவா மீதான மேலைத்தேயர்களிடம் இருந்த அளவற்ற மோகம் தான்.

முதன் முதலில் போர்த்துகேயர் வழிதவறி இலங்கையில் கரையொதுங்கிய போது கறுவா வணிகத்தில் ஏகபோகமாக திளைத்திருந்தவர்கள் அரேபியர்கள். கொழும்புத் துறைமுகம் முக்கியத்துவம் பெற்றதும் அதனால் தான். போர்த்துகேயர் அரேபியர்களை விரட்டிவிட்டு படிப்படியாக கறுவா வணிகத்தை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தது மட்டுமன்றி கோட்டே அரசனுடன் கறுவா வணிகம் சம்பந்தமாக ஒப்பந்தத்தையும் ஏற்படுத்திக்கொண்டு, தமக்கு ஒரு கோட்டையை அமைத்துக்கொள்ள அனுமதியையும் பெற்றுக் கொண்டனர். அதுவே கொழும்பு என்கிற நகரம் உருவாகவும், அதுவே இலங்கையில் தலைநகராக நிலைபெறவும் காரணமாயிற்று.

காலனித்துவ ஆட்சியாளர்கள் பிற்காலத்தில் கறுவாவை விட மேலும் பல வருமானங்களை இலங்கையில் ஏற்படுத்திக்கொண்டார்கள். இலங்கையின் வளங்களை எவ்வளவுக்கு சுரண்ட முடியுமோ அவ்வளவு சுரண்டிச் சென்றார்கள். ஆனால் இலங்கையின் கறுவாவுக்கு இன்றும் சர்வதேச அளவில் ஒரு பெரு மதிப்பு உண்டு.

கொழும்பில் அன்று கறுவா பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட இடம் தான் இன்று அப்படி ஒரு பயிர்ச்செய்கை இருந்ததற்கான அடையாளமே இல்லாமல் இலங்கையின் பெரும் செல்வந்தர்கள் வாழும் மையமாகவும், கட்டடங்களாகவும் காட்சியளிக்கிறது.

ஆங்கிலத்தின் சின்னமன் கார்டன் (Cinnamon Garden) என்றும் சிங்களத்தில் குறுந்து வத்த என்றும் அழைக்கப்படும் இந்த கொழும்பு 7இல் (கறுவாத் தோட்டப் பகுதி) வாழ்வதை பலரும் பெரும் கௌரவமாகக் கருதுகிறார்கள். முக்கியமான நாடுகளின் தூதுவராலயங்களும், உயர்ஸ்தானிகர்களின் இல்லங்களும் இங்கே உள்ளன.




இலங்கையில் தென்னையும் பனையும் மலிந்திருந்த ஒரு காலத்தில் உள்நாட்டுக்குள் அத்தனை பிரபல்யமாக கருவா இருக்கவில்லை. ஆரம்பத்தில் கறுவாவை உள்ளூர் உற்பத்தியாளர்களிடம் கொள்வனவு செய்து ஏற்றுமதி செய்தவர்கள் படிப்படியாக இலங்கையை ஆக்கிரமிக்கத் தொடங்கியதும் தாமே கரையோரப் பிரதேசங்களில் தென்னந்தோப்புகளை அழித்து கறுவா உற்பத்தியைப் பெருக்கி ஏற்றுமதி செய்தார்கள். போர்த்துக்கேயரும், ஒல்லாந்தரும், ஆங்கிலேயர்களும் அதைத் தொடர்ந்தார்கள்.

போர்த்துக்கேயர் காலத்திலும், ஒல்லாந்தர் காலத்திலும் அவர்களின் பிரதானமான வருவாயாக கறுவா வணிகம் இருந்துள்ளது. ஐரோப்பா முழுவதும் இலங்கை கறுவாவை ஏற்றுமதி செய்தார்கள். கறுவா திணைக்களம் என்கிற ஒரு அரச நிறுவனத்தையே ஏற்படுத்தியிருந்தார்கள். கண்டி ராஜ்ஜியத்தின் படையெடுப்பில் இருந்து தம்மை பாதுகாப்பதற்காக கோட்டை அரசன் போர்த்துகேயருடன் ஆண்டுதோறும் 250,000 இறாத்தல் கறுவாவை வழங்குவதாக ஒப்பந்தம் செய்துகொண்டான். அதுபோல பிற்காலத்தில் கண்டி மன்னன் 1602 ஆம் ஆண்டு ஒல்லாந்து மன்னனுக்கு 3000 இறாத்தல் கறுவாவும், மிளகும் பரிசாக அனுப்பினான்.

போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலத்தில் கூட இலங்கையர்கள் கறுவாவை காட்டுப் பகுதிகளில் சென்று தான் சேகரித்தார்கள். அதில் ஈடுபடுத்தப்பட்ட இலங்கையர்கள் காட்டு மிருகங்களின் இடையூறுகளில் இருந்து பாதுகாப்பதற்காக போர்த்துக்கேய காவலர்கள் பாதுகாப்புக்குச் சென்றார்கள். ஒரு கட்டத்தில் கறுவா குறைந்து கொண்டு வந்தபோது கறுவா செய்கையை ஆரம்பித்தவர்கள் ஒல்லாந்தர்களே. 1705ஆம் ஆண்டு சேனைப் பயிர்ச்செய்கையாக அதைத் தொடங்கினார்கள்.

இமான் வில்லம் பல்க் (Iman Willem Falck 17651785) என்கிற டச்சு ஆளுநரின் கீழ் தான் கறுவா பெருந்தோட்டங்கள் அதிகமாக உருவாக்கப்பட்டன. 1769 இல் அவர் ஒரு பரிசோதனை முயற்சியாக கிராண்ட்பாஸ் பகுதியில் பயிரிட்டார். ஒரு சில ஆண்டுகளில் அது பலன் தரவே கொழும்பில் கறுவாத்தோட்டப் பகுதியில் 232 ஏக்கரில் முதலில் அவரின் ஆணையில் ஆரம்பித்துவைக்கப்பட்டது. அது மட்டுமன்றி வேறெவரும் கறுவா உரித்தெடுக்கக் கூடாது என்றும் சட்டமியற்றினார்கள். களவாக உரிப்போருக்கு எதிராக சட்டமும் இயற்றப்பட்டது.


கொழும்பு குதிரைப் பந்தயத் திடல்

ஒரு செடிக்கு பத்து ரிக்ஸ டொலர்கள் தண்டப்பணமாக அறிவித்தார்கள். அதை செலுத்த முடியாதவர்களுக்கு பத்தாண்டு சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. 1745 ஒக்டோபர் 8 இல் வெளியான சட்டம் இது. இந்தச் சட்டத்தின் பிரகாரம் கறுவா செடியை பறிப்பவர்கள் இலங்கையில் இருந்து நாடுகடத்தப்பட்டு கேப் பொயிண்டுக்கு (Cape Point ) அனுப்பப்பட்ட பதிவுகளும் உண்டு.

டச்சு காலத்தில் கொழும்பு கறுவாத் தோட்டத்தில் 3826 ஏக்கர்களில் கறுவா உற்பத்தி செய்யப்பட்டதென பிற்காலத்தில் கொல்வின் ஆர் டி சில்வா எழுதிய “பிரித்தானியர் ஆக்கிரமிப்பின் கீழ் இலங்கை” (Ceylon Under the British Occupation) என்கிற நூலில் குறிப்பிடுகிறார்.

கறுவா பயிர்ச்செய்கையாக ஆரம்பமானதும் முதலாவது கறுவாத் தோட்டம் உருவாக்கப்பட்ட இடம் அன்றைய மருதானைப் பகுதி. இதன் சாத்தியம் உறுதியானதும் நீர்கொழும்பு, களுத்துறை, காலி, மாத்தறை போன்ற பகுதிகளில் விரிவாக்கினார்கள்.

1832 வரை ஆங்கிலேய குடியேற்ற நாட்டரசாங்கம் பெற்ற வருமானத்தில் பெரும்பகுதி கறுவா வர்த்தகத்தின் மூலம் தான் கிடைத்தது. உலக சந்தையிலும் இலங்கை கறுவா உயர்ந்த தரமுடையதாக இருந்ததால் அது தனி இடத்தைப் பிடித்திருந்ததுடன் அந்த வர்த்தகத்தில் ஈடுபட்டவர்கள் செல்வந்தர்களாக ஆனார்கள்.

அன்றைய மருதானைப் பகுதியில் முதன் முதலில் கறுவா உற்பத்திசெய்யப்பட்ட இடம் தான் கறுவா தோட்டம். இன்னும் சொல்லப்போனால் இன்றைய கறுவாத் தோட்டம் என்று அழைக்கப்படுகிற இடத்திலிருந்து யூனியன் பிளேஸ் வழியாக, சின்ன பொரளை, மருதானை, பஞ்சிகாவத்தை, நாரஹேன்பிட்டி, திம்பிரிகஸ்யாய ஆகிய பகுதிகள் வரை கறுவா தோட்டங்கள் பரந்திருந்தன.


இன்று இலங்கைப் பிரதமரின் அலுவலகம், சுதந்திர சதுக்கம், சுவடிகூடத் திணைக்களம், ரோயல் கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகம், இலங்கை ஒலிபரப்புப் கூட்டுத்தாபனம், ரூபவாகினி, ஐ.டி.என். கொழும்பு நகர மண்டபம், தாமரைத் தடாகம், பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், கொழும்பு தேசிய அருங்காட்சியகம், கொழும்பின் வானிலை ஆராய்ச்சி மையம் (வளிமண்டலவியல் திணைக்களம்), கோள்மண்டலம்,பெரிய ஆஸ்பத்திரி, ஆனந்தா கல்லூரி, சங்கமித்த மகளிர் கல்லூரி, மருதானை இரயில் நிலையம் போன்ற பரந்துபட்ட இடங்கள் அன்றைய கறுவா தோட்டங்கள் என்றால் நம்ப கடினமாக இருக்கும்.

கறுவா தொழிலில் ஈடுபட்டவர்கள் இளைப்பாறும் இடமாக மருதானையில் “பரனவாடி” என்கிற இடம் இருந்தது. அதற்கருகில் உள்ள பிரதேசம் மரியக்கடை என்றும் அழைக்கப்பட்டது. பஸ் கண்டக்டர் கூட இந்த இடங்களை சொல்லி நிறுத்தும் வழக்கம் இருந்தது. இப்போது ஆனந்த கல்லூரி அருகில் நிறுத்தச் சொன்னால் தான் நிறுத்துவார்கள்.

அங்கெல்லாம் கருவாத் தோட்டங்களை உருவாக்கியவர்கள் ஒல்லாந்தர்கள் தான். அதற்கு முன்னர் அது காடு. பொரளை பகுதியிலிருந்து காடு இன்னமும் அடர்ந்த காடாக இருந்தது. டச்சு ஆளுனரும் அதிகாரிகளும் இவ்வனத்தில் வேட்டையாடியதாக பதிவுகள் உள்ளன. ஆங்கிலேயர்கள் ஆட்சியில் நகர விரிவாக்கத்துக்காக இந்தக் கறுவாத் தோட்டங்கள் அகற்றப்பட்டன. ஏனெனில் ஆங்கிலேயர்கள் கறுவாவை விட கோப்பி, தேயிலை போன்ற பணப்பயிர்களில் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டிருந்தார்கள்.

***சலாகம சாதி***

ஆரம்பத்தில் கேரளப் பின்னணியைக் கொண்ட சலாகம என்கிற சிங்கள சாதியினர் தான் கறுவா உரிக்கும் பணியை மேற்கொண்டார்கள். குறிப்பாக மூத்தவர்களே இதனை செய்தார்கள். ஆனால் போர்த்துக்கேயருக்கு அதிகளவு உற்பத்தியை பெருக்குவதற்காக அச்சமூகத்தின் சிறுவர், சிறுமிகளையும் இத்தொழிலில் ஈடுபடுத்தினார்கள். ஒல்லாந்தர் காலத்தில் மகா வரி என்கிற ஒன்றை ஏற்படுத்தினார்கள். கறுவா தொழிலில் ஈடுபடுபவர்கள் பணமாகவோ, அல்லது கறுவா மூலமாகவோ வரியாக செலுத்த வேண்டும். இந்த வரியை அறவிடுவதற்காகவே பதவிகளும் உருவாக்கப்பட்டன. இந்த வரியால் சலாகம சாதியினர் தான் பாதிக்கப்பட்டனர்.


கருவாத்தோட்டம்

சலாகம சாதியினரை மட்டும் இத்தொழிலில் கட்டாயமாக ஈடுபடுத்தி வந்தார்கள். சலாகம என்கிற சாதி உயர் சாதினராகவே கருத்தப்பட்டு வந்தது. ஒல்லாந்தரின் வலுக்கட்டாயப் பணிகளில் இருந்தும், ஒடுக்குமுறையில் இருந்தும் தப்புவதற்காக அவர்கள் சிங்கள தாழ்த்தப்பட்ட சாதியினரை திருமணம் முடிக்கின்ற போக்கும் வளர்ந்தது. உயர்த்தப்பட்ட சாதியினர் தாழ்த்தப்பட்ட சாதியினரை மணமுடித்தால் அவரும் தாழ்த்தப்பட்டவராக கருதப்படுகிற சாதிய பொதுப்பண்பு நிலவிய சூழலில் அவர்கள் சாதியை மாற்றிக்கொள்வதற்காக இந்த கலப்பு திருமண வழியைக் கையாண்டார்கள் என்று வரலாற்றாசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிறி குறிப்பிடுகிறார். இதற்காகவே ஒல்லாந்தரும் தாழ்த்தப்பட்ட பெண்ணை மணமுடித்தாலும் ஆணின் மூல “சாதி” மாறுபடாது என்று அறிவிப்பு செய்தார்கள். பின்னர் வேறு வழியின்றி ஏனைய சாதியினரையும் இத்தொழிலில் ஈடுபடுத்தினார்கள்.

கறுவாத் தோட்டங்கள் போர்த்துகேயர், ஒல்லாந்தர் காலத்திலும் பெரும் காட்டுப் பிரதேசமாகத் தான் காணப்பட்டன. ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தின் இறுதியில் தான் மாற்றங்கள் ஏற்பட்டன.

கறுவாத் தோட்டத்து மாற்றங்களோடு தொடர்புடைய ஹெவ்லொக், (Sir Arthur Havelock)ரோஸ்மீட், (Lord Rosmead), எட்வர்ட் பார்ன்ஸ்(Sir Edward Barnes),ஜேம்ஸ் லோங்க்டன் (Sir James Longdon), டொரிங்டன் (Torrington) போன்ற முக்கிய ஆங்கிலேய ஆளுநர்களின் பெயர்களில் இங்குள்ள இடங்களின் பெயர்கள் இன்றும் நிலைத்து நிற்பதைக் காண முடியும்.

அதேவேளை பிரித்தானிய இராணியின் நினைவாக ஏற்படுத்தப்பட்ட விக்ரோரியா பூங்காவின் (Victoria Park) பெயர் 1956 ஆம் ஆண்டு பண்டாரநாயக்கவின் ஆட்சியின் போது புத்த ஜயந்தி கொண்டாடப்பட்டதை முன்வைத்து விகாரமகாதேவி பூங்கா என்று மாற்றப்பட்டதையும் இங்கே நினைவுறுத்திக் கொள்வோம். விகாரமகாதேவி; மகாவம்சக் கதாநாயகன் துட்டகைமுனுவின் தாயார் என்பதையும் அறிவீர்கள்.அன்றைய பசுமைக் காடு, கறுவாத் தோட்டமாகி கட்டடக் காடாக மாறிய கறுவாத் தோட்டத்தில் எஞ்சியிருக்கும் நிழல் தரும் பூங்காவாக எஞ்சியிருப்பது விகாரமகா தேவிப் பூங்கா மட்டும் தான்.

**(தொடரும்)**

## உயிரிகளின் வாழ்க்கை வட்டத்தை...

(29ஆம் பக்கத் தொடர்)

**கேள்வி : பகிரங்க ஆற்றுமண் அகழ்வினால் ஆறுகள், பிரதான பாதைகள் சிதைவடைவதை எவ்வாறு பார்க்கின்றீர்கள் ?**

**பதில் :** இலங்கையை பொறுத்தமட்டில் ஆற்றுமண் அகழ்வுக்கான அங்கீகாரம் அரசாங்கத்தால் வழங்கப்பட்டு இருக்கிறது. இவ்வாறு இருக்க சட்ட ரீதியற்ற முறையிலும் பகிரங்க முறையிலும் ஆற்றுமண் அகழ்வு இடம்பெறுவதால் ஆறுகள் மட்டுமன்றி அதனை அண்டிய வயல் நிலங்கள் மற்றும் பாதைகள் சிதைவடைந்து செல்லும் நிலைமை ஏற்படுகிறது. இவ்வாறு சிதைவடைந்து செல்வது காலப்போக்கில் ஆறுகளின் திசை மாற்றமடைவதற்கும் ஆற்றினை அண்டிய வயல் நிலங்களில் உற்பத்தி குறைவடைந்து மக்கள் வறிய நிலைமைக்கு தள்ளப்படவும் காரணமாகின்றது. மேலும் மண்ணகழ்விற்கும், மண்ணைக் கொண்டு செல்லவும் பயன்படுத்தப்படும் வாகனங்களினால் பாதைகள் சிதைவடைந்து அப்பகுதிகளில் வீதி விபத்துக்களும் ஏற்பட வாய்ப்பாக அமைந்துள்ளது.

**கேள்வி : ஆற்று மணல் அகழ்வின் பாதிப்புக்கள் எதிர்காலத்தில் எவ்வாறான விளைவுகளை ஏற்படுத்தும் ?**

**பதில் :** ஆற்றுமணல் அகழ்வு பல்வேறு வித பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது.

ஆறானது உயிர்ப்புடன் இருக்க வேண்டுமானால் ஆற்றினுடைய இயற்பியல், வேதியல், உயிர்க்காரணிகள் அவசியமாகும். ஆறுகளில் இடம்பெறும் அதிகளவிலான மண்ணகழ்வினால் ஆறுகளின் உயிர்ப்புப் பண்புகள் பாதிப்படைகின்றன. இதனால் காலப்போக்கில் இயற்கையின் இயல்புச் சமநிலை மாற்றமடைந்து செல்வதோடு ஆற்றினைச் சார்ந்த உயிரினச் சூழலும் அழிவினை நோக்கி நகரும். மேலும் இந்தியா, கென்யா, இத்தாலி போன்ற நாடுகளின் சில பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் அதிகரித்த ஆற்று மண் அகழ்வினால் ஆற்றினுடைய நீர் வற்றி குடிநீருக்கான தட்டுப்பாடுகளும் காலப்போக்கில் ஏற்பட வாய்ப்புள்ளது.

**கேள்வி : சட்டவிரோத ஆற்றுமணல் அகழ்வு தொடர்பாக மத்திய சூழல் அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண சூழல் அதிகார சபை, பொலிஸ் நிலையங்கள், வரையறுக்கப்பட்ட சூழல் மற்றும் பிரதேச செயலகங்கள் போன்றவை எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என கருதுகின்றீர்கள்?**

**பதில் :** இலங்கையைப் பொறுத்தவரையில் சட்டவிரோத ஆற்றுமணல் அகழ்வு அதிகரித்த நிலையிலேயே காணப்படுகிறது.

அதிலும் குறிப்பாக ஆற்றுமணல் களுகங்கை, களனி கங்கை, மகா ஓயா நதிகள் உட்பட மட்டக்களப்பு பகுதிகளில் கூடுதலாக அகழப்பட்டு வருகிறது. மேலும் களனி கங்கையில் மட்டும் வருடா வருடம் 1.4 மில்லியன் தொன்னுக்கு மேல் மணல் அகழப்படுகிறது என மதிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான ஆற்றுப்படுகைகளில் அதிகரித்த மணல் அகழ்வு ஏற்படுவதனால் கரையோர சமவெளிகளில் உவர் நீர் ஆழமாக ஊடுருவி கடலிலிருந்து வெள்ளப்பெருக்கு அடிக்கடி ஏற்படுதல் மற்றும் மாறிவரும் நீரின் தரம், நீர்வாழ் விலங்குகள், தாவரங்கள் என்பவற்றில் எதிர்மறையான விளைவுகள் அதிகம் ஏற்பட்டு வருவதோடு ஆற்றங்கரைப் பிரதேசத்தின் பரப்பளவு குறைவடைந்து செல்வதுடன் பொருளாதார செழிப்பு நடவடிக்கைகளான விவசாயம், மீன்பிடி தோட்டத்துறவு செய்கைகள் பாதிப்படைந்து உயிர் உடைமைகளிலும் தாக்கம் புரிகின்றது.

இவ்வாறான நடவடிக்கைகளை குறைப்பதற்காக மத்திய சூழல் அதிகார சபை, நீர்ப்பாசனத் திணைக்களம், மாகாண சூழல் அதிகார சபை, பொலிஸ் நிலையங்கள், வரையறுக்கப்பட்ட சூழல் மற்றும் பிரதேச செயலகங்கள் போன்றவற்றால் பல முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தாலும், முயற்சிகள் பலன் அளிப்பதாக தெரியவில்லை. இவ்வாறான சூழ்நிலையிலேயே வியாபார நோக்கத்தை கொண்ட அனைவரின் பார்வையும் ஆற்று மண்ணகழ்வின் மீது காணப்படுவதனால் சட்டவிரோத ஆற்றுமணல் அகழ்வு அதிகரித்துள்ளது.






அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு பேராயராக பதவியேற்றிருக்கும் அருட்தந்தை துசாந்த ரோட்ரிகோவிற்கு 170 வருட பழைமை வாய்ந்த நுவரெலியா பரிசுத்த திரித்துவ தேவாலயத்தில் அருட்தந்தை சாள்ஸ் டேவிட் தலைமையில் வரவேற்பு வைபவமும் திடப்படுத்தல் வழிபாடும் கடந்த 20ஆம் திகதியன்று நடைபெற்றது. அங்கு நடைபெற்ற நிகழ்வுகளை படங்களில் காணலாம்.

(தகவலும் படங்களும் : நூரளையூரான்)



# உயிரிகளின் வாழ்க்கை வட்டத்தை பாதிக்கும் ஆற்றுமண் அகழ்வு

ஆற்றுமணல் களுகங்கை, களனி கங்கை, மகா ஓயா நதிகள் உட்பட மட்டக்களப்பு பகுதிகளில் கூடுதலாக அகழப்பட்டு வருகிறது. அதிகரித்த ஆற்றுமண் அகழ்வினால் ஆற்றினுடைய நீர் வற்றி குடிநீருக்கான தட்டுப்பாடுகளும் காலப்போக்கில் ஏற்பட வாய்ப்புள்ளது. அரச நிறுவனங்கள் மிக இறுக்கமான சட்ட திட்டங்களை கடைப்பிடித்து சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபடும் நபர்களுக்கெதிராக தீவிர நடவடிக்கை முன்னெடுப்பதை கடமையாகக் கொள்ள வேண்டும்.

## தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல்

ஆற்றுமண் அகழ்வு இயற்கை வள அழிவினுடைய மூல காரணமாகும். ஆற்றுப்பகுதிகளில் இடம் பெறும் மண் அகழ்வு ஆற்றுப்பரப்பினை அதிகளவில் ஆழப்படுத்துவதோடு அங்கு வாழும் உயிர்களின் வாழ்க்கை வட்டத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது. மேலும் ஆற்றினுடைய இரு கரைகளும் அகலமாக்கப்படுவதால் வெள்ளநீர் பயிர் நிலங்களை ஊடுருவி பயிர் நிலத்தின் தரத்தையும் பாதிப்புக்குட்படுத்துகிறது. இவ்வாறுஆற்றுமண் அகழ்வு, அது சார்ந்த வளங்களை மட்டுமன்றி ஏனைய வளங்களையும் பாதிப்புக்குட்படுத்துகிறது என தென்கிழக்குப் பல்கலைக்கழக புவியியல் பீட புவியியல் துறை பேராசிரியர் எம்.ஐ.எம்.கலீல், தினகரன் வாரமஞ்சரிக்கு அளித்த நேர்காணலில் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவருடனான நேர்காணல் வருமாறு.

**கேள்வி : பசுமைப் பிரதேசங்களை பாலைவனமாக்கும் செயற்பாடுகள் ஆரோக்கியமானவையா?**

**பதில் :** பசுமைப் பிரதேசங்களை பாலைவனமாக்கும் செயற்பாடுகள் ஆரோக்கியமற்றவை. பசுமை முறைமை எனப்படுவது, சூழலில் காணப்படும் தாவரத்தொகுதிகள் மற்றும் அதனைச் சார்ந்த இயற்கை நிலத்தொகுதிகள் சூழலுடன் கொண்டுள்ள இடைத் தொடர்பினை உள்ளடக்கிய தொகுதியை குறித்து நிற்கிறது. எம் நாட்டை பொறுத்தவரையில் மிகப் பெரிய பசுமைத் தொகுதியாக காடுகள் காணப்படுவதோடு புல் நிலங்கள், கடற்கரையோர பசுமைத் தொகுதிகள், ஈர நில பசுமைத்தொகுதிகள், விவசாய பசுமைத் தொகுதிகள், ஏனைய பசுமைத்தொகுதி என பரவிக் காணப்படுகிறது.

பசுமைப் பிரதேசங்கள் சூழல் மாசடைவை தடுத்தல், மழையைப் பெற துணை செய்தல், புயல் சூறாவளிகளின் தாக்கத்தைக் குறைத்தல், உயிர்ப் பல்வகைமையைப் பாதுகாத்தல், மண் வளத்தைப் பாதுகாத்தல், தரைக்கீழ் நீர் வளத்தைப் பேணுதல், வெள்ளப் பெருக்கைக் கட்டுப்படுத்தல், மானிடத் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என பல்வேறு முக்கியத்துவங்களை கொண்டதாக அமையப்பெற்றுள்ளது. இன்றைய காலகட்டத்தில் பசுமைப் பிரதேசங்கள் திட்டமிடப்பட்ட முறையில் பாலை நிலங்களாக மாற்றியமைக்கப்படுகின்றன.

இவ்வாறு பாலை நிலங்களாக மாற்ற முறுவதினால் புவி வெப்பமடைதல், வரட்சி, விரைவான குடித்தொகை வளர்ச்சி, நகரும் விலங்கு வேளாண்மையில் அதிகம் தங்கியிருத்தல், ஒழுங்கற்ற நிலப் பயன்பாடு போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. இவ்வாறான செயன்முறையை கட்டுப்படுத்துவதற்காக கோம்பனேஜன் (டென்மார்க்), ஆம்ஸ்டர்டாம் (நெதர்லாந்து), ஸ்டொக்ஹோம் (சுவீடன்) போன்ற நகரங்கள் பசுமை முறையைப் பேணியவாறு அமைக்கப்பட்டுள்ளன.

**கேள்வி : வளங்கள் பயன்படுத்தப்பட வேண்டியவை அதற்காக கண்மூடித்தனமாக சூறையாடப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியுமா?**

**பதில் :** வளங்கள் கண்மூடித்தனமாக சூறையாடப்படுவதை ஒருநாளும் ஏற்றுக்கொள்ள முடியாது. நம் நாட்டில் மட்டுமன்றி முழு உலகத்திலும் மனித சமுதாயத்தின் விருத்திக்கும் தேவைக்கும் வளங்கள் இன்றியமையாத சொத்துக்களாக காணப்படுகின்றன. கனிப் பொருள் வளம், காட்டு வளம், மண் வளம், நீர் வளம், கடல் வளம், விலங்கு வளம், மனித வளம் என வளங்களை பாகுபடுத்த முடியும். மனிதன் தன்னுடைய தொழிநுட்ப அறிவைப் பயன்படுத்தி தடைகளை அகற்றி வளங்களின் உச்ச பயனைப் பெற்றுக்கொள்கிறான். இன்றைய உலகில் அதிகரித்துச் செல்லும் சனத்தொகையினால் வளங்களின் பயன்பாடு அதிகரித்ததுடன் வளப் பற்றாக்குறைக்கும் முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலையும் உருவாகியுள்ளது.

வளமொன்றினை மிகையாகப் பயன்படுத்துவதால் எதிர்பாராத சூழலியல் பிரச்சினைகள், சடுதியான வளப்பற்றாக்குறை போன்ற தாக்கங்கள் ஏற்படுவதோடு சமூக மற்றும் அரசியல் ரீதியான முரண்பாடுகளும் தோற்றுவிக்கப்படுகின்றன. இலங்கையைப் பொறுத்தவரையில் மண்ணகழ்வு, முருகைக் கற்பாறைகள் அழிக்கப்படல், கடல் வாழ் உயிரிகள் அழிக்கப்படல் போன்ற வழிமுறைகளினூடாக வளங்கள் சூறையாடப்படுகின்றன. இவற்றினை தடுப்பதற்கு அரசாங்கம் பல்வேறு வழிமுறைகளை கையாளுகின்ற போதிலும் மக்கள் அவற்றினை கடைப்பிடிக்கின்றனரா ? என்பது சந்தேகத்திற்குரிய விடயம் ஆகும்.

**கேள்வி : காலநிலை மாற்றங்கள் எவ்வாறான பின்னணியில் ஏற்படுகின்றன?**

**பதில் :** காலநிலை மாற்றம் சூழலின் ஒரு அடிப்படைப் பண்பாகும். புவியின் பனிக்கட்டியாற்றுக் காலத்திலிருந்து இன்றைய நவீன தொலைத்தொடர்பு யுகம் வரை இது நிகழ்ந்து வருகிறது.

காலநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தும் பிரதான காரணிகளாக எரிமலை வெடிப்பு, இயற்கை அனர்த்தங்கள், காடழிப்பு, அதிகளவிலான இரசாயன உரப் பாவனை, விவசாய நடவடிக்கைகள், போக்குவரத்து, உயிர்ச்சுவட்டு எரிபொருள் தகனம் போன்றவை காணப்படுகின்றன. காடழிப்பு, நீரின் மிதமிஞ்சிய பாவனை, நீரை அதிகளவு உறுஞ்சும் பயிர் வகைகள் பயிரிடப்படல், நீரை சேமித்து வைக்காமை, சனத்தொகை அதிகரிப்பு போன்றன வரட்சிக்குரிய பின்னணி காரணிகளாகும்.

**கேள்வி : காடழிப்பு, கிறவல் மற்றும் ஆற்றுமண் அகழ்வு போன்றவற்றினால் சுற்றுச்சூழல் எவ்வாறான பாதிப்புக்களை எதிர்நோக்கும் என கருதுகின்றீர்கள்?**

**பதில் :** காடழிப்பு, கிறவல் மற்றும் ஆற்றுமண் அகழ்வு போன்றவை சுற்றுச்சூழலில் மிக மோசமான பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றது. மனித தலையீட்டினால் இயற்கைக் காடு இயல்பான தன்மையை இழந்து வருகிறது.

காடுகள் அழிக்கப்படுவதால் மண்வளம் பாதிப்படைதல், புவி வெப்பமடைதல், உயிர்ப் பல்வகைமை அழிவடைதல், பாலைவனமாதல், இயற்கைச் சமநிலை பாதிப்படைதல் போன்ற சூழலுக்கு பாதக விளைவுகளை ஏற்படுத்துகின்றன. கிறவல் மற்றும் ஆற்றுமண் அகழ்வு நிலத்தை உவர் தன்மையடையச் செய்வதுடன் குடிநீர்த்தட்டுப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. நிலக்கீழ் நீரினை குறைவடையச் செய்தல், வெள்ளப் பெருக்கை ஏற்படுத்தல், கண்டல் தாவரங்கள் அழிவடைதல், உயிர்ப்பல்வகைமை அழிவடைதல் போன்ற சூழலியல் தாக்கங்களையும் ஏற்படுத்துகிறது.

**கேள்வி : ஆற்றுமண் அகழ்வின் போது ஏனைய வளங்களும் அழிந்து போவதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**பதில் :** ஆற்றுமண் அகழ்வு இயற்கை வள அழிவினுடைய மூல காரணமாகும். ஆற்றுப்பகுதிகளில் இடம்பெறும் மண் அகழ்வு ஆற்றுப்பரப்பினை அதிகளவில் ஆழப்படுத்துவதோடு அங்கு வாழும் உயிரிகளின் வாழ்க்கை வட்டத்தையும் பாதிப்புக்குள்ளாக்குகிறது.

மேலும் ஆற்றினுடைய இரு கரைகளும் அகலமாக்கப்படுவதால் வெள்ளநீர் பயிர் நிலங்களை ஊடுருவி பயிர் நிலத்தின் தரத்தையும் பாதிப்புக்குட்படுத்துகிறது. இவ்வாறு ஆற்றுமண் அகழ்வு, அது சார்ந்த வளங்களை மட்டுமன்றி ஏனைய வளங்களையும் பாதிப்புக்குட்படுத்துகிறது.

(28ஆம் பக்கம் பார்க்க)

# சகோதரத்துவமும் சமத்துவமுமே என்றும் நிலையானது

## சமூகப் பணியாளர் அப்துல் சத்தார் முஹம்மது வசீர்

சுமார் அரை நூற்றாண்டு காலத்துக்கு மேலாக மாத்தளை மாவட்டத்தில் தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு இனமத வேறுபாடுகள் மற்றும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் பொதுநல சேவைகளில் ஈடுபட்டு விசேடமாக கல்வித்துறைக்கும் விஷேட தேவைகளுக்குரிய குழந்தைகளுக்கும் தனது 90 வயதை தாண்டியும் இன்றும் துடிப்புடன் சமூகப்பணிகளில் ஈடுபட்டு வரும் மத்திய மாகாணத்தில் எழில் கொஞ்சும் மாத்தளை மண்ணில் பிறந்த அப்துல் சத்தார் முஹம்மது வசீர் உடனான நேர்முகம்.



நேர்காணல்:
**எம். எஸ். எம். மசாஹிம்**
உக்குவளை விஷேட நிருபர்

**கேள்வி : உங்களைப் பற்றி கூறுங்களேன்.**

**பதில்:** மாத்தளை மண்ணில் ஒரு வர்த்தக குடும்பத்தில் பிறந்தேன். நான் எனது கல்வியை அன்று மாத்தளை விஜய கல்லூரியில் ஆங்கில மொழி மூலம் எட்டாவது ஆண்டு வரை கற்று அதன் பின்னர் மாத்தளை சாஹிர கல்லூரியில் ஆண்டு ஒன்பது தொடக்கம் கல்வி கற்றேன். விஜய கல்லூரியில் எனது ஆசான்களாகவும் அதிபர்களாகவும் இருந்த சிங்களவர்களிடமே கல்வி கற்றேன்.

**கேள்வி: பாடசாலை கல்வியை முடித்த பின் ஒரு அரச தொழிலில் ஈடுபட்டீர்களா அல்லது தந்தையின் வர்த்தக துறையை தொடர்ந்தீர்களா?**

**பதில்:** நான் பாடசாலை கல்வியை முடித்ததும் ஒரு கிராம சேவை அதிகாரியாக நியமனம் பெற்றேன். அதுவும் விஷேடமாக இன்று மாத்தளை மாவட்ட உக்குவளை பிரதேச செயலக பிரிவின் சிங்கள பௌத்த மக்கள் பெரும்பான்மையாக வாழும் கலால்பிட்டிய என்னும் ஒரு கிராமத்திற்கு நியமிக்கப்பட்டேன். அக்காலத்தில் இக்கிராமத்தில் சுமார் ஐந்து முஸ்லிம் குடும்பங்கள் மாத்திரமே இருந்தன. அவர்கள் பெரும்பான்மை சிங்கள மக்களின் நன்மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டவர்கள். கலால்பிட்டி என்னும் இந்த ஊரில் சுமார் 18 மாதங்கள் எனது சேவை தொடர்ந்தது. அதன் பின்னர் என்னை மாத்தளை மாநகருக்கு இடமாற்றம் செய்தார்கள். எனது ஓய்வுபெறும் காலம்வரை மாத்தளை நகரிலேயே கிராம சேவை அதிகாரியாக பணியாற்றினேன்.

**கேள்வி: அரச ஊழியராக இருந்து ஓய்வு பெற்ற நீங்கள் எவ்வாறு மாத்தளை மாநகரில் ஒரு பிரபல்யம் வாய்ந்த வர்த்தகராக ஒரு தோட்டத் தொழிலதிபராக ஒரு சமூக சேவையாளராக எவ்வாறு உருவாகினீர்கள்.**

**பதில்:** நான் ஏற்கனவே கூறினேன். நான் பிறந்தது ஒரு வர்த்தக குடும்பத்தில். எனது தந்தையார் சத்கார்ஷன் என்ற பெயரில் தனது வர்த்தகத் துறையை ஆரம்பித்திருந்தார். நான் அரச தொழிலில் இருந்து ஓய்வு பெறும்போது எனது தந்தையாரும் முதிய வயதை அடைந்திருந்தார். அந்தநிலையில் தந்தையின் வர்த்தகத் துறையை பொறுப்பேற்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது. அன்று நான் தந்தையின் வர்த்தகத்தை வியாபிக்க செய்து தோட்டத் தொழில் கட்டிடத் தொழில் என பல்வகை தொழில்களை எனது மூலதனத்தை செலுத்தினேன். அதில் நான் வெற்றி கண்டேன். இன்றும் எனது அந்த வெற்றி தொடர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்கெல்லாம் மூல காரணம் என்னிடத்தில் ஒரு கொள்கை இருக்கின்றது என்னைப் பெற்ற பெற்றோரையும் கல்வியைக் கற்றுத்தந்த ஆசானையும் இன்றும் நான் மதித்து நடக்கின்றேன். இறைவனின் உதவியும் அருளும் பெற்றார்கள் ஆசான்களின் ஆசீர்வாதமும் என்னை உச்ச நிலைக்கு கொண்டு சென்றுகொண்டிருக்கின்றது.

**கேள்வி: மாத்தளை மண்ணில் புகழ்பூத்த வர்த்தக குடும்பத்தில் பிறந்த தாங்கள் ஏன் உங்கள் கல்வியை தொடராமல் அரச துறையையும் அதன் பின்னால் தந்தையின் வர்த்தகத் துறையையும் தெரிவு செய்தீர்கள்.**

**பதில்:** உண்மையிலேயே கல்வி கற்க வேண்டும் என்ற நிறைந்த ஆசை இருந்தது. எனது சிறுபிராயம் தொடக்கம் வாசிப்பதை மிகவும் நேசித்தேன். தமிழ் சிங்கள ஆங்கில மொழி புத்தகங்களையும் நாளிதழ்களையும் தேடித்தேடி வாசிப்பேன். எனது நோக்கமே இந்த வாசிப்பின் மூலம் கல்வியின் உச்சக் கட்டத்திற்கு செல்ல வேண்டும் என்பதுதான். என்றாலும் என்னால் அதை தொடர முடியாமல் எனது கண்களால் எதையும் வாசிக்க முடியாமல் தெடர்ந்து வாசித்தால் கண்கள் மற்றும் தலையில் பெரும் வலியை ஏற்படுத்தியது. இதனால் எனது கல்வியை இடைநிறுத்தி அரச தொழிலில் ஈடுபட வேண்டி ஏற்பட்டது. இதில் ஒன்று மட்டும் கூறவேண்டும். நான் கல்வியை தொடர்ந்து எவ்வளவு தான் உச்சக்கட்டத்திற்கு சென்றாலும் ஐந்து விரல்களுக்குள் அடங்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட தொகையை என்னால் ஊதியமாக பெற்றுக்கொள்ள முடியும். அந்த நிலை மாறி நான் வர்த்தகராக செயல்பட்டதன் காரணமாக இன்று நான் பல சமூக பணிகளில் ஈடுபட்டு வருகின்றேன். அதனால் கிடைக்கப்பெறும் இலாபத்தைக் கொண்டு எந்தவித பாரபட்சமுமில்லாமல் சமூக பணிகளில் ஈடுசெய்து வருகின்றேன்.

**கேள்வி: உங்கள் சமூக சேவை பற்றி கூறுங்கள்.**

**பதில்:** எமது மார்க்கமும் எமது இறைதூதரும் கூறும் ஒரு சிறிய உதாரணம் உனது வலது கரத்தால் செய்யும் நல்ல காரியங்கள் இடது கரத்துக்கு தெரியாமல் செய்துகொள் அதுவே உனது நற்காரியங்களுக்கு நல்ல பலாபலன் என்று. அதைத்தான் நான் தொடர்ந்து அனுஷ்டித்து வருகின்றேன்.

**கேள்வி: உங்களுக்குரிய காணிகளில் பல ஏழை எளிய குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்துக்கொள்ள காணிகளை அன்பளிப்புச் செய்துள்ளதாக கேள்விப்பட்டேன். இதைப் பற்றிக் கூற முடியுமா?**

**பதில்:** நான் வர்த்தக துறையில் ஈடுபட்டு நான் கொள்வனவு செய்த பல தோட்டங்கள் காணிகள் இருக்கின்றன. எனது மனைவியுடன் முதலாவது புனித ஹஜ்ஜிக்கு ஆயத்தமாகும் போது எனது மனைவியாரை தேடிவரும் ஒரு பெண்மணி தனக்கு ஒரு இல்லத்தை அமைத்து தருமாறு வேண்டிகொண்டதற்கிணங்க ஹஜ்ஜூப் பயணத்திற்கு முன்பதாகவே குறிப்பிட்ட பெண்மணி உட்பட மொத்தம் 18 குடும்பத்தினருக்கு காணிகளை அன்பளிப்புச் செய்தேன். அதைத் தொடர்ந்து தேசிய மீலாது விழா மாத்தளை நகரில் கொண்டாடப்பட்ட போது முன்னாள் இஸ்லாமிய கலாசார ராஜாங்க அமைச்சர் ஏ. எச். எம். அஸ்வரின் வேண்டுகோளுக்கிணங்க மாத்தளை நகருக்கு அண்மையில் சுமார் இரண்டரை ஏக்கர் நிலத்தை வழங்கி மீலாத் கிராமம் எனப் பெயர் சூட்டி வழங்கி வைத்தேன். இன்றும் அதில் தொடர்ச்சியாக பரம்பரை பரம்பரையாக மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். இவர்களை பார்க்கும் போது எனக்கு உண்மையிலே மனச்சாந்தி ஏற்படுகின்றது. இதில் நான் யாருக்கும் பறைசாற்றிக் கொள்ளாமல் வழங்கி வந்தேன். இன்றும் எனது சமூகப் பணிகள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.



**கேள்வி: இதுவரை சில கருத்துக்களை பகிர்ந்து கொண்ட தாங்கள் தங்களின் குடும்பம் பற்றி கூறவில்லையே!**

**பதில்:** எனக்கு ஆறு குழந்தைகள் நான்கு பெண்கள் இரண்டு ஆண்கள். எல்லோரும் நன்றாக கற்றுத்தேர்ந்தவர்கள். என்னை பொறுத்தவரையில் எனது பெண் பிள்ளைகள் எவரும் தொழில் புரிவதற்கு ஆசைபடவும் இல்லை அவர்களை தொழில் செய்யும்படி நான் அதிகாரம் செலுத்தவுமில்லை. இந்த நான்கு பெண்களில் மூத்த பெண் பிள்ளையை ஒரு பொறியியலாளரையும் இரண்டாவது பெண் பிள்ளை ஒரு டாக்டரையும் ஏனைய இரண்டு பெண் பிள்ளைகள் இரண்டு வர்த்தகர்களையும் திருமணம் செய்திருக்கின்றார்கள். அவர்கள் எந்தக்குறையும் இல்லாமல் இறைவனின் ஆசியால் இனிதே வாழ்ந்து வருகின்றார்கள். இரண்டு ஆண் பிள்கைளில் மூத்தவர் அவருக்கு இந்த சுவநிவசையின் முழுப்பொறுப்பையும் கொடுத்து அதன் சகல அதிகாரங்களையும் கிடைக்கும் வருமானத்தையும் அவருக்கே கையளித்துள்ளேன். இரண்டாது ஆண் பிள்ளை மாத்தளை ஆதார வைத்தியசாலையில் ஒரு விஷேட வைத்திய நிபுணர் அவரும் தன்னுடைய பணிகள் மூலம் வைத்திய சேவையோடு சமூக சேவையும் இணைந்து செய்துக்கொண்டிருக்கின்றார். எனவே என்னுடைய ஆறு குழந்தைகளும் இன்றும் எனது கட்டுக்கோப்புக்குள் இருந்து இறைவனுக்கு மாறாக எதையும் செய்யாமல் பொருத்தான வழியில் நேர்த்தியான சேவைகளை செய்து வருகின்றார்கள். இதுவும் எனக்கு ஒரு ஆத்ம திருப்தி தான்.



கேள்வி: மாத்தளை மண்ணில் சிறந்த சமூகப்பணியில் ஈடுபட்டிருக்கக் கூடிய தாங்கள் இன்றைய எமது சமூகத்திற்கும் நாட்டு மக்களுக்கும் சொல்லும் விஷேட செய்தி என்ன?

பதில்: நான் படித்ததும் தொழில் புரிந்ததும் வர்த்தகத் துறையில் ஈடுபட்டதுமெல்லாம் பெரும்பான்மை சிங்கள தமிழ் முஸ்லிம் மக்களோடு தான். நான் கல்வி கற்கும் காலத்தில் சிங்கள ஆசான்களிடம் சிங்கள மாணவர்களுடன் கல்விப் பணியில் ஈடுபட்ட போதெல்லாம் இனவாதம் என்ற ஒன்று இருக்கவில்லை. இன்று தலையை தொட்டால் இனவாதம் கையை நீட்டினால் இனவாதம் கால்களை நகர்த்தினால் இனவாதம். இனவாதம் ஓங்கி சமூகங்களுக்கிடையே பிளவு ஏற்பட்டுள்ளது. இக் காலகட்டத்தில் நாம் ஒருவரையொருவர் புரிந்து இதர இனங்களுக்கும் மதங்களுக்கும் மதிப்பளித்து விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் வாழ்ந்தால் இந்நாட்டில் எமக்கு நீண்ட பயணத்தை தொடர முடியும். இதுவரை காலமும் நாம் அதையே தொடர்ந்தேம், இனிமேலும் அதையே தொடர வேண்டும். நாட்டில் ஆட்சிகள் வரலாம் மறலாம் இந்த ஆட்சிகள் என்றும் நிலையானவை அல்ல. எனவே நாட்டில் சகோதரத்துவமும் சமத்துவமும் என்றும் நிலையானது இந்த மூல மந்திரத்தை புரிந்து நாம் செயற்படுவோமேயானால் எமது வாழ்வில் எந்தவிதமான தாழ்வும் ஏற்படாது என்பதை எமது சமூகங்கள் உணர வேண்டும். இதுவே எனது ஆசை.




ஏறுவெய்யிலில் ஹாய் எளயம்பி கையில் எதையோ எடுத்துக் கொண்டு வருகிறான். ஹாய் எளயம்பிக்கு வயது அம்பதைத்தாண்டினாலும் அவன் என் குடும்ப நண்பன் காலையிலும் மலையிலும் என் வீட்டிற்கு வந்து, என்னோடும் என் மனைவி மக்களுடனும் தன் வாய்க்கு வந்ததையெல்லாம் பேசி சிரித்து மகிழ்ந்து விட்டு போவது அவன் பழக்கம் அவனை எல்லோரும் கொஞ்சம் பைத்தியம் என்று கூறுவார்கள். ஆனால் என் மனைவி மக்கள் அவனோடு அன்பும் பாசமும் நிறைந்த ஒரு மனிதனாக நினைத்து பழகுவார்கள். அவனும் அப்படித்தான் என் மனைவியோடும் மக்களோடும் பழகுவான்.

"என்ர வாப்பா கடலெல்லாம் மீன்ததுமிது கொள்ளுது... வடிவன் தோணிலுக்கும் வயிரன் தோணிகளுக்கும் கீரிப்பாடுகள் பட்டுக் கிடக்கு... எல்லாத் தோணிகளும் கடலுக்குள்ளதான்கிடக்கு. கடலும் கொழந்தப் புள்ள மாதிரி இரிக்கு... கடற்கரையெல்லாம் ஆட்களதான், அஞ்சிதிரியிறானுகள். எங்கிட வடிவன் தோணி தண்டயல், என்னப் பாததுப் போட்டு இந்த மீனத் தந்தாரு தாழை மரத்திக்கு கீழ் நிண்ட பொம்புளயளுக்கும் கூடயில கொண்டந்து, குத்துப் புடிச்சி நிறைய அள்ளிக்கு போட்டாரு... ஊரெல்லாம் கடக்கரையிலதான் கிடக்கு தோணிகள் கடலுக்குள்ளிருந்து கரையேறுவதும், கரையிலிருந்து கடலுக்கு போவதுமாக இருக்கின்றன... கடல் எல்லாம் கலியாண ஊடுமாதிரித்தான் கெடக்கு என்று கூறியபடி கொண்டு வந்த மீனை என் மனைவியுடன் கொடுத்து விட்டு சிரிக்கிறான்.

ஹாய் எளம்பிய சொந்தமென்று சொல்வதற்கு யாருமில்லா ஒரு அநாதை. சொல்லப் போனால் நாங்கள்தான் அவனுக்கு எல்லாம். அவனொரு அரப்பைத்தியம் என்று ஊரில் பேரடுத்ததினால் யாரும் அவனை திருமணம் செய்யவிரும்பவில்லை. இப்பொழுது, என் வீட்டு வேலைகளைப் பார்த்துக் கொண்டு என்னோடுதான் இருக்கிறான். என் குடும்பம் என்றால் அவனுக்கு உயிர் "கரவலைச் சூடல் கறிக்கு நல்லாரிக்கும். மாங்கா வெச்சி பாலாணம் காச்சினா, ஓரகப்ச் சோறு கூடத்திங்கலாம்... சும்மா இரிக்கிறநிங்க, கடக்கரைக்கு ஒழுப்புளம் போயிற்று வாங்கள். என்றதும் என் மனைவி, ஹாய்! கூட்டிக்கு போய் வா..." என்று சொல்லி விட்டு, குசினிக்குள் போகிறாள்.

என் பின்னால் படுத்துக்கிடந்த பூனை கத்திக்கொண்டு இருக்கிறது. "இஞ்ச, எழும்பிக்கந்து இந்த தண்ணிச் சோத்த திண்டு போட்டு போங்க... தேங்காப்பாலும், இலுமிச்சம் பழமும் வெச்சிரிக்கன் நல்லா நொறுங்க கரச்சிக் குடிங்க..." குசினிக்குள் போன ஹாய் கூட அவசரப்படுத்திறான் "ங்... கெதியா எழும்பிக்காங்க... எனக்கும் செரியா பசிக்கிது" என்று ஹாய் கூப்பிரறான். நான் குசினிக்குள் போகும் போது, என் வீட்டுப் புனையும் பின்னால் கத்திக் கொண்டு வருகிறது. இளஞ்சூரியன் சிரிக்கிறது. என் வீடும் கடற்கரையோரம்தான்; காலைச் சோற்றை சாப்பிட்டு, ஹாயோட" கடற்கரைக்குப் போகிஷேன்.

எங்கள் ஊர் வங்கக் கடல், குளம் போல்கிடக்கிறது. கடல் அலைச் சப்தம் ஓயாமல் கேட்கும் போது, கடற்காற்று, கடலோரத்தில் நிற்கும் இராவண மீசையைத் தடவிச் சிரிக்கிறது. கடற்கரை கலியாண வீடுபோல் இருக்கும் போது, என் பக்கத்து வீட்டு அத்துறசூல் மீன் கூடையைச் சுமந்து கொண்டு போகிறான்.

அத்துறசூலும், ஹாய் எளயம்பியும் நல்ல நண்பர்கள், எனக்கும் கூடத்தான்.

"ஹாய் எங்க போன? தம்பியையும் கூட்டிக்கு வந்து இந்த வலய இழு.... அண்ணா பாரு! தண்டயல் வலய இழுக்கச் செல்லி, சாலுவயக்காட்டி கத்திறான் என்று கரத்தண்டயல் மாயிறான். சட்டுப் பண்ணி வாங்க கொஞ்சம் உசாராப் புடிங்க" என்று கரத்தண்டயல் மம்மது கூறிக்கொண்டு வல இழுப்பவர்களை உசார்படுத்திக் கொண்டிருக்கிறார். மய்யத்தீன் அப்பா வலைக்காலைப் பிடித்து.

"ஏ லே லே லா ம் . . . ஓவோலேம்... ஏலடி ஏலம்.. ஏலச்சிலாமாய்..."

ராகமெடுத்து அம்பாச் சொல்லி மீனவர்களை உசார்படுத்திக் கொண்டிருக்கிறார். கரத்தண்டையல் மம்மது, தம்பேய்! கீரிக்கிள, கதிச்சமாதிரி கிடக்கு... எதுக்கும் வாடிக்குள்ள போய் நம்முட மடிதாங்கிய எடுத்துக்கு வாங்க" என்று சொல்லிக் கொண்டு வல இழுக்கும் மீனவர்களை உசார் படுத்திக் கொண்டிருக்கிறார். கரத்தண்டையல் மம்மதின் ஆணையை சிரமேற்று மடிதாங்கிய எடுத்து வர அகமது ஓடுகிறான். ஏறு வெய்யில் சினத்துக் கொண்டிருக்கிறது.

ஹாய் எளயம்பி மய்யதீன் அப்பாவோடு சேர்ந்து அம்பாச் சொல்லி வலையை இழுத்துக் கொண்டிருக்கிறான். அவன் பக்கத்தில் மய்யதீன் அப்பாவின் பேரனும் வலை இழுக்கிறான். மய்யதீன் அப்பாவின் மூத்த மகளின் மகன்தான், கஸ்ரத்தின் காரணமாக வலை இழுக்க வந்திருக்கிறான். மய்யதீன் அப்பாவின் மருமகன் சின்னவயதிலேயே மரணத்து விட்டதால், மகளையும் பேரப்பிள்ளைகளையும் இவர்தான் கவனித்துக் கொண்டு வருகிறார். மய்யதீன் அப்பாவின் பேரன் நல்ல கெட்டிக்காரன். இந்த வரிசம், இன்ஜினியர் படிக்க பாஸ் பண்ணி, கண்டி யூனிவசிற்றிக்கு போக இருக்கிறான். பெருமையே இல்லாத பொடியன். மய்யதீன் அப்பாதான் அவரின் பஞ்சானும் குஞ்சுகளையும் ஒரு தளப்மில்லாமல் பார்த்துக்கு வாறார். இந்த அநாதைகளுக்கு அல்லாஹ்தான் எல்லாத்துக்கும் போதுமானவன்.

கடற்கரையெல்லாம் ஒரே ஆரவாரமாக்கிடக்கிறது. வடிவன் தோணில், மீன் பாட்டோடு கரையேறுகிறது. மீன் மடியை கரையேற்றி விட்டு, மீனவர்கள் தேனீர் குடிக்க யாக்கூப்பின் தேனீர் கடைக்கு போகின்றனர். சில மீனவர்கள் மடியில் கிடக்கும் மீன்களைக் கூடைகளில் அள்ளி எடுத்து, கடற்கரைக்குருத்து மணலில் கும்பமாய் குவிக்கின்றனர். மய்யதீன் அப்பாவின் பேரன், வடிவன்தோணி வாடிக்குள் போய் இருக்கிறான். சூரியன் ஆவேசமுற்று கொதிக்கிறான். அப்பொழுது, வடிவன் தோணில் தண்டயல், பூரிப்போடு தோணிலிருந்து இறங்கி வந்து, மீன் கும்பங்களைப் பார்த்து ரசித்துக் கொண்டு மீன் வியாபாரிகளை நோட்டமிடுகின்றார். வியாபாரிகள் மீன் கும்பங்களை நோட்டமிட்டுக் கொண்டு ஒருவருக்கொருவர் பேசிக் கொண்டிருக்கின்றனர்.

சூரியன், உச்சியைத் தொட்டு விட்ட இறுமாப்பில் சிரிக்க ஹாய் எளயம்பியும் நானும், பகல் சாப்பாட்டுக்காக வீட்டிற்கு போகிறோம். எங்களைத் தொடர்ந்து மய்யதீன் அப்பாவும் அவர் பேரனும் வருகிறன்றார்.

மீனவர்கள் கடற்கரையிலிருந்து வெளியேறுவதைக் கண்ட கரத்தண்டயல் "நேரத்தோட எல்லாரும் வந்து காயிர வலயள ஏத்திப் போட்டு, தட்டிகள எடுத்து தோணில மூடிரிங்க" என்று கூறி, மீன் கும்பத்தடியில் போகிறார். கடலில் தோணிகளெல்லாம் கரையேறி விட்டன. கடல் காற்று அமைதியாக விசிக் கொண்டிருக்கிறது. அலைகள் எழும்பி, கரையில் அடித்து கடலின் ஆளுமையை பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

மாலைச்சூரியன் மஞ்சளாகிவிட்டான். மீனவர்கள் வந்து, தோணிகளில் வலைகளை ஏற்றிக் கொண்டிருக்கின்றனர். மய்யத்தீன் அப்பாவும் ஹாய் எளம்பியும் வந்து, வலைகளை ஏற்றிக் கொண்டிருக்கின்றனர். கடற்காற்று இதமாக பேசிக் கொண்டிருக்கின்றது. கடல் அமைதியாகக் கிடக்கிறது. மீனவர்கள் சுறுசுறுப்பாக வலைகளை தோணில்களில் ஏற்றிக் கொண்டிருக்கின்றனர். வடிவன் தோணி வாடியில் தொங்கும் கடல் லாம்புகள், கடற்காறோடு போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றன.



வலை ஏற்றிக் கொண்டிருக்கும் மய்யதீன் அப்பாவிடம் "அய்யாபேரன் வரவில்லியா?" என்று ஹாய் கேட்கிறான். "இல்ல, கொஞ்ச நேரத்தால வறதாக சொன்னான்.

இப்ப ரெண்டு புள்ளயளுக்கு படிப்பிக்கான்; வருவான்..." என்று கூறி விட்டு நீண்டதொரு பெருமூச்சை மய்யதீன் அப்பா விடுகிறார். கவலையில் தவிக்கும் மய்யதீன் அப்பாவிடம் "பேரன் போறத்திக்குரிய வேலையெல்லாம் செஞ்சிரிங்களா?" எனறு நான் கேட்கிறேன். அவர் என் கேள்வியை எதிர்பார்த்திருந்தவர் போல் "தம்பி! அதுதான் பெரிய கவலயக்கிடக்கு, புள்ளைக்கு உடுப்பும் வாங்கணும் புத்தகமும் வேணுமெண்டு சொன்னான். கண்டிக்கு போகயிம்கையில ஒருதம்படியும் இல்ல... அந்த அநாதைக்கு அல்லாதான் ஒதவி செய்யணும்" என்று மய்யதீன் அப்பா பெருமூச்சு விடுகிறார். அப்பொழுது ஹாய் எளம்பி "அப்பா நம்முட தோணில் இருப்புக்காசில, கொஞ்சம் காசி தரச் செல்லி கேழுதா" என்று கூறுகிறான். அதற்கு நானும் ஆரவு கொடுக்கிறேன். வலைகள் எல்லாம் தோணிகளில் ஏற்றிவிட்டு, மீனவர்கள்வாடிக்கு போகின்றனர். கடல் லாம்புகள் காற்றோடு ஜீவமரணப் போராட்டமிட்டுக் கொண்டிருக்கின்றன. மசண்டையாகி விட்டது.

வடிவன் தோணி மீனவர்களெல்லாம் குதுகலமாக பேசிக்கொண்டிருக்கின்றனர். மீனவர்களின் காசிக் கணக்குகளை தண்டயலும் கணக்கப்பிள்ளையும் ஒழுங்காகப் பார்த்து பிரித்துக் கொண்டிருக்கின்றனர். தேனீர் கடைக்காரன் யாக்கூப், வறுத்த கச்சான் கொட்டை சுறுள்களோடு வந்து, மீனவர்களுக்கு கொடுத்து விட்டு, மீனவர்களோடு குந்திக் கொண்டிருக்கின்றான்.

அப்பொழுது மய்யதீன் அப்பா, கணக்குப் பார்ததுக் கொண்டிருக்கும் தண்டையலிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்து விட்டு அமைதியாக நிற்கிறார். மீனவர்கள் எலலோரும் அமைதியாக இருக்கின்றனர். மய்யதீன் அப்பா எங்கிட தோணில் வலையை இவ்வளவு சிறப்பாக வளர்த்து விட மிச்சம் கஷ்ரப்பட்ட மனிசன். அவர்ர பேரன்ட படிப்புக்காக எங்களிடம் கொஞ்சம் காசி கேட்டு, உதவி செய்யச் சொல்கிறார். என்னப் பொறுத்த வரயில் இது எங்கட கடமை. ஒரு மீனவன்ட புள்ள இன்ஜினியராகப் படிப்பது எங்களுக்கெல்லாம் ஒரு பெருமை" என்று தண்டயல் சொல்லி முடிப்பதற் கிடையில் பங்கிக் காசிக்காகக் காத்துக் கொண்டிருந்த மீனவர்கள் எல்லோரும் ஒருமித்த குரலில் "மய்யதீன் அப்பாக்கு, எங்கிட தோணி இருப்புக்காசில இருந்து அம்பதாயிரம் ரூபாவ எடுத்துக் குடுங்க... எங்கிட மீனவன்ட மகனும் ஒரு இன்ஜினியராகப் படித்து வரட்டும்" என்று கூறுகின்றனர்.


மய்யதீன் அப்பா மகிழ்ச்சியில், தன்னையே மறந்து நிற்கிறார். கடல் காற்று, கடல் லாம்பு களோடு கேலி செய்து கொண்டிருக்கின்றது.

கணக்கப்பிள்ளை பங்கு காசிகளை ஒழுங்காக கொடுத்துவிட்டு பெருமூச்சு விடுகிறார். மனித நேயத்தின் பண்புகளையும் சிறப்பினையும் அலைகள், சத்தமிட்டு கரையில் சத்தியம் செய்யும் போது, கடல் காற்று அமைதியாக வீசிக்கொண்டிருக்கிறது. அப்பொழுது முத்தக்கீன் பள்ளிவாசல் மோதின் கித்திர்முகம்மட் மஃரிப்புக்குரிய அதானை விடுகின்றார். நன்றாக மசன்டையாகி விட, கடற்கரை வெறிச்சோடிக்கிடக்கிறது நானும், ஹாய் எளயம்பியும் மய்யதீன் அப்பாவுடன் கடற்கரையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றோம்.

முத்தக்கீன் பள்ளிவாசல் மய்யத்து புட்டிலுள்ள ஆலமரத்திருந்து, வக்குப்பணமொன்று கத்திக் கொண்டிருக்கின்றது.

எஸ். முத்துமீரான் ...

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி
இல: 12




திரு/திருமதி.செல்வி ..........................................
(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

..........................................

..........................................

.............................. ..........................................

திகதி கைியொப்பம்

**மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி**
போட்டி இல. 12
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :12

**இடமிருந்து வலம்**

(1) ஓவியம்.
(5) தந்தை.
(7) மைதானம்.
(8) தோலில் காணப்படும் சொறி போன்ற நோயினால் ஏற்படும் நிலை. (திரும்பியுள்ளது)
(9) சுவடு.
(10) இது ஒரு நாட்டியம்.
(12) சூளுரை
(13) குளிர்காலத்தில் இது உண்டு.
(14) ஆகாயம். (குழம்பியுள்ளது)
(16) இது ஓர் இராகம்.
(19) போதை தரும் பானம். (திரும்பியுள்ளது)
(20) தித்திப்பு, இனிப்பானது.
(22) இதுவும் ஒருவகை நோய். (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழ்**

(1) எண்ணம்.
(2) உறுதி.
(3) மன்மதன் மனைவி.
(4) ஆரவாரம். (குழம்பியுள்ளது)
(5) நினைத்ததை விட்டுக் கொடுக்காத உறுதிநிலை. (குழம்பியுள்ளது)
(6) நீர்விடாய்.
(11) தேர்.
(12) ஏழு நாட்களுள் ஒன்று.
(13) குதிரை.
(15) உடலுறுப்புக் குறைபாடு. (குழம்பியுள்ளது)
(16) வயோதிபம்.
(17) சிற்றின்ப ஆசை.
(18) ஆணவச் செருக்கு.
(21) துணையின்மை.

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 11

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. திட்டம் 04. கோதுமை 06. மாதா
07. கரி 08. மதுரம் 09. மாதர்
10. கலம் 12. ஆம் 14. பூடு
15. பரு 17. காசி 19. குரங்கு
21. வரம்பு 23. அமைதி 24. சின்னம்

**மேலிருந்து கீழ்**

01. திருமணம் 02. டமாரம் 03.தாம்பூலம்
04. கோமாரி 05. தங்கப்பதுமை
11. கடுகு 13. ஆகாரம் 16. குருதி
18. சினம் 20. அரசி 21. வன்
22. புசி

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 10

### பரிசு பெறுவோர்

**முதலாம் பரிசு**

**எம்.எம்.எம். பஸீர்,**
32C,
கோட்டகொட,
வெலிகம.

**இரண்டாம் பரிசு**

**ஏ.சி. ஶ்ரீதரன்,**
245/3,
மாதங்ஹகவத்தை ஒழுங்கை,
கொழும்பு 06.

**மூன்றாம் பரிசு**

**எம்.எஸ்.எம். லியாவுதீன்,**
12/6, சென். பீற்றர்ஸ் லேன்,
நிந்தனி, புத்தளம்.

### பாராட்டு பெறுவோர்

**1. திருமதி ஆர். ஞானச்சந்திரன்,**
இல. 40, முதலியார் வீதி,
மட்டக்களப்பு.

**2. எஸ். சித்தி உம்மா,**
B9/4, ஒவல்வத்த,
ஹிங்குல.

**3. ராஜேந்திரன் ஜெயந்திமாலா,**
இல. 17,
பண்டாரநாயக்க பெதஸ்ஸ,
புசல்லாவை

**4. கே. புண்ணியநேசன்,**
151, சாரதா வீதி,
காரைதீவு 05 (கி.மா)

**5. ஐ.எல். லத்தீபா,**
132/2, அரபிக் கல்லூரி வீதி,
அக்கரைப்பற்று 18.

**6. எஸ். சத்தியவாணி,**
பிரதான வீதி,
பாலமுனை,
மண்டூர்.

**7. எச்.எம்.எம். லெப்பை,**
இல. 38/1, வெலகெதர வீதி,
பதுளை.

**8. வினோ மதிவதனி,**
லுனுகலை பஸார்,
லுனுகலை.

✦✦✦

# கசப்பும்... இனிப்பும்...



தமிழ்மணி மானா மக்கீன்

## கசப்பு–1

இந்த வாரத்து இப்பகுதியை வியாழக்கிழமைப் பூர்த்தி செய்து பிரதம ஆசிரியர் வசம் ஒப்படைக்கப் புறப்படும் சமயத்தில்.

தூரத்தில் **குண்டுச் சத்தங்கள்!** சிலமாதங்களாக எதிர்பார்த்திருந்த **'ரஷ்யக் குண்டுகள்"**

இலங்கையை நோக்கி அல்ல என்றாலும் நம்மைப் பாதிக்கப் போகிறவை அவை. 'உக்ரைன்' என்கிற நாட்டை நோக்கிய ரஷ்யாவின் தாக்குதல்கள், ஆக்கிரமிப்பு, படையெடுப்பு எப்படி வேண்டுமானாலும் வர்ணிக்கலாம் பொருந்தும்.

ஞாயிறு காலைப் பொழுதில் அபிமானிகளுக்குப் பல பாரதூரமான செய்திகள் கிடைத்திருக்கும். ஆனால் நம் நாடு வெளிநாட்டிலிருந்து எதிர்பார்க்கக் கூடிய அத்தியாவசியத் தேவைகள் எவையெல்லாம் தடைப்படும் என்பதே பெரும் சிந்தனை.

அந்தக் கவலையுடன் அடுத்த கசப்பை வழங்குகின்றேன்.

## கசப்பு–2

**தூத்துக்குடி**

தமிழகத்தின் பழம்பெரும் துறைமுகப்பட்டினங்களில் ஒன்று **'முத்து நகர்'** என்றும் அழைப்பார்கள்.

ஒரு காலத்தில் முத்துக் குளித்தலும் முத்துச் சந்தையும் ஓஹோ!




நமது இலங்கைக்கும் இதற்கும் கடல் வழிப்பயணம் ரொம்ப சுகமானது, பாதுகாப்பானது. ஒரு தடவை சொகுசுக்கப்பலில் பயணித்த அனுபவம் அலாதி.

இந்தத் தூத்துக்குடி கொழும்பு கடல் பாதைக் கதை பல நூறு ஆண்டுகளைக் கடந்த ஒன்று. எவ்வாறாயினும் இப்போது இந்தப் பாதையில் இரவுக்காலங்களில் எது நடக்கிறது?

**கள்ளக் கடத்தல்!** அதுவும் பிரதானமாகப் போதைப் பொருட்கள்!

இது, வழமைச் சவாரி!

கடந்த வாரம் நடந்த சம்பவம் இங்கே :

தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு படகில் கடத்த முயன்ற 30 கோடி மதிப்பிலான போதைப் பொருள் சிக்கின. இது தொடர்பாக 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

படகில் சோதனை நடத்தியபொழுது, அப்போது படகின் அடிப்பகுதியில் 5 பொலித்தீன் பைகளில் 2கிலோ வீதம் வெள்ளை நிற கற்கண்டு போன்ற பொருள் இருந்தது. அது கிறிஸ்டல் மெத்தம் பீட்டாமைன் என்ற போதைப் பொருள்என்பது தெரியவந்தது. அது ஐஸ் என்றும், சிந்தடிக் போதைப்பொருள் என்றும் அழைக்கப் படுகிறது. பொலிசாரிடம் சிக்கிய அந்த 10 கிலோ போதைப்பொருளின் சர்வதேச மதிப்பு 30கோடி இருக்கும் என்று கூறப்படுகிறது.

கடந்த ஆண்டு மட்டும் சுமார் 2ஆயிரம் கோடி மதிப்பிலான போதைப் பொருட்கள் தூத்துக்குடி கடல் பகுதியில் பறிமுதல் செய்யப் பட்டு உள்ளன.

இனி வரலாறு எழுதுபவர்கள், "தூத்துக்குடி என்ற முத்து நகர், முத்துக்களும் கிராம்பு, ஏலக்காயும், உப்பும், கருவாடும் இலங்கைக்கு ஏற்றுமதி செய்தகாலம் அழிந்து 202122 ஆம் ஆண்டு காலங்களில் போதைப் பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் பெற்றது மனித குலத்தின் அவலம்" என்றே பதித்துத் தீருவார்கள்.

## இனிப்பு 1

ஒருவரது பெரும் இழப்பில் அவரது நினைவலைகளில் நீச்சலிட ஒரு வாய்ப்பு கடந்த ஞாயிறு



பொழுதில்...

**"ஸ்ரீசங்கர்** நற்பணி மன்ற"த்தார் நடத்திய நினைவேந்தல் பழைய கலை நிகழ்வுகளை அள்ளி இறைத்தன.

யாருக்காக வைபவம் என்பதை அபிமானிகள் முதலில் அறியவேண்டும்.

வடதிசையின் பருத்தித்துறையைச் சேர்ந்த **"ஸ்ரீ சங்கர்"** இளமையிலேயே நல்ல தொழில் ஒன்றை மேற்கொண்டிருந்தவர். "தேயிலைப் பரிசோதகர்" என்ற நிபுணத்துமிக்கப் பணியில் பெரும் சம்பாதிப்பில் கொழும்பில் வலம் வந்தார். அந்தச் சமயம்.

கலைத்தாகம் அளவுக்கதிமாக ஏற்பட, ஒரு சந்தர்ப்பத்தில் தொழிலா, நாடத்துறையா என்ற பெரும் கேள்வி எழுப்ப தொழில் தோற்றது!

அப்பொழுது கொழும்பு நகரில் மூலை முடுக்குகளில் எல்லாம் நாடகம், நாடகம் என்பதே பேச்சாக இருந்த பொழுது "ஸ்ரீ சங்கர்' கிழமை தோறும் மேடை ஒன்றில் காணப்பட்டார்.

கொழும்பு நாடக ஜாம்பவான்களின் நெறியாள்கையில் ஓர் ஒப்பற்ற கலைஞனாக ஜொலித்தான்.

நாடக ஜாம்பவான் கலைச்செல்வனின் "கொள்ளைக்காரன்" "தங்கப்பதக்கம்", "ராதா", "

அந்தனி ஜீவாவின் "முள்ளில் ரோஜா", "அக்கிப் பூக்கள்", "பறவைகள்" மற்றும் "பரதன் பெற்ற பாதுகை",

எம்.எம். மக்கீன் என்று பெயரில் மேடைநெறியாள்கை செய்த இந்தப் பேனாக்காரனின் "டயல் **'எம்' போர் மர்டர்"** ஒரு யாழ் மைந்தனை மாபெரும் கலைஞனாக்கியது.

அப்புறம், திரை நட்சத்திரம்!

'தினகரன்' நிழற்படக் கலைஞராகத் திகழ்ந்த அமரர் **கிங்ஸ்லி எஸ். செல்லையா,** தன் ஆனந்தா புரடக்சன்ஸ் பதாகையில் தொழில் அதிபர், புரவலர் **ஜி. நாராயண சாமி** பொருள் உதவியில் வெளியிட்ட இலங்கைத் தமிழ்ப்படம் **"மஞ்சள் குங்குமம்"** கதாநாயகன்.

இப்படத்தை ரசித்த நம்கால நடிகர் திலகம் சிவாஜி கணேசனார், முதல் சினிமாஸ்கோப் படமான "ராஜ ராஜ சோழனில் தன்னுடன் நடிக்கும் சந்தர்ப்பம் வழங்க, அது "பைலட் பிரேம்நாத்" வரை கொண்டு சென்றது. இப்பொழுது கலைமகளும் கால மகளும் 42 ஆண்டுகளைக் கடக்கச் செய்து "கலை வேந்தன் ஸ்ரீசங்கர்" என்ற கலைஞரை நினைவுகூரச் செய்யவைத்திருப்பதற்கு உறுதுணை ஒரு **சண்முகராஜா.**

இவரும் ஒரு கலைஞரே! ஆனால் ரொம்ப வித்தியாசமான லட்சியங்களை, நோக்கங்களைக் கொண்டிருக்கிறவர். அதனால் தான் 'கலை வேந்தன்' ஸ்ரீ சங்கர் பிரியாவிடை பெற்ற காலத்திலிருந்து தொய்வின்றித் தொடர்ந்து 42 ஆண்டுகளாய் அவரைத் தலைநகரில் நினைவு கூர்ந்து அஞ்சலி செய்கிறார்...

அதுவும் பாருங்கள், கடந்த இரு ஆண்டுகளுக்கிடையில், கொழும்பில் கலைத்துறையில் ஈடுபட்டிருந்த, **எம். ஏகாம்பரம், கே. சோம சுந்தரம், ஆர்.கே. புஹாரி ஆர். திவ்வியராஜன், டேனியல் செல்வ ராஜ், ஜோக்கீம் பெர்ணாண்டோ, மாத்தளை கார்த்திகேசு, பாரதி மணி, எச்.யூ. தாஹிரா** ஆகிய கலைமாமணிகள் பிரியாவிடை பெற்றுள்ளனர். சிலர் மறைந்தது பல நாட்களுக்கு பிறகே வெளிச்சம்!

இவர்கள் அத்தனை பேருக்கும் எந்த நினைவஞ்சலி எங்கே நடந்தது?

கலைஞர் சண்முகராஜாவுக்கு அனைவரும் புகழாடை போர்த்த வேண்டும்.

அன்று ஏற்புரையில் அவர் இந்தக் குறிப்பை உதிர்த்தார்.

★ **"42 ஆண்டுகள் தொடர்ந்து ஒரு கலைஞருக்கு நினைவேந்தல் நிகழ்த்தி விட்டேன். கடவுள் 50ஆம் ஆண்டு வைபவத்தையும் நான் செய்யக் கூடிய வல்லமையை வழங்கி வாழ்நாளை நீடிக்க வேண்டும்!"**

மெய்சிலிர்க்கிறது. மெய்யாகவே சண்முகராஜா நீடு வாழ அந்தச் சக்தியாளனை இறைஞ்சுவோம்.

## இனிப்பு 2

தமிழ்நாட்டில் கலைஞர் முத்துவேல் கருணாநிதியின் மைந்தர் இப்போதைய முதலமைச்சர் ஸ்டாலின் ஆட்சிபீடம் அமைத்து



ஒன்பதே மாதங்கள். இந்தக் காலத்தில் நல்லவை நடக்க, நல்லாட்சி புரிய 'கிருமிகளின்' படுதொல்லைகள் ஒரு புறமும் எதிர்க்கட்சிகளின் இடையூறுகள் மறுபுறமும் இந்த நிலையில், கடந்த 19ல் நமது மாநகரசபை (முனிசிப்பில்) உள்ளூராட்சி சபை, பிரதேச சபை போன்றவற்றுக்கு நிகரான பதவிகளுக்கு ஒரு தேர்தலை அவர் சந்தித்தார்.

அவர் அடிக்கடி சொல்லும் "திராவிட மாடல் ஆட்சி" (திராவிடத்தின் முன்மாதிரி நல்லாட்சிக்கு) நற்சான்று தெரிவிக்கும்' வகையில்.

கைப்பற்றி, நகராட்சி, பேரூராட்சிகளில், அதிக இடங்களையும் பிடித்து அசுர சாதனை புரிந்துள்ளார்.

அவருக்கு இதயத்து இனிய நல்வாழ்த்துகள்.

தேர்தல் முடிவுகளில் ஒரு பேரதிசயம் நடந்துள்ளது! அந்த இனிப்பு அடுத்த ஞாயிறு பொழுதுகளில்...




# 16 நெருங்கிவிட்டார்கள் கொலைகாரனை தூக்கில் போடவேண்டும் அந்த சதிகாரனை!



**"மறு நாள்,**

அதிகாலையிலேயே எல்லோரும் மலை அடிவாரத்திற்கு வந்து விட்டார்கள்.

மாதவனும் அவனுடைய மகன் மைக்கலையும் அவனது நண்பனையும் அழைத்து கொண்டு வந்து விட்டான்.

அவர்கள் இருவரையும் இன்ஸ்பெக்டர் இன்ப ராஜுக்கு அறிமுகப்படுத்தி வைத்தான்.

"என்ன மைக்கல் இந்த இரண்டு பேருடைய மரணத்தைப்பற்றித் தெரியும் தானே...?" அவனைப் பார்த்துக் கேட்டார் இன்பராஜ்.

"ஆமாம் சேர் முதலில் அது தற்கொலை என்றுதான் நாங்களும் நினைத்துக் கொண்டிருந்தோம். ஆனா நேத்து அப்பா வந்து சொன்ன பிறகுதான் அது கொலை என்று எங்களுக்கும் தெரியவந்தது!"

"ஆமாம்... அது தான் உண்மை சரி... இப்போ... இந்த பாதாளத்தின் அடிவரையில் செல்வதற்கான குறுக்குப் பாதை ஏதாவது உங்கள் இருவருக்கும் தெரியுமா?"

"தெரியும் சேர்...... ஆனாலும் போவது கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்" சில இடங்களில் கொடிகளில் தொற்றிக் கொண்டு போக வேண்டியதிருக்கும் சில இடங்களில் பாதை மிகவும் குறுகியதாக இருக்கும். கவனமாகப் போனால் போய்விடலாம் சேர்!" என்றான் மைக்கல்.

"சரி... அது பரவாயில்லை... இப்போது நாம் போகலாம். மைக்கல் நீங்கள் முன்னால் செல்லுங்கள்... ராகவன் நீங்கள் சாஜன் வசந்தவுடன் பின்னால் செல்லுங்கள்.

"ஆகட்டும் சேர்..!" என்றுச் சொல்லிவிட்டு,

மெல்ல நகர்ந்தார் சாஜன் வசந்த.

"இப்ராஹ்மும்... பெருமாளும் சிவாதம்பியுடன் செல்லுங்கள். நாங்கள் கடைசியாக வருகிறோம். போகிறவழியில் இந்த கொலை சம்பந்தமாக தகவல் ஏதாவது கிடைத்தால் அங்கே நின்று விட்டுப் போவோம்!"

"ஆகட்டும் சேர்!" என்று சொல்லிவிட்டு, பயணப்பையை தோளில் மாட்டிக் கொண்டார்.

பொலிஸ் கான்ஸ்டபிள், பெருமாள்!

இந்த மர்மக் கொலையில் ஏதாவது துப்பு கிடைக்குமா என்று எதிர்பார்ப்புடன்,

எல்லோரும் புறப்பட்டார்கள்.

மாதவன் சொன்னதைப் போல், அந்தப் பயணம் மிகவும் சிரமமாகவே இருந்தது.

பாதை, இன்ஸ்பெக்டர் இன்பராஜ் எதிர்பார்த்ததைவிட, கரடுமுரடானதாகவே இருந்தது. அப்படிப்பட்ட பாதையில், மிகவும் சிரமப்பட்டு, இரண்டு மணித்தியாலங்களாக நடந்து கொண்டிருந்தார்கள்.

அவர்கள் இருவரும் விழுந்து கிடந்த இடத்தைப் பார்த்தால்.

கொலை காரன்ன கண்டு பிடிப்பதற்கான ஏதாவது ஆதாரங்களைக் கண்டுபிடிக்கலாம் என்பதுதான் இன்ஸ்பெக்டர் இன்பராஜின் எதிர்பார்ப்பாக இருந்தது.

"பள்ளத்துக்குப் போக இன்னும் தூரம் போகணுமா மைக்கல்!"

சிறிது மூச்சு விட்டபடியே கேட்டார் இன்பராஜ்.

"இன்னும் கொஞ்சதூரம் தான் சேர்... பாதாளத்தின் அடியை மிகவும் நெருங்கிவிட்டோம்!"

இன்னும் இரண்டு மணித்தியாலங்களைத் தாண்டி, பொலிஸ் குழுவினர், விரைந்து நடந்து கொண்டிருந்தார்கள்.

விரைந்து நடந்து கொண்டிருந்த இன்ஸ்பெக்டர் ராகவன், ஓர் இடத்தில், திடீரென்று நின்று விட்டார்!"

"என்ன ராகவன் ஏன் நின்று விட்டீர்களா?" வியப்புடன் கேட்டார் இன்பராஜ்.

"அங்கே பாருங்க சேர் கைக்கடிகாரமொன்று அந்த மரக்கிளையில் மாட்டிக் கொண்டிருக்கிறது!"

அவர்கையை நீட்டிக்காட்டிய மரக்கிளையை, இன்ஸ்பெக்டர் இன்பராஜ் திரும்பிப்பார்த்தார்.

"ஆமாம் ராகவன் எனக்கும் அப்படித்தான் தெரிகிறது" என்ற இன்பராஜ், சார்ஜன் வசந்தின் பக்கம்திரும்பி.

"ம்... வசந்த நீங்க போய் அந்த கைக் கடிகாரத்தை எடுத்து வாங்க பார்ப்போம்!" என்றார்.

மிகவும் சிரமப்பட்டு போய்,

அந்த இடத்திற்குக் கடிகாரத்தை எடுத்து வந்தார் சார்ஜன் வசந்த்.

அது, ஆண்கள் கையில் கட்டும் கடிகாரம்!

அதை எடுத்து,

ஆராய்ந்து பார்த்தார் இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

அதில்,

முன்பக்க கண்ணாடி கழன்று போயிருந்தது.

ஒருபக்க பட்டியும் அறுந்து போயிருந்தது.

அதான்தான் அது மரக்கிளையில் சிக்கியிருக்கிறது என்பதை இன்பராஜ் புரிந்து கொண்டார்.

அநேகமாக இது தீபனின் கைக் கடிகாரமாகத்தான் இருக்கவேண்டும். அந்த கடிகாரம், 5.45ல் நின்று போயிருந்தது.

இந்த கடிகாரத்தை முக்கியமான ஒரு சாட்சியாக ஏற்றுக் கொள்ள முடியா விட்டாலும், சில சமயம் அது கூட உதவலாம் என்ன எண்ணத்துடன், அதைத் தன்னிடமே வைத்துக் கொண்டார்.

இன்னும் ஒரு மணித்தியாலயத்தின் பின், எல்லோரும் பாதாளத்தின் அடிப்பகுதிக்கு சென்று விட்டார்கள்.

இரண்டு வாரங்களுக்கு முன்பு

தீபன் தீபிகா இருவருடைய மையங்களையும் எடுத்துச் செல்வதற்காக இன்ஸ்பெக்டர் ராகவன் இங்கே வந்து சென்றிருக்கிறார்.

இதனால்,

அவருக்கு சில விடயங்கள் தெரிந்திருக்கும் என்பதை உணர்ந்து கொண்ட இன்ஸ்பெக்டர் இன்பராஜ்.

"ம்... ராகவன், அந்த பிணங்கள் இரண்டும் எந்த இடத்தில் கிடந்தது?"

"அதோ அந்த பாறையின் அருகில்தான் தீபனின் உடல் கிடந்தது"

"அப்போது தீபிகாவின் உடல்...?"

"இதற்குமேல் உள்ள அந்த மரக் கிளையில் தொங்கிக் கொண்டிருந்தது தீபிகாவின் உடல்!" மிகவும் சிரமப்பட்டுத்தான் அவளது உடலை மீட்டெடுத்தோம்!"

"இந்த உடல்களின் அருகில் இருந்து ஏதாவது சாட்சியங்கள் கிடைத்ததா ராகவன்?"

"இல்லைசேர்... இந்த உடல்கள் இரண்டையும் எடுப்பதிலேயே அன்றைய நாள் முழுவது போனதான் விசாரணைகள் எதுவும் செய்யவில்லை!"

"உடல்களை மீட்டெடுப்பதுதான் முதல் வேலை... ஆனாலும் உடல்கள் இருந்த பகுதியைச்சற்று ஆராய்ந்து பார்த்திருக்கவேண்டும்.

ஏனென்றால் அதை வைத்துக் கொண்டுதான் நாம் எடுக்க முடியும்.

சரி அது போகட்டும் இப்போது இந்தப் பகுதியைச் சுற்றி சிறிது ஆராய்ந்து பார்ப்போம்.

ஏதாவது ஒரு சிறிய தடயமாவது நமக்குக் கிடைக்கலாம்!"

அடுத்து, அவரின் உத்தரவுப் படி, பொலிஸ் அதிகாரிகள், அந்தப் பகுதியை சல்லடை போட்டார்கள். மரங்களும் புல் பூண்டுகளும் அடர்த்தியாக வளர்ந்திருந்ததினால், அவரகளுடைய தேடலுக்கு அது மிகவும் சிரமமாகவே இருந்தது.

சிறிது நேரத்தில்,

"சேர்... இங்க பாருங்க!"

என்று அலறினால்.

பொலிஸ்...

இப்ராஹிம், "என்ன?" என்று அவர் அருகில் ஓடினார் இன்பராஜ். **(இளமை வளரும்)**




# படித்ததும் பகர்வதும் 85



**சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்**

## நல்லதை சொல்கிறோம்

### தமிழ் மொழி எம் தாய்மொழி

கடந்த பெப்ரவரி 21ஆம் திகதி 'உலக தாய்மொழி தினம்' அனுஷ்டிக்கப்பட்டது. உலகின் பல்வேறு நாடுகளிலும் இது தொடர்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றதை அறிய முடிந்தது. தமிழ்நாட்டிலும் தமிழ் மொழி பற்றிய நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

வருடத்தில் ஒருநாள் 'தாய்மொழி தினம்' என கொண்டாடிவிட்டால் போதுமா? நாம் எங்கள் தாய்மொழி தமிழின் சிறப்புக்கு, அதன் வளர்ச்சிக்கு என்ன செய்கிறோம்? என சிந்திக்கக்கூடிய, சிந்திக்க வேண்டிய காலமாக இதனை கொள்ள வேண்டும்.



உலகின் மிகவும் தொன்மை வாய்ந்த மொழி தமிழ். அன்று முதல் இன்று வரை பல்வேறு வழிகளிலும் செம்மையாக்கப்பட்டுவரும் மொழி தமிழ். நவீன விஞ்ஞான, தொழிநுட்ப வளர்ச்சிக்கெல்லாம் ஈடுகொடுத்து தலை நிமிர்ந்து நிற்கும் மொழி தமிழ்.

கவிதைகள், கட்டுரைகள், காவியங்கள், காப்பியங்கள், நவீனங்கள் என்று பல்வேறு வழிகளிலும் செழுமையாக்கப்பட்ட, செழுமையாக்கப்பட்டுக் கொண்டிருக்கும், செழுமையாகி வரும் மொழி தமிழ். உலகின் மூத்த செம்மொழி நம் தமிழ் என்றெல்லாம் எம் தாய்மொழியாம் தமிழ் மொழியை போற்றுகிறோம்; புகழ்கிறோம். ஆனால், தமிழ் மொழியின் சீர்மைக்கும், சிறப்புக்கும் நாம் என்ன செய்திருக்கிறோம்? என்ன செய்து வருகிறோம்? எம் எதிர்கால சந்ததியினர் தமிழைத் தாய்மொழியாகத் தொடர வழிவகுத்திருக்கின்றோமா? இவை பற்றி ஆழமாக, ஆர்வத்தோடு எண்ணிப் பார்த்திருக்கிறோமா?

இன்று தமிழ் பேசுகின்ற, தமிழை தாய்மொழியாகக் கொண்ட தமிழர்கள் உலகெங்கும் பரந்து, விரிந்து வாழ்கிறார்கள். இதனால் தாய்மொழியை விட்டு பிற மொழிகளில், குறிப்பாக ஆங்கிலத்தில் தம் பிள்ளைகளுக்கு கற்பிப்பதையும், ஆங்கிலத்தையே வீட்டு மொழியாக்கி செயல்படுவதையும் பரவலாக காணமுடிகிறது. இந்நிலை சில சந்தர்பங்களில் தவிர்க்க முடியாததாக இருப்பினும் தாய்மொழி தமிழை விட்டும் தூரமாவதற்கு காரணமாக அமைய முடியாது. அதற்கு இடமளிக்கவும் கூடாது.

இவ்வாறு ஆங்கிலத்தைதமது அன்றாட மொழியாகவும், வீட்டு மொழியாகவும் பயன்படுத்துபவர்கள் தமிழை மறக்கவோ, தமிழை தம்பிள்ளைகள் தாய்மொழியாகத் தொடர்வதற்கு வழி செய்யாமல் கவனயீனமாக இருக்கவோ கூடாது. ஏதாவது ஒரு வகையில் தாமும், தம் பிள்ளைகளும், தம் குடும்ப உறுப்பினர்களும் தமிழோடு தொடர்ச்சியாக இணைந்திருக்கவும், தமிழை வளர்க்கவும் ஆவனை செய்தலை தலையாய கடமையாக ஏற்று செயல்பட வேண்டும். (இவ்விடயத்தில் இன்னும் சிந்திப்போம்)

## நெஞ்சுக்கு நீதி

தமிழ் எங்கள் உறவின் விருப்பு
தமிழ் எங்கள் உயர்வின் சிறப்பு
தமிழ் எங்கள் உணர்வின் துடிப்பு
தமிழ் எங்கள் உயிர்ப்பின் இருப்பு

## பிரிந்தார் பெருமை

### டாக்டர் ஹிமானா சையத்

தமிழ் இலக்கிய உலகம் மற்றுமொரு மூத்த இலக்கியவாதியை இழந்துவிட்டது. சிறுகதைகள், கவிதைகள், நவீனங்கள், மருத்துவக் கட்டுரைகள், ஆய்வுக் கட்டுரைகள் என தமிழ் இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் ஐந்து தசாப்தங்களுக்கும் மேலாக சிறந்த பங்களிப்புகளைச் செய்த டாக்டர் ஹிமானா சையத் கடந்த பெரவரி 21ம் திகதி தனது 76 வது அகவையில் காலமானார்.



இவரின் முதல் கவிதை 1964ல் 'மறுமலர்ச்சி' இதழிலும், முதல் சிறுகதை 1987ல் 'மலர்வதி' மாத இதழிலும் பிரசுரமாகியுள்ளது. இந்தியா, இலங்கை, சிங்கப்பூர், மலேசியா உட்பட பல்வேறு நாடுகளின் இதழ்களிலும், பத்திரிகைகளிலும் இவரது ஆக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இவரால் நூற்றுக்கணக்கான சிறுகதைகளும், 700க்கும் மேற்பட்ட கட்டுரைகளும், 500 கவிதைகளும் எழுதப்பட்டுள்ளன. ஆங்கில மொழியிலும் இவரது ஆக்கங்கள் வெளிவந்துள்ளன.

ஹிமானா சையித், 12 சிறுகதைத் தொகுதிகள், 8 புதினங்கள், 4 மருத்துவ நூல்கள், 14 கட்டுரை நூல்கள், ஒரு கவிதை நூல் என 39 நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழ் நாட்டிலிருந்து நான்கு தசாப்த காலங்களாக வெளிவரும் 'நர்கீஸ்' மாத இதழின் கௌரவ ஆசிரியராக இறக்கும்வரை பணியாற்றினார்.

ஹிமானா சையத்தின் இலக்கியங்களை ஆய்வு செய்து பலர் கலாநிதி, முதுகலை பட்டங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இவரின் சிறுகதைகள் பற்றிய 250 பக்க ஆய்வு நூல் ஒன்றை பாரதிதாசனார் பல்கலைப் பேராசிரியர் டாக்டர் ஆலிஸ் என்பவர் எழுதியுள்ளார்.

இலக்கியம், கல்வி, மருத்துவம், சமயம், தன்முனைப்பு போன்ற துறைகளில் சர்வதேச மேடைப் பேச்சாளர் என்ற பெருமைக்குமுரிய டாக்டர் ஹிமானா சையத், தமிழ் மாமணி, பாரத் ஜோதி, சிறந்த குடிமகன் உட்பட பல விருதுகளையும் பெற்றுள்ளார்.


சர்வதேச அளவில் சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதைப் போட்டிகளை நடத்திய இவர், இலங்கைத் தமிழ் இலக்கியவாதிகளோடு நல்ல நட்பைப் பேணிவந்தார். இவர் இலங்கை வந்த பல சந்தர்ப்பங்களில், அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சார்பில் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்தியமை எனக்கு என்றும் பசுமையான நினைவுகள்.

டாக்டர் ஹிமானா சையத் இவ்வுலகைப் பிரிந்தாலும் இலக்கியப் படைப்புகள் மூலம் அவர் மக்கள் மனதில் என்றும் வாழ்வார்.

## புது வரவு

### நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்

மொழிபெயர்ப்பு நூல்களுக்காக மட்டுமே தனியாக மூன்று அரச சாகித்திய தேசிய விருதுகளை தனியாகப் பெற்றுள்ள அஷ்ரஃப் சிஹாப்தீன் தந்துள்ள மற்றுமொரு மொழிபெயர்ப்பு நூல் 'நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்'. இது ஒரு நூலின் மொழிபெயர்ப்பல்ல. இஸ்லாம் வழங்கும் பெண்களின் உரிமைகளை முன்வைத்து, சர்வதேச புகழ்பெற்ற பத்து பெண்கள் பகிரங்க மேடைகளில் துணிவோடு நிகழ்த்திய, பத்து மேடை பேச்சுக்களின் அழகு தமிழ் மொழிபெயர்ப்பு.




இந்நூலை எழுதிய நோக்கத்தை குறிப்பிடும்போது, "சர்வதேச ரீதியாக இஸ்லாமிய அம்சங்கள் குறித்து உரைகளை நிகழ்த்தும் ஆண்களைத்தான் நமது சூழல் பெரும்பாலும் அறிந்து வைத்திருக்கிறது. அவர்களது கருத்துக்கள் பெரிய அளவில் விசாலமான பரப்புகளில் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. ஆனால் அவர்களுக்கு நிகராக இஸ்லாமிய அம்சங்கள் பற்றி உரை நிகழ்த்துவது மட்டுமன்றிச் சில வேளைகளில் அவர்களை விடத் தைரியமாகப் பொது வெளியிலும் உரத்துக் குரல் கொடுக்கும் பல முஸ்லிம் பெண்கள் உலகளாவிய ரீதியில் வாழ்ந்து கொண்டும் செயற்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்...

புத்திஜீவிகளான இப்பெண்கள் பெரும் அரங்குகளில், பல்கலைக்கழகங்களின் மேடைகளில், பொது வெளி அரங்குகளில் ஆயிரக் கணக்கானோர் மத்தியில் உரைகளை நிகழ்த்துகிறார்கள். இவர்களில் பத்துப் பேரைத் தெரிவு செய்து அவர்களின் உரைகளைச் செவியுற்றுக் கொண்டே அவற்றைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளேன்" என்று தெரிவித்துள்ளார் நூலாசிரியர்.

"இந்தப் பத்து உரைகளும் ஒன்றை ஒன்று விஞ்சிய தரத்தில் மிகப் பொருத்தமான தலைப்புகளில் நம் கவனயீர்ப்புக்குரிய காத்திரமான கருத்துக்களைக் கொண்டனவாயும் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டுவனவாயும் உள்ளமை குறிப்பிடத்தக்கது" என்று தனது அணிந்துரையில் கூறுகிறார் பெண்கள் கல்லூரி அதிபர் ஷெய்க்கா ஜெலீலா ஷபீக். அமெரிக்கா, எகிப்து, கனடா, ஆப்கானிஸ்தான் உட்பட பல நாடுகளைச் சேர்ந்த துணிவுமிக்க பெண் ஆளுமைகளின் உணர்ச்சிமிக்க உரைகள் மூலம் நமது பெண்கள் உயிர்ப்புடன் இருக்க இப் புது வரவு உதவுமென எண்ணுகிறோம்.

நூல்: **நான் இன்னும் உயிர்ப்புடன் இருக்கிறேன்**, ஆசிரியர்: **அஷ்ரஃப் சிஹாப்தீன்**, முதற்பதிப்பு: **டிசம்பர் 2021**, பக்கங்கள்: **xviii + 122**, விலை: ரூபா **350.00**, தொடர்புகளுக்கு: **0777303818**

## செந்தமிழ் அது தேன் தமிழ்

**உலகில் கெடுவதற்கு உள்ள விடயங்கள்தாம் எத்தனை? எத்தனை? தமிழ் மூதாட்டி ஔவையார் அழகாக சொல்லி இருப்பதை பாருங்கள் :**

- பார்க்காத பயிரும் கெடும்.
- பாசத்தினால் பிள்ளை கெடும்.
- கேளாத கடனும் கெடும்.
- கேட்கும் போது உறவு கெடும்.
- தேடாத செல்வம் கெடும்.
- தெகிட்டினால் விருந்து கெடும்.
- ஓதாத கல்வி கெடும்.
- ஒழுக்கமில்லாத வாழ்வு கெடும்.
- சேராத உறவும் கெடும்.
- சிற்றின்பன் பெயரும் கெடும்.
- நாடாத நட்பும் கெடும்.
- நயமில்லா சொல்லும் கெடும்.
- கண்டிக்காத பிள்ளை கெடும்.
- கடன்பட்டால் வாழ்வு கெடும்.

(இன்னும் வரும்)

## பேசும் படம்



பாசமும்! பரிவும்!!

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எழுத விரும்புவோர், "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207

# மலையக மக்கள் வாழ்வில் சின்னம் சிறு அம்சங்களையும் நுணுக்கமாக நோக்கியவர் தெளிவத்தை ஜோசப்

## 88வது பிறந்த தின விழாவில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் புகழாரம்

**தெளிவத்தை ஜோசப்பும் நானும் பதுளையைச் சேர்ந்தவர்கள். சாகித்திய ரத்னா தெளிவத்தை ஜோசப், பதுளையை விட்டுவிட்டு தான் வாழ்ந்த தோட்டத்தை தன் பெயரில் சேர்த்துக் கொண்டவர். இவ்வகையில் தெளிவத்தை தோட்டத்தை நாமும் சர்வதேசமும் அறியும் வகையில், அரிய சிறுகதைகளையும், நாவல்களையும், ஆய்வுக் கட்டுரைகளையும் படைத்தவர்.**

அவருடைய நாவல் சிறுகதைத் தொகுப்புகளுக்கு பல சாகித்திய மண்டலப் பரிசுகள் கிடைத்திருக்கின்றன. அதன் உச்ச கட்டமாக அவருக்கு 'இலங்கை அரசாங்கத்தின் 'சாகித்திய ரத்னா' என்ற விருதும் வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் தமிழகத்தின் விஷ்ணுபுரம் விருது, கரிகாற்சோழன் விருது, கனடாவின்தமிழியல் விருது என்பனவற்றையும் அவர் பெற்றுக் கொண்டவர். இவர் இதுவரை பெற்ற விருதுகள் அனைத்துமே உயர் மட்ட இலக்கிய மதிப்பீட்டுக் குழுவினரின் ஆழாமான பரிசீலனையின் பின்னர் வழங்கப்பட்டவை ஆகும். அவருடைய இலக்கியச் சாதனைகள் பற்றிய தகுதி விதிகளுக்கெல்லாம் தெளிவத்தை ஜோசப்பின் இலக்கியப் படைப்புகள் நின்று பிடித்து வெற்றி கண்டன என்பதைச் சொல்லித்தான் ஆக வேண்டும். அவர் பெற்ற விருதுகள் அனைத்தும் மலையகத்துக்கும் தெளிவத்தை பெருந்தோட்டத்துக்கும் மட்டுமன்றி முழு இலங்கை வாழ் தமிழர்களுக்கும் கௌரவத்தை வழங்கிய விருதுகளாகும்.

தற்போது லண்டனில் வாழும் பதுளை மு.நித்தியானந்தன் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் பொருளியல் விரிவுரையாளராக பணியாற்றிய காலகட்டத்தில் தெளிவத்தை ஜோசப்பின் 'நாமிருக்கும் நாடே' என்.எஸ்.எம். ராமையாவின் ஒரு கூடைக் கொழுந்து என்ற சிறுகதைத் தொகுதிகளையும், சி.வி. வேலுப்பிள்ளையின் வீடற்றவன் என்ற நாவலையும் தன் வைகறைப் பதிப்பகத்தினூடாக தனது சொந்த செலவில் வெளியிட்டு மலையக இலக்கியத்திற்கு பெரும் வளம் சேர்த்தவர். எனினும் தெளிவத்தையின் நாமிருக்கும் நாடே என்ற சிறுகதைத் தொகுதியை யாழ்ப்பாணத்தில் வெளியிட்டு வைத்து தெளிவத்தை ஜோசப்பை பெருமை படுத்தியவர். தற்போது கூட தெளிவத்தையின் சகல சிறுகதைகளையும் தொகுத்து முழு தொகுதியாக வெளியிட மு.நித்தியானந்தனும், எச்.எச்.விக்கிரமசிங்கவும் ஏற்பாடு செய்து வருகின்றனர்.

மலையகபெருந்தோட்ட மக்களின்வாழ்க்கை, பண்பாடு, கலை, கலாசாரங்கள், அவலங்கள், சிரமங்கள் என்பவற்றைக் கருப்பொருளாகக் கொண்ட ஜோசப்பின் கதைகள், வெளிநிலைப் படைப்பாளிகளின் அவதானமாக அன்றி, ஒரு பங்கேற்பு ஆய்வாளர்களின் யதார்த்தமான தீர்க்கமான அவதானமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. மலையக மக்கள் வாழ்க்கையின் சின்னஞ்சிறு அம்சங்களையும் நுணுக்கமாக நோக்கி, நேர்த்தியான பாத்திர வார்ப்புகளால் கதை சொல்லும் ஆற்றல் படைத்தவராக ஜோசப் தனது சிறுகதைகளை எமக்கு வழங்கியுள்ளார்.






1960களில் பதுளை தெளிவத்தை தோட்டத்தில் மூன்று ஆண்டுகள் பணியாற்றிய ஜோசப், தனது கதைகளின் கருப்பொருள் காரணமாகத் தோட்ட நிர்வாகிகள் உட்பட பலரின் எதிர்ப்பைச் சம்பாதிக்க நேர்ந்தது. அந்த கசப்பான அனுபவங்கள் காரணமாக அவர் கொழும்புக்கு இடம் மாறிவர நேர்ந்தது. இவ்வாறு இலக்கிய முயற்சி காரணமாக இடம்பெயர நேர்ந்த படைப்பிலக்கியக்காரர்கள் பற்றிப் பொதுவாக நான் கேள்விப்பட்டதில்லை. ஆனால் தெளிவத்தை ஜோசப் 1960களில் முற்பகுதியில் கொழும்புக்கு இடம்பெயர்ந்தார்.

'இலக்கியத்தைப் படைப்பதற்கு ஒரு சத்திய வேட்கை இருக்க வேண்டும்' என்ற சிந்தனையைத் தமது இலக்கிய வழிக்காட்டல் தத்துவமாகக் கொண்டு எழுத்துப் பணியில் ஈடுபட்டவர் தெளிவத்தை ஜோசப். உழைப்பவர்களுக்குத்தான் முதலிடம். உழைப்பே செல்வத்தின் உருவாக்கத்தின் அடிப்படை என்பது மார்க்சியத்துவம். ஜோசப்பை ஒரு இடத்தில் 'உழைப்பாளிக்குத்தான் முதல் உதை' என்று எழுதியுள்ளார். உழைப்பவர் தான் நாட்டின் மூச்சு என்பார்கள். ஜோசப் 'இங்கே அவர்கள் மூச்சே விடக்கூடாது' என்று தமது சிறுகதையொன்றில் எழுதி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஜோசப் போன்ற இலக்கியப் படைப்பாளிகளுக்கு உலகளாவிய தமிழ்கூறும் சமூகம் வழங்கும் கௌரவம் பற்றி சில வார்த்தைகள். சமூகம் முடியுடை வேந்தர்களை, ராஜராஜ சோழனை, கங்கை கொண்ட கடாரம் வென்றவர்களை நினைவில் இருத்தவில்லை. சங்ககால அரசர்களை சேர, சோழ, பாண்டியர்களை நினைவு கூறுகின்றதோ தெரியவில்லை. ஆனால் இலக்கியம் படைத்த புலவர்கள் இன்றும் நினைவு கூரப்படுகின்றார்கள். திருவள்ளுவர், கம்பன், பாரதி பற்றிய ஏராளமான நூல்கள் உண்டு. அவர்களது பெயர்களில் பல மன்றங்களும் உண்டு.

அவர்களுடைய சிந்தனைகள் பற்றி மாநாடுகள் நடைபெறுகின்றன. இவ்வகையில், காலந்தோறும் ஆராயப்பட வேண்டிய, நினைவு கூரப்படவேண்டிய ஈழத்தின் இலக்கிய படைப்பாளியாக விளங்குபவர் தெளிவத்தை ஜோசப். இந்த குறுகிய காலத்தில் ஏற்பாடு செய்த இந்த நிகழ்வில் ஜோசப் அவர்களுக்கு மூத்தவர்களான செங்கரும்பு ஏ.எஸ். வடிவேலு, அல்லஸ்மத் மற்றும் தெளிவத்தை ஜோசப்பின் குடும்பத்தார் கலந்து கொண்டமை சிறப்பம்சமாகும்.

மலையக மக்களுடைய வாழ்வியல் பற்றிய ஏராளமான ஆய்வு நூல்கள் இலங்கையர்களாலும் வெளிநாட்டவர்களாலும் எழுதப்பட்டுள்ளன. அந்நூல்கள் பற்றிய விபரப் பட்டியல் ஒன்றை நானும், கலாநிதி இரா.ரமேசும் சேர்ந்து தொகுத்து வெளியிட்டோம். அந்த ஆய்வு நூல்களுக்கு அப்பால், தெளிவத்தை ஜோசப்பின் படைப்புக்கள் மலையக மக்களின் வாழ்வியல் பற்றி உயிரோட்டமாகவும், கலைநேர்த்தியுடனும் விளங்குகின்றன. இவ்வகையில் சமகால வாசகர்களுக்கும் எதிர்கால ஆய்வாளர்களுக்கும் பயன்படன்கூடிய வரலாற்றுப் பதிவுகளாக தெளிவத்தை ஜோசப்பின் படைப்புகளை சொல்ல முடியும்.

இப் பிறந்தநாள் நிகழ்வை சிறப்புடன் ஏற்பாடு செய்துள்ள மூத்த ஊடகவியலாளர் எச்.எச். விக்கிரமசிங்க, லட்சுமணன் வேலு, பெரியசாமி ஞானி ஜோதி, சுதாகரன் கே.பிள்ளை ஆகிய நால்வருக்கும் எமது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.



இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.


Senthooram
செந்தூரம்
2022 பெப்ரவரி 27 ஞாயிற்றுக்கிழமை
அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர்
கலாசூரி திவ்யா சுஜேனின்
மாணவிகளான
நித்யா லோகேஸ்வரன் கோபிநாத்,
சுருதி கோபிநாத்

# ஹிரோஷிமா தீபம் எப்போது அணையும்?

உலகில் முதலாவது அணு குண்டு விழுந்த நகரான ஜப்பானின் ஹிரோஷிமாவில் இருக்கும் அமைதி தீபம் 1964 ஆம் ஆண்டு ஏற்றப்பட்டது தொடக்கம் இன்று வரை தொடர்ச்சியாக எரிந்துகொண்டிருக்கிறது. எப்போது உலகில் இருக்கும் அனைத்து அணு குண்டுகளும் அழிக்கப்பட்டு அணு குண்டு அச்சுறுத்தலில் இருந்து விடுபடுகிறதோ அன்றுவரை இந்த தீபம் எரியும். ஆனால் அதை அனைப்பதற்காக எந்த சாத்தியமும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் தெரியவில்லை. முடிந்தால் எண்ணெயை கூடுதலாக ஊற்றினால் நன்று.



## கின்னஸ் சாதனை படைத்த ஸ்ட்ரோபெர்ரி பழம்



இஸ்ரேலிய தோட்டம் ஒன்றில் வளர்ந்த ஸ்ட்ரோபெர்ரி பழம் ஒன்று உலகில் மிகப்பெரியது என்று கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருக்கிறது. இதன் எடை 289 கிராம்களாகும்.

ஏரியல் குடும்பத் தோட்டத்தில் இருந்து 2021 பெப்ரவரியில் பறிக்கப்பட்ட இந்த ஸ்ட்ரோபெர்ரி அன்று தொடக்கம் குளிர்சானப் பெட்டியில் வைக்கப்பட்டிருக்கிறது. கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம்பிடிப்பதற்காக அது குளிர்சாதனப் பெட்டியிலேயே காத்திருந்ததால் முன்னர் இருந்த அழகு போய்விட்டது என்று அதன் உரிமையாளர் கூறுகிறார்.

2015 ஆம் ஆண்டு ஜப்பானில் 250 கிராம் அளவுக்கு வளர்ந்த ஸ்ட்ரோபெர்ரி பழமே முன்னர் உலக சாதனை படைத்திருந்தது.

# சிங்கப்பூரில் 30 ஆண்டுகளாக காட்டில் வாழும் மனிதன்

சிங்கப்பூர் என்றாலே வானை முட்டும் கட்டிடங்களைக் கொண்ட உலகில் அதிக நகரமயமான இடம். ஆனால் அங்கே ஒருவர் 30 ஆண்டுகளாக கட்டில் வாழ்ந்து வருகிறார். 79 வயதான ஓஹ் கோ செங் என்ற அந்த முதியவர் இப்படி ஒரு வாழ்க்கை வாழ்ந்து வருவது அண்மையில் தான் வெளியுலகுக்குத் தெரிந்தது. சமூக ஊடகத்தில் அவரது செய்தி பிரபலமடைந்தபோது சிங்கப்பூரியர்களுக்குக் கூட அதை நம்ப முடியவில்லை.

கிறிஸ்மஸ் தினத்தில் உரிமம் பெறாமல் வர்த்தகத்தில் ஈடுபட்டிருந்தபோது ஓஹ் அதிகாரிகளிடம் பிடிபட்டார். அவர் மரக்கறிகள் மற்றும் மிளகாய் விற்றுக்கொண்டிருந்தார். ஆனால் அப்படி வியாபாரம் செய்ய உரிமம் பெற்றிருக்க வேண்டும். முன்னர் அவர் சந்தைக்கு மலர்களை விற்று வந்தாலும் கொரோனா பெருந்தொற்று காரணமாக அந்த வேலையை இழந்ததால் இந்தப் புதிய வேலையை ஆரம்பித்திருந்தார்.

ஆனால் அவரது மரக்கறிகளை அதிகாரிகள் பறிமுதல் செய்ய, தன்னார்வலர் ஒருவர் படமெடுத்து சமூக ஊடகத்தில் போட, அந்த முதியவர் யார் என்று தேடியபோது தான் சிங்கப்பூர் வேகமாக வளர்ந்தாலும் அவர் யாருக்கும் தெரியாமல் காட்டில் வாழ்வது தெரிந்தது.

சுங்கி டங்கா என்ற கிராமத்தில் பிறந்து வளர்ந்த ஓஹ், அந்த கிராமம் மாடிக் கட்டடங்கள் கொண்ட பகுதியாக மாற்றப்பட்டபோது அங்கு வாழ்ந்தவர்களுக்கு அரசாங்கத்தால் வீடு கொடுக்கப்பட்டது. ஆனால் பரிதாபம் ஓஹ்வுக்கு ஒன்றும் கிடைக்கவில்லை. தனது சகோதரருக்கு வீடு கிடைத்து அங்கு வாழ அவர் அழைக்கப்பட்டபோதும் அதனை மறுத்த ஓஹ் அருகில் இருக்கும் காட்டுக்கு சென்றார். மூங்கிலால் கட்டிய சிறு கூடாரத்தை அமைத்து தங்கினார். அதுவே அவரது நிரந்தர வீடாக மாறிவிட்டது. அருகில் தமக்கு உண்பதற்கு தேவையானவற்றை விதைத்து தோட்டம் ஒன்றை அமைத்துக் கொண்டார்.

அவரது மனைவி மற்றும் தற்போது 17 வயதாகும் மகள் ஊரில் வாழ்கிறார்கள். ஆனால் ஓஹ் எங்கே வசிக்கிறார் என்பது அவர்களுக்குக் கூட சரியாக தெரியவில்லை. கேட்டால், "தோட்டம் ஒன்றில் வாழ்கிறேன்" என்ற பதில் தான் கிடைக்கும்.

என்றாலும் ஓஹ் தனது குடும்பத்திற்கான செலுவுகளை பொறுப்பாக செய்கிறார்.

உலகில் அதிக செல்வந்த மக்கள் வசிக்கும் நாடுகளில் ஒன்றாக இருக்கும் சிங்கப்பூரில் ஒருவர் வீடு இன்றி வாழ்கிறார் என்ற செய்தியே ஆச்சரியமான ஒன்று. அதிலும் காட்டில் வாழ்கிறார் என்ற நம்புவது கடினம் தான்.

உள்ளூர் எம்.பியின் உதவியுடன் இப்போது ஓஹ்வுக்கு சிறிய வீடு ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது.



# பெங்காவின் சோகக் கதை

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

ஒடா பெங்கா கொங்கோவின் இடுரி காட்டில் 1883 ஆம் ஆண்டு ம்புட்டி பிக்மி கொத்திரத்தில் பிறந்தவர்.

இளம் வயதிலேயே திருமணம் புரிந்த பெங்கா இரு குழந்தைகளுக்குத் தந்தையானார். ஆனால் 1890களில் அவரது வாழ்க்கை முழுமையாக இருண்டு போனது. தாம் வேட்டைக்கு சென்றிருந்த நேரத்தில் தமது கிராமத்திற்கு வந்த பெல்ஜிய காலனித்துவப் படையினர் தமது குடும்பத்தை கொன்றுவிட்டு சென்றார்கள்.

குடும்பம் கோத்திரம் இன்றி அலைந்து திரிந்த பெங்கா அடிமை வர்த்தகர்களிடம் பிடிபட்டார். பண்ணை ஒன்றில் வேலை செய்து கொண்டிருந்த பெங்காவை சாமுவேல் வெர்னர் என்ற அமெரிக்க வர்த்தகர் கண்டார். இவர் பரிணாம வளர்ச்சி பற்றி இனவாத பார்வையோடு பார்க்கக் கூடியவர். பெங்காவின் சிறிய தோற்றம், கறுத்த தோல் மற்றும் கூர்மையான பற்களை பார்த்த வெர்னர் அவர் நவீன மனிதனே அல்ல என்ற முடிவுக்கு வந்தார். நவீன மனிதன் மற்றும் எமது பரிணாம வளர்ச்சியின் முன்னேர்களது விடுபட்ட ஓர் அங்கம் என்று பெங்காவை அழைத்தார்.

பெங்காவை அமெரிக்காவின் சென் லுவிஸ் நகருக்கு அழைத்து சென்று அங்கு கண்காட்சி ஒன்றில் வைத்தார். 1904 ஆம் ஆண்டு இடம்பெற்ற அந்தக் கண்காட்சியில் ஒரு கூண்டில் வைக்கப்பட்ட அவர் ஒரு விலங்கு போல நடத்தப்பட்டார். மீண்டும் ஆபிரிக்கா திரும்பிய அவர் மீண்டும் திருமணம் செய்தபோதும் கொஞ்சம் காலத்திலேயே மனைவி பாம்பு கடித்து இறந்துவிட்டார்.

கவலையில் நியூயோர்க் சென்ற அவர் பிரோனெக்ஸ் மிருகக்காட்சி சாலையில் மனிதக் குரங்கிற்கான கூட்டில் காட்சிக்கு வைக்கப்பட்டார். என்றாலும் உள்நாட்டில் இருக்கும் கறுப்பின கிறிஸ்தவ மதகுருமார் இந்த செயலை எதிர்க்க அந்த மிருகக்காட்சிசாலை மூடப்பட்டது.

பெங்கா விர்ஜினியாவில் புகையிலை தொழிற்சாலை ஒன்றில் வேலைபார்த்துக் கொண்டு சிறிது காலம் வாழ்ந்தார். 1914 இல் மீண்டும் ஆபிரிக்காவுக்கே செல்ல அவர் முடிவெடுத்தபோதும் முதலாம் உலகப் போர் வெடித்ததால் அவருக்கு தாய் நாட்டுக்கு போக முடியாமல் போனது.

1916 ஆம் ஆண்டு மார்ச் 20 ஆம் திகதி நாடு திரும்ப முடியாத மன அழுத்தத்தால் தனது மார்பில் சுட்டு பெங்கா தற்கோலை செய்து கொண்டார்.



பெண் எழுத்தாளர் 27

# பவானி
## நெதர்லாந்து



**தற்போது நெதர்லாந்தில் வசித்து வரும் பவானி பதுளையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக்கல்வியை பதுளை கன்னியாஸ்திரியர் பாடசாலையிலும் பின் அளவெட்டி அருணோதயக் கல்லூரியிலும் கற்று அதன் பின்னர் யாழ்ப்பாணத்தில் உயர்தரக் கல்வியினைக் கற்று கிழக்கிலங்கை பல்கலைக்கழகத்தில் விவசாய பீடத்தில் கலைமானிப்பட்டம் பெற்று அங்கு விரிவுரையாளராகக் கடமையாற்றியவர்.**



திருமணத்திற்கு பின்னர் நெதர்லாந்திற்கு புலம்பெயர்ந்து டச்சு மொழியை திறம்பட கற்றதோடு உளவியல் மற்றும் சட்டத்துறையிலும் கல்வி கற்று பட்டம் பெற்றார். இவர் நெதர்லாந்தில் அரச நிறுவனங்களிலும் அரச சார்பற்ற நிறுவனங்களிலும் பணியாற்றியவர். பின் அங்கீகாரம் பெற்ற மொழிபெயர்ப்பாளராகவும் பணியாற்றி வருகிறார்.

தமிழில் மட்டுமன்றி டச்சு மொழியிலும் சிறப்பான திறமைகளை கொண்ட பவானி இதுவரையில் மூன்று புத்தகங்களை வெளியிட்டுள்ளார். அத்தோடு மாணவர்களுக்கு நாடகம், நாட்டியம், இசை போன்றவற்றை பயிற்றுவித்து அவர்களை முன்னேற்றியவர்.

இவர் சிறுவயதிலிருந்தே எழுத்துத் துறையில் ஆர்வம் உள்ளவர். இவர் கல்விகற்ற பாடசாலை ஆண்டு மலருக்கும் ஏனைய மின் இதழ்களான சிவஒளி , நடு, ஞானம் போன்ற மின்னிதழ்களுக்கும் கட்டுரைகளை எழுதி வந்தார். வாசகர்களிடமிருந்து வந்த மதிப்பீடுகள் இவரை மேலும் எழுதத் தூண்டின.

மேலும் இவர் வெளியிட்ட நூல்களாக


பிரபல ஈழத்துக் கவிஞர் சேரன் அவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட சில கவிதைகளைத் தொகுத்து இருமொழி வெளியீடாக நெதர்லாந்து_ தமிழ் ஆகிய மொழிகளில் "கடலின்கதை" என்ற பெயரில் ஒரு புத்தகம் வெளியிட்டுள்ளார்.

அதன்பின் "அன்பு திகட்டாது" என்ற தலைப்பில் நெதர்லாந்து மொழியில் ஒரு புத்தகமும் 2020 இல் இளையோர்க்கான கவிதைத் தொகுப்பு "சில கணங்கள்" என்ற நூலை தான் கல்விகற்ற பாடசாலையில் வெளியீடு செய்துள்ளார். சென்ற ஆண்டு இலங்கையில் பூபாலசிங்கம் புத்தகசாலையினால் வெளியிடப்பட்ட " மனச்சோலை" என்ற புத்தகத்திலும் மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன.

அதைவிட பல்வேறு சஞ்சிகைகளுக்கும் மொழிபெயர்ப்புக் கட்டுரைகளை இவர் எழுதி வருகிறார்.



எழுதுவது பற்றி இவர் குறிப்பிடுகையில் எழுதுவதற்கு நிறைய விடயங்கள் இருக்கின்றன. தன்னால் இயன்றவற்றை எழுதலாம் என்பது தனது தீர்மானம் எனவும் எல்லோரும் எழுதிய விடயங்களைத் திருப்பித் திருப்பி எழுதாமல் புதிய விடயங்களையும் நமது சமுதாய முன்னேற்றத்திற்குத் தேவையான விடயங்களையும் எழுத்தாளர்கள் எழுதவேண்டும் என்பது தனது அவா எனக் கூறுகிறார்.





மேலும் ஒரு கவிஞருக்கு இருக்க வேண்டிய மெல்லிதயமும், ரசனையும், மொழி வீச்சும் உணர்ச்சிப் பெருக்கும்தான் அந்தக் கவிஞனின் படைப்புகளில் வெளிப்படும். படிப்பவருக்கு நல்ல விடயங்கள் மீது விருப்பும், தீயவற்றின் மீது வெறுப்பும் உண்டாகும் வகையில் கவிதை அமைய வேண்டும் (எனவே இதுவும் 'சமூகப் பொறுப்பு' என்ற பண்பின் கீழ் அடங்கும்!)

கவிதைகள் சாதாரண மனிதர்கள் வாசித்து விளங்கக் கூடிய மொழிநடையில் இருக்க வேண்டும்.

சுருக்கமாய்ச் சொல்வதென்றால், நேரடியாய் ஒரு செய்தியைச் சொல்வது உரைநடை. பூடகமாய், கற்பனை நிறையச்சேர்த்து சொல்வது கவிதை. உரைநடையின் நோக்கம் செய்தி அறிவிப்பு. கவிதையின் நோக்கம் அனுபவப்பரிமாறல்

வீட்டு வேலைகள் ஒரு சுமை. அதேநேரம் படித்த பெண்களாக இருந்தால், உத்தியோகம் பார்ப்பவர்களாக இருந்தால் அது அவர்களுக்கு வேலைச் சுமை. உத்தியோகத்திலே இருக்கின்ற வேலைகளை வீட்டிலே கொண்டு வந்து பார்க்கும் தேவைகள் சிலருக்கு இருக்கின்றது. அதே வேளையிலே வீடு, குடும்பம் என்று அவர்களுடைய எழுத்து சிந்தனை சிதைந்து போவதற்கான வாய்ப்புக்கள் ஆண்களை விட பெண்களுக்கு பெரிய சவாலாக அமைந்திருக்கின்றது எனக் கூறுகிறார்.

மேலும் கவிதை எழுதுவதால் என்ன பயன் என இன்று பலராலும் கேட்கப்படும் கேள்வியாக இருப்பதால் இது பற்றி தனது கருத்துக்களை முன் வைக்கிறார். ஏன் பாட்டுப் பாட வேண்டும் என்று கேட்டால் என்ன பதில் கூறலாம்? கவிதை ஓர் அரிய கலை. நுண்ணிய கலை. கவிதையை யாத்த கவிஞனின் உணர்ச்சியை அதைப் படிப்போரிடமும் உண்டாக்கவல்ல அற்புத சாதனம், கவிதையனுபவம். அது கூறும் பொருளில் இல்லை. கூறும் முறையில் தான் இருக்கிறது. கவிஞன் தான் பெற்ற உணர்ச்சிகளைத் தன் கவிதைகளைப் படிப்போரும் பெற வேண்டும் என்று எண்ணிச் சில யுக்தி முறைகளைக் கையாண்டு கவிதையைப் படைக்கிறான். அந்த யுக்தி முறைகளால் உணர்ச்சியை அதில் பொதிய வைக்கிறான்.

மேலும் கற்பனை, சொற்களின் அமைப்பு முறை, ஒலி நயம், யாப்பு முறை, அணி நலன், தொடை நயம், குறிப்புப் பொருள், சுவைகள் போன்ற சில முறைகளை மேற்கொண்டு கவிதையைப் படைக்கிறான். கவிதையைப் படிக்க வேண்டிய முறையில் இவை தோன்றுமாறு படித்தால் கவிஞன் பெற்ற அனுபவத்தையே நாமும் பெறுகிறோம். கவிஞன் மேற்கொள்ளும் யுக்திமுறைகளையெல்லாம் ஓரளவு விளக்கமாக எடுத்தியம்புவது கவிதையின் சிறப்பு எனக் கூறுகிறார்.

மேலும் சாதி ,மத, இன, அரசியல் வேறுபாடற்ற சமத்துவமான சமுதாயத்தை உருவாக்க அனைவரும் சேர்ந்து உழைக்க வேண்டும் என்பதே தனது படைப்புக்கள் மூலம் சமூகத்திற்கு சொல்ல விரும்புவதாக கேட்கப்பட்ட கேள்விகள் அனைத்திற்கும் மனம் திறந்து தனது பதில்களை வழங்கினார்.

**மஜினா உமறு லெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

# மறுகால்

முல்லை முஸ்ரிபா



Design by S.Naleem

## ஔவன் கவிதை

### முஸ்கான்

புராதனத்தின் அதிகாலை மீதடர்ந்த இறையின் மேல்
நம்பிக்கையின் வேர்ச்சொல்லைப் பொழிந்தாள்.
அவள் நெஞ்சுள் மீதமாயிருந்த அருள்ச்சொல்
நம்பிக்கையின் விதைப்பு

பல்லாயிரம் அர்த்தச் செறிவோடு விருட்சம் கொண்டது
நிழலுமற்ற அந்தரிப்பின் கீழ்
இவளோடொத்தவர்கள் அலைகையில்
கர்வத்தின் மீக்கொண்டெழுந்த கருஞ்சொல்லில் மாள்கையில்

அதிகாரக் கர்ச்சிப்பில் அவிகையில்
இவளிடம் மீதமாயிற்றொரு ஒளிச்சொல்
ஞானச்சொல்
சமூகவியல் சொல்

விடுதலைச்சொல்
வீரியச் சொல்
நம்பிக்கையின் விதைப்பு
பல்லாயிரம் அர்த்தச் செறிவில் விருட்சம் கொள் காலம்
இனியொரு புராதன அமைதியில் மீநிழல் அடரும்.

## கவிதை மாயவித்தை

கவிதை ஒரு மாயவித்தை. சொல் எனும் மாயக்கோல் கொண்டு கவி வித்தைக்காரர் காட்டும் மாய உலகின் படிமங்களாலானது கவிதை எனும் மாயம்.

உலகம் தோன்றிய காலம் முதல் கவிதை அதன் அர்த்தச் செறிவை வெளிப்படுத்தி வரும் நுட்பங்களும் நுணுக்கங்களும் அடர்ந்த கற்பனை வெளி அல்லது அனுபவ வெளி மிகுந்த அவதானிப்புக்குரியது. சொல்லென்ற வித்தைக்கருவியை வித்தைக்காரர் அசைத்து அசைத்து அல்லது சுழற்றிச்சுழற்றிக் காட்டும் விம்ப வெளியில் ஆயிரமாயிரம் மாய ஜாலங்கள் காட்டும் தோற்றங்கள் மாறும் காட்சிகள் உள்ளிழுக்கும் உணர்வின் திரட்சியை அல்லது கவிச்சியை கவிதை வித்தையில் அதிகம் பெய்யக் காணுகிறோம். மாயவித்தைக் கவிதையிலும் காணுகிறோம்.

தெலுங்குக் கவிதை வரலாற்றில் முக்கிய அடையாளமாகத் தெரிந்தவர் அஜந்தா. பெனுமர்த்தி விசுவநாத சாஸ்திரி (1929 - 1998) மரங்கள் வீழும் காட்சி என்கிற முதல் கவிதையிலேயே கவனத்தை ஈர்த்த கவி அஜந்தா. குறைவாக எழுதி நிறைவாக நின்ற கவி சொல்லி. ஆந்திர பிரபா பத்திரிகையாசிரியராகப் பணி செய்தவர்.

தனது கவிதைகள் பிரசுரமான பின் தனக்கும் கவிதைக்கும் எந்தவித தொடர்புமில்லையென்ற கருத்துடையவர் கவி அஜந்தா. படைப்பாளி இறந்து விட்டான் என்று கோட்பாடு இதன் சார்புடையதே.

1997இல் சாகித்ய அகாதெமி விருது வென்ற 'ஸ்வப்ன லிபி'' 'கனவுப்பிரதி'' கவிதைத் தொகுப்பு நண்பர் குழாத்தின் வேண்டுதலின் பேரில் பிரசுரமான கவிதைகளை நினைவுகூர்ந்தெழுதியது.

கவி வேகுண்ட மோகன் பிரசாத்(மோ) மொழிபெயர்த்த அஜந்தாவின் 'வித்தைக்காரன்'' வாசிப்பின் மாயக்கவிதைதான்.

## தமிழிலக்கியத்தின் வரைபடம்

இருபத்தோராம் நூற்றாண்டுக் கவிதையின் வரலாற்று எழுதுகைக்கான முன்னீடு

தமிழிலக்கியத்தின் கவிதை வரைபடத்தின் தொடர்ச்சியை வரைதலென்பது கவிதையின் வரலாற்றினை இற்றைப்படுத்துவதற்கான ஒரு எழுதுகை முயற்சிதான்.

இன்று தமிழில் அதிகம் கவிதைப் பனுவல்களே முன்னெழுவதைக் காணுகிறோம். இந்தப் பருவங்கள் வழியே இருபத்தோராம் நூற்றாண்டுக் கவிதையின் மூன்றாம் தசாப்தம் வரையான கவிதையின் கிளர்ச்சியை வரைவதற்கு உட்படுத்த அவசியமெனப்படுகிறது.

தமிழில் தமிழகத்திலும் சரி ஐரோப்பிய தேசங்களிலும் சரி வேறும் பிரதேசங்களிலும் சரி இலங்கையிலும் சரி தோன்றி நிற்கும் கவிதைப் பிரதிகள் தொகையளவில் அதிகமெனினும் உட்கிடக்கையளவுக்கான மதிப்பீட்டு அளவுகோல்கள் குறித்த அவதானிப்பும் அவசியமானது.

இந்தத் தேடலை அல்லது வரைதலை இலகுபடுத்தல் பொருட்டு முதலில் நூல் பட்டியலொன்றைத் தயாரித்தாலென்ன? என்கிற கேள்வியுமுண்டு. கடந்த இருபது வருடங்களிலெழுந்த கவிதைப் பிரதிகள் பற்றிய நூற்பட்டியலொன்றை முன்னெடுக்க முடியுமான மதிப்பிடுநர்கள் அல்லது ஆய்வெழுதுநர்கள் முன்னெழல் அவசியமுமாகும்.

அடுத்தபடியாக கவிதைப் பனுவல்களின் உட்கிடக்கை குறித்த திறனாய்வை மேலெடுக்க முடியுமாக இருக்கும். இந்தத் தேடலுக்கான அண்மைய ஆதாரமாக ஞானம் நடாத்திய 2000 -2020 இற்க்கான வெளிவந்த கவிதைப் பிரதிகளின் தேர்வை முன்வைக்கலாம். ஞானத்திடம் போட்டிக்காக உள்வந்த கவிதைப் பிரதிகள் பட்டியலொன்று காணப்படும். அதன் வழி ஞானப்பரிசு பெறும் பிரதிகளை முன்வைத்துச் சிந்திப்பதாயின் இந்த நூற்றாண்டுக்கவிதையின் முதல்தரப் பிரதியாக ஞானத் தெரிவிலடங்கும்...........மை வண்ணம் காவியம் இடம் கொள்கிறது.

ஞானத் தெரிவை முன்வைத்து இந்த வரைபடத்தைத் தொடங்குவதாயின் ஏனெனில் இருந்து உண்டாக்கிய போட்டியை ஞானமே முன்னெடுத்தது. மை வண்ணண் காவியம் அதன் பாடுபொருள், மொழியாளுமை, சமூகப் பெறுமானம், உணர்வுக்கோலம், என்பவைதான் இத்தெரிவு சரியெனில் இருபத்தோராம் நூற்றாண்டுக் கல்வித்தரம் நிர்ணயமாகும். அல்லது மனங்கொள்ளப்படல் வேண்டும். அதன்பின்னால் தான் ஏனைய பிரதிகளை அடுக்க வேண்டும்.

இந்த ஒழுங்கு மீதான விமர்சனம் அல்லது நோக்கு எத்தகையது என்பது எழுந்து நிற்கும் கேள்வி. இவ்வாறான விரிகாலப் போட்டிகளை நடாத்தும்போது அல்லது தேர்வின் போது நூற்றாண்டுத் தரம் அல்லது தசாப்த காலத்தரம் குறித்த பொது நோக்கு நேர்மையும் நிற்க வேண்டும். இல்லையேல் வரலாற்றாய்வை இவ்விடத்திலிருந்து தொடங்குவது அபத்தமாகி விடும். மற்றப்படி தெரிவுக்கு வராத ஆனால் குறித்த காலப்பகுதிக்கான பிரதிகள் மீதான தேடலும் சேர்மானம் செய்தலும் முக்கியமானது.

மற்றப்படி இவ்வாறான வேறும் போட்டிகளோ தேடலோ தொகுப்போ நிகழ்ந்திருக்குமெனில் அவற்றின் மீதான கவனக்குவிவும் இன்றியமையாததேயாகும். எதுவாயினும் கவிதையின் வரைபடத்தை இற்றைப்படுத்தலென்பது தொடர் தேர்ச்சியான வரலாறு எழுதுகையின் பணியாகும்.

## குபேந்திரன் மீன் சிற்பக்கலை வடிவன்

சிற்பக்கலை உலகக்கலை வடிவங்களில் செதுக்கல் சார் கலை வடிவழகு மிளிர்வது. கல்லில் செதுக்குவது, மண்ணில் செதுக்குவது, மெழுகில் செதுக்குவது என செதுக்கும் ஊடகங்கள் பலவாகும்.

மீனில் செதுக்குவது மீன் சிற்பக்கலையாகும். மீனில் செதுக்கும் நுட்பத்தின் சொந்தக்காரன் குபேந்திரன். புதுச்சேரி வீராப்பட்டிணம் கிராமத்தைச் சேர்ந்தவர் குபேந்திரன். மீனவரான குபேந்திரன் மீன்கள் மீதான தன் ஈர்ப்பைக் கலையாக மாற்றும் கை வண்ணத்தை மீன் சிற்பக்கலையூடாக காட்சிப்படுத்தியிருக்கிறார். இவர் ஓவியம், சிற்பம் சார்ந்து பத்து வருடங்கள் கற்றவர், கலைப்பட்டம் பெற்றவர்.

கடலில் இருந்து பிடிக்கப்படும் மீன்களை உலரவைத்து உரியவாறு பதப்படுத்தி சிலை வடிவாக்கும் கலை தேர்ந்தவர் குபேந்திரன். தன் வாழ்க்கைச் சூழல் சார்ந்து கலைமனம் கொண்ட இவர் மீன் பிடித்தலை வேட்டைக்குச் சமனானது என்பார். மீனவப்பார்வை கலையுணர்வைத் தந்ததென்பார்.

மீன்களில் சிற்பம் வடிக்கும் நுட்பமான இந்த மீன் கலைஞனுக்கு அங்கீகாரமளிப்பது கட்டாயமல்லவா.



மனைவி: ஏங்க உங்களுக்கெல்லாம் நாகரீகமே தெரியாதா..? பல மணி நேரமா பேசுறேன் கொட்டாவி விட்டுக்கிட்டே இருக்கீங்க...
கணவன்: லூசாடி நீ... ஒன்னும் கொட்டாவி விடல, உன்கிட்ட ஏதாவது சொல்லனும்னு வாய தொறந்தா, எங்க நீ பேச விடுற...



70 வயசு பெரியவர் தன்னோட மனைவியை இன்னமும் darling, chellam, honeyன்னு கூப்பிட்டுக்கிட்டிருந்தாரு.
அத பார்த்து நான் அவரு கிட்ட கேட்டேன்...
'' ஏங்கய்யா, எப்படி இந்த வயசுல கூட பொண்டாட்டிய இவ்வளவு பாசமா கூப்புடுறீங்க..?
''தம்பி, அவ பேரு பத்து வருஷத்துக்கு முன்னாடியே மறந்து போச்சு! அவ கிட்ட பேர கேக்க பயமா இருக்கு..!



டியர்... நீங்க என்னை எவ்வளவு காதலிக்கறீங்கன்னு சொல்ல முடியுமா?''
'' ஆஹா ... என்னோட டீப் லவ்.. 72% டி என் செல்லம்...''
மனைவி : போங்க.. டார்லிங் ... நீங்க மோசம்... அப்ப அந்த 28% எவளுக்காம்?
'' அடி... கிறுக்கி, அழகு பொருட்களுக்கு 28% ஜி.எஸ்.டி கவர்மெண்டுல புடிச்சிக்குவாண்டி...

# சிரி...சிரி...தரும் மகிழ்ச்சி



கணவன் மனைவியிடம்...
'' இன்னக்கி நல்ல நாள் டி'' ன்னு சொன்னார் . மறுநாளும் '' இன்னக்கி நல்ல நாள் டி'' ன்னு சொன்னார். திரும்பவும் அடுத்த நாளும் '' இன்னக்கி நல்ல நாள் டி'' ன்னு சொன்னார். இப்படியே ஒரு வாரம் பொறுத்து பார்த்த மனைவிக்கு கோபம் உச்சத்தை தொட்டது... '' ஏன் இப்படி ஒரு வாரமா, இன்னக்கி நல்ல நாள், இன்னக்கி நல்ல நாள்னு என்கிட்டே சொல்லி பொலம்புறீங்க... என்ன ஆச்சு உங்களுக்கு?
கணவர் சொன்னார், '' போன வாரம் நாம சண்டை போடும் போது... நீ என்ன சொன்ன..? இப்படியே பண்ணிக்கிட்டு இருந்தீங்கன்னா ஒரு ''நல்ல நாளா'' பார்த்து எங்க அம்மா வீட்டுக்கு போய்டுவேன் பாத்துக்கோங்கன்னு சொன்னல,, அதான் உனக்கு ஞாபகம் படுத்தினேன்.



"ராத்திரியில சூரியன் எங்கே போகுது?"
"எங்கேயும் போகல.. இருட்டா இருக்கிறதால நம்மால அதைப் பார்க்க முடியலை!"



எங்க அம்மாவுக்கு சுகர் இருக்குனு தெரிஞ்ச உடனே என் மனைவி சுவீட் சாப்பிடறதையே நிறுத்திட்டா!''
'' மாமியார் மேல அவ்வளவு பாசமா ?''
''நீங்க வேற! அவ பங்கு சுவீட்டையும் மாமியாருக்கு கொடுத்துடுறா!''



ஸ்டார்ட், ஆக்ஷன்னு சொன்னதும் நீங்க மலை உச்சி அருவியிலிருந்து கீழே குதிக்கிறீங்க!
அப்புறம்? நாங்க பேக்அப் பண்ணிட்டு ஊருக்குப்போயிடுவோம்.



சார்... சார் என் பொண்டாட்டிய காணோம்...
யோவ், இது போஸ்ட் ஆபிஸ்...
அய்யோ... சந்தோஷத்துல எங்க போறதுன்னே தெரியல..!

# நித்யா லோகேஸ்வரன் கோபிநாத், சுருதி கோபிநாத்தின் அரங்கேற்றம்













அபிநயக்ஷேத்ரா நடனப்பள்ளி இயக்குனர் கலாசூரி திவ்யா சுஜேனின் மாணவிகளான நித்யா லோகேஸ்வரன் கோபிநாத், சுருதி கோபிநாத் ஆகியோரின் பரதநாட்டிய அரங்கேற்றம் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நடைபெற்றது.







## கையேந்தினாலும் அவர் செயல் வீரராம்

காசு வேணும்.
பாசம் இருந்தும்
உண்ண உணவு
கிடைக்குமா? இல்லாது.

வீரம் வேணும்.
வீடு காத்து நாம்
உரிமை பேணி வாழ.
இல்லாது முடியுமா?

சொந்த புத்தி வேணும்.
சோரம் போகாது நாமே
சுயமாக வாழ்ந்து நிற்க.
இல்லை என்றால் ஆகுமா?

முடிப் பேச்சு; போச்சு.
புரிந்தால் போதும்.
வீணே துயர் வந்து
வாடி நாம் சாயவோ?

இருந்ததை பறித்து
பாசாங்கு காட்டும்
மனிதரை மதிக்கவோ?
ஏறி மிதிக்கத் துணி.

பெரியவர் இவரென்று
பெருமிதம் கொள்ளவோ?
சிறியவர் போலன்றிக் கூட
சிறு செயலும் இல்லையே!

சுய ஒழுக்கம் கொண்டு
போரில் நின்று ஆடியவர்.
கயவர் கூடிக் கொன்று
வென்று கண்டது என்னவோ?

நன்றைத் தொலைத்து
கொன்றை அழித்து
வென்ற செய்தி எதற்கு?
தோற்றால் கூட நன்று.

பாளி வழி வந்தவர்
பாவம் என்றாகினரோ?
ஆதி முதலும் நரகம்
அவர் வாழ்வன்றோ?

கொல்லத் துணை நின்ற
அந்த கூட்டம் சாகிறது.
இரங்கி வாழ வழி
யார் வந்து சொல்வாரோ?

ஓடி வந்து இங்கே
கை கொடுத்துப் பறிப்பார்.
ஒன்றைக் கொடுத்து
பலதைக் கெடுப்பார்.

கெட்டுக் குட்டிச் சுவராக
ஆடும் ஓடும் அந்தப் பக்கம்.
நாடும் வாடும் இந்தப் பக்கம்.
புரிதல் ஒன்றும் புதிரல்ல.

அன்புடன் நதுநசி









# கலைஞர் ஸ்ரீசங்கரின் 42வது நினைவு நிகழ்வு














Senthooram செந்தூரம்



# சினி பஜார் கேள்வி பதில்



மொழிவாணன்

எம்.மாகிரட். எலபடகம.

**கே :அண்மையில் மறைந்த 'இந்திய இசைக்குயில்' லதா மங்கேஷ்கரின் வாழ்க்கை வரலாறு திரைப்படமாக உருவாகிறதாமே...?**



**பதில் :** ஆமாம்...இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் ஹிந்தி திரை உலகில் தொடங்கி இருக்கின்றன.
இந்நிலையில் முன்னணி இயக்குநர்களான ஆனந் எல் ராய், ஓம் பிரகாஷ் மற்றும் சஞ்சய் லீலா பன்சாலி ஆகிய மூன்று படைப்பாளி களும் இதற்கான முயற்சியில் ஈடு பட்டிருக்கிறார்கள்.இதில் சஞ்சய் லீலா தம் பன்சாலி 10ஆண்டுகளாகவே இது தொடர்பான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் லதா மங்கேஷ்கர் மற்றும் அவரது குடும்ப உறுப்பினர்களுடன் இரண்டு சுற்று பேச்சு வார்த்தை நடத்தி இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகி இருக்கிறது.
92 வயதான மறைந்த இசைக்குயில் லதா மங்கேஷ்கரின் வாழ்க்கை சுவாரசியம் மிக்கதாக இருப்பதாகவும், அவரது. கோதர சகோதரிக்க செய்த தியாகம், காதல், திருமணம் செய்து கொள்ளாத நிலை, முப்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் 30 ஆயிரத்தும் மேற்பட்ட பாடல்களை பாடி சாதனை என் பல விடயங்கள் அவரது வாழ்க்கையில் இருப்பதால் அவருடைய சுயசரிதை சுவாரசியமான படைப்பாக உருவாகும் என ரசிகர்கள் எதிர் பார்க்கிறார்கள்.

எஸ்.வேல்முருகன்.
மட்டக்களப்பு.



**கேள்வி : 2222ல் நடைபெறும் என எதிர்பார்க்கப்பட்ட நயன்தாராவின் திருமணம் தடைபட்டதேன்.?**

**பதில் :** ஹிந்தியில் நிறைய படங்களில் நடிக்க வேண்டுமென்று விரும்புகிறாராம் நயன்.
அட்லீ இயக்கப்போகும் படத்திற்காக பொலிவுடன் பறக்கும் நயன்தார இனி தொடர்ந்து ஹிந்தியில் நடிக்கப் போகிறாராம். அதற்கான அஸ்திவாரமாக மும்பையில் உள்ள ஸ்டார் காஸ்ட் ஏஜென்சிகள் அத்தனையிலும் படவாய்ப்புகள் தேடித்தர கேட்டிருக்கிறாராம்.இப்போது தமிழில் ஒருபடத்திற்கு பத்து கோடி வரை சம்பளம் வாங்குபவர், ஹிந்திக்கு போனால் அந்தத் தொகை இரட்டிப்பாகலாம் என்ற கணக்குதான் காரணமாம்...



எம்.எம்.முஸ்தபா மன்னார்.

**கேள்வி : மக்கள் திலகம் எம். ஜி.ஆர் நடித்து வெளிவந்த இறுதித்திரைப்படம் எது?**

**பதில் :** 'மதுரையை மீட்ட சுன்தர பாண்டியன்.

**சினி பஜார் கேள்வி பதில்,**
**தினகரன் வார மஞ்சரி,**
**லேக் ஹவுஸ், கொழும்பு-10.**

# சமந்தாவின் அழகு குறிப்பகள்

தென்னிந்திய திரையுலகின் முன்னணி நடிகைகளில் ஒருவர் சமந்தா. இவரை இன்ஸ்டாகிராமில் 1.3 கோடிக்கும் அதிகமானோர் பின்தொடர்கின்றனர். இந்த நிலையில் நடிகை சமந்தா தன்னை பின்தொடர்பவர்களுக்கு அழகு குறிப்புகள், உடல்நலம் மற்றும் ஆரோக்கியத்திற்கான தன்னுடைய பழக்கங்கள் குறித்த டிப்ஸ்களை வழங்கியுள்ளார்.

- ★ வறண்ட சருமம் கொண்டவர்கள் வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை ஒரு கிண்ணத்தில் சூடான தண்ணீர் மற்றும் சுத்தமான துண்டைப் பயன்படுத்தி வாரத்திற்கு ஒரு முறை அல்லது இரண்டு முறை நீராவி எடுக்கலாம் என்று கூறுகிறார்.
- ★ சமந்தா இயற்கையான அழகின் மீது நம்பிக்கை கொண்டவர் பெரும்பாலான நேரங்களில் அவர் மேக்கப் அணிவது கிடையாது.
- ★ சமந்தாவின் குறைபாடற்ற சருமத்திற்கான ரகசியம் அவர் வைட்டமின் உட்செலுத்துதல் சிகிச்சை மேற்கொள்கிறார். இது தோலில் உள்ள மெல்லிய கோடுகள், உலர்ந்த திட்டுகள் மற்றும் நிறமிகளை குறைக்க உதவுகிறது.
- ★ சமந்தா இரட்டை மாஸ்க்கிங் முறையை மேற்கொள்கிறார். இந்த செயல்முறையானது ஒரு மாஸ்க்கிங் முறையை காட்டிலும் அதிக தாக்கத்தை ஏற்படுத்தும் என அவர் கூறுகிறார்.
- ★ சமந்தா உடற்பயிற்சி, யோகா மற்றும் தியானம் போன்றவை மனதை கெட்ட விஷயங்களில் இருந்து விலக்கி வைப்பதாகவும், அது தனது சருமத்தை பளபளபாக்க உதவுவதாகவும் கூறுகிறார்.
- ★ சிறந்த தோல் மற்றும் ஆரோக்கியத்திற்காக பச்சை காய்கறிகளை சாப்பிடுவதை அவர் வலியுறுத்துகிறார்.



# ஜீவா மற்றும் சிவா இணைந்து நடித்துள்ள 'கோல்மால்'

நடிகர் ஜீவா மற்றும் சிவா இணைந்து 'கோல்மால்' என்ற திரைப்படத்தில் நடித்து வருகின்றனர். இந்த திரைப்படத்தை இயக்குனர் பொன்குமரன் இயக்கியுள்ளார். இந்த திரைப்படத்தில் பயல்ராஜ்புட், தன்யா ஹோப், மாளவிகா, யோகிபாபு, வையாபுரி உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர்.

கோல்மால் திரைப்படத்தின் பெரும்பாலான காட்சிகள் மொரிசியசில் வைத்து படமாக்கப்பட்டு வந்தது. இந்த நிலையில் கோல்மால் திரைப்படத்தின் படப்பிடிப்பு நிறைவடைந்து விட்டதாக படக்குழு தெரிவித்துள்ளது. மேலும் படப்பிடிப்பின் இறுதிநாளில் எடுத்த புகைப்படங்களை படக்குழு பகிர்ந்துள்ளது. இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன.

கோல்மால் திரைப்படத்தில் பிறரை ஏமாற்றி வாழும் கதாபாத்திரங்களாக நடிகர் ஜீவா மற்றும் சிவா நடித்துள்ளனர். அவர்களின் வாழ்க்கையில் என்ன நடக்கிறது என்பதை படத்தின் தொடக்க முதல் முடிவு வரை கொமடியாக சொல்வது தான் கோல்மால் திரைப்படம் என்று படக்குழு தெரிவித்துள்ளது.



# நடிகர் அர்ஜூனின் மாமனர் பழம்பெரும் நடிகர் காலதபஸ்வி ராஜேஷ்





கன்னட திரையுலகில் புகழ் பெற்ற பழம்பெரும் நடிகர் காலதபஸ்வி ராஜேஷ். கர்நாடகாவின் பெங்களூரு நகரில் கடந்த 1932ம் ஆண்டு ஏப்ரல் 15 திகதி பிறந்த ராஜேஷின் இயற்பெயர் முனி சவுடப்பா.

அவர் தனது பள்ளி மற்றும் கல்லூரி காலங்களில் நாடகங்களில் நடிப்பதில் ஆர்வமுடன் இருந்துள்ளார். இதன்பின் 1960ம் ஆண்டில் திரை துறையில் நுழைந்து 150க்கும் மேற்பட்ட படங்களில் நடித்து பல்வேறு திரைப்பட விருதுகளையும் வென்றுள்ளார்.

இவரது மகள் ஆஷா ராணியும் நடிகை ஆவார். ராஜேஷ், கன்னட மற்றும் தமிழ் திரையுலகில் பிரபல நடிகரான அர்ஜுன் சர்ஜாவின் மாமனார் ஆவார். இந்நிலையில், கடந்த 9ந் திகதி உடல்நலம் பாதித்த அவர் பெங்களூரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு சுவாச மற்றும் வயது முதிர்வு கோளாறுகள் காணப்பட்டன.

இந்நிலையில், வென்டிலேட்டரில் வைக்கப்பட்டிருந்த அவருக்கு உடல்நிலை பாதிப்படைந்தது. இந்நிலையில், உடல்நல குறைவால் அவர் காலமானார். அவருக்கு வயது 89.

# கீர்த்தி சுரேஷின் 'வாசி' திரைப்படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டர்



நடிகை கீர்த்தி சுரேஷ் தற்போது மலையாளத்தில் நடிகர் டொவினோ தாமசுடன் இணைந்து 'வாசி' என்ற திரைப்படத்தில் நடித்துள்ளார். இந்த திரைப்படத்தை இயக்குனர் விஷ்ணு ஜி. ராகவ் இயக்கியுள்ளார். கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொண்ட இந்த திரைப்படத்தில் கீர்த்தி சுரேஷ் மற்றும் டொவினோ தாமஸ் இருவரும் வக்கீல் கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

'வாசி' திரைப்படத்தை கீர்த்தி சுரேசின் அக்கா தன்னுடைய ரேவதி கலாமந்திர் என்ற நிறுவனத்தின் மூலம் தயாரித்துள்ளார். இந்த நிலையில் தற்போது இந்த திரைப்படத்தின் பர்ஸ்ட்லுக் போஸ்டரை படக்குழு வெளியிட்டுள்ளது.

சமீபத்தில் டொவினோ தாமஸ் சூப்பர் ஹீரோவாக நடித்து வெளியான 'மின்னல் முரளி' திரைப்படம் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பைப் பெற்றது. மேலும் நடிகை கீர்த்தி சுரேஷ் 'மரைக்காயர் அரபிக்கடலின் சிங்கம்' என்ற திரைப்படத்தில் நடித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நடிகர் சிவகார்த்திகேயன் தற்போது 'டான்', 'அயலான்' உள்ளிட்ட திரைப்படங்களில் நடித்து முடித்துள்ளார். இதையடுத்து தெலுங்கு இயக்குனர் அனுதீப் இயக்கத்தில் தமிழ், தெலுங்கு என இருமொழிகளில் தயாராகும் திரைப்படத்தில் நடித்து வருகிறார். மேலும் ராஜ்குமார் பெரியசாமி இயக்கத்தில் கமல்ஹாசன் மற்றும் சோனி பிக்சர்ஸ் இணைந்து தயாரிக்கும் திரைப்படத்தில் நடிக்க உள்ளதாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் நடிகர் சிவகார்த்திகேயன் தற்போது இயக்குனர் வெங்கட் பிரபுவிடம் கதை கேட்டுள்ளார். அந்த கதை அவருக்கு பிடித்துப்போகவே ஒப்பந்தமாகியுள்ள திரைப்படங்களில் நடித்து முடித்த பிறகு வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. விரைவில் இருவரும் இணைந்து பணியாற்றுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இயக்குனர் வெங்கட் பிரபு தற்போது நடிகர் அசோக் செல்வன் நடிப்பில் 'மன்மத லீலை' என்ற திரைப்படத்தை இயக்கியுள்ளார். இப்படம் ரிலீசுக்கு தயாராக உள்ளதாக கூறப்பட்டுள்ளது.





# வெங்கட் பிரபு இயக்கத்தில் நடிகர் சிவகார்த்திகேயன்

# பலகத்துறை கலை இலக்கிய வட்டத்தின் அனுசரணையில் போருதொட்டவில் வலம்புரி கவிதா வட்ட 77 ஆவது கவியரங்கு

**பௌர்ணமி தினங்களில் தொடர்ந்து கவிஞர்களுக்கு கொழும்பு தலைநகரில் மேடை அமைத்துக் கொடுத்த வகவம் எனும் வலம்புரி கவிதா வட்டம் இம்முறை தனது பௌர்ணமி கவியரங்கை தலைநகருக்கு அப்பால் நடாத்தியது. வகவம் மீள் ஆரம்பிக்கப்பட்ட பின் தலைநகருக்கு அப்பால் நடந்த முதலாவது கவியரங்கம் இதுவாகும்.**

கொச்சிக்கடை போருதொட்ட அல் அம்ரா மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்விற்கு பலகத்துறை கலை இலக்கிய வட்டம் அனுசரணை வழங்கியது. கவியரங்க நிகழ்வு அறிஞரும், கவிஞரும் பேருவளை ஜாமியா நளீமியாவின் முதலாவது அதிபருமான மறைந்த யூ. எம். தாஸின் (அல் அஸ்ஹரி) மறைதாசன் அரங்கில் இடம்பெற்றது.

வகவத் தலைவர் என். நஜ்முல் ஹுசைன் நிகழ்வினை நெறிப்படுத்திய நிகழ்வில்

சிரேஷ்ட பத்திரிகையாளரும், "கம்மல்துறை வரலாறும், வாழ்வியலும்" நூலாசிரியருமான எம். ஜே. எம். தாஜுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார். பலகத்துறை கலை இலக்கிய வட்டத் தலைவரும் மறைந்த யூ. எம். தாஸின் அவர்களின் சகோதரருமான யூ. எம். பகுர்தீன் சிறப்பதியாக பங்கேற்றார்.

பேரறிஞராக திகழ்ந்து எம்மை விட்டும் மறைந்த யூ. எம். தாஸின் (அல் அஸ்ஹரி), அண்மையில் எம்மை விட்டும் மறைந்த பிரபல வானொலி அறிவிப்பாளர் சனூஸ் முஹம்மத் பெரோஸ் ஆகியோருக்காக மௌனப் பிரார்த்தனை இடம்பெற்றது.

பிரதம அதிதியாக கலந்து கொண்ட எம். ஜே. எம். தாஜுதீன் அவர்கள் தனது உரையில்,

"இன்று பலகத்துறைக்கு முக்கியமான நாள்; மகிழ்ச்சியான நாள். வலம்புரி கவிதா வட்டம் தனது கவிஞர்களோடு வந்து அவர்களின் கவிதைகளை செவி மடுக்கும் வாய்ப்பினை எங்களுக்குத் தந்துள்ளதோடு எமது கவிஞர்களின் கவிதைகளையும் கேட்டு மகிழ்ந்துள்ளது. கவிதைக்கும், கம்மல்துறைக்கும் என்ன சம்பந்தம் என்று சிலர் கேட்கலாம். 1920 ஆம் ஆண்டில்தான் கம்மல்துறையில் அ, ஆ எனும் அரிச்சுவடி சொல்லிக் கொடுக்கும் பாடசாலை ஆரம்பமாகியது. எனினும் அதற்கு முன்பே கவிதைக்கும் கம்மல்துறைக்கும் நூற்றாண்டு கால உறவிருக்கிறது. தையா சுல்தான், அலி பாதுஷா, அப்பாஸ் போன்ற கவிதை நாடகங்கள் அரங்கேறியுள்ளன. அதிலே பங்கு கொண்டவர்கள் மீனவர்களும், கொத்தனார்களுமே. அவர்களும் இவற்றைச் செவி வழி கேட்டே நடித்தனர். இன்று நாங்கள் அரங்கு செய்யும் மறைந்த யூ. எம். தாஸின் அல் அஸ்ஹரி அவர்கள் இம் மண்ணின் சிறந்த கவிஞராக திகழ்ந்தவர். அவர் தெற்காசியாவிலேயே ஒரு மாபெரும் அறிஞர். கம்மல்துறையில் ஐந்தாம் வகுப்பு வரை கற்று பின்பு இங்கிருந்து சென்று உயர் கல்வி கற்றார். இலக்கியத்தையும் சிறப்பாக கற்று கவிதைத் துறையில் சிறந்து விளங்கினார். அவரது கவிதைகள் உணர்வுப் பூர்வமானவை. எழுச்சியை ஏற்படுத்துபவை என்று தெரிவித்தார்.

வரவேற்புரையை வலம்புரி கவிதா வட்ட செயலாளர் கவிஞர் இளநெஞ்சன் முர்ஷிதீன் நிகழ்த்தினார். வகவப் பொருளாளர் கவிஞர் ஈழகணேஷ் நன்றியுரை வழங்கினார். வலம்புரி கவிதா வட்ட உறுப்பினரும், பலகத்துறை கலை இலக்கிய வட்ட உறுப்பினருமான கவிஞர் கம்மல்துறை இக்பால் கவியரங்கிற்கு தலைமை வகித்தார்.

கொழும்பிலிருந்து வகவ சார்பில் சென்ற கவிஞர்களுடன், கம்மல்துறை, போருதொட்ட கவிஞர்களும் கவியரங்கில் மிகவும் உற்சாகமாக பங்கு கொண்டனர்.

இக் கவியரங்கில் 32 கவிஞர்கள் பங்கு கொண்டது குறிப்பிடத்தக்கது.

சிறப்பான முறையில் கவிஞர் கம்மல்துறை இக்பால் நடாத்திய கவியரங்கில் கவிஞர்கள் இலங்கை பொன்



மனச் செம்மல் தாஜ்மஹான், தமிழ்த் தென்றல் அலி அக்பர், பலகத்துறை அபூ ஸஊத்,

கலாபூஷணம் மஸீதா அன்சார், நீர்கொழும்பு முத்துலிங்கம் அவர்களின் மகன் முத்துலிங்கம் ஜெயகாந்தன், பஸ்மா பாஸி, ரவூப் ஹஸீர், ஜௌஹர் ரஹ்மான், தினுஷா காயத்ரி, கம்மல்துறை எம். எஸ். ஷரான், கவிஞர் திலகம் பிரேம்ராஜ், சட்டத்தரணி ரஷீத் எம். இம்தியாஸ், இல்ஹாம் ஜுனைதீன், போருதொட்ட ரிஸ்மி, வகவ தேசிய அமைப்பாளர் எஸ். தனபாலன், கம்மல்துறை ரிஸ்வான், போருதொட்ட மனால், ஈழகணேஷ், ரஜுலா பேகம் உவைஸ், எஹலியகொட முஸ்னி முர்ஷித், எம். வை. எம். சரீப், நஸ்மியா, இர்ஷாத், அபூ பிலால் நஹ்தாஸ், கிண்ணியா அமீர் அலி, பிஷ்ருன் நதா, உணர்ச்சிப் பூக்கள் ஆதில், வஸீலா சாஹிர், மலாய் கவி டிவாங்ஸோ, எம். எஸ். எம். ஸஜ்ஜாத், ஏ. எல். எம். ஸல்மான், வாழைத் தோட்டம் எம். வஸீர்



ஆகியோர் கவிதை பாடினர்.



வதிரி சி. ரவீந்திரன், சட்டத்தரணி எம்.ஆர். எம். சல்மான், இஸட். ஏ. அன்சார், காத்தநகர் முகைதீன் சாலி, எம். ஜே. எம். நாஸ்ஹுதீன், எம். எஸ். எம். சஹீர், எம். ஐ. எம். முஸம்மில் ஜே.பி., ஷைபுதீன், கவீஸா காயத்ரி, பலகத்துறை கலை இலக்கிய வட்ட உறுப்பினர்கள் சபையை அலங்கரித்தனர்.

தலைநகருக்கு வெளியே இவ்வாறான ஒரு கவியரங்கை நடாத்த களமமைத்த பலகத்துறை கலை இலக்கிய வட்டத்திற்கு தமிழ் கவிஞர்களின் தேசிய அமைப்பான வலம்புரி கவிதா வட்டம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டது.

# செல்ஃபி உலா



பாபா.முருகானந்தன் – கொழும்பு



ஹாசீம், அக்சா, ஹபீப்.



தினேஷ் பேட்றம்



வாணி – கொட்டாஞ்சேனை



சாரா ஷாலினி – வத்தளை



சாரீக் அமீன் – மடவள பஸார்



முஹம்மது முஜாஸ் பட்டமளிப்பு விழாவில்



கோகிலவாணி – வத்தளை



சதீஷ்குமார் – மோதர

## பொருத்தமான இடத்தில் வெட்டி ஒட்டுங்கள்



## வழிகாட்டுங்கள்




## Fill in the blanks

- b _ a _ k
- b l _ _
- b r _ _ n
- g r _ _ n
- _ r _ y
- _ r a n _ e
- p _ n _
- p _ r p _ e
- r _ _
- y _ l l _ w

## விடுகதைகள்

1. சிறு தூசி விழுந்ததும் குளமே கலங்கியது அது என்ன?

**கண்**

2. ஓடெடுப்பான் பிச்சை ஒரு நாளும் கண்டறி யான் காடுறைவான் தீர்த் தக் கரைசேர்வான் தேட நடக்குங்கால் நாலுண்டு நல்தலை ஒன்றுண்டு! படுக்கும்போது அவை யில்லை பார்! அது என்ன?.

**ஆமை**

3. வெள்ளை ஆடை உடுத் திய மஞ்சள் மகாராணி? அவள் யார்?

**முட்டை**

4. எங்க அக்கா சிவப்பு, குளித்தால் கருப்பு அது என்ன ?

**அடுப்புக்கரி**

5. உங்களுக்கு சொந்த மானத ஒன்று ஆனால் உங்களை விட மற்றவர் களே அதிகம் உபயோ கிப்பார்கள்?

**பெயர்**

6. யாரும் செய்யாத கதவு தானே திறக்கும் தானே மூடும். அது என்ன?

**கண் இமை**

7. வாயிலே தோன்றி வாயிலே மறையும் பூ. அது என்ன?

**சிரிப்பு**

8. வீட்டில் வளரும் என்னை திருடனுக்கு பிடிக்காது அது என்ன?

**நாய்**

## எண்களை இணைத்து நிறம் தீட்டுங்கள்



## 10 வித்தியாசங்களை கண்டுபிடியுங்கள்



# சமாதானம் வேண்டி இலங்கையை சுற்றி வந்த சைக்கிளோட்ட வீரர் சுல்பிகார்

## உலக அளவில் சைக்கிளில் பயணம் செய்வதே இவரின் அடுத்த இலக்கு

**நாட்டில் இன ஐக்கியமும் நல்லிணக்கமும் ஏற்பட பல்வேறு மட்டங்களில் முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்படுகிறது. சில நாடுகளில் மாற்றுமான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். சைக்கிளிலும் நடந்தும் உலகை சுற்றிவந்து சமாதானத்திற்கான அர்ப்பணிப்பும் கவனமும் செலுத்தப்படுவதுண்டு.**

இலங்கையின் 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு சர்வமத தலைவர்களையும் ஒன்றிணைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துவிச்சக்கர வண்டியில் இலங்கையை சுற்றி பயணித்து இளைஞர் ஒருவர் அனைவரினதும் கவனத்தை பெற்றிருந்தார்.

சைக்கிள் சம்மேளத்தின் ஏற்பாட்டில் ஜே.ஜே. பவுண்டேசனின் அனுசரணையுடன் இந்த சைக்கிள் சவாரி ஏற்பாடு செய்யப்பட்டது. பொத்துவில்லை சேர்ந்த சுல்பிகார் இந்த சாதனையையை படைத்தார்.

ரொம்ப பிஸி பகுதிக்காக அவரை சந்தித்தோம்.

''இந்த நாட்டின் சமாதானத்திற்கான எனது நீண்ட நாள் கனவு இறைவனின் அருளால் நிறைவேறியுள்ளது.

இலங்கையின் 74வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்த நாட்டில் இன நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் நோக்கோடு சர்வமத தலைவர்களையும் ஒன்றிணைத்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் துவிச்சக்கர வண்டியில் இலங்கையின் சகல மாவட்டங்களையும் உள்ளடக்கியதாக சுமார் 1406 கிலோமீற்றர் தூரத்தை சைக்களிலில் சுற்றி வந்தேன்.

நான் பெப்ரவரி 12 தொடக்கம் 19ஆம் திகதி வரை கரையோரப்பகுதிகள் உள்ளிட்ட 1406 கிலோ மீற்றர் தூரத்தை 8 நாட்களில் பயணித்தேன். கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பித்து 19ஆம் திகதி மீண்டும் கொழும்பு வந்தடைந்தேன். முதல் நாள்








நிகழ்வினை ஜே.ஜே.பவுண்டேசனின் தலைவர் ஹனிப் ஹாஜி உள்ளிட்ட சர்வமத தலைவர்கள் இலங்கையின் தேசியக் கொடியை அசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

தமிழ், முஸ்லிம், சிங்களம் என்ற பேதமின்றி அனைவரும் சமாதானமாக வாழ வேண்டும். இதுதான் எமது நோக்கம். அத்துடன் விளையாட்டின் மூலமும் மக்கள் மனங்களில் சமாதானத்தை ஏற்படுத்த வேண்டும்.

எனது பயணத்தின்போது நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் நல்ல வரவேற்பு கிடைத்தது. அனைவரும் சமாதானமாக வாழ வேண்டும். ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்ற சிங்கள மக்களின் வெளிப்பாடு சிறப்பாக இருந்தது. குறிப்பாக திருகோணமலை குச்சவெளியில் எனக்கு அமோக வரவேற்பு கிடைத்தது.

ஏறாவூர், சாய்ந்தமருது, அக்கரைப்பற்று, பொத்துவில் போன்ற இடங்களிலும் கதிர்காமதத்திலும் அதிக வரவேற்பு கிடைத்தது குறிப்பிடத்தக்கது. நான் எனது இந்த சமாதான விழப்புணர்வு பயணத்தை அரசின் அனுமதியுடனே மேற்கொண்டிருந்தேன்.

நான்
ரொம்ப
பிஸி...

இருந்தாலும் எனக்கு அரச தரப்பில் எந்த உதவிகளும் கிடைக்காதது கவலை தருகிறது. அத்துடன் மீடியாவின் உதவிகூட போதுமான அளவு கிடைக்கவில்லை. என்னை அவர்கள் கண்டு கொள்ளவில்லை என்றே சொல்ல வேண்டும். இருந்தாலும் தனிப்பட்டவர்களின் உதவியின் மூலமே எனது பயணம் சிறப்பாக இடம் பெற்றது.

சமாதான முன்னெடுப்பிற்கான இந்த முயற்சியை அகில இலங்கை ஜமிய்யதுல் உலமாவுடன் ஒன்றினைத்து மேற்கொள்ள விரும்பினேன். பொத்துவில் ஜமிய்யதுல் உலமா மாவட்ட கிளைஊடாக அகில இலங்கை ஜமிய்யதுல் உலமாவுக்கும் கடிதம் அனுப்பினேன். சாதகமான எந்த பதிலும் கிடைக்கவில்லை. இது கவலையளிக்கிறது.

எனது அடுத்த இலக்கு உலக சமாதான தினமான செப்டம்பர் 21 ஆம் திகதி உலக அளவில் சைக்கிள் பயணம் செல்ல வேண்டும் என்பதாகும் நோர்வே அல்லது அவுஸ்ரேலியா போன்ற சமாதானத்தை விரும்பும் நாடுகள் இவ்வாறான அதிக நிகழ்வுகளை செய்து வருகின்றன. எனவே அந்த ஏதாவது ஒரு நாட்டில் இடம்பெறும் சமாதான நிகழ்வில் நான் பங்குபற்ற விரும்புகிறேன். இலங்கையில் மட்டுமல்லாது எல்லா நாடுகளிலும் சமாதான நிலைநாட்டப்பட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

சமாதாத்திற்காக இலங்கையை சுற்றி வந்த இவருக்கு கடந்த 19ஆம் திகதி மாலை ஜே.ஜே. பவுண்டேசனின் ஏற்பாட்டில் அதன் தலைவர் அல்ஹாஜ் ஐ.வை. எம். ஹனிபாவின் தலைமையில் தாஜ் சமுத்திர ஹோட்டலில் கௌரவிக்கும் நிகழ்வு எளிமையான முறையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்நிகழ்வில் சுல்பிகாருக்கு பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னமும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.





தொடர்புகளுக்கு :
ரொம்ப பிஸி
எம்.எஸ்.பாஹிம்...
shumsfahim@gmail.com

# கூந்தல் வளர்ச்சிக்கு உதவும் அரிசி ஊறவைத்த நீர்!

**சமைப்பதற்கு அரிசியை ஊறவைத்த நீரை பெரும்பாலும் யாரும் உபயோகப்படுத்துவதில்லை. அதனை பயன்படுத்தி கூந்தலுக்கு பளபளப்பும், பொலிவும் சேர்க்கலாம். முடி உதிர்தல், முடி உலர்வடைதல், முடி மெலிதல், பொடுகு போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு காணலாம்.**





அரிசி நீரில் சேதமடைந்த தலைமுடியை சரிசெய்யும் கார்போஹைட்ரேட் இனோசிட்டால் இருப்பதாக ஆய்வுகளும் தெரிவிக்கின்றன. முடியின் வேர்களை வலுப்படுத்தும், முடியின் நீளத்தை அதிகரித்து கூந்தலை பளபளப்பாகவும் மென்மையாகவும் மாற்றும் அமினோ அமிலங்களும் இதில் உள்ளன. கூந்தலுக்கு அரிசி நீரை பயன்படுத்தும் வழிமுறைகள் குறித்து பார்ப்போம்.

## அரிசி நீர் வெங்காய சாறு:

இந்த கலவை முடியை பளபளப்பாகவும், மென்மையாகவும் மாற்றும் தன்மை கொண்டது. வெங்காயத்தில் போலிக் அமிலம், சல்பர் மற்றும் வைட்டமின் சி போன்ற சக்திவாய்ந்த மூலக்கூறுகள் உள்ளன. அவை முடி உடைவது, முடி மெலிவதை குறைக்கவும் உதவும்.

செய்முறை: அகன்ற பாத்திரத்தில் இரண்டு கப் நீர் ஊற்றி அதில் ஒரு கப் அரிசியை அரை மணி நேரம் ஊற வைக்கவும். பின்பு அரிசியை வடிகட்டிவிட்டு அந்த நீரை மட்டும் பிரிட்ஜில் குளிர வைக்கவும். ஒரு வெங்காயத்தை சிறு துண்டுகளாக நறுக்கி மிக்சியில் அரைத்துக்கொள்ளவும். அதனை வடிகட்டி சாறு எடுத்துக்கொள்ளவும். பின்பு அரிசி ஊறவைத்த நீரில் வெங்காய சாற்றை சேர்த்து நன்றாக கலக்கவும். பின்பு உச்சந்தலை உள்பட தலை முழுவதும் நன்றாக தடவி மசாஜ் செய்யவும். 30 நிமிடங்கள் கழித்து குளிர்ந்த நீரில் தலைமுடியை அலசி விடலாம். வெங்காய வாசனையை போக்குவதற்கு ஷாம்பு பயன்படுத்திக்கொள்ளலாம்.

## அரிசி நீர் கிரீன் டீ:

இந்த கலவையில் கண்டிஷனிங் பண்புகள் உள்ளன. அவை உச்சந்தலையின் ஆரோக்கியத்தை அதிகரிக்கும். தலைமுடியை மென்மையாக்கும்.

செய்முறை: அரிசியை ஊறவைத்து ஒரு கப் நீரை வடிகட்டி எடுத்துக்கொள்ளவும். அகன்ற பாத்திரத்தில் ஒரு கப் தண்ணீர் ஊற்றி கொதிக்கவிடவும். அதனுடன் ஒரு கிரீன் டீ பேக்கை போட்டு நன்கு காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். பின்பு அதனுடன் அரிசி நீரை சேர்க்கவும். இந்த கலவையை உச்சந்தலையில் தடவி மசாஜ் செய்யவும். அரை மணி நேரம் கழித்து ஷாம்பு கொண்டு தலைமுடியை கழுவி விடலாம்.

## அரிசி நீர் தேன்:

அரிசி நீரில் அமினோ அமிலங்கள் உள்ளன. அவை முடியின் வேர்களை வலுப்படுத்தவும், முடி சேதத்தை சரிசெய்யவும் உதவுகின்றன. மேலும் இதிலிருக்கும் வைட்டமின் ஈ, பி மற்றும் ஆன்டிஆக்சிடென்டுகள் முடி வளர்ச்சியை ஊக்குவிக்கக்கூடியவை. முடியில் ஈரப்பதத்தை தக்கவைக்கக்கூடியவை. தேன், கூந்தல் முடியை மென்மையாக்கக்கூடியது. முடி உடைவதையும் குறைக்கக்கூடியது.

செய்முறை: இரண்டு கப் நீரில் ஒரு கப் அரிசியை அரை மணி நேரம் ஊறவைத்து வடிகட்டிக்கொள்ளவும். பின்பு அரிசி நீரை ஒரு பாத்திரத்தில் ஊற்றி சூடுபடுத்தவும். சூடானதும் அதனுடன் ஒரு டேபிள் ஸ்பூன் தேன் கலந்து நன்கு கிளறவும். சுமார் 5 முதல் 10 நிமிடங்கள் நன்றாக கொதிக்கவைத்து கிளறிவிடவும். பின்பு இந்த கலவையை வடிகட்டி வைத்துக்கொள்ளவும். ஆறியதும் தலை முடியின் மயிர்க்கால்களில் அழுத்தமாக தடவி மசாஜ் செய்து வரவும். நீரை சூடான நிலையில் பயன்படுத்தக்கூடாது. வெது வெதுப்பான நீரை உபயோகிப்பது நல்லது. அது உச்சந்தலையில் உள்ள துளைகளை திறக்கவும் உதவும். 15 நிமிடங்கள் கழித்து கூந்தலை கழுவி விடலாம்.

## அரிசி நீர் ஆரஞ்சு தோல்:

பொடுகு தொல்லையை போக்குவது, அதிகப்படியான எண்ணெய் தன்மையை குறைப்பது என ஆரஞ்சு தோல், தலைமுடிக்கு பல வகைகளில் நன்மை களை வழங்கக்கூடியது. ஏனெனில் இதில் அதிக அளவு வைட்டமின் சி மட்டுமின்றி, பாக்டீரியா எதிர்ப்பு தன்மை, ஆண்டிமைக்ரோபியல் பண்புகள் உள்ளன. இந்த கலவை அரிசி நீருடன் சேர்ந்து முடியின் ஆரோக்கியத்தை மீட்டெடுக்க உதவும். பளபளப்பான, நீண்ட மற்றும் அடர்த்தியான முடி வளர்ச்சியையும் ஊக்குவிக்கும்.

செய்முறை: அகன்ற பாத்திரத்தில் ஒரு கப் அரிசியுடன் மூன்று கப் தண்ணீர் சேர்த்து இரண்டு மணி நேரம் ஊற வைக்கவும். பின்பு தண்ணீரை வடிகட்டி ஜாடியில் ஊற்றி வைத்துக்கொள்ளவும். பின்பு அதனுடன் ஆரஞ்சு பழ தோலை சேர்க்கவும். ஜாடியை சூரிய ஒளி படாத இடத்திலோ, குளிர்ச்சியான இடத்திலோ வைத்துக்கொள்ளவும். இந்த நீர் கலவையை உச்சந் தலையில் தடவி 10 நிமிடங்கள் மசாஜ் செய்யவும். பின்பு குளிர்ந்த நீரில் கழுவி விடலாம். வாரம் இரண்டு அல்லது மூன்று முறை செய்து வருவதன் மூலம் நல்ல மாற்றத்தை உணரலாம்.




# தேனும் பாலும் கலந்த வசந்த கானங்கள்















# ஊடகத்துறையில் பொன் விழா கண்ட தில்லைநாதன்

ஊடகத்து றை 50 ஆண்டுகாலம் பிராந்திய செய்தியாளராகக் கடமையாற்றி பொன் விழாக் கண்ட வடமராட்சி எஸ். தில்லைநாதனுக்கு அல்வாய் மாலிசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகம் நடத்திய பாராட்டு விழாவில், காலைக்கதிர் பிரதம ஆசிரியர் ந.வித்தியாதரன், யாழ். ஊடக அமையத்தின் ஆலோசகர் இ. தயாபரன், பத்திரிகையாளர் திருமதி சரஸ்வதி சுகிர்தராஜ், தலைமை வகித்த வேணுகானன் ஆகியோர் பொன்னாடை போர்த்தி மாலை அணிவித்து கௌரவித்தனர்.



இலங்கை வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகும் "பாரம்பரியம்" நிகழ்ச்சியில் சிறப்பதிதியாக கலந்து கொள்ள, பிரபல சினிமா முன்னணி பாடகி யும் பல இஸ்லாமிய கீதங்கள் பாடிய சிரேஷ்ட கலைஞருமான "பாடல் குயில்" சுஜாதா அத்தநாயக்க நிலைய கலையகம் வந்தபோது பிடித்த படம். படத்தில் அவரது மகன் ஹேலி அத்தநாயக்க, நிகழ்ச்சித் தயாரிப்பாளரும் முஸ்லிம் சேவைப் பணிப்பாளருமான எம்.ஜே.பாத்திமா ரினூஸியா, தொகுப்பாளர் எம்.எஸ்.எம்.ஜின்னா, தயாரிப்பாளர் இஸ்பஹான் ஆகியோர் காணப்படுகின்றனர்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2022 பெப்ரவரி மாதம் 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.